# அயந்தம்

சித்திரை 2024 16



# பெரியாரியமும் தமிழ்த்தேசியமும்

## ஒத்திசைய முடியாத முரண்பாடு

# பெரியாரியமும் தமிழ்த் தேசியமும்

## ஒத்திசைய முடியாத முரண்பாடு

தான் இறந்து ஐம்பது ஆண்டுகளின் பின்னாலும், ஒரு சமூகத்தில் சமூக நீதியின் அடையாளமாக இன்றைக்கும் இருப்பது மட்டுமன்றி, அவரைத் தமது எதிரியாக வரித்துக் கொண்டவர்களின் தூக்கத்தைக் குலைக்கும் சிம்ம சொப்பனமாக, கதற வைத்துக் கொண்டிருப்பவராக பெரியார் இருக்கிறார் என்பதுவும் மலைப்புக்குரிய ஒரு விடயமாகத் தான் இருக்கிறது.

ஆரிய பார்ப்பனியச் சிந்தனை தான் உட்புகுத்திய மத மூலமாக இந்தச் சமூகத்தைப் பிரித்து, உணர்வுரீதியாகத் திசை திருப்பி, அதன் மீதான அடக்குமுறையை எவ்வளவு சாதுரியமாக கையாண்டு கொண்டிருக்கிறது என்ற உண்மையை தனது திராவிடக் கருத்தியல் மூலமாக, தமிழ்நாட்டின் பொதுப்புத்திக்குப் புரிய வைப்பதற்காக தன் வாழ்நாளை அர்ப்பணித்து இருந்தார். அந்தச் சிந்தனை ஒட்டுமொத்தமான திராவிடக் குடும்பத்திற்குள், தெலுங்கு, கன்னட, மலையாளப் பிரதேசங்களில், அவர் விரும்பியபடி ஆதிக்கமோ, பாதிப்போ செலுத்த முடியாதிருந்தாலும், தமிழ்நாட்டில் அந்தச் சிந்தனை ஏற்படுத்திய பாதிப்புகள் இன்றைக்கும் அவரது எதிரிகளைக் கலங்கடித்துக் கொண்டு தான் இருக்கிறது.

அவருடைய பெயர் களங்கம் அடையாமல் இருந்ததற்கான முக்கிய காரணம், அவரது நோக்கம் முழுவதும் சமூக நீதி பற்றியதாக இருந்ததேயன்றி, ஆட்சி அதிகாரம் நோக்கியதாக இருக்காதது தான். தன்னுடைய சொத்துக்களை எல்லாம் இந்த சமூக நலனுக்காகவே செலவிட்டவரின் வழியில் வந்து ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியவர்கள் அதே மக்களின் நலன்களுக்கு எதிராக சொத்துக்கள் சேர்த்தார்கள் என்பது பெரும் முரண்நகை.

கடவுள் என்ற கருத்தியல் மீதான சந்தேகம் கொள்ளும் வயதில் இருந்த இளம் தலைமுறையினரை அவரது நாத்திகக் கருத்துக்கள் கவர்ந்திருந்ததும் அவரது வெற்றிக்கான காரணங்களில் முக்கியமானது.

அவருடைய கருத்தியல் மனிதம், மானிடம் என்ற பெரும் பரப்பளவை நாடி நின்றதே அன்றி, தமிழ் என்ற தனிமொழிக்குள்ளோ, மொழிக் குழுமத்துக்குள்ளோ தன்னைக் குறுக்கிக் கொண்டதில்லை. பார்ப்பனியம் என்ற கருத்தியலுக்குத் தான் அவர் எதிரியாக இருந்தாரே அன்றி, பார்ப்பனர்கள் என்ற மனிதர்களுக்கு எதிரானவராக, அவர்களை அழிக்க வேண்டும் என்ற வெறித்தனம் கொண்டவராக இருந்ததில்லை. ராஜாஜியின் நண்பராக இருக்கும் அளவுக்கு அவர் இருந்தார்.

தமிழ்த் தேசியம் சொல்கிற ‘கல் தோன்றி மண் தோன்றாக் காலத்து முன்தோன்றிய மூத்த குடி’ புனைகதைகளில் எல்லாம் அவருக்கு உடன்பாடு இருந்திருக்கும் என்று நான் நினைக்கவில்லை. அண்ணாத்துரை திட்டமிடாத, ஆனால் அடியெடுத்துக் கொடுத்த

**ஜோர்ஜ் இ.குருஷ்சேவ்**

**தமிழ்நாட்டுச் சிந்தனைவெளியிலும், அரசியலிலும் இருந்து பிரிக்கவும் தவிர்க்கவும் முடியாதபடிக்கு இருக்கும் பெரியாரியச் சிந்தனையின் இன்றைய நிலை என்ன? இன்றைய நிலையில் பெரியார் இருந்திருந்தால் நிலைமை எப்படி இருந்திருக்கும்?**

**அந்தச் சிந்தனை அவரை எதிரியாகக் கருதுவோருக்கு இன்றைக்கும் அச்சம் ஏற்படுத்தும் அளவுக்கு, இன்றைக்கும் அவரைத் தொடர்வதாகக் காட்டிக் கொள்கிறவர்களுக்கு அந்தச் சிந்தனை மீதான அக்கறையும் ஆர்வமும் இன்றைக்கு இல்லை என்பது தான் தற்போதைய துயரநிலை.**



facebook: George RC

தமிழ் வெறி என்பதை அவரில் நினைத்தே பார்க்க முடியாது.

இப்படி தமிழ்நாட்டுச் சிந்தனைவெளியிலும், அரசியலிலும் இருந்து பிரிக்கவும் தவிர்க்கவும் முடியாதபடிக்கு இருக்கும் பெரியாரியச் சிந்தனையின் இன்றைய நிலை என்ன? இன்றைய நிலையில் பெரியார் இருந்திருந்தால் நிலைமை எப்படி இருந்திருக்கும்?

அந்தச் சிந்தனை அவரை எதிரியாகக் கருதுவோருக்கு இன்றைக்கும் அச்சம் ஏற்படுத்தும் அளவுக்கு, இன்றைக்கும் அவரைத் தொடர்வதாகக் காட்டிக் கொள்கிறவர்களுக்கு அந்தச் சிந்தனை மீதான அக்கறையும் ஆர்வமும் இன்றைக்கு இல்லை என்பது தான் தற்போதைய துயரநிலை.

தமிழ்நாட்டில் ஆட்சி அதிகாரத்தில் இருந்து திராவிடக் கருத்தியலை முற்றாக அகற்ற பார்ப்பனியம் எடுக்கும் முயற்சிகள் தோற்றுப் போனபடியே இருக்கின்றன. காமராஜருக்குப் பின்னால், தேசியக் கட்சிகள் தமிழ்நாட்டில் தலையெடுக்க முடியாமல் இருக்கும்போது, இந்துத்துவத்தைத் உருவேற்றி ஏவி விடுவதன் மூலமாக தமிழ்நாட்டில் தலையை நுழைக்க பாஜக தலையால் மண் கிண்டிக் கொண்டு இருக்கிறது.

எம்.ஜி.ஆர் திராவிட வழி வந்தவராயினும், பார்ப்பனியம் அவரைப் பயன்படுத்த முடியும் என்பதால், அவரை திராவிடத்தின் பிரதிநிதியாகவோ, தனது எதிரியாகவோ நினைத்ததில்லை. ஜெயலலிதா தம் இனத்தவராக இருந்ததால் தனது நலன்களைத் தொடர எந்தப் பிரச்சனையும் இருந்ததும் இல்லை.

ஆனால், தற்போது தி.மு.க ஆட்சிக்கு வந்தது முதல் பார்ப்பனியத்திற்கு அதிகாரம் மீளவும் கிடைக்க முடியாதபடிக்கு, தனது கையிலிருந்து விடுபட்டுப் போய் விட்டதே என்ற என்ற எண்ணத்தைத் தந்திருப்பதால் அதை மீண்டும் அடைவதற்கான சகல சாம, பேத, தான, தண்ட, கலவர வழிகளையும் முயற்சிப்பதற்கு தயாராக இருக்கிறது.

பார்ப்பனியர்கள் மீது பொதுவெளியில் இருக்கும் எதிர்ப்புணர்வு காரணமாக அவர்களை அடக்கி வாசிக்க வைத்து, சூத்திரர்களையும் தலித்துக்களையும் தற்கொலைப் போராளிகளாக முன்னுக்கு தள்ளுவது முதல் மோடி அண்ணாச்சி வேட்டி கட்டும் ஆம்பளயா தமிழ்நாட்டில் வலம் வருவது வரைக்கும் அந்த முயற்சிகள் நீண்டிருக்கின்றன.

தங்களுடைய இந்த தலையால் மண் கிண்டும் முயற்சிக்குத் தடையாக இந்துத்துவம் கருதிக் கொள்வது பெரியாரையும் அவரது திராவிடக் கருத்தியலையும் தான். அதைத் தகர்ப்பதற்கான முயற்சியாக தி.மு.கவின் ஊழல், வாரிசு அரசியலைக் கையில் எடுத்தாலும், அது இந்தியா முழுவதற்குமானது, அதற்கு பாஜக கூட விதிவிலக்கு இல்லை என்ற நிலையில், அத்திவாரத்தில் கை வைக்கும் நோக்கமாகத் தான் இந்தப் பெரியாரிய எதிர்ப்புக் கிளம்பியிருக்கிறது.

அது 'நமது முன்னோர்கள் முட்டாள்கள் இல்லை' என்ற மறைமுகமான இந்துத்துவ உசுப்பேத்தல் முதல், பெரியார் மகளைத் திருமணம் செய்தார் என்று வட்சப் கதை பரப்புவது வரைக்குமான கீழ்நிலை வரை சென்றிருக்கிறது.

இன்றைக்கு இந்தச் சூழல் இவ்வாறிருக்கும் நிலையில், புதிதாகக் கிளம்பியிருக்கும் தமிழ்த் தேசியத்தின் வளர்ச்சி எங்கே இருந்து வருகிறது? இது பெரியாரின் திராவிடக் கருத்தியலுடன் ஒத்திசையக் கூடியதா? (Compatible).

இன்று புதிதாக தமிழ்நாட்டில் கிளம்பியிருக்கும் தமிழ்த் தேசியச் சிந்தனைக்கு மூலமாய் இருப்பது புலியும் பிரபாகரனும் மட்டும் தான். இந்தத் தமிழ்த் தேசியச் சிந்தனை ஈழத்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட, அல்லது புலிகளால் விலைக்கு வாங்கப்பட்டு, ஏற்றுமதி செய்யப்பட்ட புலி ஆதரவு மட்டுமே. கட்டவுட்டுக்குப் பால் ஊற்றும், இரத்தம் விற்றுப் படம் பார்க்கும் தமிழ்நாட்டுப் பாமர ரசிகனுக்கும், தற்கொலைப் போராளியாகக் குண்டைக் கட்டிக் கொண்டு சென்று வெடித்த பிரபாகர பக்தனுக்கும் எந்த வித்தியாசமும் இல்லை. பகுத்தறிவு கடந்த உணர்வுபூர்வக் கவர்ச்சி அது.

இலங்கையில் ஈழம் என்ற கருத்தியலும், தமிழ் மொழி என்ற மொழி மேலாதிக்கச் சிந்தனையும், தமிழ்நாட்டில் இருந்து, தமிழ்நாடு என்ற பெயர் மூலமாகவும், திராவிட நாடு பிரிவினைக் கோரிக்கையினாலும், அண்ணா தொடக்கி வைத்த அடுக்குமொழிப் பேச்சின் கவர்ச்சியாலும், இறக்குமதி செய்யப்பட்டு கொப்பியடிக்கப்பட்ட திராவிட மாடல் என்பது தான் இங்கே பெரிய முரண்நகை. அந்த திராவிட மாடல் repackaging செய்யப்பட்டு, தமிழ்நாட்டுக்கே திரும்பவும் தமிழ்த் தேசியமாக ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது.

இந்தித் திணிப்புக்கு எதிரான மொழிப்போர் தமிழ்நாட்டில் திராவிடக் கருத்தியலின் நீட்சி. பார்ப்பனியத்தின் நீட்சியாகவே இந்திமொழி கருதப்பட்டு, அதன் ஆதிக்கம் தமிழ்மொழியை நீர்த்துப் போகச் செய்யும் என்ற கருத்தில் தான் அது எதிர்க்கப்பட்டது.

திராவிடக் கருத்தியல் வழங்கிய தமிழ்மொழிப் பற்று, தற்போதைய புலி பிராண்ட் யாழ்ப்பாணித் தமிழ்த் தேசியம் போன்று துரோகம், மாவீரம் என்ற கருத்தியல்களுக்குள் தன்னைச் சுருக்கி, சகோதரப் படுகொலை செய்யும் கொலைவெறி கொண்டதல்ல. அது ஜனநாயக, அகிம்சை வழிகளில் அதை அடைவதற்கான நோக்கத்தைக் கொண்டிருந்தது. மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு திராவிட நாட்டுப் பிரிவினைக் கோரிக்கையைக் கைவிடும் அளவுக்கு அதற்கு முதிர்ச்சியும் இருந்தது. அது பிரபாகரனின் வெற்றி அல்லது வீரமரணம் என்ற முட்டாள்தனம் போன்றதாக இருந்திருந்தால், குமரி முனையில் ஒரு முள்ளிவாய்க்கால் நடந்தேறியிருக்கும்.

**திராவிடக் கருத்தியல் வழங்கிய தமிழ்மொழிப் பற்று, தற்போதைய புலி பிராண்ட் யாழ்ப்பாணித் தமிழ்த் தேசியம் போன்று துரோகம், மாவீரம் என்ற கருத்தியல்களுக்குள் தன்னைச் சுருக்கி, சகோதரப் படுகொலை செய்யும் கொலைவெறி கொண்டதல்ல.**

**அது ஜனநாயக, அகிம்சை வழிகளில் அதை அடைவதற்கான நோக்கத்தைக் கொண்டிருந்தது. மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு திராவிட நாட்டுப் பிரிவினைக் கோரிக்கையைக் கைவிடும் அளவுக்கு அதற்கு முதிர்ச்சியும் இருந்தது.**

**அது பிரபாகரனின் வெற்றி அல்லது வீரமரணம் என்ற முட்டாள்தனம் போன்றதாக இருந்திருந்தால், குமரி முனையில் ஒரு முள்ளிவாய்க்கால் நடந்தேறியிருக்கும்.**

தமிழ்நாட்டில் செல்லாக்காசுகளாக இருந்த சில்லறை அரசியல்வாதிகளை சில்லறை விலைக்கு வாங்குவதன் மூலம் தங்களுக்கான ஆதரவைப் பெற விரும்பிய புலிகள், வை. கோவை முதல்வர் ஆக்குவதன் மூலம் தமிழ்நாட்டு அரசியலை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியும் என்று கூட நினைத்தார்கள். பின்பு அதே வை.கோ போன்றவர்களின் சுயநலனுடன் கூடிய பசப்பு உறுதிமொழியை நம்பி உயிரையே இழந்ததும், மலையாக நம்பியிருந்த தமிழ்நாட்டுச் சில்லறைகள் எல்லாம் பினாமிச்சொத்துக்களை தேசியமயமாக்கலாம் என்ற எண்ணத்தில் தொலைபேசிகளை அணைத்து விட்டுத் தலைமறைவாகியதும் எவருமே பேச விரும்பாத வரலாறுகள். புலிகளின் அழிவு என்பது ஒருவகையில் புலிகளின் பணத்தில் பிழைப்பு நடத்திய பினாமிகளின் விருப்பமாகக் கூட இருந்தது.

அகண்ட தமிழீழம் இப்படித் தான் 'கோமணம் அவிண்டு, கவிண்டு விழுந்தது'.

புலிகளின் பண முதலீடுகளுக்குப் பினாமிகளாகவும், சிலீப்பர் செல்களாகவும் இருந்த தமிழ்நாட்டுத் திராவிடப் பாரம்பரிய சில்லறை அரசியல்வாதிகள் தமிழ்நாட்டில் புலிகளுக்கான ஆதரவைப் பெறத் தொடக்கி வைத்தது தான் அந்த தமிழ்த்தேசியம் 2.0 version.

அதுகூட ஜனநாயக வழிகளில் தமிழ்நாட்டில் புலி ஆதரவைப் பெறத் தான் முயன்றிருந்தது. தமிழ்நாட்டிலோ, மத்திய அரசிலோ தங்கள் அரசியல் செல்வாக்கினால் அந்த ஆதரவைப் பெற முடியும் என்று தான் நெடுமாறன், வை.கோ, திருமாவளவன், வீரமணி போன்றவர்கள் நம்பிக் கொண்டிருந்தார்கள். அது திராவிடக் கருத்தியலில் இருந்து வேறுபட்ட ஈழத்தமிழ்த்தேசியமாகத் தான் இருந்ததே அன்றி, தமிழ்நாட்டுத் தமிழ்த்தேசியமாகக் கூட இருந்ததில்லை.

புலிகள் முள்ளிவாய்க்காலில் மண் கவ்விய பின்னால், வெளிநாடுகளில் புலிகளை வைத்துப் பணம் பண்ணிய புலிகளின் முகவர்கள் இலங்கையைக் கொதி நிலையில் வைத்திருப்பதன் மூலமாக தங்கள் உண்டியல் பிழைப்பைத் தொடரலாம் என்று நம்பி, சீமான், திருமுருகன் காந்தி போன்றோருக்கு பைனான்சியர்களாக இருப்பது தான் தமிழ்த்தேசியம் 3.0 version. ஈழத்தோடு எந்தச் சம்பந்தமும் இல்லாத சீமான் தான் தமிழீழம் பிடிக்கப் போவதாகக் கதை விடுவதும், திருமுருகன் காந்தி

மே 18 நினைவுநாளை வைத்துப் பிழைப்பு நடத்துவதும் இந்த பைனான்சியர்களின் உபயத்தில் தான்.

வரவேண்டிய இடங்களிலிருந்து சில்லறை வந்து கொண்டிருப்பதால், ஆளில்லாத கடையிலும் டீ ஆத்திக் கொண்டிருக்க முடிகிறது. அந்தச் சில்லறை உபயகாரர்கள் புலன் பெயர் புலி முகவர்கள் மட்டுமில்லை என்பது பின்னால்.

ஈழம் என்ற கருத்தை மறந்து கடந்து யாழ்ப்பாணிகள் கோமாளி அரசியல் செய்து கொண்டிருந்தாலும், எந்தச் சம்பந்தமும் இல்லாத இவர்கள் ஈழம் என்பதையும் புலிக் கொடியையும் பிரபாகரனுக்கு வீரவணக்கத்தையும் புலிகள் தடை செய்யப்பட்ட ஒரு நாட்டில் தூக்கிக் கொண்டு அலைவது வெறும் கோமாளித்தனம் என்று கடந்து போகக் கூடியதும் இல்லை.

> **ஈழத்தோடு எந்தச் சம்பந்தமும் இல்லாத சீமான் தான் தமிழீழம் பிடிக்கப் போவதாகக் கதை விடுவதும், திருமுருகன் காந்தி மே 18 நினைவுநாளை வைத்துப் பிழைப்பு நடத்துவதும் இந்த பைனான்சியர்களின் உபயத்தில் தான்.**
>
> **வரவேண்டிய இடங்களிலிருந்து சில்லறை வந்து கொண்டிருப்பதால், ஆளில்லாத கடையிலும் டீ ஆத்திக் கொண்டிருக்க முடிகிறது. அந்தச் சில்லறை உபயகாரர்கள் புலன் பெயர் புலி முகவர்கள் மட்டுமில்லை என்பது பின்னால்.**
>
> **ஈழம் என்ற கருத்தை மறந்து கடந்து யாழ்ப்பாணிகள் கோமாளி அரசியல் செய்து கொண்டிருந்தாலும், எந்தச் சம்பந்தமும் இல்லாத இவர்கள் ஈழம் என்பதையும் புலிக் கொடியையும் பிரபாகரனுக்கு வீரவணக்கத்தையும் புலிகள் தடை செய்யப்பட்ட ஒரு நாட்டில் தூக்கிக் கொண்டு அலைவது வெறும் கோமாளித்தனம் என்று கடந்து போகக் கூடியதும் இல்லை.**

இன்றைக்குத் தமிழ்த் தேசியத்திற்கு உரு ஏத்துவதற்கு இன்னொரு ஆட்டக்காரர் களமிறங்கியிருக்கிறார். அது இந்துத்துவம். அந்த இந்துத்துவமும் யாழ்ப்பாணித் தமிழ்த் தேசியமும் ஒன்றாகக் கை கோர்த்திருப்பதன் பின்னணி தான் யாழ்ப்பாணத்தில் சிவசேனை உருவாக்கமும். யாழ்ப்பாணத்தில் இந்துவத்தை மந்திரம் ஓதி கிளப்பி ஏவிவிடும் முயற்சியின் முழு நோக்கமும் தமிழ்நாடு பற்றியது தான். ஆனால் யாழ்ப்பாணிகள் அது ஈழம் பற்றியது என்று நம்பிக் கொண்டிருக்கிறார்கள். எல்லாரையும் 'யூஸ் பண்ணலாம்' என்று, தன்னை மட்டும் புத்திசாலியாகவும், மற்றவர்களை எல்லாம் முட்டாள்கள் என்றும் நினைத்துக் கொண்டிருக்கும் யாழ்ப்பாணிகளின் வழமையான முட்டாள்த்தனமான சிந்தனைப் போக்கு அது.

யாழ்ப்பாணம் சிவபூமியாக்கப் பட்டிருப்பதும், இந்தியத் தூதுவரகம் யாழ்ப்பாணத்தில் தனது பிரசன்னத்தை அதிகரிப்பதும் இலங்கையில் தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதற்காக இல்லை. சிங்கள அரசைப் பணிய வைப்பது இந்திய அரசுக்கு பிரச்சனையாகவும் இன்றைக்கு இல்லை. இன்றைய இலங்கையின் பொருளாதார நிலையில், இந்திய முதலீடுகள் தங்குதடையின்றி அதிகரித்து, சீனா ஓரம் கட்டப்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டை இந்துத்துவ மயப்படுத்துவதற்கான முயற்சிகளின் நீட்சி தான் இந்த யாழ்ப்பாணச் சிவபூமி திருகுதாளங்கள்.

இந்துத்துவம் இன்றைக்கு தமிழ்த் தேசியத்தை உசுப்பேத்துவதற்கு எடுக்கும் முயற்சி தான் மோடி வேட்டியோடு தமிழ்நாடு ரோட் ஷோ நடத்துவது.

பார்ப்பனியத்திற்கு திராவிடம் எதிரியாக இருந்தாலும், எம்.ஜி.ஆர், ஜெயலலிதாவின் அண்ணாயிசம் எதிரியாக இருந்ததில்லை. ஆட்சியில் அவர்கள் இருந்தாலும், அதிகாரத்தில் இருந்தது பார்ப்பனியமே.

தி.மு.க ஆட்சியில் கதை வேறு. பார்ப்பனியம் வால் ஒட்ட நறுக்கப்பட்டு, அதற்குரிய இடத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. ஆட்சிக்குப் பங்கம் வராதபடிக்கு, கட்சியும் முழுமையான மத எதிர்ப்பு, நாத்திகம் என்றெல்லாம் அதிகம் அலட்டிக் கொள்வதுமில்லை. திருமதி முதல்வரின் திருத்தல யாத்திரைகளும், அமைச்சர்களின் அங்கப்பிரதிஷ்டங்களும் யாவரும் அறிந்ததே. அறப்பணித் துறை வேறு கும்பாபிஷேகம் செய்து தேர் ஓட்டிக் கொண்டிருக்கிறது.

எனவே மதம் என்பதன் மூலமாக, இந்து மதத்தின் எதிரி என்று திராவிட ஆட்சியைக் கவிழ்ப்பது என்பது தற்போதைய சூழ்நிலையில் சாத்தியமானதில்லை. அதற்கான சாத்தியமான வழி, தமிழ்த் தேசியச் சிந்தனையை ஊதிப் பெருப்பித்து உரு ஆட வைப்பது தான்.

நாம் தமிழர் என்ற பெயரை ஆதித்தனாரிடம் இருந்து சோ சீமானுக்கு வாங்கிக் கொடுத்தபோதே அந்தத் திட்டம் தொடங்கி விட்டது. ரஜினியை அரசியலுக்குக் கொண்டு வர பகீரதப் பிரயத்தனம் செய்த சோ அது தோற்றுப் போன நிலையில் இவ்வாறான முன்னெடுப்புக்கு முயன்றதன் காரணம் எதுவாக இருக்கும்?

திராவிடக் கோட்டையாக இருக்கும் தமிழ்நாட்டை உடைப்பதற்கு தமிழ்த்தேசியத்தை உரு ஏற்றி வாக்குகளைப் பிரிப்பது தான் அந்த நோக்கம்.

சீமானுக்கும் திருமுருகன் காந்திக்கும் அ.தி.மு.க எதிரியாக இல்லாமல், தி.மு.க எதிரியாக இருப்பதன் காரணம் எதுவாக இருக்க முடியும்?

தி.மு.கவுக்காவது தமிழ் நாட்டில் ஒரு அரசியல் பாரம்பரியம் இருக்கிறது. பெரியாரியத்தை அதிகாரமயப்படுத்திய வெற்றி ஒன்று இருக்கிறது.

தமிழ்நாட்டை, சோவின் பாஷையில் சொன்னால், பகல் கொள்ளையடித்த அ.

தி.மு.க எந்தவித அரசியல் பாரம்பரியங்களுக்கும் அப்பாற்பட்ட முறையில் சசிகலா, தினகரன், பன்னீர்செல்வம், பழனிச்சாமி என்று கோமாளித்தனங்களைக் கண்ட பின்னால், அது தமிழ்ச் சமூகத்தின் அவமானச் சின்னங்கள் என்ற உண்மையைத் தெரிந்து கொண்டும், அவர்களை எதிர்க்காமல், சித்தப்பா உறவு கொண்டாடிக் கொண்டு, தி.மு.கவை மட்டும் முழுமூச்சாக எதிர்ப்பதன் நோக்கம் எதுவாக இருக்கும்?

இவர்களால் வார்டு கவுன்சிலர் பதவி கூடப் பெற முடியாதிருந்தாலும், கடும் போட்டியுள்ள இடங்களில் சில வாக்குகளைப் பிரித்தாலும் பா.ஜ.கவின் வெற்றிக்கு வழியாக முடியும்.

இந்தியாவில் தடை செய்யப்பட்ட இயக்கமாக இருக்கும் புலிகளை பகிரங்கமாவே ஆதரித்துக் கொண்டு, 'ராஜீவ் காந்தியை நாம தான் கொன்னோம்' என்று பகிரங்கமாக ஒருவர் அரசியல் செய்ய முடியும் என்றால், மத்திய அரசின் ஆசீர்வாதம் இல்லாமல் அது எப்படிச் சாத்தியமாக முடியும்?

இப்படி சீமானும் திருமுருகன் காந்தியும் இந்துத்துவத்தினதும் பிரபாகரனிசத்தினதும் கைக் கூலிகளாக பிழைப்பு நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இதனால் தான் பெரியாரியமும் திராவிடமும் இவர்களுக்கு எதிரிகளாக இருக்கின்றன.

இவர்கள் உதிரிகளாக இருந்து விட்டுப் போகட்டும். தமிழ்த்தேசியமும் கம்யூனிசமும் பேசிவிட்டுப் போகட்டும்.

ஆனால், பெரியாரியவாதிகள் என்போர் நிலை என்ன?

தி.மு.க ஆதரவை பொதுவெளியில் பகிரங்கமாகவே கொண்டிருக்கிற பெரியாரிஸ்டுகள் பலரும் இன்றைக்குத் தமிழ்த் தேசியவாதிகளாக, பிரபாகரனை வழிபடுகிறவர்களாக வந்து முடிந்திருக்கிறார்கள். இவர்களில் சிலர் இப்போதும் புலன் பெயர்ந்த புலி உண்டியல் முகவர்களின் சம்பளப்பட்டியலில் இன்னமும் இருக்கிறார்கள்.

**தி.மு.க ஆதரவை பொதுவெளியில் பகிரங்கமாகவே கொண்டிருக்கிற பெரியாரிஸ்டுகள் பலரும் இன்றைக்குத் தமிழ்த் தேசியவாதிகளாக, பிரபாகரனை வழிபடுகிறவர்களாக வந்து முடிந்திருக்கிறார்கள்.**

**இவர்களில் சிலர் இப்போதும் புலன் பெயர்ந்த புலி உண்டியல் முகவர்களின் சம்பளப்பட்டியலில் இன்னமும் இருக்கிறார்கள்.**

**இன்றைய பெரியாரிஸ்டுகள் எல்லாம் எங்கள் கலை, இலக்கியவாதிகள் தங்களைத் தாங்களே கவிஞர்கள், இலக்கியவாதிகள் என்று அழைத்துக் கொள்வது போல, தங்களைப் பெரியாரிஸ்டுகள் என்று அழைத்துக் கொள்கிறார்களே அன்றி, அவர்களுக்கும் பெரியாரியக் கருத்தியலுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை.**

இன்றைய பெரியாரிஸ்டுகள் எல்லாம் எங்கள் கலை, இலக்கியவாதிகள் தங்களைத் தாங்களே கவிஞர்கள், இலக்கியவாதிகள் என்று அழைத்துக் கொள்வது போல, தங்களைப் பெரியாரிஸ்டுகள் என்று அழைத்துக் கொள்கிறார்களே அன்றி, அவர்களுக்கும் பெரியாரியக் கருத்தியலுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை.

அதற்கான காரணங்கள் இரண்டு. ஒன்று, அவர்களுக்கு காலில் விழுந்து தங்கள் ஆதரவைக் காட்ட வேண்டிய தேவை இல்லாமல், கொஞ்சமாவது 'சுயமரியாதையோடு' தி.மு.கவை ஆதரிப்பதற்கான வசதி இருக்கிறது. அ.தி.மு.க ஆட்சியில் இருந்தால், வீரமணி பெரியார் ட்ரஸ்டைப் பிடுங்கி விடாமல் இருப்பதற்காக, 'தமிழ் மானம் காத்த தலைவி' என்று பட்டம் கொடுக்கலாம். கருணாநிதி ஆட்சியில் இருந்தால் போய் துண்டு போர்த்தலாம். வேறு வழியில்லாத 'சுயமரியாதை' அது.

எங்கள் இலக்கியவாதிகள், பெரியாரிஸ்டுகளுக்கு ஜெயலலிதாவோ, சசிகலாவோ இன்றைக்குப் பதவியில் இல்லாதது பெரும் மனநிம்மதி. சினிமாக்காரர்கள் மாதிரி, பதவியேற்ற முதல்வருக்கு வெற்றிவிழா கொண்டாட வேண்டிய தேவையோ, முதல்வருக்கு ஓடிப் போய் துண்டு போர்த்த வேண்டிய அவசியமோ எல்லாம் கிடையாது.

குறைந்த பட்சம் வீரமணி மாதிரியான தேவை இல்லாமல், ஆளும் கட்சியான தி.மு.கவுடன் ஒட்டிக் கொண்டால், தேவைகளைத் தடையின்றிப் பெறலாம். சலுகைகளில் முதலிடமும் கிடைக்கும்.

இன்றைக்கு தி.மு.க ஆட்சியில் நடக்கும் ஊழல் பற்றியோ, வாரிசு அரசியல் பற்றியோ வாயே திறக்காமல் தி.மு.க தலைமையின் அடுத்தடுத்த தலைமுறைகளுக்கே ஜால்ரா போடும் கூட்டமாகத் தான் இந்த பெரியாரிஸ்டுகள் இன்றைக்கு இருக்கிறார்கள்.

பெரியார் அரசியல் மயப்படுவதை விரும்பாதிருந்தாலும், தி.மு.க பெரியாரின் திராவிடக் கருத்தியலின் அதிகார வடிவம் என்பதால், அதை ஆதரிப்பது அவர்களுக்கு ஹராமும் இல்லை.

அடுத்தது, இவர்கள் எல்லோருக்கும் அடிப்படையில் இருக்கும் சுயசாதிப்பற்றுக்கு எந்தப் பாதகமும், முரண்பாடும் இல்லாமல் பெரியாரிஸ்டாகவும் இருக்கவும் முடிகிறது. ஒருவரே பெரியாரியத்துக்கும் சுயசாதிச் சங்கத்திற்கும் card carrying member ஆக இருக்க முடியும். லயன்ஸ் கிளப், றோட்டரி கிளப்பில் இருக்கிறவர்களுக்குக் கூட அவ்வாறு இருப்பதில் கொஞ்சம் வெட்கம் இருக்கும்.

இந்த முரண்பாடு பற்றி எவரும் கேள்வி கேட்க முடியாது. ஏனென்றால், அவர்களும் கல்லெறியக் கூடிய அளவுக்கு

**பெரியார் மகளைத் திருமணம் செய்தார் என்று பார்ப்பனியமும் அதன் கைக்கூலிகளும் பிரசாரம் செய்யும் போது, இன்றைய பெரியாரிஸ்டுகளின் நிலை என்ன?**

**அவர்களுடைய தற்போதைய நிலைப்பாடு கட்டற்ற பாலுறவும் திருமணத்திற்கு அப்பாற்பட்ட உறவுமாகத் தான் இருக்கிறது. பெரியாரியம் அதைத் தான் வலியுறுத்துகிறது என்ற சிந்தனையை தங்கள் வக்கிர சிந்தனைகளுக்கு வசதியாகப் பயன்படுத்துகின்ற நிலைமை பகிரங்கமாகி, சுருக்குக் கயிறு கழுத்திற்கு வந்த பின்னால், அரசியல் தலையீடு மூலமாகத் தப்பித்துக் கொள்ளும் முயற்சிதான் இன்றைக்கு நடக்கிறது.**

**எங்கள் இலக்கியவாதிகளுக்கு இருக்கும் அதே சிந்தனை, தங்களுடைய நிலையைப் (Status) பயன்படுத்தி, வக்கிர சிந்தனையைத் தீர்த்துக் கொள்ளும் எண்ணம், பெரியாரிஸ்டுகளுக்கு வந்திருக்கிறது. அதைப் பகிரங்கமாகவே நியாயப்படுத்தவும் சிலர் செய்கிறார்கள். அதைப் பற்றிய குற்றச்சாட்டுக்களை அரசியல் செல்வாக்கு மூலமாக அமுக்கப் பார்க்கிறார்கள். குற்றச்சாட்டுகளை முன்வைப்போர் மீது அவதூறுகளை அள்ளி வீசுகிறார்கள்.**

பாவமில்லாதவர்களும் கிடையாது.

பெரியாரியத்துக்கும் தமிழ்த் தேசியத்திற்குமான முரண்பாடு கூட, பெரியாரியத்துக்கும் சாதிச்சங்கத்துக்கும் கிடையாது. பெரியாரியர்களைப் பொறுத்த வரைக்கும் they complement each other.

இப்படித் தான் இன்றைய பெரியாரிஸ்டுகளின் நிலை இருக்கிறது.

சீமான் உட்பட இன்றைக்கு பெரியாரியக் கருத்தியல் மீது மட்டுமன்றி, பெரியார் என்ற தனிமனிதன் மீதும் பல கோணங்களில் இருந்தும் தாக்குதல் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது.

பெரியார் மகளைத் திருமணம் செய்தார் என்பது வட்சப் மூலமாக பரப்பப்பட்டுக் கொண்டிருக்கும் அளவுக்கு யாழ்ப்பாணி இந்துத்துவர்களும் பெரியாரை ஒரு எதிரியாகப் பார்க்கும் அளவிற்கு நிலைமை இருக்கிறது.

இந்துத்துவம் தமிழ்நாட்டில் நுழைந்து விட முடியாதபடிக்கு பெரியாரியமும் அவரது திராவிடக் கருத்தியலும் பெரும் அரணாக இருக்கின்றன என்ற கருத்துக்களுக்கும் மத்தியில், இன்றைய பெரியாரிஸ்டுகளின் நிலைப்பாடு என்னவாக இருக்கிறது?

சீமான் பகிரங்கமாகவே பெரியார் மீது காட்டும் வெறுப்பு குறித்து, சீமானைப் பகிரங்கமாகவே அம்பலப்படுத்தாத அளவில், அது பற்றி அலட்டிக் கொள்ளாதவர்களாகத் தான் பெரியாரிஸ்டுகள் இன்றைக்கு இருக்கிறார்கள். 'அவன் கெடக்கிறான், கேனப் பய' என்று கூடச் சொல்ல முடியாதபடிக்கு குளோசட் தமிழ்த் தேசியவாதிகளாக இருக்கிறார்கள்.

அவர்கள் புலி முகவர்களின் சம்பளப்பட்டியலில் மட்டுமன்றி, இந்துத்துவத்தின் சம்பளப்பட்டியலில் இல்லாவிட்டாலும், வருமான வரி மிரட்டல் பட்டியல்களிலாவது இருக்கக் கூடும். இன்றைய பெரியாரிஸ்டுகள் இந்துத்துவத்தின் இரகசிய ஏஜண்டுகளாகக் கூட இருக்கக் கூடும் என்பதும் சாத்தியமான ஒன்று தான்.

பிரபாகரனால் இவர்களை விலைக்கு வாங்க முடிந்திருந்தால், இந்துத்துவத்தினால் அது முடியாமலும் இருக்க முடியாது.

பெரியார் மகளைத் திருமணம் செய்தார் என்று பார்ப்பனியமும் அதன் கைக்கூலிகளும் பிரசாரம் செய்யும் போது, இன்றைய பெரியாரிஸ்டுகளின் நிலை என்ன?

அவர்களுடைய தற்போதைய நிலைப்பாடு கட்டற்ற பாலுறவும் திருமணத்திற்கு அப்பாற்பட்ட உறவுமாகத் தான் இருக்கிறது. பெரியாரியம் அதைத் தான் வலியுறுத்துகிறது என்ற சிந்தனையை தங்கள் வக்கிர சிந்தனைகளுக்கு வசதியாகப் பயன்படுத்துகின்ற நிலைமை பகிரங்கமாகி, சுருக்குக் கயிறு கழுத்திற்கு வந்த பின்னால், அரசியல் தலையீடு மூலமாகத் தப்பித்துக் கொள்ளும் முயற்சிதான் இன்றைக்கு நடக்கிறது.

எங்கள் இலக்கியவாதிகளுக்கு இருக்கும் அதே சிந்தனை, தங்களுடைய நிலையைப் (Status) பயன்படுத்தி, வக்கிர சிந்தனையைத் தீர்த்துக் கொள்ளும் எண்ணம், பெரியாரிஸ்டுகளுக்கு வந்திருக்கிறது. அதைப் பகிரங்கமாகவே நியாயப்படுத்தவும் சிலர் செய்கிறார்கள். அதைப் பற்றிய குற்றச்சாட்டுக்களை அரசியல் செல்வாக்கு மூலமாக அமுக்கப் பார்க்கிறார்கள். குற்றச்சாட்டுகளை முன்வைப்போர் மீது அவதூறுகளை அள்ளி வீசுகிறார்கள்.

பெரியாரியம் இன்றைக்கு இந்த நிலைக்குத் தான் வந்திருக்கிறது. தமிழ் இனத்தை வெறும் மத நம்பிக்கைகளுக்குள் ஊற வைத்து, அவர்களை இழிபிறவிகளாக்கி இருக்கும் ஒரு ஆதிக்கக் கருத்தியலை

# அபத்தம்

## சித்திரை 2024




எதிர்த்து ஒரு இனத்தை வழிநடத்திய ஒரு பெரும் தலைவரின் வாரிசுகள் இன்றைக்கு இருக்கும் நிலை இது தான்.

சமூக நீதிக்கான திராவிடக் கருத்தியலும், மொழி மேலாதிக்கச் சிந்தனையும் கொலைவெறியும் கொண்ட தமிழ்த்தேசியமும் ஒன்றுக்கொன்று ஒருபோதுமே ஒத்திசைய முடியாதவை. பெரியார் கடவுள் மீதான கேள்விகளை எழுப்புவதைப் பெருமையாகக் கருதுகிற வயதிலான தலைமுறையைக் கவர்ந்தது போல, இன்றைய சமூகவலைத்தளத் தலைமுறை சீமானின் பேச்சுக்களுக்கு கைதட்டி ஆரவாரம் செய்கிறது. அந்த ஆரவாரம் தேர்தல் வெற்றிகளைச் சீமானுக்குத் தர முடியாவிட்டாலும், வாக்குகளைப் பிரித்து அதனால் லாபம் பெற முனைகிற சக்திகளுக்குத் தரக் கூடியது.

சீமானியமும் திருமுருகனியமும் ஏற்படுத்தக் கூடிய ஆபத்துக்கள் மிகவும் பாரதூரமானவை.

பெரியாரியம் தமிழ்நாட்டில் ஏற்படுத்திய மாற்றங்களை அப்படியே குழி தோண்டிப் புதைக்கக் கூடிய நிலைக்கு இந்தத் தமிழ்த்தேசியம் கொண்டு போய் நிறுத்தக் கூடும்.

பிரபாகரன் ஒரு துப்பாக்கி வைத்திருந்த சீமான்.

சீமான் ஒரு துப்பாக்கியில்லாத பிரபாகரன்.

இரண்டுமே இந்தச் சமூகத்தை நாசமாக்கும் கோடரிக்காம்புகள்.

ஆனால், அதே பெரியாரிஸ்டுகள் தங்களுக்குள் ஊறியிருக்கும் தமிழ்த்தேசியத்தின் வயப்பட்டு, பிரபாகரனை பெரியாருக்கு ஒப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். பிரபாகரன் பெயரால், பெரியார் அவமானப் படுத்தப்படும்போது பேசாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு இன்றைக்கு பெரியாரை விட, பிரபாகரன் பிழைப்புக்கான வழியாகி விட்டிருக்கிறார்.

பெரியார் இன்று இருந்திருந்தால், அவருடைய சகல போராட்டங்களும் இன்றைய பெரியாரிஸ்டுகளுக்கும், அதை அதிகாரத்திற்கும் ஊழலுக்கும் பயன்படுத்திக் கொண்டிருக்கும் தி.மு.கவினருக்கும் எதிரானதாகத் தான் இருந்திருக்கும். பிரபாகரன் போன்றதொரு கொலைகாரப் பாசிஸ்டைத் தங்கள் தலைவனாகச் சித்தரிக்கிற இந்த பெரியாரிஸ்டுகளுக்கு எதிராகத் தான், ஏற்கனவே இலங்கையில் தமிழர்களை நாசமாக்கிய அந்தச் சிந்தனை, தமிழ்நாட்டையும் நாசமாக்காதபடிக்குத் தான், அவரது போராட்டம் இருந்திருக்கும்.

அவர் பிள்ளையார் சிலைகளை உடைத்திருக்க மாட்டார். தன் செருப்பாலோ, கைத்தடியால் கூட இவர்களை அடித்திருக்க மாட்டார்.

தன்னுடைய 'திருநாமத்தை வீணாகப் பாவிக்கும்' இவர்களை எல்லாம், தான் இறுதிவரை காவித்திரிந்த சிறுநீர்ச் சட்டியால் தான் எல்லாம் விளாசியிருப்பார்.

ஆக்கங்களுக்கு ஆக்கியோர்களே பொறுப்பு. ஆயினும் அதைப் பிரசுரிப்பதற்கான பொறுப்புகளில் இருந்து அபத்தம் விலக மாட்டாது.

email: apaththam@gmail.com
www.thayagam/apaththam
www.facebook.com/apaththam

ஆசிரியர், வடிவமைப்பு
ஜோர்ஜ் இ.குருஷ்சேவ்
Editor/Design
George R. Ckrhushchev

அபத்தம் வெளியிடுவதற்கான உழைப்பின் நேரத்தையும் அதன் பெறுமதியையும் உணர்ந்து கொண்ட நண்பர்கள் சில பலர், அதற்கு தங்களால் முடிந்த நிதியுதவி செய்ய வேண்டும் என்று தாங்களாகவே நினைத்து அதை மாதாந்தமோ, ஒரு தடவையாகவோ செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு என் இதயபூர்வமான நன்றிகள் எப்போதும் இருக்கும்.


இனியும் யாராவது அதைச் செய்ய விரும்பினால், அபத்ததத்தின் மின்னஞ்சல் முகவரிக்கு paypal மூலமாகவோ, வேறுவழியிலோ அனுப்பலாம்.

இது தாங்களாகவே விரும்பிச் செய்யும் செயற்பாடு. அதற்கான நிர்ணயிக்கப்பட்ட தொகையோ, நிர்ப்பந்தமோ எதுவும் இல்லை.

விரும்பியவர்களும் முடிந்தவர்களும் தங்களால் இயன்றதைச் செய்யலாம். மற்றவர்கள் தொடர்ந்தும் அபத்தத்தை வாசித்து தங்கள் நண்பர்களுக்கும் அது குறித்துத் தெரியப்படுத்தியும் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தும் தொடர்ந்தும் இதை வெளியிடுவதற்கான உற்சாகத்தைத் தரலாம்.





















இம்மாத அட்டைப்பட
ஓவியம் சௌந்தர் அவர்கள்
வரைந்தது.
விழியில் விழுந்து
இதயம் நுழையும் இந்த
ஓவியங்கள் எல்லாம் அவர்
கைவண்ணமே.






















# அவுஸ்திரேலிய தமிழ் அகதிகள் கழக நினைவுகள் 2

**நோயல் நடேசன்**

> **அங்கு 91 :97 காலப்பகுதியில் வேலை செய்தபோதே அவுஸ்திரேலிய தமிழ் அகதிகள் கழகத்திலிருந்தேன். அங்கு இரண்டு கிழமையில் எட்டு நாட்களுடன் ஒரு வார விடுமுறை நாளிலும் வேலை செய்ய வேண்டும். இதன் காரணத்தால் சில வாரநாட்களில் எனக்கு விடுமுறை கிடைக்கும். இதனால் வீட்டு வேலைகள் மட்டுமல்ல, எனது அகதிகள் கழகத்தின் வேலைகளைச் செய்வதற்கும் நேரம் கிடைக்கும்.**

நான் கழகத்தின் செயலாளராக இருந்த காலத்தில் மெல்பன் நகரின் மத்திய பகுதியில் உள்ள லோட் சிமித் மிருக வைத்தியசாலையில், மிருக வைத்தியராக வேலை செய்துகொண்டிருந்தேன்.

அது ஒரு டசினுக்கு மேலான மிருக வைத்தியர்களைக் கொண்ட வைத்தியசாலை. அங்கு மிருக வைத்தியரைப் பார்க்க இரு மணிநேரத்திற்கும் அதிகமாக மக்கள் தங்கள் செல்லப்பிராணிகளுடன் காத்திருப்பார்கள். அந்த இடத்தையே பின்னணியாக வைத்து எனது நாவலான அசோகனின் வைத்தியசாலையை எழுதினேன். அங்கு வேலை செய்பவர்களையும் அதில் சித்திரித்திருந்தேன்.

அது மிகவும் பிசியான இடமென்பது மட்டுமே இங்கு எனது இந்தக் கட்டுரைக்குத் தேவையானது.

அங்கு 91 -97 காலப்பகுதியில் வேலை செய்தபோதே அவுஸ்திரேலிய தமிழ் அகதிகள் கழகத்திலிருந்தேன். அங்கு இரண்டு கிழமையில் எட்டு நாட்களுடன் ஒரு வார விடுமுறை நாளிலும் வேலை செய்ய வேண்டும். இதன் காரணத்தால் சில வாரநாட்களில் எனக்கு விடுமுறை கிடைக்கும். இதனால் வீட்டு வேலைகள் மட்டுமல்ல, எனது அகதிகள் கழகத்தின் வேலைகளைச் செய்வதற்கும் நேரம் கிடைக்கும்.

இப்படியான ஒரு காலத்தில் எங்களுக்கு நண்பராக இருந்த திருகோணமலையை சேர்ந்த உதயகுமாரின் கடைசித் தம்பி இலங்கையில் இருந்து அடிலயிட் விமான நிலையத்தில் வந்து இறங்கினார். அவரது சகோதரர்கள் இருவர் வாகனத்தில், மெல்பனிலிருந்து அடிலயிட் சென்று அவர்களது தம்பியை மெல்பன் அழைத்து வரும்போது, பாதையில் நடந்த துரதிஸ்டவசமான வாகன விபத்தால் உதயகுமாரின் தம்பி மோகன் இறந்துவிட்டார்.

அத்துடன் இலங்கையிலிருந்து வந்த வசந்தகுமார் கை முறிந்த நிலையில் உயிர் தப்பினார். எனக்கும் சியாமளாவிற்கும் அந்தக் குடும்பத்தினரை நன்றாகத் தெரியும். அவர்கள் எல்லோருக்கும் சியாமளாவே குடும்ப வைத்தியர். ஒரு விதத்தில் அவுஸ்திரேலியாவுக்கு நாம் வந்தபின்னர், எங்களுக்குத் தெரிந்தவர்கள் குடும்பத்தில் நடந்த முதல் மரணச் சம்பவம் என்பதுடன், அவர்கள் இளம் குடும்பத்தினர் என்பதால் அந்தச் சோகம் எல்லோரையும் அதிகமாக பாதித்தது.

காலங்கள் செல்ல வசந்தன் கைமுறிவு குணமாகி வெளியே வந்தார். அதன் பின்பாக அவுஸ்திரேலியா அரசிடம் அகதிகளுக்கான விண்ணப்பத்தை சமர்ப்பித்திருந்தார் என்பதை அறிந்தேன். ஆனால், அந்த

விண்ணப்பத்தில் அவர் எழுதியது எதுவுமே எனக்குத் தெரியாது. தெரிய வேண்டிய அவசியமும் இல்லைத்தானே?

சில காலத்தின் பின்பு அவரது அகதி விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது. வழமை போன்று அவரது வழக்குரைஞர் சுயாதீனமான விசாரணைக்கு (Independent tribunal) அந்த விண்ணப்பத்தை சமர்ப்பித்திருந்தார். அக்காலத்தில் யாரோ சொல்லியே நான் அச்செய்தியை அறிந்தேன்.

அது எப்போது நடந்தது என்பதை மறந்துவிட்டபோதிலும், தலையறுந்த கோழியாக வைத்தியசாலையில் நான் ஓடித்திரிந்து வேலை செய்யும் நாளன்று நான்கு பூனைகளுக்கும் இரண்டு பெரிய நாய்களுக்கும் கருத்தடை அறுவை சிகிச்சை செய்யவேண்டும். அத்துடன் ஒரு காலில் எலும்பு முறிந்த பூனைக்கு அதன் முறிவைச் சரிப்படுத்த வேண்டும்.

இவையெல்லாம் முதல் நாளே எனக்கு ஒதுக்கப்பட்ட பணிகள். ஒரு விதத்தில் அன்று மிகவும் பிசியான நாளான போதும், எலும்பு முறிவு சிகிச்சைகளை நான் விரும்பிச் செய்வதால் அந்த நாளை கோயில் வாசலில் முகம் பார்த்தபடியிருக்கும் யாசகனாக எதிர்பார்த்திருந்தேன்.

காலையில் ஒன்பது மணியிலிருந்து மதியம் பதினொரு மணி வரையில் நான்கு பெண் பூனைகளுக்கும் கருத்தடை அறுவை சிகிச்சை செய்து முடித்தேன். பூனைகள் சத்திர சிகிச்சையின்போது அதிகம் இரத்தம் சிந்தாத பிராணிகள். எனது நேர்சாக வேலை செய்யும் சாம் என்பவன் ஏற்கனவே மூன்று வருடங்கள் மிருக வைத்தியம் படித்தவன் என்பதால் பூனைகளுக்கு மயக்க மருந்து கொடுத்து, அவற்றின் வயிற்று மயிரை மழித்து மேசைக்குக் கொண்டு வரும்போது அறுவைச் சிகிச்சை செய்வது இலகுவாக இருக்கும் . அதன் பின்பு நாய்கள் இரண்டுக்குமான சிகிச்சையை முடிக்க கிட்டத்தட்ட நண்பகல் ஒரு மணிக்கும் மேலாகி விட்டது .

மதிய உணவுக்குத் தயாராக இருந்தபோது எனது நண்பர்கள் வந்து பக்கத்திலுள்ள மதுசாலைக்கு அழைத்தனர். ஒரு மணி நேரம் எங்களுக்குக் கிடைக்கும் அந்த இடைவெளியில் பியர் அருந்தி, உணவுண்டு மீண்டும் வேலைக்கு வரவேண்டும். விருப்பமோ இல்லையோ எங்களது கிராமங்களில் பெண்கள் கிணற்றடியில் தண்ணிர் எடுக்கும்போதே ஊர்வாய் மெல்லும் இடம்போல் அந்த மதுச்சாலை மாறிவிடும். ஆண்- பெண் உறவுகள் பற்றியும் மற்றவர் வேலையில் விடும் தவறுகளைப்பற்றியும் பேசி தங்கத்தை உராயும் தட்டானாக நாங்கள் அந்த மதிய நேரத்தில் உராய்ந்து பார்த்துவிட்டு வரும்போது, மனதில் அமைதி ஏற்படும்.

கிட்டத்தட்ட ஐம்பது ஆண்கள், பெண்கள் என வேலை செய்யுமிடத்தில் ஒரு மணி நேரத்திற்கு உராய்வதற்கு தேவையான தங்கம் உள்ளது. இரண்டரை மணிக்கு வந்து, சத்திர சிகிச்சைத் தியேட்டருக்குள் பிரவேசித்து, கால் முறிந்த அந்த ஆண் பூனைக்கு மயக்க மருந்து கொடுத்து அறுவை சிகிச்சை செய்யத் தொடங்கியபோது மூன்று மணியாகிவிட்டது.

ஒரு மணி நேரம் எங்களுக்குக் கிடைக்கும் அந்த இடைவெளியில் பியர் அருந்தி, உணவுண்டு மீண்டும் வேலைக்கு வரவேண்டும். விருப்பமோ இல்லையோ எங்களது கிராமங்களில் பெண்கள் கிணற்றடியில் தண்ணிர் எடுக்கும்போதே ஊர்வாய் மெல்லும் இடம்போல் அந்த மதுச்சாலை மாறிவிடும். ஆண்: பெண் உறவுகள் பற்றியும் மற்றவர் வேலையில் விடும் தவறுகளைப்பற்றியும் பேசி தங்கத்தை உராயும் தட்டானாக நாங்கள் அந்த மதிய நேரத்தில் உராய்ந்து பார்த்துவிட்டு வரும்போது, மனதில் அமைதி ஏற்படும். கிட்டத்தட்ட ஐம்பது ஆண்கள், பெண்கள் என வேலை செய்யுமிடத்தில் ஒரு மணி நேரத்திற்கு உராய்வதற்கு தேவையான தங்கம் உள்ளது.

அந்தக் காலில் முறிந்த இரு பகுதி எலும்புகளை வெளியே எடுத்துக் கொண்டிருக்கும்போது, ' நோயல் 'உமக்கு அகதிகள் ரிபியூனலில் இருந்து தொலைபேசி அழைப்பு வந்துள்ளது.' என்று வரவேற்பு பகுதியில் இருந்து லின் என்ற பெண் வந்து சொன்னாள்.

உடனே என்ன செய்வது என்று எனக்குத் தெரியவில்லை. அறுவை சிகிச்சையைத் தொடங்கி விட்டேன். நாம் செலுத்தும் வாகனத்தை ரோட்டருகில் நிறுத்திவிட்டு தொலைபேசியில் பேசுவது போன்று, சத்திர சிகிச்சையை நிறுத்திவிட்டு, வரும் அழைப்பிற்கு பதில் சொல்ல முடியாது. அவ்வேளையில் யாரோ ஒருவனின் அகதி விண்ணப்பமும் அவனது வாழ்வும் அந்த தொலைபேசி வயரில் முறுகி பிணைந்துள்ளது என்பது எனது மூளையில் மின்னல் வெட்டாகத் தெரிந்தது .

'எதற்கும் பார்த்துக்கொள் ' என நேர்ஸ் சாமிடம் சொல்லிவிட்டு, கையுறையை கழற்றி கூடையில் எறிந்துவிட்டு, கையைக் கழுவாது சென்று அந்த தொலைபேசியை எடுத்தபோது, அங்கு அவுஸ்திரேலிய ஆணின் குரல் தன்னை அகதி ரிபியூனலின் அதிகாரி என எனக்கு அறிமுகப்படுத்தியது. 'உங்களை வசந்தகுமார் என்பவர் சாட்சியாகப் போட்டுள்ளார். 'என்றார் அவர்.

'அடப்பாவி, எனக்கு எதுவும் சொல்லவில்லையே ' என மனதுள் திட்டியபடி அவரிடம் சொன்னேன்.' நான் ஒரு மிருக வைத்தியன். நீங்கள் அழைத்தபோது அரைவாசியில் எனது ஒப்பரேசனை விட்டு விட்டு வந்தேன். எனக்கு ஐந்து நிமிடம் தரமுடியமா? ' எனக்கேட்டு விட்டு வெளியே வந்தேன். அந்த ஐந்து நிமிட இடைவெளியில் நான் இலங்கைக்கு மட்டுமல்ல திருகோணமலை பிரதேசத்தில் கடற்படை, விமானப் படை முகாம்களை மனஓடையில் தரிசித்து அவற்றின் உட்புகுந்து வெளிவந்தேன்.

அப்பொழுது எனது மேலதிகாரியும் நண்பனுமான ஜோஷே என்பவன் கும்பிடப்போன தெய்வமாக வாசலில் பிரசன்னமாகியபோது,

'தயவு செய்து எனது ஒப்பரேசனை உங்களால் செய்து முடிக்க முடியுமா?' எனக்கேட்டேன்.

' ஏய் உனது வேலைக்கு நீ சம்பளம் வாங்குகிறாய்தானே? உனது வேலையை நான் செய்யவேண்டுமா?' என்று எகத்தாளமான சிரிப்புடன் கேட்டார்.

'இப்பொழுது என்ன? வேண்டும் என்றால் உன் காலில் விழவேண்டுமா? ஒரு அவசரமான தொலைபேசி அழைப்பு. ஒரு அகதியின் விண்ணப்பம் சம்பந்தமாக நான் ரிபியூனலின் அதிகாரியுடன் பேசவேண்டும்.' என்றேன்

ஜேஷே கிழக்கு தீமோரைச் சேர்ந்தவனானதால் ஏற்கனவே அகதி விடயங்களை அறிந்தவன்.

'சரி, நாளை எனது மதிய உணவுக்கு நீ பொறுப்பு' என்று சொன்னதும் எனது கையிலிருந்த பூனையின் இரத்தத்தைக் கழுவிவிட்டு, மீண்டும் தொலைப்பேசியை எடுத்தேன். எனக்காக அந்த அதிகாரி காத்திருந்தார்

'வசந்தன் திருகோணமலையைச் சேர்ந்தவர். அங்கு நடந்த சம்பவங்களால் தனக்கு அங்கு இருக்க முடியாது. மீண்டும் ஊர் சென்றால் தனது உயிருக்கு உத்தரவாதமில்லை என இங்கு அகதி அந்தஸ்து வேண்டும் என்று கேட்டிருக்கிறார்.' என்றார் அந்த அதிகாரி.

நல்லவேளையாக அக்காலத்தில் திருகோணமலையில் சிலரைக் கடற்படை சுட்டுக் கொன்ற விடயத்தைப் பத்திரிகையில் படித்திருந்தேன். ஒரு கிளாஸ் ஐரிஸ் கின்னேர்ஸ் பியரை நான் குடித்திருந்தாலும் எனது மூளை பிரகாசமாக ஒளிர்ந்தது.

'திருகோணமலையில் பல குண்டு வெடிப்பு சம்பவங்கள் நடந்துள்ளன. அதன் காரணமாக இலங்கைப் படையினர் இளைஞர்களைப் பிடித்து விசாரிப்பார்கள். பலர் கைது செய்யப்பட்டு பல வருடங்களாக சிறையில் உள்ளார்கள். திருகோணமலை, கடற்படை, விமானப்படை மற்றும் இராணுவம் குடிகொண்டுள்ள இராணுவ நகரம் (Garrisons Town) என்பதால், அங்கு அடிக்கடி பிரச்சினைகள் நடக்கும். தனிப்பட்ட முறையில் வசந்தகுமாரது நிலை பற்றி எனக்குத் தெரியாத போதும், அரசிற்கும் விடுதலைப்புலிகளுக்கும் பயந்து இலங்கையை விட்டு வெளியேறிய பல திருகோணமலை இளைஞர்களை நான் இந்தியாவில் சந்தித்திருக்கிறேன். ' என்றேன்.

வசந்தகுமார் பற்றிய விசாரணையை முடித்துக்கொண்டு தமிழ்நாட்டில் அகதி மக்களுடன் நான் செய்த வேலைகளையும் அவரிடம் சொன்னபோது, பத்து நிமிடங்கள் அந்த அதிகாரி கேட்டபடியிருந்தார்.

'எதற்காக நீங்கள் அவுஸ்திரேலியாவுக்கு வந்தீர்கள் ' என்று அவர் என்னை விசாரித்தபோது, 'நான் படிக்க வந்தேன்.' என்றேன். இறுதியில் நன்றி சொல்லிவிட்டு, தற்போது நான் செய்யும் வேலையைப் பற்றியும் விசாரித்தார்.

அரை மணிநேரமாக நடந்த இந்த உரையாடலை முடித்துவிட்டு, நான் சத்திர சிகிச்சை அறைக்குப் போனபோது, ஏற்கனவே பூனையின் எலும்புக்குள் ஒரு உருக்கு கம்பியை வைத்து அந்த வேலையை முடித்து விட்ட ஜோஷே ' இந்தா, நீயே இனி மிகுதி வேலையையும் செய். ' என்று விட்டுச் சென்றான்.

நான் அந்த எலும்பு முறிவு சேர்ஜரியை செய்ய ஆர்வமாக இருந்தபோதும் அன்று தவறிவிட்டது. அத்துடன் அந்த வசந்தன் எனக்கு இதைப்பற்றி முற்கூட்டியே சொல்லாது விட்டு என்னை நிலைகுலைய வைத்துவிட்டானே என வாயாலும் மனதாலும் அவனைத் திட்டினேன்.

பின்னொரு நாளில் வசந்தனைக் கண்ட போது, அன்று நான் பட்ட முழு கஷ்டத்தையும் சொல்லாது. 'குறைந்த பட்சம் உனது விசாரணை நாள் பற்றியும், அதற்கு உங்களது பெயரைக் கொடுத்திருக்கிறேன் என்று எனக்குச் சொல்லியிருக்கலாம். அல்லது வழக்குரைஞராவது அதை முற்கூட்டியே எனக்கு அறிவுறுத்தியிருக்கலாம் ' என்றேன்

> நல்லவேளையாக அக்காலத்தில் திருகோணமலையில் சிலரைக் கடற்படை சுட்டுக் கொன்ற விடயத்தைப் பத்திரிகையில் படித்திருந்தேன். ஒரு கிளாஸ் ஐரிஸ் கின்னேர்ஸ் பியரை நான் குடித்திருந்தாலும் எனது மூளை பிரகாசமாக ஒளிர்ந்தது.

பதிலெதுவும் பேசாது அசட்டுச் சிரிப்புடன் வசந்தன் அன்று என்னைக் கடந்தான்.

நான் நன்றி சொல்ல வேண்டியவர்கள், எனது மேலதிகாரி ஜோசேயும் எனது நேர்சாக வேலை

செய்த சாமும்தான் என்பதால், அடுத்த நாள் எனது செலவில் அவர்கள் இருவருக்கும் அதே மதுச்சாலையில் மதிய உணவு வாங்கிக் கொடுத்தேன். வழக்குரைஞருக்கு எந்தக் கஷ்டமும் இல்லாது வசந்தனுக்கு அகதி அந்தஸ்து கிடைத்திருக்கும். எனக்குத்தான் இருவருக்கான மதிய சாப்பாட்டுக்கான பணம் செலவழிந்தது.

வங்கிகளின் கடனட்டையில் செலவழித்த பணத்தின் புள்ளிகளாக (Fly buy points) ஒவ்வொரு முறையும் கிடைக்கும். சில வருடங்களுக்கு முன்பு அமெரிக்கா போவதற்கு அந்தப் புள்ளிகளைப் பாவித்து விமான டிக்கட்டை பதிவு செய்தேன். அதேபோன்று இறந்த பின் எமனிடம் எனது கணக்கை ஒப்புவிக்கும் சித்திரகுப்தன் எனது கணக்கில் நான் இப்படிச் செய்த விடயங்களை வரவு வைப்பானோ எனக்குத் தெரியாது.

மதநம்பிக்கையில் வாழும் சகலருக்கும் அந்தக் கணக்கில் நம்பிக்கையுண்டு. ஆனால், நான் இறந்த பின்னர் அந்தக் கணக்கால் யாருக்கு என்ன பிரயோசனம் என நினைத்தேன். அதிலும் பார்க்க அந்த கடனட்டையில் மதுவுக்கும் உணவுக்கும் செலவழித்த பணத்தில் வரும் ஃபிளை பை பொயிண்ட்டுகளால் வாழும் காலத்தில் நன்மை உள்ளது. அதில் வரும் லாபத்தை நம்மால் பார்க்க முடிகிறதேயென எண்ணினேன். அ

# வன்முறைக் கலாச்சார எச்சங்கள்



## பூங்கோதை

**எவ்வளவு தான் முற்போக்குச் சிந்தனை கொண்டவர்கள் எம்மத்தியில் வாழ்ந்தாலும், நாம் ஒரு ஆண் ஆதிக்க சமுதாயத்தில் பல ஒடுக்குமுறைகளுக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கும் பெண்களும் வாழ்கின்ற தமிழ் சமுதாயத்தில் தான் வாழ்கிறோம். சில ஒடுக்குமுறை வடிவங்களை அடையாளம் காண்கிறோம் சிலவற்றிற்குக் குரல் கொடுக்கிறோம். சிலவற்றிற்கு குரல் கொடுக்க முடியாமல் கடந்து செல்கிறோம்.**

புலம் பெயர்ந்து வந்தோம். பல சோகங்களைச் சுமந்து வந்தோம். எதையுமே மறக்க முடியாது புலம்பித் திரிந்தோம். ஆக்கபூர்வமாக எதையுமே செயற்படுத்த முடியாது பல்வேறு திசைகளில் அனைவரும் பிரிந்து நின்றோம். வருடங்கள் பறந்தன.

தாயகக் கனவுகள் பொய்க்கப்பட்டன. இதன் காரணமாக தாயகத்திலும் புலம் பெயர் நாடுகளிலும் வாழ்ந்து கொண்டிருக்கும் எம்மக்களின் வாழ்வில் பெரும் துயரங்களே எஞ்சிப் போயின. இங்கு வாழ்ந்த தமிழ் மக்களுக்கும் சரி, அங்கு வாழ்கின்ற மக்களுக்கும் சரி தாயகத்தில் இனி என்ன செய்ய முடியும் என்று வழி காட்டுவதற்கான திடமான அரசியல் தலைமைகள் இல்லாது போயின.

ஓரளவிற்காயினும் நீதி, நியாயம் கொண்டு எமக்காக பேச வந்தவர்களையும் துரோகிகள், ஒத்தோடிகள், தேசியவாதிகள் என்கின்ற பெரும் பிரிவாகப் பிரித்து யாரையுமே எமக்காக உதவி செய்ய விடாமல் பார்த்துக் கொண்டவர்கள் புலம் பெயர் நாட்டில் உணவு, உடை, உறையுள் போன்ற எந்த அடிப்படை வசதிகளுக்கும் பஞ்சமில்லாது வாழ்ந்து கொண்டிருப்பவர்களாகிய எம்மவர்கள் தாம்.

அதே வேளையில் தாயகத்தில் போரினால் பாதிக்கப்பட்ட பொதுமக்கள், போரில் இறந்த போராளிகளின் மாவீரர் குடும்பத்தினர், அங்கங்களை இழந்து தவிக்கும் போராளிகள் எனப் பல தரப்பட்டோருடன் வாழ்வு எப்போதும் போலவே நகர்ந்து செல்ல ஆரம்பித்தது. இவர்களில் மிகப் பாரதூரமாக பாதிக்கப்பட்டவர்கள் அங்கங்களை இழந்து மற்றவர்கள் மீது தங்கி வாழவேண்டிய சூழலில் உள்ள போராளிகளே. இவர்கள் மக்களுக்கெதிரான அரசின் ஜனநாயக ஒடுக்குமுறையால் பாதிக்கப் பட்டவர்கள், வன்முறைகளை நேரில் சந்தித்தவர்கள். மனரீதியாகவும் பெரும் பாதிப்பைக் கண்டவர்கள்.

பாதிக்கப்பட்ட போராளிகளும் அவர்கள் மீது தங்கியிருக்கும் பல குடும்பங்களும் வறுமையிலும் சமூகத்தின் ஏனைய நெருக்கடிகளிலும் வாழ, புலம் பெயர் தேசத்தில் பல்வேறு

**இதில் சமூகம் சார்ந்த சவால்களை எடுத்துக் கொண்டால், சில வருடங்களுக்கு முன்பாக பல்கலைக்கழகங்களில் நடந்து வந்த பகிடி வதை சில மாணவிகளின் உயிரைக் குடித்தது. அதைத் தொடர்ந்து பல்கலைக்கழக மட்டத்தில் மாணவிகளைத் தமது இச்சைக்குட்படுத்தினார்கள் எனப் பேராசிரியர்கள் மீது பொது மக்கள் குற்றம் சுமத்தியதும் அறிய நேர்ந்தது. அதே போல கடந்த மாதத்தில் தாயகத்தில் ஒரு பாடசாலையில் ஒரு குழந்தைக்கு அடித்துக் காயம் ஏற்பட்டதாக ஒரு செய்தியும், டிக்டொக்கில் ஈழத் தமிழர்களையும், போராட்டத்தையும், தாய்மார் களையும் அவமதித்தார் என்று கூறி ஒரு பெண்ணுக்குப் பல ஆண்கள் சேர்ந்து அடித்து, பொது வெளியில் வன்முறையில் ஈடுபட்ட செய்திகள் தெரிவித்தன. இதற்குள் இங்கு எழுத முடியாத இன்னும் எத்தனையோ வன்முறைகளும் அடங்கும்.**

**இவை எல்லாமே தமிழ் சமூகத்தில் தான் நடந்திருக்கின்றன, நடைபெறுகின்றன. இவற்றைக் கடந்து செல்லுங்கள், உங்கள் வேலையைப் பாருங்கள் என்று சொல்பவர்களின் மன நிலை என்ன என்பது பெரும் கேள்விக்குறி.**

விதமாக போராட்ட காலங்களில் மக்களிடமிருந்து வசூலித்த பணத்தில் தம்மை சிலர் வளப்படுத்திக் கொண்டனர்.

எவ்வளவு தான் முற்போக்குச் சிந்தனை கொண்டவர்கள் எம்மத்தியில் வாழ்ந்தாலும், நாம் ஒரு ஆண் ஆதிக்க சமுதாயத்தில் பல ஒடுக்குமுறைகளுக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கும் பெண்களும் வாழ்கின்ற தமிழ் சமுதாயத்தில் தான் வாழ்கிறோம். சில ஒடுக்குமுறை வடிவங்களை அடையாளம் காண்கிறோம் சிலவற்றிற்குக் குரல் கொடுக்கிறோம். சிலவற்றிற்கு குரல் கொடுக்க முடியாமல் கடந்து செல்கிறோம். கடந்து போகின்றவை கூட வேண்டுமென்றே போவதல்ல, அதற்கு தனிப்பட்ட காரணங்கள் இருக்கலாம். தனி நபர் ஒருவரின் சமூகம் சார்ந்த சிந்தனைகளில் பாரிய தாக்கம் செலுத்தும் பல காரணிகள் உண்டு.

நாம் அமைப்பு ரீதியாக இயங்கும் சமூகக் கட்டமைப்புகளில் இல்லை என்பதால் தனி ஒருவரது சமூக வலைத்தளம் உட்பட்ட செய்திகள் அனைத்துமே சரியான நேரத்தில் ஒருவருக்கு வந்து சேரும் சந்தர்ப்பங்கள் குறைவாக இருப்பது, குடும்ப சூழல், அவற்றில் ஏற்படும் சவால்கள், பணி சார்ந்த கடமைகளால் நேரப் பற்றாக்குறை போன்ற இன்ன பிற காரணங்களால் சமூக ஆர்வலர்களுக்கு அனைத்து வன்முறை சார்ந்த விடயங்களிலும் கவனம் செலுத்த முடிவதில்லை. இதற்காக சமூக அக்கறை கொண்ட தனி நபர் ஒருவரைப் பார்த்து, நீங்கள் ஏன் இது குறித்து எழுதவில்லை, ஆனால் அது குறித்து எழுதினீர்கள் என ஆராய்வது முட்டாள்தனமாகும்.

இதையெல்லாம் கடந்து வந்த எமக்கு, அண்மையில், தாயகத்தில் சமூக, பொருளாதார, குடியியல் சார்ந்து ஏற்பட்டு வருகின்ற பலவிதமான மாற்றங்கள் துயரத்தை தருகின்றது என்பதில் மாற்றுக் கருத்து கிடையாது.

இதில் சமூகம் சார்ந்த சவால்களை எடுத்துக் கொண்டால், சில வருடங்களுக்கு முன்பாக பல்கலைக்கழகங்களில் நடந்து வந்த பகிடி வதை சில மாணவிகளின் உயிரைக் குடித்தது. அதைத் தொடர்ந்து பல்கலைக்கழக மட்டத்தில் மாணவிகளைத் தமது இச்சைக்குட்படுத்தினார்கள் எனப் பேராசிரியர்கள் மீது பொது மக்கள் குற்றம் சுமத்தியதும் அறிய நேர்ந்தது. அதே போல கடந்த மாதத்தில் தாயகத்தில் ஒரு பாடசாலையில் ஒரு குழந்தைக்கு அடித்துக் காயம் ஏற்பட்டதாக ஒரு செய்தியும், டிக்டொக்கில் ஈழத் தமிழர்களையும், போராட்டத்தையும், தாய்மார் களையும் அவமதித்தார் என்று கூறி ஒரு பெண்ணுக்குப் பல ஆண்கள் சேர்ந்து அடித்து, பொது வெளியில் வன்முறையில் ஈடுபட்ட செய்திகள் தெரிவித்தன. இதற்குள் இங்கு எழுத முடியாத இன்னும் எத்தனையோ வன்முறைகளும் அடங்கும்.

இவை எல்லாமே தமிழ் சமூகத்தில் தான் நடந்திருக்கின்றன, நடைபெறுகின்றன. இவற்றைக் கடந்து செல்லுங்கள், உங்கள் வேலையைப் பாருங்கள் என்று சொல்பவர்களின் மன நிலை என்ன என்பது பெரும் கேள்விக்குறி. எமக்குத் தெரிந்து எம் கண் முன்னே நடக்கும் ஒரு வன்முறையை நாம் பார்க்காதது போல போக வேண்டும் என நினைப்பதும் வன்முறைக்கு ஆதரவு தெரிவிப்பது தான். சிலர் உண்மையாகவே, இது குறித்துக் குரல் கொடுத்தால், கொடுத்தவருக்கு கேடு விளைவிக்கலாம் என்ற பயம் கொள்பவர்கள். அது மாத்திரமல்ல, இப்படிப் பண்பில்லாது நடக்கும் காட்டுமிராண்டிகளை நாம் எழுதி மாற்ற முடியாது என்பதும் அவர்களது இன்னொரு காரணம். அவர்களை நாம் மன்னித்துக் கொள்வோம்.

இரு தரப்பு மக்களுமே எமது சமுதாயத்தின் குரல்கள் தாம் என்பதை நாம் மறுக்க முடியாது. அதே வேளையில் ஒருவர் செய்யும் குற்றத்திற்கு வன்முறையைக் கையில் எடுப்பவர்கள் யார், எதற்காக இந்த மன நிலையில் இருக்கிறார்கள் என்று பார்ப்பது அவசியமாகிறது. வன்முறையை ஆதரிப்பவர்களும் வன்முறையாளர்களே என்பதையும் நாம் கருத்திற் கொள்ள வேண்டும்.

••••

தர்க்க ரீதியாக ஒரு நிகழ்வைப் பார்க்க முடியாதவர்கள், கருத்து வறட்சி அல்லது மொழி ஆளுமை குறைந்தவர்கள், கருத்தைக் கருத்தால் எதிர்க்க முடியாதவர்கள், ஜனநாயக ஒடுக்கு முறைகளினால் பாதிக்கப்பட்டவர்கள், குடும்ப வன்முறையில் கட்டுண்டவர்கள்

**அடிப்பது தவறு என்று கூறுபவர்களை சிலர், ‘அப்படியானால் தகாத வார்த்தை பாவித்த பெண்ணுக்கு வக்காலத்து வேண்டுகிறீர்களா?’ என்று முழங்காலுக்கும் மொட்டைத் தலைக்கும் முடிச்சுப் போடுகிறார்கள், யாரோ ஒரு பெண்ணின் சமூக வலைத்தளத்தை, நேரத்தை இதற்காக ஒதுக்கி, பார்த்து பார்த்து தம்மை உசுப்பேத்திக் கொண்டவர்கள். சமூக வலைத்தளங்களில் எத்தனையோ தரம் கெட்டவை நடக்கின்றன. அவற்றை எதற்காகப் பார்க்கிறார்கள் என்று தான் புரியவில்லை. அடிப்பது வன்முறை மட்டுமல்ல சட்ட ரீதியான குற்றமுமாகும்.**

**ஒரு பெண் எனக்குத் தனியாக குறுஞ்செய்தி அனுப்பியிருந்தார், ‘இந்த நாய்க்கு இன்னும் அடி போட்டிருக்க வேண்டும்!’**

**என்ன விதமான மன நிலை இது?**

தான் இவ்வாறு இன்னொருவரை அடித்து வதைப்பதை ஆதரிப்பவர்கள். உதாரணமாக, தகாத வார்த்தை பேசினார், என் நாட்டைப் பற்றி, என் தாயைப் பற்றிப் பேசினார் என்பதற்காக, கருத்தால் ஒருவரை எதிக்கத் திராணியற்று ஒருவரை அடிப்பதை ஆதரிப்பவர்களும் நாகரீகமற்றவர்களே.

அடிப்பது தவறு என்று கூறுபவர்களை சிலர், ‘அப்படியானால் தகாத வார்த்தை பாவித்த பெண்ணுக்கு வக்காலத்து வேண்டுகிறீர்களா?’ என்று முழங்காலுக்கும் மொட்டைத் தலைக்கும் முடிச்சுப் போடுகிறார்கள், யாரோ ஒரு பெண்ணின் சமூக வலைத்தளத்தை, நேரத்தை இதற்காக ஒதுக்கி, பார்த்து பார்த்து தம்மை உசுப்பேத்திக் கொண்டவர்கள். சமூக வலைத்தளங்களில் எத்தனையோ தரம் கெட்டவை நடக்கின்றன. அவற்றை எதற்காகப் பார்க்கிறார்கள் என்று தான் புரியவில்லை. அடிப்பது வன்முறை மட்டுமல்ல சட்ட ரீதியான குற்றமுமாகும்.

ஒரு பெண் எனக்குத் தனியாக குறுஞ்செய்தி அனுப்பியிருந்தார், ‘இந்த நாய்க்கு இன்னும் அடி போட்டிருக்க வேண்டும்!’

என்ன விதமான மன நிலை இது?

இதன் ஆரம்பம் எங்கிருந்து வந்தது என்று நோக்கினால், இது எமது சமூகத்தின் குடும்ப அமைப்புகள், சமூகக் கட்டுமானத்திலிருந்து தான் வளர்ந்து வந்துள்ளது. ஒரு குடும்பத்தில் ‘அடிக்கும் கை தான் அடிக்கும்’ எனத் தாயை அடிக்கும் தந்தையைப் பார்த்து வளரும் குழந்தைகள், பின்பு ‘அடிக்காத பிள்ளை படிக்காது!’ என்று பாடசாலையில் ஆசிரியர்கள் அடிப்பதை ஏற்றுக் கொள்ளும் பெற்றோர்கள், அதனால் பாதிப்புறும் குழந்தைகள், அதிபர்களைக் கண்டதும் மண்டியிடும் ஆசிரியர்கள், பணி சார்ந்த இடங்களில் உயர்வு தாழ்வு பார்க்கும் சமூகச் சிந்தனைகள் அனைத்துமே தனி மனிதர்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகளை மதிக்காமல், அவர்களைக் காலின் கீழே போட்டு நசிக்கின்றன.

அடிப்பது தவறு, வன்முறை தவறு என்பது தெரியாத ஒரு ஆசிரியை தாயகத்தில் ஒரு குழந்தைக்கு அடித்துக் காயம் ஏற்படுத்தியிருக்கிறார். நாம் ஜனநாயகத்தில் மேம்பட்ட நாடுகளில் வாழ்கிறோம். இங்கு பிரித்தானியாவில் மாணவர்களைத் தேவையற்று தொடுவதே குற்றம் என்பது மட்டுமல்ல Safe Guarding Act, Terrorism and Security Act 2015 போன்ற பல சட்டங்களினூடே மாணவர்களின் உரிமைகளைப் பேணுகிறோம். யார் அடித்தாலும் வன்முறையைப் பாவித்தாலும் தவறு தான்.

நான் கற்பிக்கின்ற பாடசாலை உள்ளிட்ட பல ஆரம்பப் பாடசாலைகளில் 'Rights Respecting Schools' என்கின்ற ஒரு திட்டத்தின் கீழ் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் (யுனெஸ்கோவின்) குழந்தைகளுக்கான 54 வகையாக வரையறுக்கப்பட்ட உரிமைகளை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்துகிறோம். இவை குழந்தைகளுக்கான ஜனநாயக உரிமைகளாகும். இவற்றைக் கற்றுக் கொண்ட குழந்தைகள் இவற்றைத் தமது பெற்றோர்கள், பாதுகாவலர்களுக்கும், தம்மைச் சுற்றியுள்ளோருக்கும் தமக்கான உரிமைகள் குறித்துப் பேசுகிறார்கள்.

ஆனால் இவை எதுவுமே தெரியாமல் அடித்தும், அடிவாங்கியும், அடிப்பதைப் பார்த்தும் வளரும் குழந்தைகள் தாம் வளர்ந்து பெரியவர்கள் ஆனதும் தம்மை எப்படி வளர்த்தார்களோ அதையே பின்பற்ற முனைகிறார்கள். பெண்களைப் பேச விடாமல், படிக்க விடாமல், வீட்டுக்கு வெளியே ஒரு உலகம் இருப்பதைத் தெரிய விடாமல் வளர்க்கும் வீடுகளிலுள்ள ஆண் குழந்தைகள் தாம் வளர்ந்ததும் வீட்டுக்கு வெளியே காண்கின்ற பெண்கள் எல்லோருமே தரம் கெட்டவர்கள், தாம் சொல்வதைக் கேட்க வேண்டும் என்ற எண்ணத்துடன் உருவாகி பல்கலைக்கழகங்களில் பெண்களைப் பகிடிவதைக்குட்படுத்துகிறார்கள். புலம் பெயர்ந்து வாழும் இடங்களில் அடிதடி, வன்முறையில் இறங்குகிறார்கள்.

ஆண்கள் மாத்திரமல்ல, இச்சூழலில் வளரும் பெண் குழந்தைகளும் அவர்களை அறியாமலே வன்முறை என்பது சாதாரணப்படுத்தப்பட்ட உளவியலை உள்வாங்குகிறார்கள். கருத்துச் சுதந்திரம் இல்லாது வளர்வது அவர்களது எதிர்காலத்தை ஒடுக்கு முறைகளுக்குட்படுத்தும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகளையும் அதிகரிக்கிறது.

இப்படியாக, இவற்றைப் பார்த்து வளர்ந்த மக்களுக்கு போராட்ட காலத்தில் அரசின் ஜனநாயக ஒடுக்குமுறைகளும், அதைத் தொடர்ந்து போராட்ட அமைப்புகளினிடையே நடந்த ஜனநாயக ஒடுக்குமுறைகளும்

வன்முறை சரியென்பதை மேலும் நியாயப்படுத்தின.

ஜனநாயகம் என்றால் என்னவென்று தெரியாமல் வளர்ந்தவர்கள் நாம். மின்கம்பத்தில் ஒருவரைக் கட்டுவதும், அவரைச் சுடுவதும், பச்சை மட்டையால் அடிப்பதும், உயிரோடு எரிப்பதும் சரியென்று நினைக்கும் ஒரு சமூகத்தில் ஒருவரைப் பொது வெளியில் அடிப்பதும் சரியாகத்தான் இருக்கும்.


இப்படியாக மிக இறுக்கமான எண்ணப்பாட்டில் உள்ளவர்களுக்கு தற்பாதுகாப்பு கருதி தம்மைத் தாக்கியவர்களைத் தாக்கலாமே தவிர அடிதடி வன்முறை என்பது குற்றம் என்பது அவர்கள் வாழ்கின்ற நாட்டில் சிறைச்சாலைக்கு போய் வந்தாற்கூட புரிதல் வருமா என்பது பெரும் ஐயப்பாடு தான்.

மேற்கூறிய வகையில் வன்முறையைச் சரியென்ற ரீதியில் ஏற்றுக்கொண்ட ஒரு சமூகத்தின் எச்சங்கள் தாம் நாம். சக மனித நேயம் இன்றி, எந்த விதமான குற்ற உணர்வுமின்றி, அதே வன்முறையைக் கடத்துகிறோம். இது ஒரு சமூகத்தின் அடிப்படைக் குறைபாடு. இதற்கு தனியே ஒருவரையோ அல்லது கூட்டு வன்முறையில் இறங்கியவர்களையோ அல்லது அவர்கள் செய்தது சரியென்று சொல்லுபவர்களையோ நாம் குறை சொல்ல முடியாதிருப்பதற்குக் காரணம் அவர்களது சமூகப் பின்னணி தான்.

உடல், உள வன்முறைகள் உள்ளிட்ட சமூகம் சார்ந்த வன்முறைகளைப் பார்த்து வளர்ந்து, அவை சாதாரணமாக்கப்பட்ட வாழ்விலிருந்து வந்தவர்கள், ஆரம்பகால வாழ்வின் அதிர்ச்சிகரமான அனுபவங்களை உள்வாங்கிக் கொண்டவர்கள் போன்ற அநேகமானவர்களின் வாழ்வு, எதிர்காலத்தில் வன்முறைச் செயல்களுடன் தொடர்புடையவையாக அல்லது அவற்றை ஆதரிப்பவையாக இருக்கின்றன என்பதை பல உளவியல் ஆய்வுகளும் உறுதிப்படுத்துகின்றன.

இருந்த போதிலும், இவ்வாறான ஆரம்ப கால அதிர்ச்சி சார்ந்த வாழ்வு அனுபவங்களோடு போதைப் பொருள் பாவனை, ஆளுமைக் கோளாறுகள், அடையாளச் சிக்கல், சுற்றுச்சூழல் தாக்கங்கள், அறிவாற்றல் சிதைவுகள், மற்றும் சமூகமயமாக்கல் முறைகள் பற்றிய ஆழமான புரிதல் இன்மை போன்றவற்றின் தாக்கங்களும் வன்முறை யாளர்களைத் தோற்றுவிக்கின்றன என்றும் இவ்வாய்வுகள் தெரிவிக்கின்றன. அதே வேளையில், ஒவ்வொரு வன்முறை நிகழ்வும் தனித்துவமானதும், பன்முகத்தன்மை கொண்டதும் என்பதை நினைவில் கொள்வதும் அவசியமாகின்றது. ஒவ்வொன்றிற்கும் மேற்கூறப்பட்ட காரணங்களில் ஒன்றோ பலவோ காரணங்கள் ஆகலாம்.

இது குறித்த விழிப்புணர்வு, அது சார்ந்த கல்வி, பயிற்சிப் பட்டறைகளோடு இணைந்த சமூக ஊடாட்டம் போன்றவை இத்தகைய வன்முறைகளை எவ்வாறு தவிர்க்கலாம் என்பதற்கும் அது தவறு என்பதை உணர்ந்து கொள்வதற்கும் உதவலாம். நீண்ட காலம் எடுத்தாலும் மாற்றங்கள் நிகழும் என்று நம்புவோம்.



கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக குற்றவியல் நிபுணர்கள், தடயவியல். மற்றும் உளவியல் நிபுணர்கள் இவ்வாறான வன்முறை சார்ந்த தலைப்புகளை பெருமளவில் ஆய்வு செய்துள்ளனர். இதன் காரணமாக தனியே இது குறித்த ஆய்வுகளின் அறிக்கைகள் ஏராளமாகக் குவிந்துள்ளன. அவற்றில் ஒரு சிலவற்றை மட்டும் கீழே தந்திருக்கிறேன். உளவியல், குற்றவியல், தடயவியல் துறைசார் நிபுணர்களின் இந்த ஆய்வுக் கட்டுரைகளும் நான் மேலே தந்தவற்றை உறுதிப்படுத்துகின்றன. இவை குறித்து ஆழமாக, பிறிதொரு தளத்தில் ஆராய்வோம்.

•••

* Elbogen, E. B., et al.(2016) Clinical Psychological Science,
* Beyond mental illness: Targeting stronger and more direct pathways to violence, Sage publication
*https://www.crimeandjustice.org.uk/sites/crimeandjustice.org.uk/files/09627250608553387.pdf
*https://aasem.org/why-do-people-hurt-others-unraveling-the-motives-behind-harmful-actions/
*https://www.healthline.com/health/aggressive-behavior




> ‘நீர்வழிப் படூஉம் புணைபோல‘
> கணியன் பூங்குன்றன்
>
> தேவி பாரதி அவர்களின் ‘நீர்வழிப் படூஉம்‘ நாவல் 2023 ஆம் ஆண்டு தமிழ் மொழிக்கான சாகித்திய அக்காதெமி விருதினை வென்றிருக்கின்றது. கணியன் பூங்குன்றனின் ‘யாதும் ஊரே’ என்ற சங்காலப் பாடலில் வரும் ‘நீர்வழிப் படூஉம்‘ என்ற சொற்தொடர் ‘நீரோடும் வழியே‘ என்ற பொருள்பட வாழ்வினை அதனது போக்கில் வாழ்ந்து முடிக்கும் ஒரு கூட்டம் மனிதர்களது வரலாற்றுச் சித்திரங்கள் இந்த நாவலில் அழகுறத் தீட்டப்பட்டுள்ளன.

# தேவிபாரதியின் நாவல்

# ‘நீர்வழிப் படூஉம்‘

**நடராசா சுசீந்திரன்**

ஒருவகை நடைமுறை வசதிக்காக இந் நாவல் ஒரு புனைவு என எழுதி வைக்கப்பட்டிருப்பினும், ‘பட்ட கதைகளும் படாத கதைகளும்‘ என்ற நூலாசிரியரின் முன்னுரையின் வழி இந் நவீனம் ஒரு தன் வரலாற்றின் பதிவுகளாகவே எமக்குள் இறங்கிக்கொள்கின்றன.

உண்மையில் தேவி பாரதி அவர்கள் அரவக்குறிச்சி என்ற ஊர் சென்று திரும்பும்போது உடையாம்பாளையம் என்ற அழிந்துபட்டுப் புதர் மண்டிய, தாய்வழி முற்சொந்தங்கள் வாழ்ந்துபட்ட கிராமத்தினூடு சென்று, அங்கு சற்றே தரித்து நின்று, காலங்களைக் கிளறி எடுத்த நினைவுகளை, அந்த நினைவுகளில் வாழும் மனிதர்களை தன் தாய்வழி உறவுகளை உன்னதமான பாத்திரங்களாக வார்த்து வைக்கின்றார் இந் நூலில்.

நீர் வழிச் செல்லும் ஓடம் போல் வாழ்வு அதன் வழியே ஓடிமுடிந்து விடுகின்றது. மீந்த புதர்களும் தூர்ந்த எச்சங்களும் மண்ணிலும், மனிதர்களினதும் நிகழ்வுகளினதும் மனப் பதிவுகள் நெஞ்சிலுமாகத் தேங்கிக் கிடக்கின்றன. தேவிபாரதி என்ற ஓர் எழுதுகலைஞன் அவற்றை ஒரு நாவலாகச் செதுக்கி வடித்துள்ளான்.

பண்ணயக்காரர்களும் பண்ணயக் காரிச்சிகளும் அவர்களது தொட்டிக் கட்டு வீடுகளும் கிணறுகளும் தோட்டம் துரவுகளுமாக ஒருபோது நிறைந்திருந்த அம்பராந்து ஆற்றின் படுகைக்கு அப்பாற் கிடக்கும் உடையாம்பாளையம் என்ற ஒரு சிறிய ஊரை விட்டு அடுத்துவந்த தலைமுறைகள் எங்கெங்கோ தொலைந்துபோயினர்.

இன்று எல்லாமே தூர்ந்து போயும் அழிந்து பட்டும் மறைந்து விடும் தறுவாயிலும், அங்கே இன்னும் சில மூப்படைந்த மனிதர்கள் சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன் மண் சுவர்களாலான இரண்டு மிகச் சிறிய வீடுகளில் வசித்த தமது ‘காரு‘ என்ற குடிநாவிதனையும் இடுப்பில் செருகிய ஒரு கம்பறு கத்தியுடன் அன்றைய பண்ணயக்காரிச்சிகளுக்கு பிள்ளைப்பெறு பார்த்த செலம்பா(ள்) என்ற நாசுவத்தியினையும் இன்னமும் நினைவில் வைத்திருக்கின்றனர். தேவிபாரதி அவர்களின் தாயினதும், சிறியதாயினதும், அவரது பெரியம்மாவின் மகள் காளியம்மாவினதும் பால்யகாலங்கள் இந்த நிலத்தில் தான் பூத்துக் குலுங்கி மணம் பரப்பி நின்றிருக்கின்றன.

‘மிகச் சிறிய அந்தக் கிராமத்தின் கடைக்கோடியில் இருந்தது என் தாய் வழி மூதாதையர்களின் காலடிச் சுவடுகள் படிந்த மண்;‘ என்று தேவிபாரதி என்ற படைப்பாளி நிஜத்தில் கண்டதை ‘பட்ட கதைகளும் படாத கதைகளும்‘ என்ற தனது முன்னுரையில் இந்த நாவல் பிறந்த கணத்தினைச் சொல்லிவிடுகின்றார்.

‘பட்ட கதைகளும் படாத கதைகளும்‘ என்ற இந்த முன்னுரைக்குள் முழுக்கதையினையும் புகுத்திக் குறுகத் தறித்து எழுதி வைத்திருக்கின்றார். முன்னுரையின் அழகுக்குள் நாம் மூழ்கிவிடுகின்றோம்.

கதை சொல்லி ராஜசேகரனும் அவனது தாயும் அவனது காரு மாமாவின் சாவீட்டிற்கு வந்து சென்ற பின்னர், மீண்டும் ஏழாவது நாளான இன்று, நாளை எட்டாம் நாள் நடைபெற இருக்கும் ‘தாலியறுப்பு‘ நிகழ்வுக்காக மீண்டும் உடையாம்பாளையம் நோக்கி வருகின்றனர். யாருமற்றவராக இறந்து போன காருமாமாவின் மரணம், தனித்தே கிடந்த அவரது அந்தச் சடலம், உறவும் தொடர்பும் அந்நியமாகி கொண்டிருந்த அந்த ஊரையும், தொலைத்தும் தொலைந்தும் தொடர்புகள் அறுந்தும் போன உறவுகளையும் பிணைத்துவிடுகின்றது.

ராஜசேகரனும் அவனது தாயும் அரசுப் பேருந்தில் வந்திறங்கி ஆம்பாராந்து ஆற்றினைக் கடந்து ஒற்றையடித் தடத்தில் உடையாம்பாளையம் நோக்கிச் செல்கின்றனர். ஆற்றின் பன்மருங்குமமைந்த மருதமரங்களின் நிழல்கள் ஓடியும் தேங்கியும் நகரும் தண்ணீர் நீர்க் காகங்கள் செடிகள் கொடிகள் புதர்கள் மரங்கள் இன்ன யாவும் செட்டியுடன் ஓடிப்போன ராசம்மா அத்தை பற்றி, தானும் அவளும் ஒன்றாய்த்திரிந்த காலத்தின் கொழகொழப்பான சேற்றில் புதைந்து கிடந்த தாயின் நினைவுகளைக் கிளறியடித்தன. ‘சண்டாளப் பாவி, பாவி முண்ட, கண்டாரோலி‘ என்றபடி ராசம்மா அத்தையைச் சபித்துக் கொண்டிருந்தாள் ராஜசேகரனின் தாய்.

அண்ணன்மார் கதை, நல்லதங்காள் கதை, காத்தவராய சுவாமி கதை போன்ற நாட்டார் வழக்காற்றுக் கதைகளிற் துறை தோய்ந்த பாட்டுக்காரனும் உடுக்கடிக் கலைஞனுமான உடுமலைப் பேட்டை லிங்கநாவிதன் அவர்களிடம் ஒப்பாரி கற்றவள் கதை கூறும் ராஜசேகரனின் தாய் முத்து. லிங்கநாவிதன் அவளுக்கு ஒன்றுவிட்ட மாமன் முறை.

தனித்தே கிடந்த காருமாமாவின் சடலம், ஊர்கூடிக் கோலாகலமாகத் தேரில் இடுகாடு சென்றதற்கு தாய்முத்துவினதும் மற்றும் பெண்களினதும் உளமுருக்கும் ஒப்பாரிகளின் இசைவீச்சும் ஒரு காரணம்.

கல்வி, தொழில் வளர்ச்சி, அரசியல் மாற்றங்கள், புதிய தொழில்நுட்ப வளர்ச்சி, நவீன இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் வருகை, கணனி, தொடர்பாடல்களில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் போன்றவை கிராமங்களைக் குலைத்து விட்டன. சிறுநகரங்கள் பெருநகரங்களாகின. பெரு நகரங்களை நோக்கி மக்கள் தொடர்ச்சியாக இடம்பெயர்ந்தனர். நிலவுடமைச் சமூகவாழ்வும் அடிமை குடிமைகளைக் கொண்ட கிராமிய வாழ்வுமுறைகளும் மெல்ல மெல்ல ஆட்டங்கண்டன.

இவை இலக்கியங்களில் பலவாறு தொடர்ச்சியாக உரைக்கப்படுகின்றன. ‘கோவேறு கழுதைகள்‘ என்ற இமையத்தின் நாவலில் ஆரோக்கியம்-சவுரி குடும்பத்தின் அவல வாழ்வு அந்தத் தலைமுறையுடன் முடிவிற்கு வருகின்றது. அவரது செடல் நாவலிலுங்கூட அந்தக் கிராமமே மறைந்து போகின்றது.

நீர்வழிப் படூஉம் - நாவலில் வருகின்ற பண்ணாடிக் குடும்பங்கள் அனேகமாக கொங்குவேளாளக் கவுண்டர்கள். தெக்குவளவுப் பண்ணாடி என்பவரும் கொற்றைவேல் கவுண்டர் என்பவரும் இரண்டு பெரிய பண்ணையார்கள். ஆனால் நாவலில் அவர்கள் பாத்திரங்கள் தமது குடிகளுக்கு உதவும் கரங்களாகவும் நல்லிதயங் கொண்டவர்களாகவுமே காட்டப்படுகின்றன.

காருமாமா, பெரியம்மா, பெரியப்பாவின் மரணத்திற்குப் பின்னர் உடையாம்பாளையத்திற்கு குடிமகனாகப் பெரியம்மாவினால் அழைத்து வரப்பட்ட முத்தையன்வலசுப் பெரியப்பா, அவரது இரண்டாவது தாரமாக வந்த சவுந்தரம் பெரியம்மா, ஒரு காலத்தில் பெரியம்மாவின் இணைபிரியாத் தோழியாக இருந்து, பின்னர் பேரப்பிள்ளைகளும் கண்டபின்னர் பேத்தியொருத்தியின் காதுகுத்தற் சடங்கில் உருவாகிய சண்டை செத்தவீட்டினைக் கூடத் தவிர்த்துவிடும் பகையாக மாறிப்போன சுந்தராடிவலசு பெரியம்மா, காருமாமாவின் மனைவி ராசம்மா என்று உடன்பிறந்த உறவுகளும் திருமணபந்தத்தினால் ஏற்படும் உறவுகளும் மற்றும் அவர்களது பிள்ளைகள் என்போரின் வரலாறுகள் மிக இயல்பாக இந்த நாவலில் சொல்லப்படுகின்றன.

நாவலின் முழுமைக்கு ஒவ்வொரு முப்பத்திமூன்று சிறுசிறு வரலாற்றுக் கூறுகளும் வலுச்சேர்க்கின்றன.


பாசமலர் திரைப்படம் திரைக்கு வந்த காலப்பகுதியில் அந்தப் படப்பாடல்களின் அண்ணன் - தங்கை உறவுகளும் மென்மையான உணர்வுகளும் நாவலின் பாத்திரங்களின் உணர்வுகளுடன் ஒன்றித்துவிடுகின்றன. இலங்கை வானொலியின் வர்த்தக சேவை ஒலிபரப்பில் பாடல்கள் விரும்பிக் கேட்கப்படுகின்றன. வர்த்தக சேவை என்பது வர்த்தகசபை என்று தவறாக எழுதப்பட்டிருக்கின்றது.

தனிமனிதர்கள், குடும்பங்கள், சமூகம் சினிமாவின் தாக்கத்திற்கு உட்பட்டுத் தம்மை அதுவாக மாற்றிச் சிந்தித்து மாஜையில் மனிதர்கள் வாழத் தலைப்பட்ட ஆரம்ப காலமது. இன்று நாற்பது வருடங்களின் பின் தமிழில் சினிமாவினதும் அதன் தாக்கத்தினதும் பிரமாண்டத்தினைத் திரும்பிப் பார்க்கின்றபோது ஒருவகைக் கையறு நிலையில் நின்றுகொண்டிருகின்றோம் நாம்.

காருமாமாவினதும் அவளதும் பிள்ளைகளான சுந்தரத்தையும் ஈஸ்வரியினையும் கூட்டிக்கொண்டு ராசம்மா அத்தை செட்டியுடன் ஓடுவிடுகின்றாள். காருமாமாவின் வலிப்பிற்கும், சீரழிந்த வாழ்விற்கும் ராசம்மா அத்தையையே காரணம் என்று நாவல் முழுவதும் காருவின் சகோதரிகள் சபித்துக்கொள்கின்றனர். ஆனால் ஒரு கட்டத்தில் ராசம்மா அத்தை கூடச் சபித்தவர்களாற் புரிந்து கொள்ளப்படுகின்றாள். அன்போடு அரவணைக்கப் படுகின்றாள், சாமானிய மனிதர்களின் மிக இயல்பான போக்காக. வலி மிகுந்த வரலாறு,


அற்றுப்போன மனிதர்கள் ஆனாலும் உயர்ந்து நிற்கின்றனர் அழியாத சித்திரங்களாய்.

அ




சுவடு
சொற்கள்
வனையும்
உலகம்
நடராசா சுசீந்திரன்

# பாரிஸில் நிகழ்ந்த 'சொற்கள் வனையும் உலகம்' 'தடங்களில் அலைதல்' நூல் வெளியீடு!



**சுகன், பாரிஸ்**

என் இனிய நண்பர் நடராசா சுசீந்திரனின் இரு நூல்கள் 'சொற்கள் வனையும் உலகம்', 'தடங்களில் அலைதல்' ஆகியவற்றின் வெளியீடு பங்குனி 10, 2024 அன்று பிரான்ஸ், பாரிஸ்-18 இல் பேரா. முனைவர் ச.சச்சிதானந்தன் அவர்களது உயர் கற்கைகளிற்கான கல்வி நிறுவன அரங்கில் மிகச் சிறப்பாக நடந்தேறியது. உயிர்நிழல் பதிப்பகமும் சென்னை சுவடு பதிப்பகமும் இணைந்து இந்த நூல்களை வெளியிட்டுள்ளனர். உயிர்நிழல் பதிப்பக லக்ஷ்மியின் ஏற்பாட்டிலும் தலைமையிலும் நிகழ்வு நடாத்தப்பட்டது. அசுரா-நாதன், க.வாசுதேவன், அருந்ததி-அருளானந்தராஜா ஆகியோர் உரைகள் இடம்பெற்றன.

தோழர் அழகிரி என்கிற அந்தோனிப்பிள்ளை அவர்கள் இரண்டு நூல்களையும் வெளியிட்டு வைத்தார்.

பிரதிகளை அபிதா ஜெயானந்தனும் சுரேகா ஜெயானந்தனும் பெற்றுக்கொண்டனர்.

தேர்ந்த கலை இலக்கிய தத்துவ அரசியற் பின்னணி கொண்ட பிரான்ஸ் நிலமீதில் தமிழர்களுக்கு மத்தியில் குடிகொண்டிருந்த கொலைக் கலாச்சாரம் முடிந்து, திறந்த கருத்து நிலைகளின் சுதந்திரமான விவாதச் சூழல் அமைவதென்பது காலம் இன்னும் எம்மை ஒரேயடியாக ஏமாற்றாது, வஞ்சிக்காது கொஞ்சமேனும் காத்து, எஞ்சி நிற்கும். அதன் துளி கருணைக்கு நன்றி. எப்போதும் சமாதானம் நிலவட்டும். தர்மம் சரணம்.

நண்பர் நடராசா சுசீந்திரன் எழுத்தாளுமையும் பேச்சாற்றலும் ஒருங்கமைந்த திடமான ஓர் செம்மாந்த ஆளுமை. தனது நாற்பது ஆண்டுகளிற்கும் மேலான, அகதியாய் புகலிட நிலமெங்கணும் கண்டு கேட்டு அனுபவித்தறிந்த, பட்டிழிந்த வழித்தடங்களை வந்த வரையிலும் எழுதிப் பதிந்த குறிப்புகள் இரு நூல்களாக கடந்த தையில் சென்னை புத்தகக் கண்காட்சியில் வெளிவந்தன. அடுத்து அமைந்தது பிரான்ஸ் தேசத்துப் பாரிஸில். இதற்குத் தற் துணை நின்று நூல்கள் வெளியீடு வரைக்கும் கொண்டுவந்து சேர்த்த லக்ஷ்மி இணை கொண்டு வைத்துக் கருதத்தக்கவர்.

நடராசா சுசீந்திரனின் நிகழ்தல், அரங்கமற்ற நிலக் களனிற்கான வருகை. ஒரு கூத்தில் கட்டியக்காரனின் ஆடற்தரு சடாசுரனதும் கீசகனதும் குருக்கேத்திரனதும் காந்தர்வ வருகை. அண்ணாவியரது சபை விருத்தம். வெற்றுப் பாலைத் திணையில் ஒரு ஏகாந்தமான இயல்பான பயணத்திற்கு இணைமை. நினைத்த மாத்திரத்தில் நெருப்பை உருவாக்கும் வரம் கொண்டமைந்த நள மகாராசனின் வழிமை.

புகலிட சஞ்சிகைகள், அரசியல் கருத்தரங்குகள், இலக்கியச் சந்திப்புகளின் அறியப்பட்ட முகவரியாக அவர் இருந்தார். தோழர்களின் மரண நாட்களில், சுக துக்கங்களில் இயன்றவரை கலந்து ஆறுதலும் ஆதரவும் தரக்கூடியவராக இருந்தார்.

அவர் பேசும் மேடைகளில் மாற்றுக்கருத்துகளின் பெறுமதிகளை அதன் அடிப்படைகளை எப்போதும் வலியுறுத்திப் பேசுபவராகவே காணப்படுவார்.

தாந்தேயின் சொற்கட்டான 'நாடிழந்த அகதியின் முன்னால் இருக்கும் படிகள் யாவும் செங்குத்தானவை' என்ற சுலோகத்தை ஒரு பாராயணத் தொடக்கம் போல வலியுறுத்தி ஜோர்ஜியோ அகம்பெனின் அகதி மெய்யியலில் கொடுக்கும் தரவு மதிப்பீடுகள் வரை வார்த்தைகளில் மெய் திரளும்.

இன்று நடைபெற்ற இந்த நூல் வெளியீட்டிலும் அதை வலியுறுத்தத் தவறவில்லை. ஐரோப்பா தழுவி ஒரு வீச்சுடன் எழுந்த எதிர்ப்பிய, படைப்பியப் போக்குகளிற்கு அத்திவாரமிட்டதும் கட்டியெழு




நிலைமட்டங்களும் நடராசா சுசீந்திரன் மற்றும் இன்னோரன்ன ஒரு சிலரின் ஓர்மமும் அசராத, அயராத உழைப்பும் தான் என்பது சொல்லப்பட வேண்டியது.

ஒரு திணைநிலம் கடந்து இன்னொரு நிலத்திற்கு, கண்டம் கடந்து இன்னதென்றறியாக் கண்டத்திற்கு உள் மனம் சொல்லும் திசைவழியில் செல்வதொன்றே ஆகுமானது, போய்ச் சேர்ந்தாலும் ஆகும். அது முன்னே போக முடியினும் போவேன் எனும் சிவசேகரத்தின் கவிதை வரிக்கு பயன் சொல்வது.

ஜேர்மானிய புகலிட இலக்கியங்கள் எனும் பேசுபொருளில் *1989* இல் இலக்கியச் சந்திப்பு ஒன்றில் எடுத்துக்கொண்ட ஆய்வு குறித்ததோடமைந்தது அவர் வருகை. அதற்கு முன்னாற்கூட இருக்கலாம்.

அவர் பேர்லின் யூனிவர்சிற்றி ஒன்றின் பட்டப் படிப்பாளர். புகழ் பெற்ற தத்துவவியல் பேராசிரியர்களிடம் பாடம் கேட்டிருக்கிறார். கணணியியல், மெய்யியல், சமூகவியல், பொருளியல் ஆதியன அவர் பல்கலைக் கழகக் கற்கை நெறிகளாகும்.

ஆனால் நல்வாய்ப்பாக பரீட்சை ஏதும் எழுதாமல், பட்டமேதும் பெறாமல் தன் சுய மரியாதையைக் காப்பாற்றிக் கொள்ளுமளவிற்கு அவருக்கு தன்மீதான நம்பிக்கை இருந்தது. அத்தகை காரியக்காறச் சிந்தனையேதும் பட்டுத் தொடர்ந்து முன்னேறிவிடாமல், தனக்கென ஏதும் பட்டங்கள் பவிசுகள் விபத்தாகக்கூட வந்தமைந்து விடாமல் இயல்பாக வந்தமையும் தடங்களில் நடக்க அவருக்கு தன்னியல்பாய் அமைந்தது. இன்னுங்கூட அமைகிறது. முன்னேறும் பாதையொன்று தெரிந்ததும் தானே முன்னேறிப் போகமுடியாதவாறு அப் பாதையை அடைத்து கல்லுவைத்துக் கட்டி ஈரடி பின்னால் போய் தன் சம நிலை இருப்பைக் காத்து நிற்பவர் நடராசா சுசீந்திரன்.

பெர்டொல்ட் பிறெஸ்ட் சொல்வதுபோல அது ஒரு இருண்ட காலம், கவிதையெல்லாம் எழுதமுடியாது என்று சொல்வது கொஞ்சங்கூட. ஆனால் நினைத்ததைப் பேசவே முடியாது. எழுத்தெண்ணிப் பேசக் கற்று எல்லோரும் மௌனமாயிருக்கப் பழகிக்கொண்ட காலம் அது.

சர்வதேச புகலிட இலக்கியங்கள் எனும் கருப்பொருளில் *1991* இல் பிரான்ஸின் கார்ஜ்-சார்சலில் ஒருங்கமைந்த அவரது பேச்சு ஒரு சிறப்புரை. இப்படி எழுதிப் பேசி, எழுதிப் பேசி இன்று நாம் மிக இயல்பாக சொல்லிப் போகும் புகலிட இலக்கியங்கள், அல்லது புலம்பெயர்ந்தோர் இலக்கியம் என்ற தொகையீட்டை தமிழில் நிறுவிய சுய புலமையர் அவர்.

*1989ஆம்* ஆண்டு மார்கழி மாதம் *25ஆம்*, *26ஆம்* திகதிகளில் ஜெர்மனியினியின் பெர்லினில் நடராசா சுசீந்திரன் அவர்கள் மூப்பில் ஏற்பாடு செய்யப்பட்ட ஆறாவது இலக்கியச் சந்திப்பில் 'மலையகத் தமிழர்- அங்கும் இங்கும்' என்ற தலைப்பில் நண்பர் மு. நித்தியானந்தன் அவர்கள் ஆற்றிய பேருரை இன்றும் பெறுமதி மிக்கதாகவே இருக்கின்றது. இப் பேருரை இன்றும் இணையத்தில் கிடைக்கின்றது. புகழ்பெற்ற அந்த உரை -மாவோ-சாஸ்திரி ஒப்பந்தத்தின் பின்னர் மலையக மக்கள் எப்படி இலங்கையிலும் இந்தியாவிலும் வஞ்சிக்கப்பட்டார்கள் என்பதை எடுத்துக் கூறும்.

மலையக இலக்கியம் என்ற ஒரு மகத்தான தரிசனத்தை இலங்கையின் வடக்குக் கிழக்கு மக்கள் அதிகம் குவிந்த புலம்பெயர் மண்ணிலிருந்து நிறுவி 'கூலித்தமிழ்' உட்பட தன் நான்கு நூல்களையும் லண்டனில் வெளியிட்டு மேன்மையைக் காட்டி நிற்கிறாரோ அப்படியான ஒரு சுயசெவ்வழி இந்தப் புகலிட இலக்கியம் என்ற நிலையும் ஆகும்.

தம்மை அகதியாய் அடையாளப் படுத்த விரும்பாத கவிதைப் போலிமைப் போர்க்குரல்கள் நான்! நான்! எனக் கையுயர்த்தி நின்ற காலமது.

நீங்கள்தானே இந்தப் புகலிட இலக்கியம் (Exile Literature) என்று பேசுவது? என்ற அவரை நோக்கிய மிகச் சாதாரண அறிமுகங்களாய், அடையாளமாய் அமைந்த காலங்கள் அவை.

காண்ட் இலிருந்து ஹைடேக்கர் வரை மார்ட்டின் நெய்மர், நீட்ஷெ எனப் பரந்து விரிந்த வாசிப்பாளர், படிப்பாளர் நண்பர் நடராசா சுசீந்திரன்.

பேர்த்தோல்ட் பிரெஷ்டையும் (Bertolt Brecht) ஹைன்றிச் கைனேயையும் (Heinrich Heine) கைன்றிச்ட் பொல்லையும் (Heinrich Böll) குந்தர் கிறாசையும் (Günter Grass). பேர்த்தோல்ட் பிரெஸ்ட்டின் (Bertolt Brecht) கொய்னரின் குட்டிக்கதைகளையும் (Stories of Mr.Keuner) இலகுதமிழ் மயப்படுத்திய கை அது.

இரு நூல்களினூடும் அதற்கு மேலும்

இழைகள் பின்னிப் பின்னி நெய்த கை நெசவின் காய்த்த பழுப்புகள் கண்டல்கள் வெடிப்புகள் என உள்ளார்ந்து கொண்டமைந்த விடயக் குறிப்புகள் நூல்களாய் வெளிவந்திருப்பது ஓர் ஆறுதல். அவ்வளவுந்தான். வந்தவரைக்கும் லாபம் இரண்டு!

பலரும் நண்பர் நடராசா சுசீந்திரன் விரைவில் தம் அடுத்த நூல்களை அச்சாக்கம் செய்யவேண்டுமென அரங்கில் கேட்டுக் கொண்டேயிருந்தார்கள். விருட்சத்தின் விதிமை என்னவென்றால் நெடுமரமாகிய பின்தன்னைத்தானே பட்டழித்து தன் இடத்தை எதிர்கால வினைப்பயனுக்கு விட்டுச்செல்வது. அவ் வினைப்பயன் எதுவென மரமும் அறியா. தம் புகழ் நிறீ இத் தாமாய்ந்தனரே! நேற்றைய புகழ்கள் மறு விசாரணைக்காகும் காலம் கடந்தும் விட்டோமே! ஆகையால் வியத்தலும் இலமே!

மேற்படி நூல் வெளியீட்டில் பேசுபொருள்களில் ஒன்றாய் அமைந்த, நண்பர் நடராசா சுசீந்திரனது வெளியீட்டுப் பதிப்பகமான நூல் மூலம் வெளிவந்த கவிஞர் இரா.ரஜீன் குமாரின் இரு கவிதைகள் வாசிப்பு இடம்பெற்றன. லக்ஷ்மி அவற்றை வாசித்தளித்தார்.

ரஜீன்குமாரின் கவிதை
சுயவிமர்சனம்

உலக வரைபடத்தில்
உதிரும் நிலையில் தூங்கும்
அழகிய இலங்கையை நோக்குவேன்.

எஞ்சிய உறவுகளுக்காய்...
உயிர்களுக்காய் ..
அழுவேன்.

அழு ! அழு !

அகதித் தாகத்துடன்
தஞ்ச நீருக்கு அலையும் நாயாய் ...

இந்துமா சமுத்திரமும்
பொச்சம் தீர்க்காதென
அதையும் தாண்டினாய்.

எங்கெங்கு தாண்டினும்
நக்குத் தண்ணீரே !




இதோ இன்னும் அழு !

துருதுருத்தென் கண்குத்தி
சுட்டுவிரல் பேசும் .

அது
மணல் குவித்து
தேய்த்தது
எழுதிப் பழகிய
நிலம் தேடி
வரைபடத்தில் ஊ...ரு...ம் .

மருதமும் நெய்தலும்
குறிஞ்சியும் முல்லையும்
ஆளுமை இழந்து
பாலையாய் ...
வெடிசார் நிலமுமாய் ...

கவிஞர் க.வாசுதேவன் பேச்சமைந்த நூல்கள் விமர்சன உரையில் நடராசா சுசீந்திரனது டொச் மொழியாளுமையும் தமிழைப் பயிலும் நுட்பமும் தனக்கு எப்போதும் பொறாமை கொள்ள வைப்பவை என்றார். தனக்கு மிகவும் விருப்பமான நீட்ஷேயின் மொழி டொச் (Deutsch) எனவும் தான் அதற்காகவே டொச் மொழி பயின்று வருவதாகவும் குறிப்பிட்டு, ஆனால் தன்னால் அம் மொழியைக் கற்பதில் எப்போதும் பின்னடைவே என்றும் கூறினார்.

எல்லாவகையான தத்துவத்தினதும் இசை மேன்மையினதும் கொடுமுடிகள் ஜெர்மனி மண்ணுக்குச் சொந்தமானவை என்றார். ஆதலால் அம்மொழி மீது தன் விருப்பார்வம் பெரிதென்றார். மேலும் இவ்விரு நூல்களில் வந்தமைந்த அம்மாவின் தையல் மெசின், தந்தைக்கும் மகனுக்குமான உறவுச் சிக்கல்கள், இப்படியாக தன்னோடு ஒன்றிய எழுத்து அனுபவங்களை அவரால் மட்டுமே இப்படி மிகச் சாதாரணமாக கவித்துவமாக எழுத முடியும் எனக் கூறியதோடு பிரான்ஸின் தற்போதைய நிலைப்பாடுகள் இஸ்ரேல்-பாலஸ்தீன நெருக்கடிகளில் நிதித் தேவைகளுக்காக மக்களின் குறைந்த சேமிப்புகள் எவ்வாறு சட்டமியற்றப்பட்டு யுத்தத்திற்கு அளிக்கப்படுகிற விபரங்களை குறித்துச் சொன்னார். சுருக்கமாக ஆனால் குறைந்த நேரத்தில் தன்னுரையை முடித்துக்கொண்டார். வழமையாக சற்று பேச நேரம் எடுக்கும் வாசுதேவன் உடல் நலக் கேடினால் இருமி அவதியுற்று தஞ்சக் கேடில் இருந்தது வருத்தமாயிருந்தது.

கூட்டத்தில் நூல்கள் குறித்துக் கருத்துரைத்த அசுரா-நாதன், ஆதவன் தீட்சண்யா அவர்கள் ஆசிரியராயிருந்து வெளிக்கொணர்ந்த ‘புதுவிசை’ சஞ்சிகையின் 2009ஆம் ஆண்டு மாசி மாத இதழில் வெளிவந்த ந. சுசீந்திரனின் நேர்காணல் இத் தொகுப்பிற் தொகுக்கப்படவில்லை எனக் குற்றஞ்சாட்டும் தோரணையில், அப்பேட்டி திட்டமிட்டுத் தவிர்க்கப்பட்டதான முற்கணிப்பில் ஒரு ஆயுதத்தை சுசீந்திரன் முன் வீசியெறிந்தார். சொல்லும்போது அசுராவின் முகத்தில் தெரிந்தது கவலையல்ல. அவ்வளவு எள்ளல் மலர் சிரிப்பும் பிரகாசமும் பெரும் திருப்தியும். மிகவும் முட்டாள்தனமான விமர்சன அணுகல் அது. நூலைக் குறித்துப் பேசச்சொன்னால் 2009 இல் வெளிவந்த நேர்காணல்

இடம்பெறாமல் தவிர்த்தது ஒரு தந்திரோபாயத் தவிர்ப்பு என்பதாக அவரது முற்கற்பிதம் இருந்தது.

குற்றவாளிக் கூண்டில் ஏற்றி விசாரணை செய்வதற்கு கொஞ்சம் புத்திக்கூர்மை வேண்டும். கட்டிரும்பைக் கூர்மையான வெட்டுக் கத்தியாக்கும் கொல்லரிடம் போய் இரும்பின் பயன்குறித்துப் பேசுவதற்கு ஒப்பானது அது.

அது போர் மிக உக்கிரமாக நிகழ்ந்த காலம் 2009 மாசி, புலிகளின் அரசியல் பொறுப்பாளர் நடேசன் அப்போது சொல்கிறார் வெறும் நிலத்தில் நாம் பேசத் தயாரில்லை, மக்கள் எல்லோரும் நம்பக்கம் இருக்கிறார்கள் போர் தொடரும்! இந்த நெருக்கடியான சூழ்நிலையை கடும் விமர்சனத்திற்குள்ளாக்கி வெளிவந்த அந்தச் சிறப்பு மிக்க நேர்காணல் இத் தொகுப்புகளில் இல்லையென்றால் எங்கு போய் முட்ட!

இரு நூல்களையும் படித்து வந்த அசுரா-நாதன், இந் நூல்கள் நடராசா சுசீந்திரனின் குடும்பம், உறவினர்கள், அவர்களோடு நெருக்கமாய் அமைந்த தன் இளமைக்கால நினைவுகள், மற்றும் நூல் அறிமுகங்கள், அறியப்பட்ட எழுத்தாளர்கள் அறிமுகங்கள், அவர்கள் பின்னணி, இப்படியான வகைப்பாட்டுப் பின்னணியில் தொகுக்கப்பட்டவை என்ற வாசிப்பறிதல் இன்றி பேசிக்கொண்டிருந்தார்.

உதாரணத்திற்கு

1) சி.வே.காசிநாதனின் விற்கன்ஸ்ரைன் மொழி, அர்த்தம், மனம் நூல் குறித்த அறிமுகம்.

2) ஜாக் லண்டனின் கானகத்தின் குரல் நூல் அறிமுகம் .

3) அப்துல் ரசாக் குர்நாவின் சொர்க்கம்

4) கே.கணேஸ் மொழியாக்கத்தில் சீன எழுத்தாளர் லாஓ ஷேயின் 'கூனற்பிறை'.

5) பியொடர் தஸ்தாயெஸ்வ்ஸ்கியின் சூதாடி

6) குறுந்தொகை


7) குன்ரர் கிறாஸ் சர்ச்சை

இப்படியான அறிமுகத் தலையங்களின் தொகுப்பு வகைப்பாடு நிலையில் புதுவிசைப் பேட்டி ஏன் இதில் இல்லை எனக் கேட்பது அறிவிற்குள் அடங்குமா விசமத்தனத்திற்குள் அடங்குமா என்பதை வேறெவரேனும் தான் அவருக்குப் பக்குவமாய் எடுத்துச் சொல்லவேண்டும். ஒருநேர்காணல் தொகுப்பு ஒன்று வெளிவருமானால் ஏன் இந்த நேர்காணல் இதில் இடம்பெறவில்லை என்று கேட்டால் அதில் ஓரளவேனும் நியாயம் இருக்கும்.

கூட்டத்திலேயே திரைப்பட இயக்குனர் கவிஞர் அருந்ததி ('ஆண்பால் உலகு'-நாவலாசிரியர்) அசுரா-நாதனுக்குத் தகுந்த பதிலைத் தந்தார். அது சபாலிங்கம் கொலை இறுதிச் சடங்கு நிகழ்வில் ஜெர்மனியிலிருந்து வந்து நண்பர் சுசீந்திரன் ஆற்றிய உரையின் பின்னணி. அன்றியும் இந்நூல் வெளியீட்டிற்கு தான் வந்ததே சுசீந்திரனின் திடமான கருத்து நிலைக்குத் தான் மதிப்பளித்து பேச ஒப்புக்கொண்டது தான் என்றார்.

சுசீந்திரனது அறிவிற்கும் ஆற்றலுக்கும் லௌகீக வாழ்வின், உயர் பதவிகளின் உச்சத்துக்குச் செல்ல வாய்ப்பிருந்தும் அவற்றைக் கணக்கிலெடாது மாற்றுக்கருத்து, மாற்றுச் செயற்பாடுகள் என இயங்குவதற்கு அவரை எவ்வளவு பாராட்டினாலும் தகும் என்ற பொருளில் கவிஞர் அருந்ததி பேசினார்.

'என் கருத்து நிலைக்கு ஏற்ப நீ பேசு! எழுது! இயங்கு! என் விருப்பார்வங்களுக்கு அபிலாசைகளுக்காகவே நீ!' என்ற எவரையும் மிக இலகுவில் குற்றங்குறையாக்கும் உளவியல் நிலைக்கு மருந்தில்லை.



# சுசீந்திரன்



## அமைதியும் ஆழமும்

**ராஜு கௌதமன்**

புகலிடம் என்பது பலரின் இடம் என்றே எனது பதிவுகளில் சொல்லி வருகின்றேன். இந்த இடத்திற்கு ஓர் தலைவர் இல்லை. ஆனால் தமிழ் இனத்தின் மிகப்பெரிய நோயென்பது யாவரும் தலைவர்கள் ஆவதே. தமிழில் அரசியல் தலைவர்கள் இருப்பதுபோல, இலக்கியத் தலைவர்களாக நினைப்போர் புகலிடத்தில் தமது சண்டித்தனத்தை எப்போதும் காப்பாற்றி வருகின்றார்கள். சண்டித்தனத்தை முன்னிறுத்தி உரையாடல், சிந்திப்புக் கலாசாரத்தை இப்போதும் நடத்திக் கொண்டிருப்பது எமது புகலிடம், இதனை நாம் 'புகழிடம்' எனவும் நிச்சயமாக அழைக்கலாம். இந்தச் சண்டித்தன சூழலில் மிகவும் சிலரே எது புகலிடம் என உணர்ந்தவர்கள் எனலாம்.

இவர்களில் சிலர் தேசியக் கொடிகளை முன்னிலைப் படுத்தாமல் உலகின் மனிதப் புகலிடம் மீது சிந்தித்தவர்கள். தாம் அகதிகளாக வாழும் நாடுகளது இலக்கியக் கலாசாரங்களைத் தமிழ் உலகிற்குத் தந்தவர்கள். இவர்களில் ஒருவர் நான் எப்போதும் மதிக்கும் நடராசா சுசீந்திரன். இவர் ஓர் விசித்திரமானவர். முகத்தில் கிண்டல் அசைவுகளை எப்போதும் காணலாம். செழுமை ததும்பும் முகம். இவரது இப்போதைய உருவம் அப்போதைய இளமை உருவமாகவே உள்ளது.

முதலாவது தடவையாக இவரைப் பாரிஸில் 1991 இல் கண்டேன். ஆம், அவர் ஓர் கூட்டத்திற்கு வந்திருந்தார். அது எமது புகலிடக் கூட்டங்களில் ஒன்றுதான். சுசீந்திரன் அதிகம் பேசாதவராகாவே நான் அறிந்தேன். ஆனால் இவரது சில நிமிட உரைகள் எமக்கு எப்போதும் சாம்பாமிர்தமே.

கொடூரமான சொற்களால் இவர் கேட்போரைக் கொன்றதில்லை. ஓர் பண்பின் மகன் இவர். புகலிட இலக்கிய உலகில் நாகரீகம் கொண்ட சிலரில் ஒருவர்தான் சுசீந்திரன். ' தன்மீது விளம்பரங்களை வைக்கும் போக்கு இல்லாதவர். புகலிட நாடுகளில் நடந்த பல மனித உரிமைப்போர்களில் இவரது தடயங்கள் இருந்தாலும், தன்னை எழுத்தாளர் என முன்னிறுத்தாதவர் என்றே நான் நினைத்தபோதும் இவரை நான் எழுத்து முனி என்றே கருதுகின்றேன். காரணம், முகநூ லில்தான் தனக்குள் ஓர் ஆழமான எழுத்து வீரியம் உள்ளது என்பதை அமைதியாகக் காட்டி வருகின்றவர்.

இவரது வாசிப்பு அனுபவம் மிகவும் நீளமானது என்பதை இவர் தரும் பதிவுகள் தெரிவிக்கின்றன. சில பதிவுகளால் தனது அனைத்து வாசிப்புகளையும் இளமையாக்கும் பலம் இவரிடம் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. பல மொழிகளில் திறமை உள்ளவர். மிகவும் ஆழமான தமிழ் இவருடையது. பலரை மயக்க வைப்பது எனலாம். உரைநடைப் பலத்தை எமக்குக் காட்டுவது சுசீந்திரனின் பேனா. தமிழில் சிறிதாக எழுதிப் பெரியவர்களாக வந்த சிலரில் ஒருவர் சுசீந்திரன். புகலிடத்தின் பல மையங்களை அறிந்தவர்.

சுசீந்திரன் ஜேர்மன் மொழியிலும் வாழ்கின்றவர். இவரது மொழிபெயர்ப்பு கச்சிதமானது. இவரது மொழிபெயர்ப்பு வேலைகள் நூலாக வரும் எனத் தனது முகநூல் பதிவில் காட்டுகின்றார். 'மொழிபெயர்ப்புச் சிறுகதைகள்

1.வியட்னாமியச் சிறுகதை- கணையாழி
2. பீட்டர் பிஃஸெல்- மேசை மேசையேதான்
3. பிரான்ஸ் காஃகா- சட்டத்தின் முன்னால்
4. ஹெம்மிங்வே-பாலத்தின் அருகே ஒரு கிழவன் 5
. கடலுக்கு எப்படி உப்பு வந்தது?- சிலநாட்டுக்கதை
6. வொல்ஃப்காங் போர்சேர்ட்- ரொட்டி(பாண்)
7. சுறக்கள் மனிதராகி விட்டால்- பெர்டொல்ட் பிறெஸ்ட்
8. வன்முறை-மற்றும் பல கதைகள் கொய்னரின் கதைகள்
9. ஹைன்றிஜ் ஃபொல் கதைகள்
10. மறந்து போனவை;!

மீட்கப்பட வேண்டியவை ஒரு புத்தகமாக்கும் முயற்சி யில்... ஈடுபட்டுள்ளேன்.'

'போர் இயக்கத்திலும், இலக்கிய இயத்திலும் முழுகிய இவர் அண்மையில் இரண்டு நூ ல்களை எமது சிந்திப்பு உலகிற்குத் தந்துள்ளார். வாசிப்பு உலகில் எப்போதும் கிடப்பவர் என்பதை இவரது எழுத்துகளால் அறியலாம். இவரது பல நேர்காணல்கள் வந்துள்ளன. ஓர் துணிவின் பாதையில் நடந்து செல்லும் சுசீந்திரன் மீதான எனது சிறிய பக்கமே இது. புகலிடத்தின் அனைத்து முத்தங்களையும் பெறுபவர்தான் சுசீந்திரன்.



# இருட்டு இரகசியம்

4

வணக்கமுங்கோ!

இண்டைக்கு நான் இதாலை வந்தாப்போல, சொல்லவாற விசயம் கொஞ்சம் வித்தியாசமானது பாருங்கோ. நம்பவும் சிலபேருக்குக் கஷ்டமாயிருக்கும். ஆனா, நீங்கள் நம்பத்தான் வேணும் கண்டியளோ.

இப்ப ஒரு ரண்டு நாளைக்கு முன்னம் 'ஷேவ்' எடுப்பமெண்டு சந்தியில கிடக்கிற சலூனொண்டுக்குப் போனன். அங்க சலூன்காரத்தம்பி இன்னொரு ஆளுக்கு தலைமயிர் வெட்டிக்கொண்டிருக்க, நான் பக்கத்தில வாங்கில கிடந்த பேப்பரொண்டை எடுத்து, சும்மா மேலாலை பாத்துக்கொண்டு வர, ஒருவற்ற படம் மூண்டாமாண்டு நினைவஞ்சலியோட கிடந்தது. அட! இந்தாளும் போய் சேர்ந்திட்டுது அதுக்கிடையில... எண்டு யோசிச்சுக் கொண்டிருக்க, எனக்கு அந்தாளோட கதைச்ச சில கதையள் ஞாபகத்துக்கு வந்தது.

அவர் ஒரு எழுத்தாளர் பாருங்கோ. எழுத்தாளர் மட்டுமல்ல, பிரதேச செயலகத்திலையும் உத்தியோகம் பார்க்கிற ஆள். ஒரு பொறுப்பான வேலை. போர் முடிஞ்சு அவரவர் ஊருக்குப்போன பிற்பாடு, ஒருநாள் எதிர்பாராதவிதமாக ரவுணுக்கை நெத்திக்கு நேராச் சந்திக்க வேண்டி வந்திட்டுது. பலது பத்தும் கதைச்சம். கதையோட கதையா, நான் அவரைப் பார்த்து ஒண்டு கேட்டன்.

'நீங்கள் இப்ப ஒண்டும் எழுதுறேல்லைப்போல கிடக்குது...'

அதற்கு அவர் ஒரு விஷமத்தனமான சிரிப்பொண்டைச் சிரித்து, முகத்தைச் சுழித்தார். நானும் ஏதோ இயக்கத்தில வெறுப்பு வந்து முகத்தைச் சுழிக்கிறாராக்கும் எண்டுதான் நினைச்சன். ஆனா, அப்படியொண்டும் அவருக்குள்ள இல்லை. வன்னியில அவரொரு தீவிரமான இயக்க விசுவாசி. இயக்கத்தைப்பற்றி ஏதேனும் குறையாக் கதைச்சா, உடன அவருக்கு பத்திக் கொண்டு வந்திடும். அப்பிடியொரு விசுவாசம்! இந்த விசுவாசத்தாலோ என்னவோ இயக்கமும் அவருக்கு மதிப்பார்ந்த பதவியொண்டைக் குடுத்திருந்தது. அதுதான் பேப்பர் கொம்பனியில ஒரு பொறுப்பான வேலை.

இவர் காலையில செயலகத்துக்குப் போவார். அங்குள்ள வரவேட்டுப் புத்தகத்தில சையினை வைச்சிட்டு, செயலகத்தை விட்டு வெளியில வந்து, இயக்கத்தின்ர கொம்பனிக்கு வருவார். பிறகு பொழுதுபட, அங்கையிருந்து செயலகத்துக்குப் போய், வரவேட்டுப் புத்தகத்தில வேலை முடிஞ்சு போற நேரத்தை எழுதிச் சையினையும் வைச்சிட்டு வீட்டை போயிடுவார்.

இது அங்கையுள்ள அரசாங்க உத்தியோகத்தர்மாருக்கும், வெளியில கதை கவிதையள் எழுதிற பலபேருக்கும் வெளிப்படையாகவே தெரிஞ்ச சங்கதிதான். இது குறிச்சு ஒருத்தரும் அங்கை வாயைத் திறக்கேலாது. அப்படித் திறந்தால் ஒண்டு பங்கர். இல்லாட்டி பண்ணையில வேலை கண்டியளோ. உதாலை எல்லாரும் அமசடக்கா இருந்துகொண்டு, தங்களுக்குள்ளை புகைஞ்சு குமைஞ்சு பொருமிப்போட்டுப் போவினம்.

அதுமட்டுமில்லைப் பாருங்கோ... சண்டேக்கை கடைசிக்கட்டத்தில ஆமியோட அடிபுடிப்படுகுறதுக்கு, ஆக்கள் இல்லாமல் வீடுவீடாப் புள்ளையளைப் பிடிச்சுத் திரிஞ்சவையள், பெரிய, பெரிய பொறுப்பாளர்மாருடைய பிள்ளையளிலையும் கைவைச்சுக் கொண்டு வரேக்கை, ஒருநாள் இப்ப என்னோடை கதைச்சவற்ற வீட்டையும் அவற்ர புள்ளையளைப் பிடிக்கிறதுக்குப் போயிருக்கினம். அவருக்கு வயதுக்கு வந்த குமர்ப்பிள்ளையள் ரண்டும், ஒரு பொடியனும் இருந்தவை. பிள்ளை பிடிக்கப்போன ஆக்களுக்கு எழுத்தாளரைக் கண்டதும் கொஞ்சம் குழப்பமாப் போச்சுது. எழுத்தாளரும் முகத்தை இறுக்கமாக வைச்சுக் கொண்டு, தனக்கு அவரைத் தெரியும், இவரைத் தெரியும். நீங்கள் ஒருத்தரும் இஞ்சை என்னோட வாலாட்டேலாது. மீறிக் கையை வைச்சீங்களோ... நீங்கள்தான் ஆமிக்கு முன்னால அடிபாட்டில நிக்கவேண்டி வரும்... எண்டு வாயில வந்த அனைத்தையும் வாந்தியா எடுத்திருக்கிறார்.

பிள்ளை பிடிக்கப்போனவையும், மேற்கொண்டு எதுவும் கதைக்காமல் திரும்பிப் போயிட்டினம்.

இதையேன் நான் இப்ப இதில சொல்லவாறன் எண்டால்... சண்டைக்குப் பிறகு இவரைச் சந்திச்ச இடத்தில, இயக்கம் பொடி பொட்டையளை வலோக்காரமாகப் பிடிச்சது படுபிழையெண்டு நான் சொல்ல, அதுக்கு அந்தாள் அதை ஆமோதிக்காமல், 'இயக்கமெண்டால் அப்படித்தான்...' எண்டு சிரித்துக் கொண்டு, பூசிமெழுகினார் பாருங்கோ ஒரு மெழுகு... அதுதான் எனக்கு இண்டைக்கும் உள்ளுக்கை கிடந்து உதைக்குது.

இயக்கத்தின்ர சப்போட்டில செயலகத்தில 'சையின்' வைச்சுப்போட்டு, பிறகு அவையளின்ர கொம்பனியிலும் வேலை செய்து கொண்டு, டபுள் சம்பளம் வாங்கினவர். கடைசியில தன்ர பிள்ளையளில ஒண்டையும் போராட்டத்துக்குத் தாரை வார்க்கேல்லை. அப்படிப்பட்ட ஆள், அண்டைக்கு இன்னொண்டையும் சொன்னவர். அது என்ன தெரியுமே?

'பொடியள் செய்தது பிழைதான். இருந்தாலும், அவங்கள்தான் இப்பவும் எங்களுக்கு வழிகாட்டி...'

போராட்டத்துக்கு தன்ர பிள்ளையளை விட விரும்பாதவர், தொடர்ந்தும் இயக்கம் இயங்க வேண்டும் என்று விரும்பியிருக்கிறார். இது விடுதலை மீதான வேட்கையல்ல. தனது பிழைப்புக்கும், தனது வாழ்வின் இருப்பைத் தக்க வைக்கிறதுக்கும்தான் கண்டியளே! இவரைப்போல கனபேர் இருந்தவை. இப்பவும் இருக்கினம். இப்பவெல்லாம் இயக்கத்தை ஆதரிக்கிறவைக்கு, ஏதோ ஒரு ஆதாயம் கிடைக்குது. அதை அவை கைவிடமாட்டினம் பாருங்கோ. தப்பித் தவறி பிரபாகரன் உயிரோடு வந்து , பேந்தும் பிஸ்டலை எடுத்து இடுப்பில செருகிக் கொண்டு, எனக்குப் பின்னால வாங்கோ... களத்துக்குப்போய் ஆமியளோடை அடிபடுவம்... எண்டு சொல்லட்டும் பார்ப்பம், ஒரு பயலுகளும் இஞ்சை நிக்கமாட்டினம். வெளிநாட்டுக்கு ஓடியிடுவினம்.

பிரபாகரனும், அவற்ர அமைப்பும் இப்ப பல பேருக்குத் தேவைப்படுகிறது எதுக்கெண்டால், அதைவைச்சு பிழைப்பு நடத்துறதுக்குத்தான். மற்றும்படி சனத்துக்கு சுதந்திரம் வாங்கிக் குடுக்கிறதுக்கல்ல. உண்மையை வெளிச்சத்துக்குக் கொண்டு வரவேண்டியது சண்டைக்கை இருந்த தங்களைப் படைப்பாளி எண்டு சொல்லுற ஒவ்வொருத்தருடைய கடமை.

ஆனா, என்ன நடக்கு இஞ்சை? அண்ணை வருவார்... எண்ட நினைப்புச் சிலருக்கு! வேறை ஆக்களுக்கு, நடந்ததை பக்க சார்பாக எழுதிப் பணம் சம்பாதிக்கிறது. உண்மையை எழுதினவனும், எழுதுறவனும் ஓரங்கட்டப்பட்டு நிற்கினம். இதுதானடியப்பு இப்போதைய நிலை. நான் சொல்லுறது பொய்யெண்டால், உங்கினேக்கை கதை, கவிதையள் எழுதுற ஆக்களை ஒருக்கா விசாரிச்சுப் பாருங்கோ. சொல்லுவினம்.

சரி... அந்தாளுக்கும் பொடியன் தலைமயிரை வெட்டி முடிச்சிட்டான். பார்ப்பம்... நேரமிருந்தா பிறகொரு நாளைக்கு வாறன்

உங்கட குஞ்சியப்பு.


Life doesn't always give a
#SecondChance.
Insure yourself. Secure your family.
647-868-6475
RAVI
PONNUDURAI
Life Insurance
is your family's umbrella
to life's unexpected showers
647-868-6475

## மல்லாவி 12

# ஞானமுத்து என்கிற மல்லாவியின் பொது மனிதர்



அ.விஜயன்

‘ஞானமுத்து’ இது தமிழில் நான் அறிந்த ஒரு வித்தியாசமான பெயர். தூய தமிழ்ப் பெயர். இந்தப் பெயர் வழியில் மல்லாவியில் ஒரேயொரு மனிதர் இருந்தார். அவர் தொழில் ரீதியாக ஒரு நாவிதர், சிகை அலங்கரிப்பாளர், அம்பட்டர், பரியாரி, பாபர் என அழைக்கப்பட்டாலும் மல்லாவிப் பகுதியில் வாழ்ந்த மக்களுக்கு மட்டுமல்லாது அதன் அயல் கிராமங்களில் வாழ்ந்த பழைய குடியிருப்பாளர்கள் அல்லது பழைய வன்னியாருக்கும் ஞானமுத்து அண்ணைதான் சிகை அலங்கரிப்பாளர். அவர் அனைத்து மக்களுக்கும் தேவைப்பட்ட ஒருவர்.

அவரது சுருள் முடி கட்டையாக வெட்டப் பட்டிருக்கும். நல்லெண்ணைக் கறுப்பு நிறமுடையவர். எப்போதும் அரைக்கை சேர்ட் போட்டு சாரம் நிலத்துடன் உரஞ்சும்படி அவிழ்த்து விட்டிருப்பார். கதை, பேச்சு, இன்முகத்துடன் வரவேற்பது, காலை தொடக்கம் இரவு வரை சலூனில் இருப்பது, நியாயமான கூலி வாங்குவது யாரையும் பகைத்துக் கொள்ளாத சுபாவம் எல்லாமே அவரது ஆளுமையின் வெளிப்பாடு. அவரது பூர்வீகம் நெடுந்தீவு.

இரகசியம் பேணுவதில் மிகவும் கச்சிதமான மனிதர். ஆளை

ஆள் மூட்டிவிடும் அல்லது முடிந்துவிடும் அசிங்கமான புத்தி அவரிடம் இருக்கவில்லை. கிடுகால் வேயப்பட்ட சீமெந்து நிலத்தைக் கொண்ட அவரது சலூன் நல்ல காற்றோட்டமும் வெளிச்சமுமாக இருக்கும். பலர் அமர்ந்திருக்கக்கூடிய வாங்கு ஒன்று போடப்பட்டிருக்கும். மூன்று சலூன் கதிரைகளும் (மரத்தால் செய்யப்பட்டவை) அவற்றுக்கு நேராக நன்கு துடைத்த துல்லியமாக உருவத்தைக் காட்டும் பெரிய கண்ணாடிகளும் தொங்கவிடப்பட்டிருக்கும்.

## முதலாவது நூல்நிலையம்

ஞானமுத்துத அண்ணையின் சலூன் சிகை அலங்காரம் செய்யும் இடம் மட்டுமல்ல சகல தரப்பு ஆண்களும் சந்தித்துப் பேசும் ஒரு பொது இடமாகவும் ஈழநாடு, சுதந்திரன், தினகரன், வீரகேசரி, மித்திரன் எனச் சகல பத்திரிகைகளையும் படிக்கக்கூடியவாறு ஒரு நூல் நிலையமாகவும் இருந்தது.

அந்தக் காலத்தில் மல்லாவியில் நூல் நிலையங்கள் எவையும் இருக்கவில்லை. கணபதிப்பிள்ளை ஓவசியரின் பேக்கரிக்குத்தான் எல்லாப் பத்திரிகைகளும் விற்பனைக்கு வரும். சித்திரப் பத்திரிகைகள், வீரகேசரி வெளியீட்டு நாவல்கள், குமுதம், ஆனந்தவிகடன், துக்ளக் ஆகிய சஞ்சிகைகள் எனப் பலவகையான பதிப்புக்களை அங்குதான் வாங்க முடியும். புதிதாக ஏதாவது புத்தகங்கள் வந்தால் கடையில் குறுக்காக ஒரு நூலைக் கட்டி அதில் தொங்கவிடப்பட்டிருக்கும். அவற்றை வாங்கிப் படிக்க அப்போது எங்களிடம் பணம் இருக்கவில்லை.

இவற்றில் சிலவற்றை ஞானமுத்து அண்ணை தனது சலூனில் வாங்கிப் போட்டிருப்பதால் பலரும் மாறி மாறிப் படிப்பதுண்டு. அங்குள்ள பத்திரிகைகளில் எல்லோரும் கையளைவதால் புதிதாக வாங்கும் பத்திரிகை அன்று மாலையே கசங்கிப் பழுதாக்கப்பட்டுவிடும். அப்படிப் பலரும் படிப்பதில் ஞானமுத்து அண்ணைக்கு ஒரு திருப்தி. மறுநாள் அந்தப் பத்திரிகைகளைக் கிழித்துச் சவரம் செய்யும் சவர்க்கார நுரைகளை அதில் வழித்தெடுப்பார் ஞானமுத்து அண்ணை.

ஞானமுத்து அண்ணைக்குப் பத்திரிகைபடிக்க நேரமிருப்பதில்லை. அவரது முழுக்கவனமும் யாராவது ஒருவரின் தலையிலோ அல்லது முகத்திலோதான் எப்போதும் இருக்கும். அவரது அறிவு என்பது கேள்வி ஞானம்தான். சலூனுக்கு வருபவர்களில் அரைவாசிப்பேர் கண்ணாடியைப் பார்த்துத் தலை இழுத்துச் சலூனில் கிடக்கும் பவுடர் ரின்னில் கொஞ்சப் பவுடரைக் கையில் கொட்டி இரு கைகளையும் தேய்த்துப் பின்னர் முகத்தில் பூசுவார்கள். சிலர் கொஞ்சம் பவுடர் அதிகம் பூசப்பட்டுவிட்டால் சாரத்தால் முகத்தைத் துடைத்துக் கொள்வார்கள். அப்படி ஒரு சுதந்திரமான இடம் மல்லாவியில் வேறெங்கும் இருக்கவில்லை.

இவ்வாறு தம்மை அழகுபடுத்தியவர்கள் அங்குள்ள பத்திரிகைளை ஒருக்கால் தட்டிப்பார்த்துவிட்டு அரசியல் பேச ஆரம்பிப்பார்கள். அப்போது மல்லாவியில் தமிழ் அரசுக் கட்சி சார்ந்த அரசியலே இருந்தது. மக்களும் வேறு கட்சிகளில் ஆர்வம் காட்டவில்லை.

துணுக்காயில் குலத்தார், நடேசர், சோமர் ஆகியோர் பழைய வன்னியாரின் தலைவர்களாக இருந்தார்கள். அவர்களும் தமிழ் அரசுக் கட்சிக்காரர்கள். மல்லாவியில் குடியேறியவர்களில் தனிநாயகம் மாஸ்ரர், தமிழரசு சண்முகம், ஜீவகாருண்யம் எனப் பலர் தமிழரசுக்கட்சிக்காரர்களாக இருந்தார்கள். தந்தை செல்வா, அமிர்தலிங்கம், கா.பொ.ரத்தினம், வி.என். நவரட்ணம், சிவசிதம்பரம், ஆலாலசுந்தரம், ஆனந்தசங்கரி ஆகிய தலைவர்கள் பற்றியே ஞானமுத்து அண்ணையின் சலூனில் பேசிக்கொள்வார்கள். அவர்களின் நாடாளுமன்ற உரைகள் பத்திரிகைகளில் வந்தால் அவற்றைப் படித்துவிட்டுக் கதைத்துக்கொள்வார்கள். சிலர் அவர்களது பேச்சைப் புகழ்ந்து பேசுவார்கள்.

அமிர்தலிங்கத்தின் பாராளுமன்ற உரைகள், கூட்டங்களில் இரத்தத்தால் பொட்டு வைத்த செய்திகள்

**அமிர்தலிங்கத்தின் பாராளுமன்ற உரைகள், கூட்டங்களில் இரத்தத்தால் பொட்டு வைத்த செய்திகள் "தளபதி" என்ற அடைமொழி கொடுத்து எழுதப்பட்ட செய்திகள் எனப் பல விடயங்கள் செய்தியாக வரும். அப் பத்திரிகைகளில் கறுப்பு வெள்ளைப் புகைப்படங்களும் வெளிவருவதுண்டு.**

**இந்தச் செய்திகளும் மல்லாவி வாழ் மகாஜனங்களின் விவாதங்களும் அகிம்சைப் போராட்டங்கள் பற்றியதாக இருந்தாலும் அமிர்தலிங்கத்துக்கு இரத்தத்தால் பொட்டு வைப்பது எந்த வகையில் அகிம்சை என்பதையும் ஓர் அகிம்சைப் போராளி எவ்வாறு தளபதி" என அழைக்கப்படுகிறார் என்பதிலும் எனக்குச் சந்தேகம் இருந்தது. அது பற்றி அப்போதிருந்த மல்லாவி வாழ் விலேஜ் விஞ்ஞானிகளிடம் கேள்வி எழுப்பி விவாதிக்கும் அளவுக்கு எனக்கு ஆற்றல் இருக்கவில்லை.**



"தளபதி" என்ற அடைமொழி கொடுத்து எழுதப்பட்ட செய்திகள் எனப் பல விடயங்கள் செய்தியாக வரும். அப் பத்திரிகைகளில் கறுப்பு வெள்ளைப் புகைப்படங்களும் வெளிவருவதுண்டு.

இந்தச் செய்திகளும் மல்லாவி வாழ் மகாஜனங்களின் விவாதங்களும் அகிம்சைப் போராட்டங்கள் பற்றியதாக இருந்தாலும் அமிர்தலிங்கத்துக்கு இரத்தத்தால் பொட்டு வைப்பது எந்த வகையில் அகிம்சை என்பதையும் ஓர் அகிம்சைப் போராளி எவ்வாறு தளபதி" என அழைக்கப்படுகிறார் என்பதிலும் எனக்குச் சந்தேகம் இருந்தது. அது பற்றி அப்போதிருந்த மல்லாவி வாழ் விலேஜ் விஞ்ஞானிகளிடம் கேள்வி எழுப்பி விவாதிக்கும் அளவுக்கு எனக்கு ஆற்றல் இருக்கவில்லை. பலரும் கதைப்பதைக் கேட்டு எதையாது புதிதாக அறிந்துகொள்வேன்.

பத்திரிகைகள், விவாதங்கள் மூலம் உலக விவகாரங்கள், உள்நாட்டு விவகாரங்கள் என அறிந்துகொண்டாலும் ஞானமுத்து அண்ணைக்கு கோகிலாம்பாளின் கணவரின் கொலை வழக்கில் யார் யாரெல்லாம் பங்கெடுத்தார்கள், மல்லாவியில் இடம்பெற்ற மதியாபரணம் கொலை அங்கு இடம் பெற்ற பல தற்கொலைகள் ஆகியவற்றுக்கான பின்னணிகள் எனப் பல விவரங்களும் ஞானமுத்து அண்ணைக்குத் தெரிந்திருந்தது.

காலை 08 மணி தொடங்கம் இரவு 09 மணிவரை பல்வேறு விதமான மக்களையும் சந்திக்கும் ஒரே நபர் ஞானமுத்து அண்ணைதான். இதனால் அவரிடம் பல இரகசியங்கள் இருந்தன. ஆனால் அவ்வாறான இரகசியங்கள் தனக்கு மட்டும்தான் தெரியும் என்று அவர் பீத்திக்கொள்வதில்லை. இவையெல்லாமே தொழில் ரீதியாக அவருக்கிருந்த வாய்ப்புக்கள் எனலாம். மல்லாவியில் ஞானமுத்து அண்ணையைத் தெரியாத யாரும் இருக்க முடியாது அதேபோல அவருக்குத் தெரியாத எவரும் இருந்திருக்க வாய்ப்பில்லை.

## இரவு வேளையில் சலூனின் முக்கியத்துவம்

இரவானதும் ஞானமுத்து அண்ணை பெற்றோல் மாக்ஸ் (அப்போது பெற்றமாக்ஸ் என்பது தெரியாது. பெற்றோல் மாக்ஸ் என்றே சகலரும் அழைப்பார்கள்) பெற்றோல் விட்டுக் கொளுத்துவது என்றுகூட நான் நம்புவதுண்டு. பெற்ற மாக்ஸின் கண்ணாடிச் சிமினி இரண்டு வகையில் இருந்தது. ஒன்று வளையமான வார்ப்புச் சிமினி. மற்றையது சிறு சிறு கண்ணாடிக் கீலங்களைப் பொருத்திச் செய்யப்பட்டது. இந்த வகைச் சிமினிகளில் ஏதாவது ஒன்று உடைந்துவிட்டால் அதைக் கழற்றி மாற்ற முடியும். அந்த வித்தையை நான் முதன் முதலில் கண்டது. லொறிக் கந்தையரின் அருமைநாயகம் அண்ணை செய்யும் போதுதான். பெற்ற மாக்ஸ் திருத்துவதில் மல்லாவியில் வல்லவரும் அவர்தான். (அவர் பற்றிப் பிறிதொரு சந்தர்ப்பத்தில் எழுதுவேன்)

இருட்டும்போது ஞானமுத்து அண்ணை பெற்ற மார்க்சைக் கொழுத்துவார். முதலில் ஸ்பிரிட் விட்டு ஆரம்பிப்பார். ஸ்பிரிட்டை உள்ளே உள்ள தகரக் குழிக்குள் விட்டுப் பற்றவைத்து அது அணையும்போது மண்ணெண்ணையை மேல் நோக்கித் தள்ளும் செப்புக் குழாய் சூடாகியிருக்கும். அதன் பின்னர் எரியத் தொடங்கும் அதற்கேற்றவாறு காற்று அடித்து மண்ணெண்ணையை மேலே ஊசிமூலம் விசிறும் தொழில்நுட்பம் செயற்படும். அதன் பின்னர் பிரகாசமான வெளிச்சம் வரும். பின்னாட்களில் ஸ்பிரிட்டுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டதும் ஊசிமூலம் வரும் மண்ணென்னைப் பகுதியில் தீக்குச்சியில் நெருப்பு வைத்து அதைச் சூடாக்கி பெற்ற மாக்ஸைப் பற்ற வைப்பார்கள். அதை அறிமுகப்படுத்திய விலேஜ் விஞ்ஞானி அருமைநாயகம் அண்ணைதான். அப்படியொரு நுட்பம் பெற்றமாக்ஸைக் கண்டு பிடித்தவர்களுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. ஸ்பிரிட் இல்லையென்றால் பெற்ற மாக்ஸைப் பற்ற வைக்க முடியாது என்ற முடிவைத்தான் அவர்கள் எடுத்திருப்பார்கள்.



பெற்ற மாக்ஸை ஞானமுத்து அண்ணை கொழுத்தி உயரத்தில் தூக்கியதும் மல்லாவியை மூடிப்போட்டிருக்கும் இருட்டின் ஒரு பகுதி விலக்கப்படும். அந்த இருட்டில் ஞானமுத்து அண்ணையின் சலூன் ஒளிர்வது ஒரு தனி அழகு. அப்படி ஒரு காட்சியை இனிமேல் பார்க்கக் கிடைக்காது.

அந்தக் காலத்தில் மின்சாரம் மல்லாவி ஆஸ்பத்திரிக்கு மட்டுமிருந்தது. அது பெரிய டீசல் இயந்திரத்தின் மூலம் பெறப்பட்டது. ஆசுப்பத்திரி, குவாட்டஸ்கள், எம்.ஓ.குவாட்டஸ் என்கிற மல்லாவியின் வெள்ளை மாளிகை ஆசுப்பத்திரியிலிருந்து எம்.ஓ.குவாட்டஸ் வரை தொரு விளக்குகளும் எரியும். அந்தக் காலத்தில் அது ஒரு கோவில் திருவிழாக் காட்சிதான்.

இந்த இரவுநேரச் சலூன் வேலைத்திட்டத்தில் ஞானமுத்து அண்ணைச் சவரக் கத்திகளுக்குத் தேங்காய் எண்ணைபோட்டுத் தீட்டத் தொடங்குவார். உரைக்கும் கல் அரை அடி நீளமும் 2அங்குல

அகலமும் இருக்கும். அதன் மேல் எண்ணையை ஊற்றிக் கல்லை இடது கையில் தாங்கியபடி வலது கையால் சவரக் கத்திகளைத் தீட்டுவார்.

அந்த நேரத்தில் அங்குள்ளவர்களின் உரையாடல்களிலும் பங்கெடுப்பார். உணர்ச்சி வசப்பட்டோ ஆக்ரோசமாகவோ அவர் கதைப்பதில்லை. அனைவரது உரையாடல்களையும் வாதப் பிரதிவாதங்களையும் நன்கு செவிமடுப்பார். விவாதிக்கும் இரு குழுவினரில் எந்தக் குழுவின் கருத்துக்கும் ஞானமுத்து அண்ணை ஆதரவு தெரிவிப்பதுமில்லை எதிர்ப்புத் தெரிவிப்பதுமில்லை. பட்டிமன்ற நடுவரைவிடச் சிறப்பான நடுவராகச் செயற்படுவார்.

அவரது நடுநிலமை என்பது விவாதத்தில் ஈடுபடும் அனைவரது தலைகளும் முகங்களும் அவரது கை பட்டு அலங்கரிக்கப்படும் இடங்கள் சவரம் செய்யும்போது கூரிய கத்தியுடன் களமிறங்கும் வேலை என்பதால் எல்லோருடனும் பக்குவமாக நடந்து கொள்ளவேண்டிய அடிப்படைத் தேவை அவருக்கிருந்தது. அங்கு உரையாடுகின்ற அனைவருக்குமே ஞானமுத்து அண்ணை நம்பிக்கைக்குரியவர் என்பதில் யாருக்கும் சந்தேகம் இருக்கவில்லை.

இரவுநேர உரையாடலில் முக்கிய பங்கெடுப்பவர் குலசேகரம் பிள்ளை மாஸ்ரரின் மகனான கவி அண்ணைதான். அவர் எப்போதும் குளித்துச் சுத்தமாக இருப்பார். தூய ஆடை அணிந்திருப்பார். வெள்ளைச் சாரமும் வெள்ளைச் சேரட்டும் அணிந்திருப்பார். கட்டையான உருளையான தோற்றம். மேவித் தலை இழுத்திருப்பார்.

அரசியல் சமூக விடயங்கள் என எதுவாக இருந்தாலும் அதில் எதிர்மறையாக விவாதிப்பதே அவரது வழக்கம். “ஆறுகள் பின்னோக்கிப் பாயும்“ என்பதே அவரது அடிப்படைத் தத்துவம். இதனால் அவருக்கு எதிராகக் கதைப்பதில் ஆர்வம் காட்டுவார்கள்.

ரவி அண்ணைக்கு டி.ஆர்.ஓ. என்று ஒரு பட்டமும் இருந்தது. அந்த நாட்களில் தற்போதைய பிரதேச செயலர் பதவிக்கு ஒத்த பதவியை அவ்வாறு அழைப்பதுண்டு. அப்போது துணுக்காய் டி.ஆர்.ஓ ஆக மார்க்கண்டு என்பவர் இருந்தார். கடும் குரலில் கதைப்பார். பொலிஸ் அதிகாரமும் அப்போதைய டி.ஆர்.ஓ மாருக்கு இருந்தது.

சிலவேளை இரவு 09 மணிக்கு மேல்கூட ஞானமுத்து அண்ணையின் சலூனில் விவாதம் நடக்கும். வேறு சில பாதசாரிகள் கதையில் பங்கெடுக்காவிட்டாலும் அவற்றைப் பார்த்துக் கேட்டு ரசிப்பதுண்டு. மல்லாவியில் மின்சாரமோ தொலைக்காட்சியோ வேறு பொழுது போக்குகளோ இல்லாதிருந்த அந்த நாட்களில் இரவுநேரத்தில் பெற்ற மாக்ஸ் வெளிச்சத்தில் ஒரு பெரிய திரையில் படம் பார்ப்பதுபோல அந்தக் காட்சி இருக்கும்.

## எல்லா சுப நிகழ்வுகளுக்குமான தயார்ப்படுத்தல்

அந்தக் காலத்தில் எல்லாச் சுப நிகழ்வுகளுக்குமான முதல்நாள் தயார்ப்படுத்தல் ஞானமுத்து அண்ணையின் சலூனில்தான் நடக்கும். திருமண வைபவம், கோவில் திருவிழாக்கள், வருடப் பிறப்பு, தீபாவளி ஆகிய கொண்டாட்டங்கள், பயணம் போவதற்கான ஏற்பாடுகள் என எல்லாவற்றிலும் ஞானமுத்து அண்ணை கை பார்த்துவிடுவது கவர்ச்சியாகவும் மிடுக்காகவும் மாற்றிவிடும். 70 களில் சைட் கட் மற்றும் தலை மயிர் வளர்ப்பது என ரோகன விஜயவீர பாணியிலான சிகை அலங்காரமும் சொக்கையில் மயிர் வளர்ப்பதும் நாகரிகமாக இருந்தது. இதற்கு ஒரு சித்தாந்தப் பின்னணி இருந்தாலும் அதை வைத்துக் கொள்பவர்களும் அத்தகைய நோக்கத்துடன் செயற்படுவதில்லை. அதை அந்தக் காலத்து நாகரிகமாக எடுத்துக் கொண்டார்கள்.

**அவரது நடுநிலமை என்பது விவாதத்தில் ஈடுபடும் அனைவரது தலைகளும் முகங்களும் அவரது கை பட்டு அலங்கரிக்கப்படும் இடங்கள் சவரம் செய்யும்போது கூரிய கத்தியுடன் களமிறங்கும் வேலை என்பதால் எல்லோருடனும் பக்குவமாக நடந்து கொள்ளவேண்டிய அடிப்படைத் தேவை அவருக்கிருந்தது.**


மல்லாவியில் காத்தவராயன் கூத்துப் போடப்படும் காலத்தில் நல்லையரின் நிதி அண்ணை தான் (கருணாநிதி) அரியப்பூமாலைக்குப் பெண் வேடமிட்டு நடிப்பார். நாடகம் நடக்கவிருக்கும் நாளில் மாலை வேளையில் ஞானமுத்து அண்ணை அவருக்கு முகச்சவரம் செய்து காதுகளுக்கு அருகில் பெண்களைப்போல தலைமயிரைச் சுருட்டிவிட்டு ஒப்பனைக்கான முன்னேற்பாடு செய்யும்போது பலரும் சுற்றிநின்று பார்ப்பார்கள். கையால் மயிர்வெட்டும் குறடு போன்ற கருவி கத்தரிக்கோல் சவரக்கத்தி ஒருவகைக் கற்கண்டு போன்ற கல்லு வெள்ளைநிறக் கிறீம் ஒன்று எனப் பலவகையான கருவிகளை ஞானமுத்து அண்ணை வைத்திருப்பார். அவற்றை அவர் கையாளும் விதமே தனி.

ஞானமுத்து அண்ணைக்குப் பின்னர் அவரது மகனான அலன் மருமகனான பொன்னுவும் அந்தச் சிகை அலங்கரிப்பு நிலையத்தை முன்னெடுத்துச் சென்றார்கள். ஆனால் ஞானமுத்து அண்ணை மல்லாவிக் குடியேற்றத்தின் ஓர் அடையாள மனிதராகப் பலராலும் நினைவுகூரப்படுவார். சலூன் என்றால் ஞானமுத்து அண்ணைதான் என்றொரு தனி முத்திரை பதித்தவர் அவர்.

அவரது பெயருக்குத் தகுந்தாற்போல் ஞானமும் முத்துப்போன்ற பெறுமதியும் அந்த மனிதரிடம் இருந்தது. ஞானமுத்து மல்லாவி மக்கள் மத்தியில் எப்போதும் ஒளிர்ந்துகொண்டிருக்கும் ஒரு முத்துத்தான்.

# 51வது இலக்கியச் சந்திப்பு பாரீஸ்

## கற்சுறா




முதலில் வழமைபோல 50 வது இலக்கியச் சந்திப்புக் குறித்துச் சில விடயங்களைச் சொல்லி விட்டுத் தொடர்கிறேன். இதுவும் ஏற்கனவே நான் சொல்லிய விடயங்கள்தான் என்றாலும், மீண்டும் சொல்லிச் செல்ல வேண்டியிருக்கிறது.

இலக்கியச் சந்திப்பின் தொடர்ச்சியில் 50 வது சந்திப்பு என்பது ஒரு முக்கியமான நிகழ்வாக இருந்திருக்க வேண்டியது. இலக்கியச் சந்திப்பு தொடங்கியவர்கள் மற்றும் இடையில் முரண்பட்டவர்கள் - இணைந்தவர்கள், இன்றுவரைக்குமான அதன் பலம் மற்றும் பலவீனம் என்னவென்றும், கடந்தகாலத்தில் அதற்கூடாகத் தொகுக்கப்பட்ட தொகுப்புக்கள் மற்றும் அதன் முக்கியத்துவங்கள் என்று பல்வேறு விடயங்கள் பேசியிருக்க வேண்டிய ஒரு நிகழ்வாக அதில் ஒரு அமர்வேனும் இருந்திருக்க வேண்டும். முடிந்தவரை அதனோடு இணைந்து செயற்பட்ட பலரை இணைத்து நடத்தியிருக்க வேண்டிய நிகழ்வாக அது இருந்திருக்க வேண்டும். முழுமையாக இல்லாவிடினும் குறைந்த பட்சமாகவேனும் இருக்கும் முரண்பாடுகளைப் பேசும் இடமாக அது அமைந்திருக்க வேண்டும் அதற்கான நிகழ்வுகளை ஒழுங்கமைத்துச் செயற்பட்டிருக்க வேண்டும்.

அத்தோடு, அதனை நடத்தவதற்காகக் கோரியது போலவே நோர்வேயிலேயே நடத்தியிருக்கலாம் என்பதும் நோர்வேயிலுள்ள மற்றயவர்களை இணைத்துக் கொண்டு குழுவை அமைத்திருக்கலாம் என்பதும் வழமையாக எல்லோருக்குள்ளும் இருக்கும் ஒரு சாதாரண கேள்விகள்தான்.

ஆனால் நோர்வேயிற்கு 50வது இலக்கியச் சந்திப்பினை எடுத்த தமயந்தி அவர்கள் எந்த முன்னறிவித்தலுமின்றித் தான் விடுமுறையில் இலங்கை சென்று நின்ற காலத்தில்

அதனை அவசர அவசரமாக 'அனலைதீவு இலக்கியச் சந்திப்பு' எனத் தன்னிச்சையாக அறிவித்து நடத்திய விதம் என்னளவில் ஏற்றுக் கொள்ள முடியாதது. நோர்வேயிற்கு இலக்கியச் சந்திப்பினை எடுப்பதற்காக கிளிநொச்சி இலக்கியச் சந்திப்பினருடன் சண்டையிட்டு ஆதரவளித்து நின்றவன் என்ற அடிப்படையில் தமயந்தியின் இந்தச் செயல் என்னை மிகவும் மனம் குறுகச் செய்த செயல். அதுகுறித்த ஒரு உரையாடலை 51வது இலக்கியச் சந்திப்பினர் நிகழ்வின் ஆரம்பத்திலேயே தொடங்கியிருக்க வேண்டும். ராகவன் உட்பட சில நண்பர்கள் அந்த வேண்டுகோளை வைத்த போதும் உரிய முறையில் பாரீஸ் இலக்கியச் சந்திப்புக் குழுவினரால் அதனைச் செய்யமுடிந்ததில்லை.

அவர்கள் யாருக்கும் அந்தத் திராணி இல்லாது போனதற்கான காரணிகள் வேறு.

தமயந்தி அவர்கள் தன்னைமட்டும் முன்நிலைப்படுத்தி ஒரு தற்குறியாக நடத்தி முடித்த அந்த நிகழ்வு போன்றே பாரீஸ் இலக்கியச் சந்திப்புச் செயற்பாட்டாளர்களது கடந்தகாலச் செயற்பாடும் இருந்ததால் அதனை ஒரு உரையாடலாக்க அவர்கள் விரும்பவில்லை என்றே நினைக்கிறேன். அதனை மெல்ல மறந்துபோனது போல் கடந்து போனார்கள். கடந்த காலத்தில் இலங்கை இலக்கியச் சந்திப்புக்களில் இத்தகையோர் நடந்து கொண்ட விதங்கள் அதன் சாட்சியாகவும் காரணமாகவும் இருக்கின்றன. அதனாலேயே அவர்களால் எந்த எதிர்வினைகளையும் விபரமாக எழுப்பமுடியாது போய்க் கடந்து போகப்பட்டது.



'இலக்கியச் சந்திப்பு: அனலைதீவு'

## 'இமிழ்' என்ற சிறுகதைத் தொகுப்பு.

பாரிஸ் இலக்கியச் சந்திப்புக் குழுவினர் என்ற அடையாளத்துடன் தனியே சோபாசக்தியும் தர்முப் பிரசாத்தும் தொகுத்த 'இமிழ்' என்ற சிறுகதைத் தொகுதியின் பித்தலாட்டச் செயல் குறித்து நான் வெளிப்படையாக எனது கருத்தினை முகநூல் பதிவுகளில் வெளிப்படையாக முன்வைத்திருக்கிறேன்.

51வது இலக்கியச் சந்திப்புக் குழுவினால் வெளியிடப்பட்டதாக அறிவிக்கப்பட்ட 'இமிழ்' என்ற சிறுகதைத் தொகுதி முழுக்க முழுக்க சோபாசக்தியும் 'கருப்புப் பிரதிகள்' நீலகண்டனும் இணைந்து கொண்டு வந்த ஒரு தொகுப்பு. அதற்குப் பொறுப்பாசிரியர் என சோபாசக்தி தன்னுடைய முதற் கையாளான தர்முப் பிரசாத்தைப் பயன்படுத்தியிருக்கிறார். இந்தத் தர்முப் பிரசாத் என்பவர்தான் பாரிசிலிருந்து வெளிவரும் ஆக்காட்டி என்ற சஞ்சிகையின் ஆசிரியர். அவர் சோபாசக்தியால் தன்னுடைய இலக்கியச் செயற்பாட்டிற்காக வளர்க்கப்படும் ஒரு செம்மறி ஆடு. சோபாசக்தி அவர்கள் பல செம்மறிகளை தனக்காக உருவாக்குகிறார். வளர்க்கிறார். அவர்களினூடாக பல வேலைகளை அவர் செய்துவிட விரும்புகிறார். இறுதியாக, அவ்வாறு செய்யப்பட்ட ஒரு செயல்தான் 'இமிழ்' என்ற சிறுகதைத் தொகுப்பு. ஆனால் இந்தத் தொகுப்பின் வருகைக்கு முழுக்க முழுக்கப் பொறுப்பானவர்கள் 51வது இலக்கியச் சந்திப்புக் குழுவினரேதான். அவர்கள்தான் அதற்கான பதிலைச் சொல்ல முன் வரவேண்டும்.

ஆனால் அந்தக் குழுவிரில் பலருக்கு 'அப்படியொரு தொகுப்பு வர இருக்கிறது எனத் தெரியவில்லை' என்கிறார்கள். 'இல்லையில்லை இலக்கியச் சந்திப்புக் குழுவிற்கு அறிவித்துத்தான் கொண்டு வந்தோம்' என்கிறார் சோபாசக்தி. சிலர் இவ்வாறு 'தன்னுடைய அடையாளத்தின் நிமித்தம் தனக்குரியவர்களிடம் மட்டும் கதை கேட்டுத் தொகுத்த தொகுப்பாக வரும் என்று நாம் அறியவில்லை' என்றும் 'பரவலாக கதைகள் கேட்கப்பட்டு முடிவெடுக்கப்பட்டது என்றே நினைத்திருந்தோம் ' என்கிறார்கள்.

இதில் யதார்த்தன் அவர்களுடைய கதையைக் கேட்டுப் பிரசுரித்து அவரது கடந்த காலப் பாலியல் துஸ்பிரையோகங்களை மூடி மறைத்து அவரைப் பொதுமைப் படுத்துவதினூடாக அதுபோன்ற செயற்பாடுகளுக்கு நியாயம் கற்பிக்க முனைகிறது என்கிறார்கள் சிலர். இல்லையில்லை. அவரது கதையை நாங்கள் எப்போதோ வாங்கி விட்டோம். அதன் பிறகுதான் இந்தக் குற்றச் சாட்டு வந்தது என்கிறார் சோபாசக்தி. யதார்த்தனின் கதையைப் பிரசுரித்ததற்காக அதன் பக்கங்களைக் கிழித்துப் போட்டுத் தனது கண்டனத்தைத்

தெரிவித்தார் அந்த இலக்கியச் சந்திப்புக் குழுவிலிருந்த விஜி அவர்கள். ஆக, புத்தகத்தில் என்ன வருகிறது என்று தெரியாது. புத்தகம் எப்படி ஒழுங்கமைக்கப்படுகிறது என்று தெரியாது. புத்தகம் எப்போது வருகிறது என்றும் தெரியாது இருக்குமாயின் இந்தக் குழு என்பது எதற்காக இருந்தது? இலக்கியச் சந்திப்பிற்காக என்னதான் செய்தது?

போதாக் குறைக்கு கார்ல் மாக்ஸ் அவர்கள் வீட்டு வேலைக்காரியுடன் பாலியல் உறவில் இருந்தார். அப்படியாயின் உங்கள் வீட்டிலிருக்கும் கார்ல் மார்க்ஸின் நூல்களையெல்லாம் கிழித்து எறிவீர்களா? என்று தனக்குரிய நியாயத்தைக் கேட்கிறார் சோபாசக்தி.

சோபாசக்தி அவர்கள் யதார்த்தனுடைய கதையிற்குள்ளும் அதற்காக அந்தப் பக்கங்களைக் கிழித்தெறிந்த நிகழ்விற்குள்ளும் தன்னுடைய மிக ஆபத்தான செயல் வெளியில் தெரியாதபடி மழுங்கடிக்க முனைகிறார் என்பதுதான் எனது கருத்து.

உண்மையில் இந்த 'இமிழ்' என்ற சிறுகதைத் தொகுதி, சோபாசக்தி தமிழ்நாட்டுச்சூழலில் தான் காட்டிவரும் சிறுகதை வேடத்திற்குத் துணை சேர்க்கத் தயாரிக்கப்பட்ட ஒரு பிரதி மட்டுமே. அதற்காகவே மிகவும் திட்டமிட்டு தன்னுடைய கதைகளிற்குச் சவாலானவர் களையோ அல்லது கடந்த காலத்தில் தன்னுடைய எழுத்துக்களின் மீது விமர்சனம் வைத்தவர்களையோ இணைக்காது மட்டுப்படுத்தப்பட்டு எழுத வைக்கப்பட்ட தொகுப்பு இது. இந்த ஒன்றிற்காகத்தான் முதலில் அதனை விளங்கிக் கொண்டு 51வது இலக்கியச்சந்திப்பில் அனைவராலும் அந்தத் தொகுப்புப் புறக்கணிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அது நடைபெறவில்லை. மாறாக யதார்த்தனின் கதை சேர்க்கப்பட்டதற்காக அதன் பக்கங்கள் கிழிக்கப்படுகிறது. அந்தக் கிழிப்பு நிகழ்ச்சியானது தங்களுடைய கவனத்தின் போதாமையை நிவர்த்தி செய்ய நடத்தப்பட்ட ஒரு நிகழ்ச்சி மட்டுமே.

நிதானமாகப் பார்த்தால், இந்தத் தொகுப்பின் வரவில் முழுப் பொறுப்பினையும் சுமக்க வேண்டிய கட்டாயத்திலிருக்கும் இந்த 51வது பாரீஸ் இலக்கியச் சந்திப்புக் குழு அதனை மடை மாற்றி யதார்த்தனது கதைக்காக அதனைப் புறக்கணிப்பதாகப் படம் காட்டியது. ஆனால் மிகப்பெரியதும் ஒரு மோசமானதுமான ஒரு தவறைத் தாம் விட்டுவிட்டார்கள் என்று அது இன்றுவரைக்கும் சொல்வதற்குத் தயார் இல்லை.

அவர்களுக்குள் இருக்கும் அறிவிற்குள், தொகுப்பிற்கான பொறுப்பாக ஆக்காட்டி என்ற இதழின் ஆசிரியர் தர்மு பிரசாத் அவர்களும் சோபாசக்தியும் என்று முடிவு கொடுக்கப்பட்டபின் மற்றய குழுவினர் இறுதிவரை எந்தக் கவலையும் இல்லாதிருந்திருக்கிறார்கள். அந்த இலக்கியச் சந்திப்புக்குழுவில் உள்ள பலருக்கு இந்தத் தொகுப்பின் அடையாளம் குறித்து அக்கறை எதுவும் இன்றுவரையிலுமில்லை என்பதனை அவர்களது தொடர் உரையாடல்களில இருந்து உணரமுடியும். உண்மையில் இதன் பின்னால் ஈழ- புகலிட இலக்கியப் புரிதலில் பெரும் ஆபத்து ஒன்று இருக்கிறது. வரலாற்றில் வேறு ஒன்றை அது புரியவைக்கத் திண்டாடுகிறது. இதற்காக நீண்ட காலத்திட்டமிடலுடன் மெல்லக் காய் நகர்த்துகிறது. அதனை வேரோடு பிடுங்கி அகற்றும் வரை நித்திரைக்கே போகக் கூடாது என்பதனை அந்தக் குழுவில் இருக்கும் ஏனையோர் இன்னமும் விளங்கிக் கொள்ளவேயில்லை என்பது கவலையான நிலைதான்.

தங்களுக்குத் தேவையானவர் களையும் தங்களுக்கு இடைஞ்சல் இல்லாது இருப்பவர்களிடமும் கேட்டுப் பெற்ற சிறுகதைகளுக்கு 'இன்றைய ஈழ- புலம்பெயர் சிறுகதைகள்' என ஒரு அடையாளம் கற்பிக்கிறார்கள் இந்த அயோக்கியர்கள். அதனையும்விட தங்களுடைய விருப்பத்தில் மட்டும் இருந்து அதனைச் செய்து விட்டு அதற்கு இலக்கியச் சந்திப்பு எனப் பொது அடையாளத்தைப் பாவிக்கிறார்கள் இந்தத் தற்குறிகள். இதன் பின்னாலுள்ள பெரும் பித்தலாட்டத்தைக் கேள்வி கேட்க முடியாது திண்டாடுகிறது அந்தப் பாரீஸ் இலக்கியச் சந்திப்புக்குழு.

இப்போது பார்த்தீர்களென்றால் இந்தத் தொகுப்பில் எழுதிய 'கதைசொல்லிகள்' இந்தப் புத்தகம் குறித்து எழும்பும் உரையாடல்களை எப்படி மூடி மறைக்க முனைகிறார்கள் என்று பார்க்க முடியும். தான் அதில் கதை எழுதிவிட்டேன் என்பதற்காக அதனை எப்படியாவது நியாயப்படுத்தப் பலர் முனைவார்கள்தான். அதில் முண்டியடித்து முன்நிலையில் நிற்பவர் கனடாவிலிருக்கும் பா.அ.ஜயகரன் அவர்கள். அவர் இன்று சமூகம் சார்ந்து ஒரு புரிதலும் இல்லாதவராக நிற்கிறார் எனபதுதான் மிகப் பெரிய வருத்தம். ஒரு செயற்பாட்டு நிகழ்வு குறித்தோ அல்லது அதன் கருத்தியல் குறித்தோ ஏன் கடந்த காலப் போராட்ட வாழ்வு குறித்தோ ஒரு உரையாடல் நிகழும் தருணத்தில் அதனை மழுங்கடித்து மடைமாற்றிக் கதை சொல்லிக் காப்பாற்றி விடத் துடிக்கிறார் பா.அ.ஜயகரன். இந்த இமிழ் தொகுப்புக் குறித்துப் பேசப்படும் உரையாடல்களை நீர்த்துப் போகச் செய்கிறார் அவர். அவரது நண்பர்களாவது அவரைக் காப்பாற்றிப் அவர் முன்பிருந்த பழைய நிலைக்கெனினும் கொண்டு வந்து விடுங்கள் என்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

## 'ஆக்காட்டி'

தர்மு பிரசாத் என்பவர் தனியே சோபாசக்தியின் ஒரு கையாளாக இலக்கியத்தில் உலா வருபவர். அவருக்கு சோபாசக்தி தான் 'தொட்டப்பா' என்று முகநூலில் நான் வெளிப்படையாக எழுதியிருந்தேன். அதற்குரிய அத்தனை குணநலன்களும் காப்பாற்ற வாழ்பவர் அவர். 'ஆக்காட்டி' என்ற இதழையே சோபாசக்திதான் அவரை பினாமியாக வைத்து வெளியிடுகிறார் என்பதே என் கருத்து. அந்த இதழில்

நீங்கள் யாரும் சோபாசக்தி மீதான விமர்சனங்களை ஒருபொழுதும் முன்வைக்க முடியாது.

ஒரு உதாரணம் சொல்கிறேன். சில காலத்தின் முன் தமிழ்நாட்டு ‘அண்ணா நூறு’ நிகழ்விலும் வேறு தமிழ்நாட்டு உரையாடல்களிலும் அவுஸ்ரேலியாவில் நடைபெற்ற ஒரு கூட்டத்திலும் என்னமாதிரியான பொய்களை தனக்காகச் சோபாசக்தி சொல்கிறார் என்றும், தன்மீதான விம்பத்தை எப்படிக் கட்டமுனைகிறார் என்பதனை விளக்கமாக ‘வரலாற்றில் தற்குறிகள்’ எனத் தலைப்பிட்டு எழுதி ஒரு கட்டுரையை ஆக்காட்டி இதழிற்கு அனுப்பினேன். ஆக்காட்டி அனைப்பிரசுரிக்க முடியாது என்று எனக்குப் பதில் அறிவித்தது. அதன் ஆசிரியர் தர்முபிரசாத்திடம் இருந்து பதில் வந்த மறுநாள் சோபாசத்தி என்னைத் தொலைபேசியில் அழைத்தார். நான் அவருக்குப் பதில் அளிக்கவில்லை. தொலைபேசி இணைப்பினை நான் அவருடன் ஏற்படுத்தவில்லை. மறு வினாடியே என்னைத் தனது முகநூலிலிருந்து நட்பு நீக்கம் செய்தார் சோபாசக்தி. இதுதான் சோபாசக்தியினதும் ஆக்காட்டி சிற்றிதழினதும் இலக்கிய அரசியல் செயற்பாடு.

சோபாசக்தி அவர்கள் தனக்கான இலக்கியச் செயற்பாட்டிற்காக தன்னுடைய கவனத்தின் கீழ் தொடங்கப்பட்ட இதழ்தான் ‘ஆக்காட்டி‘ இதழ் என்பது புகலிடத்தில் அனைவருக்கும் தெரிந்ததுதான். இதன் ஆசிரியர் குழு என்ற நபர்களை நீங்கள் கணக்கிட்டுப் பார்த்தால் அதிக விளக்கக் கதைகள் நான் உங்களுக்குச் சொல்லத் தேவையில்லை.

அ. முத்துலிங்கம் அவர்கள் தனது இயல்விருது மூலம் சோபாசக்திக்குக் கொடுத்த பணப் பொட்டலத்தைக் கூட அவர் ஆக்காட்டி இதழிற்கே வழங்கியிருந்ததும் உங்களுக்கு ஞாபகம் இருக்கலாம். ஆக, சோபாசக்தியின் ஒரு பினாமி இலக்கியச் சஞ்சிகையே ஆக்காட்டி என்பதனை இதற்கும் மேல் நான் அதிகம் விளங்கப்படுத்தத் தேவையில்லை. அதன் ஆசிரியரான தர்மு பிரசாத் அவர்கள் சோபாவின் செம்மறியாட்டு நிலையைக் கொண்டிருப்பதால் அதற்குள் ஒரு இலக்கியச் செயற்பாடு நேர்மையாக இருக்கும் என்று நாம் கனவு காணவுந் தேவையில்லை.



## ‘கருப்புப் பிரதிகள்‘

இப்படி ஆக்காட்டி சஞ்சிகை போன்றதுதான் ‘கருப்புப்பிரதிகள்‘ என்ற தமிழ் நாட்டுப் பதிப்பகத்தின் நிலையும். அதுவும் சோபாசக்திக்குக் கீழேதான் செயற்படுகிறது என்பதற்கு பல்வேறு உதாரணங்களைச் சொல்லலாம்.

கடந்த சில காலமாக சோபாசக்தி தன்னுடைய எழுத்தைத் தாண்டி புதிதாக எதுவும் பேசச்கூடாது என்பதற்காக எதையும் செய்துவிட முனைபவர். அதற்காகப் பல்வேறு வழிகளில் திட்டமிடுகிறார். தமிழ் நாட்டின் அரசியல்வாதி போல ஈழத்தின் இயக்கக்காரன் போலத் தங்களுடைய இருப்பிற்காகக் கொலை செய்து விடவும் தயங்காத மனநிலைக்கு சோபாசக்தியும் தற்பொழுது வந்து விட்டிருக்கிறார். இப்படியான அவரது மனநிலையில் வெளிவந்த ஒரு தொகுப்புத்தான், ‘இமிழ்‘ என்ற 51வது புகலிட இலக்கியச் சந்திப்பில் வெளிக் கொண்டு வரப்பட்ட சிறுகதைத் தொகுப்பு.

முத்துலிங்கத்தோடு தொடங்கித் தன்னோடு முடிகிறது ஈழச் சிறுகதை மரபு என்று அடையாளம் காட்டவே அவர் பெரிதும் பாடுபடுகிறார். அதற்காகச் சில சில்லறைகளை இடையில் வைக்க வேண்டும். அவர்களும் தன்னைப் போலவோ அல்லது அதற்கும் கீழாகவோ எழுத முனையும் ஒரு பேர்வழிகளாக இருக்க வேண்டும் என்பதில் கவனம் கொள்கிறார். இந்த வகைச் செயற்பாடுகளுக்காக முழுக்க முழுக்க ‘கருப்புப் பிரதிகள்‘ என்ற ஒரு பதிப்பகத்தைத் தனக்காக உருவாக்கி வைத்திருக்கிறார். அதுவும் செம்மறியாடு போல் சோபாசக்தி சொல்வதெற்கெல்லாம் தலை ஆட்டுகிறது. அதற்கு ஒரு பொதுமனமான பதிப்பகத்திற்கான சிறு வியாக்கியானம் கூட உள்மனதில் இல்லை என்பதனை நான் பல்வேறு சந்தர்ப்பங்களில் உணர்ந்திருக்கிறேன். அந்தப் பதிப்பகத்தின் வழியாக என். கே. ரகுநாதனது தொகுப்பினைக் கொண்டு வந்த அனுபவம் என்பது கருப்புப் பிரதிகள் குறித்து நான் அறிந்திருந்த அத்தனை கதைகளுக்கும் பெரும் ஆதாரத்தைத் தந்தது.

ஒரு கருத்தியலாக அவர்கள் சமூகத்திற்குள் எதனையும் கடத்துபவர்களல்ல. சமூக வியாக்கியானங்கள் சார்ந்து உரையாடல்களை வளர்த்தெடுக்கும் பேர்வழிகளாக தம்மை அடிக்கு நூறு தடவை சொல்லிக் கொண்டிருந்தாலும் அவர்களது மனநிலை என்பது முற்றிலும் வேறானது. நாங்கள் அடியொட்ட நிராகரித்து நிற்கவேண்டிய நிலைக்கு அவர்கள் தற்பொழுது தரம் இறங்கியிருக்கிறார்கள். புகலிடத்தில் அவர்கள் குறித்த பல்வேறு அனுபவங்கள் இருந்தாலும் பலர் வாய் திறக்க அச்சப்படுகிறார்கள்.

எம்.ஆர்.ஸ்ராலின் அவர்களின் 'தமிழீழப் புரட்டு' என்ற புத்தகத்திற்கும், ஜீவமுரளியின் 'லெனின் சின்னத்தம்பி' என்ற புத்தகத்திற்கும் கருப்புப் பிரதிகள் பதிப்பகம் செய்த வேலைகளை அறியக் கிடைத்தபோது இன்றை மனநிலைதான் தோன்றியது. இருந்தும் ஒரு நல்ல நேர்மையான பதிப்பகத்திற்கான தேவையைத் தேடித் தேடி ஓடிக் கொண்டுதான் இருக்கிறோம்.

அபத்தம் இதழில் அ.ராமசாமி அவர்களிடம் பதிப்பகங்கள் குறித்த உரையாடலில் இவற்றைத்தான் நேரடியாகக் கேட்டிருந்தோம். அவருக்கும் இந்த மோசடியாளர்கள் குறித்து நன்றாகவே அறிய முடிந்துதான் இருக்கிறது. ஆனாலும் வெளிப்படையாகப் பேசுந்திறனற்றுப் போவதனால் ஆயோக்கியர்களுக்கு இடங்கொடுத்து விடுகிறோம் என்பது யாருக்கும் தெரிவதில்லை. நம்மவர்களது மவுனங்களுக்கு நடுவில் இந்த அயோக்கியர்கள் காலாட்டிக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு நாம் வழி செய்து கொடுக்கிறோம் என்பதுதான் மிகுந்த சோகமானது.

சோபாசக்தியும் நீலகண்டனும் இணைந்து வெளியிட்ட இமிழ் என்ற தொகுப்பினை இருவரும் எப்படி அடையாளமிட முனைகிறார்கள் என அவர்களது முகநூலை அவதானித்தால் அறிய முடியும். நீலகண்டனிடம் வெளிப்படையாக இதுகுறித்துப் பேசமுற்பட்ட போது என்னைத் தன்னுடைய நட்புப் பட்டியிலிலிருந்து நீக்கி 'புளொக்' செய்து விட்டு மறைந்து போனார். ஒரு சிறு உரையாடலுக்கே தயாரில்லாத பேர்வழிப் பதிப்பகம் -புரட்சி, மாற்றுக் கருத்து என்று கதை சொல்கிறது. இந்தப் பித்தலாட்டக்காரரர்களது காலத்தை எப்படி அழித்தொழிப்பது? ஒரு புரட்சிகரப் பதிப்பகத்தினது செயற்பாடு இவ்வளவுதானா? இந்த அயோக்கியர்கள்தான் தமிழ் நாட்டில் மாற்று அரசியலை முன்வைக்கப் போராடி வரும் பேர்வழிகள் என்று அடையாளம் காட்டப்படுகிறார்கள். இந்த அடையாளம் தகர்க்கப்பட்டால் தான் நமது எதிர்காலச் சமூகம் உருப்பட வாய்ப்பிருக்கும். இல்லையேல் இந்தத் தற்குறிகள் தமக்கு வசதியாக இன்னும் சிலதற்குறிகளை உருவாக்கிவிடுவார்கள். நாங்கள் அவர்களுடனும் மல்லுக் கட்டிக்கொண்டிருக்க வேண்டும்.

## 'புகலிட இலக்கியச் சந்திப்பு'

ஜேர்மனியில் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வந்த புகலிட இலக்கியச் சந்திப்பின் முக்கியத்துவம் என்பது என்ன காரணங்களினாலும் பயனற்றதாக ஆக்கிவிட முடியாத ஒரு நிகழ்வு. இலங்கையின் யுத்தகாலத்தில் சுதந்திரமாகப் பேசுவதற்கும் உரையாடுவதற்கும் புகலிடத்தில் கூட அச்சம் இருந்தபோதும், இலக்கியச் சந்திப்பானது உரையாடலின் கதவுகளைத் திறந்து விட்டிருந்தது. அந்தச் சந்தர்ப்பத்தை உருவாக்கியவர்களும் அதனைத் தொடர்ந்து கொண்டு வழிநடத்தியவர்களும் என்றும் மதிப்புக்குரியவர்களே. கொலை களின் நடுவேதான் அந்த உரையாடற்களம் இருந்தது. ஒவ்வொரு இலக்கியச் சந்திப்பிலும் உரையாடப்பட்ட விடயங்கள் பல. அதற்குள் எழும் முரண்பாடுகளும் சண்டைகளும் பல்வேறு விதமானவை. ஆனால் இலக்கியச் சந்திப்பின் பெறுமதியையோ அதன் தேவையையோ யாரும் மதிப்பிழப்புச் செய்வதில்லை. எப்பொழுதும் அது தேவையான ஒரு தளமாகவே அனைவராலும் எதிர்பார்க்கப்படுகிறது. சுதந்திரமான உரையாடல் களத்திற்காக அதன் இருப்பினை நாம் காப்பாற்றியாகவே வேண்டும்.

ஒவ்வொரு தடவையும் இலக்கியச் சந்திப்பின் பெறுமதி குறித்துப் பேசும் பொழுது, அதற்குத் தொடர்ச்சியான ஒரு நிரந்தர நிர்வாகக் குழு இல்லை என்பதுவே அதன் சிறப்பாகப் பார்க்கப்படும். ஆனாலும் அதற்குள்



நிரந்தமான 'நிழல் நிர்வாகக் குழு' ஒன்று செயற்படுவதாக பல்வேறு தடவைகள் குற்றஞ் சாட்டப்பட்டிருக்கிறது. அந்த நிழல் நிர்வாகக் குழுவிற்கு எதிராக நாங்கள் பலதடவை சண்டை செய்திருக்கிறோம். அதனை இல்லாது செய்ய வேண்டும் என்று பேசியவர்கள் நாங்கள். ஆனால் தற்பொழுது அதே நிழல் நிர்வாகச் செயற்பாட்டினை எங்களோடிருந்த சிலர் மீளவும் கொண்டு நடத்துவது என்பது அசிங்கத்திலும் அசிங்கம். அதற்கெதிராக மீண்டும் வெளிப்படையாகப் பேசவேண்டியிருக்கிறது. எழுத வேண்டியிருக்கிறது. செயற்பட வேண்டியிருக்கிறது.

உண்மையில் இலக்கியச் சந்திப்பினை இலங்கைக்கும் கொண்டு செல்லவேண்டும் என்று விரும்பியவர்களில் நானும் ஒருவன். இப்பொழுதும் அந்த விருப்பத்தில் என்னிடம் மாற்றுக் கருத்துக் கிடையாது. இலக்கியச் சந்திப்பின் உரையாடற்களமே அந்த விருப்பத்திற்கான முதற்புள்ளியாக இருந்தது. அதற்காக இலங்கையில் நடத்துவதற்குக் கொடுத்து விட்டு இங்கேயுள்ளவர்கள் பின்னிருந்து இயக்கும் செயற்பாட்டிற்கு நான் தொடர்ந்து எதிராகவே இருந்திருக்கிறேன். அதனை வெளிப்படையாக அறியும் போது அவர்களுடனும் சண்டை போட வேண்டியிருந்தது. ஒவ்வொரு இலக்கியச் சந்திப்பின் பின்னாலும் அடுத்தது எங்கே நடக்க வேண்டும் என்பதனை முன்னர் சிலர் தீர்மானித்தார்கள் என்று நாங்கள் குற்றஞ் சாட்டியிருக்கிறோம். இப்பொழுது மீண்டும் அவ்வாறான செயற்பாட்டை அறியும் போது அதற்கெதிராகச் சண்டை செய்தும் சிலவேளைகளில் பறித்தெடுக்க வேண்டியுமிருந்தது.

ஒருமுறை பரீசில் நடைபெற்ற இலக்கியச் சந்திப்பிற்கு தமயந்தி அவர்களைக் கட்டாயமாக வரச்செய்து புஸ்பராசா அவர்களும் கலைச்செல்வன் அவர்களும் ஒரு ஓட்டியிடம் கையளிப்பது போல் கையளித்து நோர்வேயிற்கு எடுத்துச் செல்ல வைத்தார்கள். இந்தமாதிரியான நிலையைத்தான் இன்று பாரிசிலிருந்து சோபாசக்தியும் அசுரா-நாதன் அவர்களும் தேவதாஸ் அவர்களும் செய்து கொண்டிருக்கிறார்கள். இலங்கையில் நடைபெற்ற இலக்கியச் சந்திப்புக்களின் கோரிக்கைகளின் வீடியோக்களை நீங்கள் அவதானித்தால் அதனை அறியமுடியும்.

இந்தமாதிரிப் போக்குகளைப் புறக்கணித்து இவர்களுடன் சண்டை செய்துதான் 48வது இலக்கியச் சந்திப்பினைக் கனடாவிற்கு நான் எடுக்க வேண்டியிருந்தது. 49வது இலக்கியச் சந்திப்பினை கருணாகரன் அவர்கள் எடுத்துக் கிளிநொச்சியில் நடந்தினார். அங்கே 50 வது இலக்கியச் சந்திப்பினை தமயந்தி கோரியிருந்தார். மிக நீண்ட காலமாக அவர் நோர்வேயில் நடத்தவதற்கு கோரிக்கை வைத்தபடியிருந்தார். ஆனால் கொடுக்கப்படவில்லை. அதனால் மிகவும் உறுதியுடன் எழுதியதில், 50வது இலக்கியச் சந்திப்பு நோர்வே என அறிவிக்கப்பட்டது. ஆனால் அதனைத் தமயந்தி அவர்கள் தன்முனைப்புடன் அனைலைதீவில் நடத்தி இலக்கியச் சந்திப்பிற்கான குறைந்த பட்சமான இயங்கு நிலையையும் சிதைத்தார். இதற்கு கருணாகரன் போன்றவர்கள் மிகவும் செயலூக்கியாகத் துணை நின்றார்கள். இன்றும் கருணாகரனை நம்மடையே இருக்கும் தற்குறிகள் அனைவரும் தமது சீட்டாட்டத்தில் ஒரு துருப்புச்சீட்டாக்கி 'கம்மார்ஸ்' அடிக்கும் ஜோக்கராகப் பயன்படுத்தி வருகிறார்கள் என்பது மிகுந்த வருத்தமளிப்பது. இதனை வெளிப்படையாகத் தெரிந்தும் கருணாகரனால் இதுபோன்ற தற்குறிகளைப் புறக்கணத்துவிட முடியாது இருப்பதுதான் ஆச்சரியமானது.

அண்மையில் இமிழ் குறித்து கருத்துச் சொன்ன கருணாகரன் அவர்கள் இலக்கியச் சந்திப்பில் இவ்வாறு தொகுப்புக்கள் ஏற்கனவே வெளிவந்திருக்கின்றன என்று சோபாசக்தியைக் காப்பாற்ற ஒரு கருத்தினை முன் வைத்திருந்தார். அவர் 'இனியும் சூல் கொள்' என்ற தொகுப்பு வெளிவந்த காலத்தையோ அதன் கதைகளையோ அறிந்திருக்க மாட்டார். தொடர்பாடல் வசதிகளேயற்ற அந்தக்காலத்தில் இனியும் சூல்கொள் என்ற தொகுப்பின் வருகை அனைவருக்கும் ஒரு அதிர்ச்சிதான். ஆனால் கருணாகரன் அவர்களோ அனலைதீவு இலக்கியச்சந்திப்பின் வழிதவறுதலிலிருந்து தமயந்தியை எப்படிக் காப்பாற்றி நின்றாரே அதேபோல் இப்பொழுது சோபாசக்தியைக் காப்பாற்ற எதையாவது எழுதிவிட வேண்டியிருக்கிறது.

புலம்பெயர் தேசங்களில் இருப்பவர்களை விட ஈழத்தில் இருப்பவர்களுக்கு இலக்கிய நிகழ்வுகள் தேவையானது. அது எதுவாக இருந்தாலும் நான் கலந்து கொள்வேன் என்பதுதான் அவரது அனலைதீவு இலக்கியச்சந்திப்பிற்கான சார்பு நிலையின் உச்ச காரணமாக இருந்தது. குறைந்த பட்சம் இலக்கியச் சந்திப்பிற்கான கூட்டு மனநிலைச் செயற்பாடு குறித்த எந்தப் புரிதலும் அற்று தமயந்தியின் தன்னிச்சையான முடிவுக்கு கருணாகரன் அவர்கள் துணை நின்றது மிக மோசமான செயலே. அதிகமான சந்தர்ப்பங்களில் கருணாகரன் போன்றவர்களை வைத்துக் கொண்டுதான் பல்வேறு அசிங்கங்களும் நடந்துவிடுகிறது. அதுவே இறுதியாக இமிழில் வந்து நிற்கிறது.

முகநூல் போன்ற எந்த சமூக வலைத்தளங்களும் தொடர்பாடல் நெருக்கமும் இல்லாத காலத்தில் யுத்தத்தை மறுத்துத் தொகுக்கப்பட்ட ஒரு முக்கிய இலக்கியச் சந்திப்பு மலர் 'இனியும் சூல் கொள்'. பாரீசில் புலிகளால் கொலை செய்யப்பட்ட சபாலிங்கம் அவர்களை நினைவு கூர்ந்து 'கொல்லப்பட்ட சபாலிங்கத்திற்காகவும் கொல்லப் படப் போகும் அனைவருக்காகவும்' என்ற சுலோகத்துடன் வெளிவந்த தொகுப்பு அது. அதன் காலம் எல்லாம் இப்பொழுது கற்பனைகூடப் பண்ணிப் பார்க்க முடியாத காலம். அதற்காக நிதமும் உழைத்தவர்களும்

கண்ணயராது தொகுப்பினைக் கொண்டுவந்தவர்களும் பலர். யாருடைய தன்முனைப்பும் இல்லாத தொகுப்பு அது. சமூகத்தை அப்பட்டமாக வெளிக்காட்டிய பொது உழைப்பு. அதற்காகக் கடினமாக உழைத்தவர்கள் பலர். ஆனால் யாருமே அதனைத் தனியே தன்னுடையது என இன்றுவரை சொன்னதில்லை. ஆனால் கருணாகரன் போன்றவர்களுக்கு இந்தப் பக்கங்களை அறியவுந் தேவையில்லை. பேசவுந் தேவையில்லை. போகிற போக்கில் எதையாவது அடித்துவிட்டுச் செல்வது. அதன்பின்னால் என்ன ஆயாக்கியத்தனம் இருக்கிறது என்பது கருணாகரன் போன்றவர்களுக்குத் தேவையே இல்லை. தான் சொல்லும் ஒரு கருத்து சமூகத்தில் ஒரு முக்கிய கருத்தாக இருக்கும் என்ற நினைப்பு அவருக்கு. இனியும் சூல்கொள் மாதிரியான கூட்டு உழைப்பினைச் சிதைத்து தனியே தன்முனைப்புடன் இன்று செயற்படும் தற்குறிகளைத்தான் நாம் முதலில் அடையாளம் இடவேண்டும். ஒருவித தேவையும் இல்லாது இந்தவகைத் தற்குறிகளை எப்பொழுதும் காப்பாற்றிவரும் கருணாகரன் போன்றவர்களும் இந்த சமூகத்திற்கு கேடு என்பதனையும் நாம் வெளிப்படையாகச் சொல்ல வேண்டும்.

கருணாகரன் ஒவ்வொரு காலத்திலும் யாரோ ஒருவருக்காக ஜோக்கராக மாறுகிறார். அதனை அவர் தெரியாது செய்யவில்லை என்றுதான் நினைக்கிறேன். தெரிந்தேதான் செய்கிறார் என்று நம் அறியும் போது எல்லையற்ற கோபம் தலைக்கேறுகிறது.

## இது தற்குறிகளின் நாடகமேடை.

இன்று இந்தப் புகலிடச் சூழலுக்குள் இருக்கும் முக்கியமான ஒரு தற்குறி சோபாசக்தி அவர்களேதான். இவர் திட்டமிட்டுச் செய்யும் இலக்கியச் செயற்பாடு ஒருபொழுதும் புகலிட இலக்கியத்தை அடையாளம் காட்டுவதல்ல. தனியே தன்முனைப்பும் தன்அடையாளமும் கவ்வி முன்னகர்த்தும் செயற்பாடு மட்டுந்தான் அவருடையது.

இதனை ஒழித்துக் கட்டுவதற்கும் அடியோடு புரட்டிப் போடவும் நாம் செயற்படத் தொடங்க வேண்டும் என்றே நினைக்கிறேன். இன்று ஈழத்துச் சிறுகதை அடையாளம் என்றுசொல்லி இந்த இமிழ் என்ற சிறுகதைத் தொகுப்புச் செயற்பாட்டை தனியே சோபாசகத்தி என்பவர் கருப்புப்பிரதிகளுடன் மட்டும் இணைந்து செய்திருந்தால் இதன் மீது ஒரு சிறுநீர் கழித்துவிட்டோ அல்லது காறி உமிழ்ந்து விட்டோ சென்று விடலாம். அல்லது வயல்மாதாவுக்குக் கொள்ளி வைத்தது போல் யாராவது ஒருவர் கொள்ளி வைத்துவிட்டுப் போகலாம். ஆனால் இந்த இலக்கியத் தற்குறிகளும் அதனில் தங்கியிருக்கும் கருப்புப் பிரதிகள் போன்ற வியபாரிகளும் புகலிட இலக்கியச் சந்திப்பின் போர்வையில் அதன் அடையாளத்தைக் கொண்டு செய்யும் செயலை மன்னித்துக் கடந்து போக முடியவே முடியாது.

சோபாசக்தி அவர்கள் தனக்கான ஒரு பதிப்பகத்தை வைத்திருப்பதுபோல் தனக்கான ஒரு சிற்றிதழை வைத்திருப்பதுபோல் தனக்காக இந்தப் புகலிட இலக்கியச் சந்திப்பினையும் உருவாக்க முனையும் செயற்பாட்டை உடனடியாக நிறுத்துவதற்கு நாம் இணைந்து செயற்பட வேண்டும். இதற்குத் துணையாகப் பாரீஸ் இலக்கியச் செயற்பாட்டாளர்களோ அல்லது சோபாசக்தி என்ன செய்தாலும் அதற்குத் தக்க நியாயம் சொல்லிவரும் ராகவன்-நிர்மலா போன்றவர்கள் வழமையாக சோபாசக்தியினை எப்படியாவது காப்பாற்றி விட வேண்டும் என அவருக்குத் துணைபோனால் அவர்களையும் இந்தமாதிரியான இலக்கியச் செயற்பாட்டிலிருந்து ஒழித்துக் கட்டியாக வேண்டும். அவர்களது கருத்தை வெளிப்படையாகப் பேசி, அவர்களின் கருத்தியலைத் தோலுரித்து வெளிக்காட்ட வேண்டும்.

எத்தனையோ பேருடைய உழைப்பினைச் சோபாசக்தி தன்னுடைய தற்குறித் தனத்திற்காக உருமாற்ற முனைந்தால் அதற்கெதிராக நாம் ஒன்று சேரவேண்டும். அதனைக் கருப்புப் பிரதிகள் என்ற பதிப்பகம் குறுக்கறுக்க முனைந்தால் அதனையும் அடியோடு பிரட்டி வேறு இடத்தில் எறிய வேண்டும். ஈழத்திற்குள்ளோ அல்லது புகலிடச் சூழலுக்குள்ளோ தங்களுடைய தற்குறி நடைமுறைகளை அடையாளம் காட்ட இனியாவது அனுமதிக்காதிருப்போம்.

தமிழ்நாட்டில் கருப்புப்பிரதிகள் என்பது ஏதோ புரட்சிகரப் பதிப்பகம் என்பதுபோல் காட்டாப்புக் காட்டினாலும் அதில் ஒரு சொட்டும் உண்மையேதுமில்லை என்பதனை வெளிப்படையாகச் சொல்லுவோம். சோபாசக்தியின் இந்தமாதிரியான நயவஞ்சக இலக்கியச் செயற்பாட்டிற்கு உற்ற துணையாக இருப்பது 'கருப்புப் பிரதிகள் பதிப்பகம்' என்பதுதான் என்றும், அதனை தன்னுடைய கவட்டுக்குள் வைத்திருந்து புகலிடத்திலும் ஈழத்திலும் எவ்வகையான எழுத்துக்கள் பேசவைக்கப்பட வேண்டும். எவை அடையாளம் காட்டப்பட வேண்டும். எவை புறக்கணிக்கப்பட வேண்டும் முதன்மைப்படுத்தப் பட வேண்டும் எனத் திட்டமிடும் செயலை அப்புறப்படுத்தி நமக்கான ஒரு பதிப்பகத்தை ஈழத்தில் உருவாக்க நாம் முனைய வேண்டும். தமிழ் நாட்டுப் பதிப்பகங்களுக்குப் பினாமி வேலை செய்யும் ஏனைய தரகர்களையும் கண்டுபிடித்து அம்பலப்படுத்த வேண்டும். அவர்கள் தான் புகலிட ஈழ இலக்கியத்தினை அடையாளம் சொல்பவர்களாகவும் தங்களுக்கு இடைஞ்சலானவற்றை மழுங்கடிக்க முனைபவர்களாகவும் இருக்கிறார்கள். இதற்குள் ஒரு பெருங்கூட்டம் செயற்படுகிறது. இது ஒரு கூட்டுக் களவாணி வேலைத் திட்டம். ஆக. அவர்களை அடியோடு அகற்றும் வேலையை நாம்இனியாவது முனைப்பாகத் தொடங்க வேண்டும்.



# இந்துத்துவமும் மேற்குலகப் பழமைவாதமும்

## Playing by the same Playbook.

கிட்டத்தட்ட 25 வருடங்களுக்கு முன்னால் நடந்த விடயம். எனக்கு இன்றைக்கு நடந்தது போல ஞாபகம். நான் வாழும் ஒன்ராறியோ மாகாண பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்ற நேரம். ஏற்கனவே ஆட்சியிலிருந்த பழமைவாதக் கட்சி திரும்பவும் ஆட்சிக்கு வருவதற்கான தேர்தல்.

வேலைக்கு நானும் என் பிலிப்பினோ நண்பர்களும் ஒன்றாக எங்கள் கார்களில் மாறி மாறி போய் வேருவோம். அதில் ஒருவன் என்னோடு தொழிற்சங்கப் போராட்டங்களில் எல்லாம் ஒத்துழைத்தவன்.

நானோ பழமைவாதக் கட்சிக்கு எதிரானவன். அவர்களின் வரிக்குறைப்பு புலுடாக்களை நம்பாதவன். அன்றைய எங்களின் சம்பளம் இங்கே மேல் மத்தியதர வர்க்கத்தின் அளவில் இருந்தது. அதற்குக் காரணம், நான் தலைமை தாங்கி நடத்திய தொழிற்சங்கப் போராட்டங்களினால் எங்களுக்குக் கிடைத்த சம்பள உயர்வுகள்.

நாங்கள் வருடாந்தம் கட்டிக் கொண்டிருந்த வரி மட்டுமே, இங்கே அரச உதவிப் பணம் பெறுவோர் பெறுவதை விடவும், ஏன் சட்ட ரீதியாக வழங்கப்படக் கூடிய குறைந்தளவு சம்பளம் எடுப்போர் (Minimum wage) ஒரு வருடம் சம்பாதிப்பதை விடவும் அதிகமானது.

இருந்தாலும், என் சம்பளத்தில் கணிசமான தொகை வரியாகப் போவது பற்றி மற்றவர்கள் போல நான் அதிகம் அலட்டிக் கொள்வதில்லை. சகல உரிமைகளும் சலுகைகளும் வசதிகளும் மிக்க, ஒரு ஜனநாயக நாட்டில் வாழ்ந்து அதையெல்லாம் அனுபவிப்பதற்காக நாங்கள் செலுத்துகின்ற விலையாகத் தான் அதை எப்போதும் கருதிக் கொள்வேன்.

விளிம்புநிலை மக்கள் அரச உதவி பெறுவதிலும் எனக்கு எந்தச் சிக்கலும் இல்லை. எங்கள் யாழ்ப்பாணிகள் அதற்காகச் செய்யும் தில்லுமுல்லு மோசடிகளுக்கு நான் எதிரானவன் என்பதைத் தவிர!

கனடாவில் வந்து சேர்ந்ததற்கு பின்னால், மொன்றியலில் ஒரு மாதமும் ரொறன்ரோவில் ஒரு மாதமும் பெற்ற அரச உதவிப் பணம் தவிர்ந்து நான் அரசிடம் இருந்து எந்த உதவிப் பணமும் பெற்றதில்லை. தொடர்ச்சியாக வேலை செய்து கொண்டிருக்கிறேன்.

**ஜோர்ஜ் இ.**

ஒரு மனிதனின் வாழ்க்கை தலைகீழாக மாற ஒரு கணப்பொழுது போதும் என்பதில் மிகுந்த நம்பிக்கை உள்ளவன் நான். நானும் என்னுடையதெல்லாம் இழந்து அரச உதவிக்காக வரிசையில் நிற்க வேண்டும் என்ற விதி இருந்தால், அதை என்னால் தடுத்து நிறுத்த முடியாது என்பதும் தெரியும்.

இதனால், உழைப்பதற்கான உடல் ஆரோக்கியம் இருந்தால் போதும், உடல் உழைப்புக்கு நான் அஞ்சாதவன், சொகுசான வேலை செய்ய வேண்டும் என்ற ஆர்வம் எல்லாம் இல்லாதவன் என்பதால், இதெல்லாம் எனக்குப் பிரச்சனையாக இருந்ததில்லை.

இந்தப் பழமைவாத அரசு ஆட்சிக்கு வந்ததே அரசின் அனாவசியச் செலவுகளை நீக்கி, வரிகளைக் குறைத்து பிரஜைகளை பணக்காரர்கள் ஆக்குவது என்பது மாதிரியான உறுதிமொழியோடு தான்.

அதனால், அனாவசியச் செலவுகள் என்பதில் அவர்கள் எடுத்துக் கொண்ட ஆயுதம், இந்த அரச உதவிப் பணத்தில் தங்கியிருப்போர் மீதான எதிர்ப்புணர்வு. நீங்கள் கஷ்டப்பட்டு உழைக்கும் பணத்தில்

**இந்தப் பழமைவாத அரசு ஆட்சிக்கு வந்ததே அரசின் அனாவசியச் செலவுகளை நீக்கி, வரிகளைக் குறைத்து பிரஜைகளை பணக்காரர்கள் ஆக்குவது என்பது மாதிரியான உறுதிமொழியோடு தான்.**

**அதனால், அனாவசியச் செலவுகள் என்பதில் அவர்கள் எடுத்துக் கொண்ட ஆயுதம், இந்த அரச உதவிப் பணத்தில் தங்கியிருப்போர் மீதான எதிர்ப்புணர்வு. நீங்கள் கஷ்டப்பட்டு உழைக்கும் பணத்தில் செலுத்தும் வரியில், அவர்கள் சும்மா உட்கார்ந்திருந்து, பிள்ளை பெற்று, அரச உதவிப் பணத்தைப் பெற்றுச் சொகுசாக வாழ்கிறார்கள் என்ற எண்ணம் வலதுசாரி பழமைவாதப் பத்திரிகைகள், தொலைக்காட்சிகள் மூலமாக பொது எண்ணத்தில் விதைக்கப்பட்டிருந்தது.**

செலுத்தும் வரியில், அவர்கள் சும்மா உட்கார்ந்திருந்து, பிள்ளை பெற்று, அரச உதவிப் பணத்தைப் பெற்றுச் சொகுசாக வாழ்கிறார்கள் என்ற எண்ணம் வலதுசாரி பழமைவாதப் பத்திரிகைகள், தொலைக்காட்சிகள் மூலமாக பொது எண்ணத்தில் விதைக்கப்பட்டிருந்தது.

இதில் மறைமுகமாக நிறவெறியும் இருந்தது. கருப்பினப் பெண்கள், வெவ்வேறு ஆண்களுடன் தொடர்பு வைத்துக் கொண்டு, பிள்ளை பெறுகிறார்கள், அவர்களின் துணைவர்கள் அவர்களுக்கு உழைத்துக் கொடுக்காமல், வந்து படுத்திருந்து பிள்ளைகளைப் பெற்று விட்டு அகன்று விடுகிறார்கள், கடைசியில் அரசாங்கமே அவர்களுக்கு வரிப்பணத்தைச் செலவிடுகிறது என்ற பொதுவெளிச் சிந்தனையை இந்த ஊடகங்கள் வலுப்படுத்திக் கொண்டே இருந்தன.

இவ்வாறு உதவி பெறுவோர் கறுப்பினத்தவர்கள் மட்டுமல்ல, வெள்ளையினத்தவர்களும் தான். ஆனால், கறுப்பினத்தவர்களை வெளியில் அடையாளம் காட்டுவது வசதியானது.

அவ்வாறான உதவி பெறுவோர் மோசடி செய்வோர் மட்டுமில்லை. ஒழுங்காக வேலை செய்து வரி கட்டுக் கொண்டிருந்தோர், தங்கள் வலிமைக்கும் கட்டுப்பாட்டுக்கும் அப்பாற்பட்ட வழிகளில் வாழ்வில் நெருக்கடிகளுக்கு உள்ளாகும்போது இவ்வாறான உதவிப் பணத்தைப் பெற வேண்டி நேரிடுகிறது. புதிய வந்தேறிகள் தங்கள் சொந்தக் காலில் நிற்கும் வரைக்கும் தங்கள் வாழ்வைச் சமாளிக்க இந்த உதவிகளைப் பெற வேண்டியுள்ளது.

இங்கே வேலைக்குப் போவதற்காக குழந்தைகளை பராமரிப்புக்கு விடுவதற்கே பெரும் பணம் செலவிட வேண்டி வரும். பலரால் அந்தச் செலவைச் சமாளிக்கவும் முடிவதில்லை. இதனால் அவர்கள் வேலைக்குப் போக முடிவதில்லை.

ஆனால், சோம்பேறிகளும் மோசடிக்காரர்களும் தான் இந்த வரிப்பணத்தில் சொகுசு வாழ்க்கை நடத்துகிறார்கள் என்று பொதுவெளியில் விதைக்கப்பட்ட சிந்தனைக்கு என் பிலிப்பினோ நண்பனும் எடுபட்டிருந்தான்.

நாங்கள் தேர்தல் பற்றிக் கதைத்துக் கொண்டிருந்தபோது, அவன் மிகவும் உணர்ச்சி வசப்பட்டவனாக, 'என்னுடைய பணத்தில் இந்த தனித் தாய்மார்கள் சொகுசாக வாழ விடமுடியாது' என்று ஆக்ரோஷமாகக் கத்திக் கொண்டிருந்தான்.

உணர்ச்சிவசப்பட்ட அவனை எந்த விதமான தர்க்க நியாயங்கள் மூலமும் நான் சொல்வதை ஏற்றுக் கொள்ள வைக்க முடியாது என்பது எனக்குத் தெரியும். அவனுடைய அந்தக் கோபத்தின் போதே, சாதாரண மனிதர்களின் சிந்தனை எவ்வாறு இருக்கும் என்று தெரிந்து கொண்டதால், தேர்தல் முடிவு எனக்குப் புரிந்து விட்டது. அதைப் போலவே, அந்த முறை மீண்டும் பழமைவாத அரசு தான் ஆட்சிக்கு வந்தது.

ஆனால், அந்த ஆட்சியைத் தெரிவு செய்த அனைவரும் தங்கள் முட்டாள்தனத்திற்கான விலையை அதிகமாகவே செலுத்தியிருந்தார்கள். கடைசியில் அந்தக் கட்சி மீதான வெறுப்பு அதிகமாகி, அடுத்த தேர்தலில் அந்தக் கட்சி மண் கவ்வி, எதிர்க்கட்சியான லிபரல்கள் அடுத்தடுத்து மூன்று தடவைகள் தேர்தலில் வெற்றி பெற்றிருந்தார்கள்.

ஆனாலும், ஒன்ராறியோ மாகாணம் அந்த பழமைவாதக் கட்சி ஏற்படுத்திய பாதிப்பிலிருந்து மீண்டெழ நீண்ட காலம் சென்றிருந்தது. பழமைவாதக் கட்சிக்கு முன்னால் ஆட்சியில் இருந்த பொப் ரே தலைமையிலான புதிய ஜனநாயகக் கட்சி அரசு தொடக்கி, ஏற்கனவே பெரும் பணம் செலவிட்டிருந்த நிலக்கீழ் தொடருந்துப் பாதை நிர்மாணிப்பை, கார் உற்பத்தி நிறுவனங்களில் முதலீடு செய்த பணக்காரர்களுக்கும் வாகன வசதியுள்ளவர்களுக்கும் சார்பாக, பொதுப் போக்குவரத்தில் சாதாரண பொதுமக்களுக்குப் பெருமளவு உதவக் கூடிய அந்தத் திட்டத்தை, மண் மூடி நிறுத்தியிருந்தது. இப்போது இத்தனை வருடங்களின் பின்னால் அதே திட்டத்தை அதை விட அதிகமான செலவில் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அப்போதே அந்தத் திட்டத்தை அமுல்படுத்தியிருந்தால் எவ்வளவோ பணம் சேமிக்கப்பட்டிருக்கும் என்பதுடன் பொருளாதார வளர்ச்சிக்கு பெருமளவு உதவியுமிருக்கும்.

Common Sense Revolution என்ற பெயரில் நடந்த அந்த ஆட்சியின் கோமாளித்தனத்திற்கான விலையை இன்றைக்கும் செலுத்திக்



கொண்டிருக்கிறோம். அதை இரண்டு தடவைகள் ஆட்சியில் உட்கார வைத்த வாக்காளப் பெருமக்கள் உட்பட!

இந்த பழமைவாதக் கட்சி ஆட்சிக்கு வர முன்னால், பதவியில் இருந்தவர் புதிய ஜனநாயகக் கட்சியின் தலைவரான பொப் ரே. அவர் தோல்வியடைந்து பாராளுமன்றத்தில் உரையாற்றிய போது, ஒன்ராறியோ மக்களுக்கு தாங்கள் செய்வது என்னவென்று தெரியவில்லை, இதற்கான விலையைச் செலுத்துவார்கள் என்று தீர்க்கதரிசனமாகச் சொல்லியிருந்தார்.

உலகளாவிய அளவில் பழமைவாதக் கட்சிகள் பெரும் கோலோச்சத் தொடங்கிய காலம் ஒன்று இருந்தது. எண்பதுகளில் இங்கிலாந்தில் மார்க்கிரட் தட்ச்சரும், அமெரிக்காவில் றொனால்ட் றீகனும் கனடாவில் மல்றோனியும் ஜேர்மனியில் ஹெல்மட் கோலும் எங்களுக்கு ஜே.ஆர் என்றும் பழமைவாதக் கட்சிகள் அந்தக் கால கட்டத்தில் ஆட்சி செலுத்திக் கொண்டிருந்தன.

தொழிலாளர்கள் எல்லாம் ஒரே நிறுவனத்தில் நல்ல சம்பளத்தோடு, நீண்ட காலம் வேலை செய்தபடியே, நிம்மதியான வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்தார்கள் எனச் சொல்லக் கூடிய காலம். தொழிற்சங்கங்கள் பலம் வாய்ந்தவையாகவும், தங்களுடைய பலம் காரணமாக தொடர்ந்து அதிகரிக்கும் லாபத்தின் விகிதத்திற்கேற்ப தங்கள் சம்பளங்களையும் உயர்த்தக் கூடியனவாகவும் இருந்தன.

முதலாளித்துவம் லாபத்தை மட்டுமே கருத்தில் கொண்டது. அதற்கு தொழிலாளிக்கான ஊதியம் என்பது அனாவசிய செலவு. அதற்கு தொழிலாளிகள் பலம் வாய்ந்தவர்களாக இருப்பது என்பது பெரிய அச்சுறுத்தல். முதலாளித்துவத்தைப் பொறுத்த வரை தொழிலாளிகள் என்போர், பயன்படுத்திய பின்னர் தூக்கி எறியப்படக் கூடியவர்கள். தங்கியிருக்க வேண்டிய தேவை இல்லாமல் பிரதியீடு செய்யப்படக் கூடியவர்கள். Disposable and replaceable.

தொழிலாளர்கள் பெற்றுக் கொண்ட அடிப்படை உரிமைகளான எட்டு மணி நேர வேலை முதல் பெண்களுக்கான சம சம்பளம், பிரசவ விடுமுறைகள் வரைக்குமான அனைத்தும் நூற்றாண்டுகளுக்கு மேலான போராட்டங்களினால் கிடைத்தவையே. ஆனால், அந்த உரிமைகளைப் பெற்றுக் கொடுத்த தொழிற் சங்கங்களின் முதுகெலும்பை முறியடிக்கும் படலம் இந்த பழமைவாத யுகத்தில் தான் ஆரம்பிக்கப்பட்டது. தொழிற்சங்கங்களைப் பலம் இழக்கச் செய்வதன் மூலம், அதிகரித்து வரும் சம்பளச் செலவைக் குறைப்பதே முதலாளித்துவத்தினதும் அதில் தங்கியிருந்த அந்த அரசுகளின் நோக்கமாகவும் இருந்தது.

மார்கிரட் தச்சர் காலத்தில் நடந்த சுரங்கத் தொழிலாளர் வேலைநிறுத்தம், றீகன் காலத்தில் நடந்த விமான நிலையத் தொழிலாளர் வேலைநிறுத்தம், ஜே. ஆர் காலத்தில் நடந்த அரசாங்க உத்தியோகத்தர் வேலைநிறுத்தம் என்பன கடுமையான முறையில் அடக்கப்பட்டன. றீகனும் ஜே.ஆரும் தொழிலாளர்களை ஈவிரக்கமின்றி வேலைநீக்கம் செய்தார்கள்.

ஜே.ஆர் காலத்தில் வேலை நீக்கம் செய்யப்பட்ட

**முதலாளித்துவம் லாபத்தைப் பெற்றுக் கொண்டிருக்கும்போது, அதைப் பகிர்ந்து கொள்வதை விரும்புவதில்லை என்பதை நேரில் கண்ட பின்னால் தான் என்னுடைய வேலைத்தலத்தில் தொழிற்சங்கப் போராட்டத்தை நான் தொடங்க வேண்டி ஏற்பட்டது. அது அதை அடக்க என்ன வித்தைகளைக் கையாளும், எப்படி தொழிலாளர்களை தொழிலாளர்களுக்கு எதிராகப் பிரிக்கும் என்பதை எல்லாம் நேரில் கண்டவன் நான்.**

**ஆனால், தொழிலாளருக்கு அதிகளவு சம்பளம் கொடுப்பது என்பதை பெரும் குற்றம் என்பது போல, பழமைவாதப் பத்திரிகைகள் பொதுமக்கள் எண்ணத்தில் விதைத்துக் கொண்டிருக்கும்.**

அரச தொழிலாளர்கள் மிகவும் கஷ்டப்பட்ட நிலையில், யாழ்ப்பாணக் கச்சேரி அலுவலகத்தின் முன்னால் இருந்த மரநிழல்களில் தட்டச்சு இயந்திரங்களை வைத்து பத்திரங்களை அச்சடித்துக் கொடுத்துப் பெற்ற பணத்தில் வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்ததை அந்த நாட்களில் கண்டிருக்கிறேன்.

அன்றைக்குத் தொடங்கிய இந்த முதலாளித்துவத்தின் தொழிற்சங்கங்களுக்கு எதிரான நடவடிக்கைகள் இன்றைக்கு பல்வேறு உருவங்களில் பழமைவாதக் கட்சிகள் ஆட்சிகளைக் கைப்பற்றிப் பயன்பட்டுக் கொண்டிருக்கின்றன.

முதலாளித்துவம் லாபத்தைப் பெற்றுக் கொண்டிருக்கும்போது, அதைப் பகிர்ந்து கொள்வதை விரும்புவதில்லை என்பதை நேரில் கண்ட பின்னால் தான் என்னுடைய வேலைத்தலத்தில் தொழிற்சங்கப் போராட்டத்தை நான் தொடங்க வேண்டி ஏற்பட்டது. அது அதை அடக்க என்ன வித்தைகளைக் கையாளும், எப்படி தொழிலாளர்களை தொழிலாளர்களுக்கு எதிராகப் பிரிக்கும் என்பதை எல்லாம் நேரில் கண்டவன் நான்.

ஆனால், தொழிலாளருக்கு அதிகளவு சம்பளம் கொடுப்பது என்பதை பெரும் குற்றம் என்பது போல, பழமைவாதப் பத்திரிகைகள் பொதுமக்கள் எண்ணத்தில் விதைத்துக் கொண்டிருக்கும்.

இங்கே வருடாந்தம் ஒரு லட்சம் டொலர்களுக்கு மேல் சம்பளம் கிடைக்கும் அரச உத்தியோகத்தர்கள், அதிகாரிகளின் பட்டியலை தேடிப் பிடித்து வெளியிடுவார்கள். வரிப்பணம் வீணாக்கப்படுகிறது என்ற மனநிலையை மக்கள் மனதில் விதைப்பதே இதன் நோக்கம். தனியார் பெருநிறுவனங்களில் கோடிக்கணக்கில் ஊதியம் பெறுவோர் குறித்து இந்த பத்திரிகைகள் அலட்டிக் கொள்வதில்லை.

இப்படி அரச வரிப்பணம் வீணாக்கப்படுகிறது என்பதை ஒரு சுலோகமாகக் கொண்டு பழைய அரசை எதிர்த்துக் குற்றம் சாட்டிப் பதவிக்கு வந்த தற்போதைய ஒன்ராறியோ பழைவாத அரசின் முதல்வர் டக் போர்ட், தனது அலுவலகத்திலேயே வேலை செய்வோரில் ஒரு லட்சம் டொலர்களுக்கு மேல் பெறுவோர் பலரை வைத்திருக்கிறார் என்பது இப்போது சட்டசபையில் பெரும் கேள்விக்கும் கேலிக்கும் உள்ளாகியிருக்கிறது.

Gravy train என்ற வார்த்தைப் பிரயோகம் எந்த முயற்சியும் இல்லாமல் அதிகளவு பணம் சம்பாதிப்பதைக் குறிப்பது. அதை ஒரு சுலோகமாக வைத்தே தற்போதைய முதல்வரின் சகோதரர் றொறன்ரோ மாநகர முதல்வராக வந்தார். வரிப்பணம் வீணாக்கப்படுகிறது என்று ஆட்சிக்கு வந்த அவர் இறந்ததால், அவரின் சகோதரர் அரசியலுக்கு வந்து அவரும் அதே சுலோகத்தைத் தூக்கிப் பிடித்து பதவிக்கு வந்தார்.

தற்போது அவரது அலுவலகத்திலேயே உள்ளோர் அதிகளவு பணம் சம்பாதிப்பதைக் கேலிக்குள்ளாக்கி, எதிர்க்கட்சியின் தற்காலிகத் தலைவர் ஒரு பையில் gravy யில் தோய்த்த காளான் கொண்ட உணவு டின் ஒன்றை பையில் வைத்து சட்டசபையில் மறுபக்கத்தில் இருந்த முதல்வருக்கு அனுப்பியிருந்தார். முதல்வருக்கு முதலில் புரியவில்லை. பின்பு தான் எதிர்க்கட்சித் தலைவர் அது பற்றி காரசாரமாக பேசிய பின்னால் தான் அவருக்கும் ஓடி வெளித்தது.

என்னுடைய தொழிற்சங்கப் போராட்டத்தால், என்னோடு வேலை செய்தவர்களில் வருடாந்தம் ஒரு லட்சம் டொலருக்கு மேல் சம்பளம் எடுத்தவர்கள் உள்ளார்கள். நான் பல தடவைகள் மிகவும் கிட்ட நெருங்கியிருக்கிறேனே தவிர, அதைக் கடந்ததில்லை. தொழிலாளர்களின் ஒற்றுமையும் போராட்டமும் தந்த பயன்கள் அவை.

The Political Brain என்ற நூல் மேற்கத்திய ஜனநாயக அரசியலில் இறங்க விரும்புவோர்கள் கட்டாயம் வாசிக்க வேண்டிய நூல் என்று நான் கருதுகிறேன். இந்தப் புத்தகம் பற்றி றொறன்ரோ ஸ்டாரில் ஏதோ ஒரு கட்டுரையில் குறிப்பிடப்பட்டிருந்ததைப் பார்த்து, றொறன்ரோ நூலகத்தில் நான் இந்தப் புத்தகத்தைப் பெற்றுக் கொண்டபோது, இங்கேயுள்ள மாகாண புதிய ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த ஒருவரின் விசிட்டிங் கார்ட் அதற்குள் இருந்தது. அவர் கூட அதை வாசித்திருக்கிறார்.

ஒரு மூளை நரம்பியல் நிபுணர் எழுதிய அந்தப் புத்தகத்தில், பழமைவாதக் கட்சிகள் ஆட்சியைப் பிடிப்பதற்கு எவ்வாறான வழிகளைக் கையாள்கின்றன என்பதை, ஒரு மூளை செயற்படும் விதத்தின் அடிப்படையில் விளக்கி, நீகன் முதல் ஜோர்ஜ் புஷ் வரையிலான ஜனாதிபதித் தேர்தல்களில் எவ்வாறு அந்தத் தந்திரங்கள் பயன்பட்டன என்று எழுதியிருப்பார்.

முதலாளித்துவத்திற்கு வலதுசாரிப் பழமைவாதம் தான் உவப்பானது. சுரண்டவும் வரி ஏய்ப்புச் செய்யவும் வரிகளைக் குறைக்கவும் வழி செய்யக்

**முதலாளித்துவம் பொதுப் புத்தியில் சிந்தனைகளைப் புகுத்துவதற்கு எப்போதும் பெரும் முயற்சிகளை எடுத்தபடியே இருக்கிறது. அதற்காக பெரும் முதலீடுகளைச் செய்தபடியே இருக்கிறது. அமெரிக்க பழமைவாதக் கோடீஸ்வரர்கள் பலர் Think tanks எனப்படும் ஆய்வுமையங்களுக்கு கோடிக்கணக்கான பணத்தைச் செலவிடுகிறார்கள். அவை தர்மநிறுவனங்களாக இருப்பதால், அவற்றுக்கு கொடுக்கப்படும் பணத்திற்கு வரிக்கழிவும் உண்டு.**

**இந்த ஆய்வுமையங்களின் வேலை பொதுப்புத்தியில் சாதாரண மக்கள் அறியாத விதத்தில் சிந்தனைகளைத் திணிப்பது. இவ்வாறான கோடீஸ்வரர்களின் கையில் தான் ஊடகங்களும் இருப்பதால் அதைத் திணிப்பது இலகுவானது ஆகி விடுகிறது.**

கூடியன பழமைவாதக் கட்சிகள் மட்டுமே. அவற்றுக்கு எதிரான அமெரிக்க ஜனநாயகக் கட்சியோ, பிரிட்டனின் தொழிற்கட்சியோ, கனடிய லிபரல் கட்சியோ ஓரளவுக்கேனும் தொழிலாளர் சார்பானவை.

அமெரிக்காவில் குடியரசுக் கட்சியின் சுலோகமான Trickle down economy என்பது, பணக்காரர்களுக்கு வரியைக் குறைத்தால் அவர்கள் அந்தப் பணத்தை முதலீடு செய்வார்கள், அந்த முதலீட்டினால் வேலைவாய்ப்புகள் வரும், பொருளாதாரம் வளரும் என்பது தான். அப்படி ஒருபோதும் நடப்பதேயில்லை.

உண்மையில் பணக்காரர்களுக்கு வரியைக் குறைத்தால், ஒன்றில் அந்தப் பணத்தை, அவர்கள் Tax Havens எனப்படும் வரி குறைவாக உள்ள நாடுகளில் சொந்த நாடுகளுக்குத் தெரியாமல் சட்டவிரோத முறையில் பதுக்குகிறார்கள். அல்லது பங்குச் சந்தையில் சூதாட்டம் நடத்தப் பயன்படுத்துகிறார்கள்.

அது பொருளாதாரத்தில் எந்த பயனையோ, பாதிப்பையோ ஏற்படுத்துவதில்லை. ஆனால், சூதாட்டம் போன்ற பங்குச் சந்தையின் சுட்டெண் அதிகரிப்பை ஏதோ பொருளாதார வளர்ச்சி போல இந்த ஊடகங்கள் பொதுவெளியில் பரவ விட்டுக் கொண்டே இருக்கும்.

முதலாளித்துவம் பொதுப் புத்தியில் சிந்தனைகளைப் புகுத்துவதற்கு எப்போதும் பெரும் முயற்சிகளை எடுத்தபடியே இருக்கிறது. அதற்காக பெரும் முதலீடுகளைச் செய்தபடியே இருக்கிறது. அமெரிக்க பழமைவாதக் கோடீஸ்வரர்கள் பலர் Think tanks எனப்படும் ஆய்வுமையங்களுக்கு கோடிக்கணக்கான பணத்தைச் செலவிடுகிறார்கள். அவை தர்மநிறுவனங்களாக இருப்பதால், அவற்றுக்கு கொடுக்கப்படும் பணத்திற்கு வரிக்கழிவும் உண்டு.

இந்த ஆய்வுமையங்களின் வேலை பொதுப்புத்தியில் சாதாரண மக்கள் அறியாத விதத்தில் சிந்தனைகளைத் திணிப்பது. இவ்வாறான கோடீஸ்வரர்களின் கையில் தான் ஊடகங்களும் இருப்பதால் அதைத் திணிப்பது இலகுவானது ஆகி விடுகிறது.

இரண்டு உதாரணங்கள் இதில் சொல்ல முடியும். இங்கே பொதுமக்களைக் குறிப்பிடப் பயன்படுத்தும் வரியிறுப்பாளர் (Taxpayer) என்ற சொல். ஒரு நாட்டின் மக்களை உரிமைகள் உள்ள குடிமகன் (Citizen) என்று கூறுவதை விடுத்து, வரியிறுப்பாளர் என்பதன் மூலம் வரி ஒரு அநீதியான விடயம், அவர்களிடம் இருந்து அநியாயமாக வரி பறிக்கப்படுகிறது என்ற எண்ணம் திணிக்கப்படுகிறது. வரி செலுத்துவோருக்கும், செலுத்தாமல் அரசின் உதவியில் வாழ்கிறவர்களுக்கும் இடையிலான வெறுப்புணர்வை வளர்க்கிறது.

ஒரு ஜனநாயக நாட்டின் உரிமைகளுக்கும் சலுகைகளுக்கும், வசதிகளுக்கும் செலுத்தப்படும் விலையாக வரியைக் குறிப்பிடாமல், அந்த வசதிகளை ஏற்படுத்தி வாழ்க்கைத்தரத்தை அதிகரிப்பதற்கான செலவீனத்தைப் பெறும் வழியாகக் காட்டாமல், மக்களிடம் இருந்து பறிக்கப்படும் ஒன்றாக பொதுப்புத்தியில் திணித்து விடப்பட்டிருக்கிறது.

இந்தப் பொதுப்புத்திக்கு வரிக்குறைப்பு என்பது காதில் தேனாக வந்து பாய்ந்து விடுகிறது. ஆனால் பிரச்சனை என்னவென்றால், அதிகளவு பணம் சம்பாதிப்போருக்கான வரி வீதம் இங்கே அதிகமானது. மணிநேரச் சம்பளத்தில் வேலை செய்கிற ஒருவருக்கு வரிக்குறைப்பினால் கிடைக்கக் கூடிய தொகை சில நேரம் இருபது டொலராகக் கூடும். அந்த வரியைக் குறைக்கும் பழமைவாத அரசியல்வாதி பெருமையோடு, We are putting money in taxpayers' pockets என்பார்.

ஆனால், அந்த வரிக்குறைப்பால் பயன்பெறும் பணக்காரர் சேமிக்கும் தொகை மில்லியன் கணக்கில் இருக்கும். தன்னை பில்லியனர் என்று சொல்லிக் கொள்ளும் டொனால்ட் ட்ரம்ப் வரியே கட்டாத அளவுக்கு செலவுகளைக் காட்டினார் என்று செய்திகள் உண்டு. இந்த உண்மை பொதுப்புத்திக்கு புரிவதில்லை. அது தன்னுடைய பொக்கட்டில் கிடைக்கப் போவதாக நினைக்கும் இருபது டொலரைக் குறித்துப் பெருமை கொள்வதற்குள் முதலாளித்துவம் அது வாங்கி சாப்பிடும் பாணின் விலையை அதிகரித்து அதைப் பிடுங்கி விடும். இங்கே ஒவ்வொரு முறையும் அடிப்படை வேலைக்கான

**பணக்காரர்களின் நலன்களை மட்டுமே கருத்தில் கொண்டிருந்து, அவர்களின் பணத்தில் அரசியல் செய்யும் அரசியல்வாதிகளை பொதுமக்களின் மீட்பர்களாக ஊடகங்கள் பொதுப்புத்தியில் திணிக்க முடிகிறது. ஜோர்ஜ் புஷ் முதல் இங்கே தற்போது மாகாண முதல்வராக இருக்கும் டக் போர்ட் வரைக்கும் பணக்காரக் குடும்பங்களில் இருந்து வந்தவர்கள். ஆனால், அவர்கள் மக்களை folks என்று அழைப்பார்கள். அது சாதாரண மனிதர்களுடன் தாங்கள் நெருக்கமானவர்கள் என்ற பிம்பத்தை ஏற்படுத்தும் வார்த்தைப் பிரயோகம்.**

**ஏழைகளோடு நெருக்கமாக இருப்பதாகப் படம் காட்டும் தமிழ்நாட்டுச் சினிமாவில் வரும் அரசியல்வாதிகள் போன்றவர்களே இவர்கள்.**

சம்பளம் அதிகரிக்கப்படும்போது, பொருட்களின் விலையும் அதிகரிக்கின்றன.

இன்னொரு உதாரணமாக, death tax என்ற வார்த்தைப் பிரயோகம். பணக்காரர்கள் இறந்து போகும்போது, அவர்களின் சொத்துக்களைப் பிள்ளைகளுக்குக் கொடுக்கும்போது, அரசாங்கம் அதற்கு வரி அறவிடும். அதற்கு estate tax என்று பெயர். கோடிக்கணக்கான சொத்து உள்ள பணக்காரர்கள் தங்கள் பணம் வரியாகப் பறிக்கப்படுவதை விரும்பாததால், இந்த ஆய்வு மையங்கள் ஊடகங்கள் ஊடாக அதற்கு death tax என்று பெயர் வழங்கியிருக்கின்றன.

இது பொதுப்புத்தியில்,'அட, ஆட்கள் இறந்த பின்பும் அரசாங்கம் வரியை அறவிடுகிறது' என்ற சிந்தனையை ஆழ ஊன்றி விடுகிறது. ஆனால், உண்மையில் இந்த வரி பணக்காரர்களுக்கு மட்டுமானது என்ற உண்மை, இந்த ஏழைக் குடியானவர்களுக்குப் புரிவதில்லை.

இப்படித்தான் வலதுசாரிப் பழமைவாதமும் முதலாளித்துவமும் சேர்ந்து சாதாரண மக்களை அவர்களுக்குத் தெரியாமலேயே கறந்து கொண்டிருக்கின்றன.

இந்த பழமைவாதம் ஆட்சியைத் தனது கைக்குள் வைத்துக் கொள்ள எடுத்துக் கொள்ளும் ஆயுதம் உலகெங்கும் பொதுவானதாகத்தான் இருக்கிறது.

சாதாரண மக்களுக்கு அவர்களின் நாளாந்த வாழ்க்கையைக் கொண்டு செல்வதே சிரமமாயிருக்கும்போது, அவர்கள் ஆழ்ந்து சிந்திப்பதற்கான வழிகள் கிடைப்பதில்லை. அவர்கள் நாளின் இறுதியில் பார்க்கும் தொலைக்காட்சிகளோ, சதா நோண்டிக் கொண்டிருக்கும் சமூக வலைத்தளங்களோ எந்த விடயம் பற்றியும் ஆழமான புரிதலையும் தருவதில்லை.

ஒரு பொழுதுபோக்காக மேலோட்டமாகவே விடயங்களை அணுகும்போது, அந்த விடயங்கள் பற்றிய உண்மை மனதில் பதிவதில்லை. இது இந்த ஊடகங்களைக் கையிலும் கட்டுப்பாட்டிலும் வைத்திருக்கும் முதலாளித்துவத்திற்கு வசதியாகி விடுகிறது.

பணக்காரர்களின் நலன்களை மட்டுமே கருத்தில் கொண்டிருந்து, அவர்களின் பணத்தில் அரசியல் செய்யும் அரசியல்வாதிகளை பொதுமக்களின் மீட்பர்களாக ஊடகங்கள் பொதுப்புத்தியில் திணிக்க முடிகிறது. ஜோர்ஜ் புஷ் முதல் இங்கே தற்போது மாகாண முதல்வராக இருக்கும் டக் போர்ட் வரைக்கும் பணக்காரக் குடும்பங்களில் இருந்து வந்தவர்கள். ஆனால், அவர்கள் மக்களை folks என்று அழைப்பார்கள். அது சாதாரண மனிதர்களுடன் தாங்கள் நெருக்கமானவர்கள் என்ற பிம்பத்தை ஏற்படுத்தும் வார்த்தைப் பிரயோகம்.

ஏழைகளோடு நெருக்கமாக இருப்பதாகப் படம் காட்டும் தமிழ்நாட்டுச் சினிமாவில் வரும் அரசியல்வாதிகள் போன்றவர்களே இவர்கள்.

இதெல்லாம் நான் மேற்சொன்ன அறிவுமையங்களால் திட்டமிடப்பட்டே அவர்களால் பயன்படுத்தப்படுகின்றன. அது பொதுப்புத்திக்குள் திணிக்கப் படுகிறது. இதனால் அப்பாவி மக்கள் அவர்களை மீட்பர்களாகவே பார்க்கத் தொடங்குகிறார்கள்.

இவ்வாறான தலைவர்களை முன்நிறுத்தும் இந்த பழமைவாத முதலாளித்துவக் கூட்டணி உலகெங்கும் பொதுவானதாக நடைமுறைப்படுத்தும் ஒரு தந்திரம், பொதுப்புத்தியில் தங்களால் ஊதிப் பெருப்பிக்கப்பட்ட பிரச்சனைகளுக்குக் காரணமாக ஒரு குறிப்பிட்ட சிறுபான்மையினரை சகல பிரச்சனைகளுக்குமான காரணங்களாக குறிகாட்டத் தொடங்குவது.

இங்கே குற்றச்செயல்கள் பற்றி அதிகமாக வருவது பழமைவாதப் பத்திரிகைகளில் தான். அந்தக் குற்றச் செயல்களுக்கு கறுப்பர்கள் தான் அதிகளவான காரணம் என்பது பொதுப்புத்தியில் ஊட்டப்பட்டிருக்கிறது.

அதைப் போல, சமூக உதவிப் பணம் பெறும் தனித் தாய்மார்களும் அதிகளவில் கறுப்புப் பெண்கள் என்பதும் இவ்வாறு ஊட்டப்பட்டிருக்கிறது.

அதைப் போல அமெரிக்காவில் மெக்சிக்கோவில் இருந்த அமெரிக்காவிற்கு சட்டவிரோதமான முறையில்

உள்நுழைகிறவர்கள் மீதும் வெள்ளையர் அல்லாத குடியேறிகள் (Non-white immigrants) மீதும் பொதுப்புத்தியில் வெறுப்பு இருக்கிறது.

பழமைவாதக் கட்சிகள் ஆட்சியைப் பிடிக்க முயலும்போது, பொருளாதாரப் பிரச்சனைகள் பற்றிப் பேசினால் அது அறிவுபூர்வமானதாகி விடும், அது பலரையும் கவராது, ஆனால் உணர்வுபூர்வமானதாக்கி விட்டால் அது பலரின் உணர்வுகளைக் கிளப்பி விடும் என்று தெரிந்து, அவர்கள் தான் இன்றைய சகல பிரச்சனைகளுக்கும் காரணம் என்ற எண்ணத்தை சாதாரண மக்கள் அறியாத விதத்திலேயே அவர்களின் மனதில் புகுத்தி விடுகின்றன.

இதனால் தான் தேர்தலின் போது, குற்றங்களால் மக்கள் பெரும் இன்னல்களுக்கு உள்ளாகிறார்கள் என்று இங்கேயும், மெக்சிக்கோ சட்டவிரோதக் குடியேற்றவாதிகளைத் தடுக்க மதில் கட்டுவேன் என்று ட்ரம்ப் அமெரிக்காவிலும் அரசியல் செய்ய முடிகிறது.

ஜோர்ஜ்புஷ் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டபோது, அவரது குடியரசுக் கட்சி ஆட்சியில் இருந்த மாநிலங்களில், ஒரு பாலினர் உரிமைகள் பற்றிய பொதுசன வாக்கெடுப்பு போன்ற, உணர்வுபூர்வமாக மக்கள் தொகையைப் பிரிக்கிற வாக்கெடுப்புகளை ஜனாதிபதித் தேர்தல் நேரம் திட்டமிட்டே நடத்தினார்கள். இவ்வாறான விடயங்களை உணர்வுபூர்வமாக எதிர்ப்பவர்கள் நிச்சயமாக வாக்களிப்புக்கு வருவார்கள், அவர்கள் ஜோர்ஜ் புஷ்ஷிற்குத் தான் வாக்களிப்பார்கள் என்று அவர்களை வர வைப்பதற்காக என்றே இந்த வாக்களிப்புகள் ஒரே நாளில் அந்த மாநிலங்களில் திட்டமிட்டு நடத்தப்பட்டன.

தங்களுக்கு நிச்சயமாக வாக்களிக்க மாட்டார்கள் என்று கருதுகிற சிறுபான்மையினரைக் கவனமாகத் தெரிவு செய்கிறார்கள். புளோரிடாவில் குடியரசுக் கட்சி ஆட்சியில் இருக்கும்போது, கறுப்பு இனத்தவர்கள் ஜனநாயகக் கட்சிக்கே அதிகமாக வாக்களிக்கிறார்கள் என்பதற்காக, அவர்களின் குடியிருப்புகள் இருக்கும் இடங்களில் உள்ள வாக்களிப்பு நிலையங்களில் அடையாள அட்டை கேட்பது போன்ற சகல நெருக்கடிகளையும் செய்வார்கள்.

**கனடாவில் உள்ள பழமைவாதக் கட்சி அல்பேட்டா போன்ற வந்தேறிகள் மீதான வெறுப்புணர்வுள்ள பகுதிகளில் ஒரு கதையும், இங்கே தமிழர், பஞ்சாபியர் போன்றோரின் கூட்டங்களுக்கு வேட்டி, குர்தாவோடும் வந்து இரட்டை வேடங்களில் நடிக்கும் அம்பி ரெமோ கூத்துக்கள் என இன்னொரு கதையுமாக இரண்டு தரப்பினருக்கும் கரட் கிழங்கைக் காட்டி ஆசை காட்டும் திருவிளையாட்டும் நடக்கும்.**

**இதற்கு வசதியாக தங்களின் இனத்தை அழிக்க உதவும் கோடரிக்காம்புகளாக பல தமிழர்கள், பஞ்சாபியர்கள் உட்பட்ட பல வந்தேறிகள் தங்கள் சுயநலன்களுக்காக, இந்தக் கட்சியின் கொள்கைகள் பற்றி எந்தப் புரிந்துணர்வும் இன்றியோ, தங்களுக்குப் பயன் கிடைக்கும் என்று தெரிந்தும் கொண்டோ ஒட்டிக் கொள்கிறார்கள்.**

இப்படியாக தனக்கு வாக்களிக்காது என்று தெரிந்த சிறுபான்மைக் குழு ஒன்றைத் தெரிவு செய்து, தற்போதைய சகல பிரச்சனைகளுக்கும் அது தான் காரணம் என்ற சிந்தனையைக் கிளப்புவதன் மூலம் பெரும்பான்மையின் வாக்குகள் பிரிந்து விடாமல், தங்களுக்குக் கிடைப்பதற்கான முயற்சியில் இந்தக் கட்சிகள் ஈடுபடுகின்றன.

கனடாவில் உள்ள பழமைவாதக் கட்சி அல்பேட்டா போன்ற வந்தேறிகள் மீதான வெறுப்புணர்வுள்ள பகுதிகளில் ஒரு கதையும், இங்கே தமிழர், பஞ்சாபியர் போன்றோரின் கூட்டங்களுக்கு வேட்டி, குர்தாவோடும் வந்து இரட்டை வேடங்களில் நடிக்கும் அம்பி ரெமோ கூத்துக்கள் என இன்னொரு கதையுமாக இரண்டு தரப்பினருக்கும் கரட் கிழங்கைக் காட்டி ஆசை காட்டும் திருவிளையாட்டும் நடக்கும். இதற்கு வசதியாக தங்களின் இனத்தை அழிக்க உதவும் கோடரிக்காம்புகளாக பல தமிழர்கள், பஞ்சாபியர்கள் உட்பட்ட பல வந்தேறிகள் தங்கள் சுயநலன்களுக்காக, இந்தக் கட்சியின் கொள்கைகள் பற்றி எந்தப் புரிந்துணர்வும் இன்றியோ, தங்களுக்குப் பயன் கிடைக்கும் என்று தெரிந்தும் கொண்டோ ஒட்டிக் கொள்கிறார்கள்.

தொழிற்சங்கங்களின் பலத்தை உடைக்கவும் இவ்வாறான தந்திரங்களையே இந்தக் கட்சிகள் செய்து வருகின்றன.

இங்கே பழமைவாதக் கட்சி காலத்தில் ஆசிரியர்கள் வேலைநிறுத்தம் செய்தார்கள். அப்போது, ஆசிரியர்கள் வருடத்தில் ஒன்பது மாதங்கள் தான் வேலை செய்கிறார்கள், ஆனால் வருடம் பூராவும் சம்பளம் எடுக்கிறார்கள் என்ற கருத்து ஊடகங்களில் வந்த பத்திகள் மூலமாக பொதுவெளியில் ஊட்டப்பட்டன. வேலைநிறுத்த காலம் நீண்டு செல்ல, பிள்ளைகளை வைத்துக் கொண்டு வேலைக்கு போக முடியாமல் திண்டாடும் பெற்றோருக்கு ஆசிரியர்கள் மீது வெறுப்பு வர வேண்டும் என்பதற்காக, வேண்டுமென்றே எந்தத் தீர்வுக்கும் வர விரும்பாமல், வேலைநிறுத்தத்தை இழுத்தடித்தார்கள்.

தொழிற்சங்கங்கள் நடத்தும் எந்த வேலைநிறுத்தத்திலும் உடனடியாகத் தீர்வுக்கு வராமல், இழுத்தடிப்பது பொதுவெளியில் அதற்கு எதிரான உணர்வை அதிகரிப்பதற்காகவே. வேலை நிறுத்தத்தால் ஏற்படும் நட்டம் ஒரு குறுகிய காலத்திற்கானது மட்டுமே, ஆனால் தொழிற்சங்கத்தின் பலத்தை உடைப்பதன் மூலமாகக் கிடைக்கும் லாபம் வாழ்நாள் பூராகவும் இருக்கும் என்பது முதலாளித்துவத்திற்குத்

தெரியும்.

வேலைநிறுத்தங்களால் பாதிக்கப்படுவது பொதுமக்களே, பாதிக்கப்படும் பொதுமக்களும் ‘தொழிலாளர் என்பது தாங்கள் தானே!’ என்ற உணர்வு இல்லாமல், தொழிலாளர்களுக்குச் சார்பாகச் சிந்திக்காமல், தங்கள் சுயநலன் குறித்தே உணர்வுபூர்வமாகச் சிந்திப்பார்கள் என்று, அவர்களை ஒரு குறிப்பிட்ட வகைத் தொழிலாளர் மீது கோபமடைய வைப்பது முதலாளித்துவத்துக்கு லாபகரமானது.

முதலாளித்துவமும் அதன் பழமைவாதமும் இங்கே தொழிலாளிகளை பிரித்தாள்வது இப்படித் தான்.

இங்கே ஒரு தடவை பனி கொட்டும் காலம் தாமதித்து விட்டது. ஆனால், நகர சபை எப்போதும் அதற்கான தொழிலாளிகளைத் தயாராகவே வைத்திருக்க வேண்டும். பனி கொட்டாவிட்டாலும் அந்த பனி அகற்றும் இயந்திர ஓட்டுனர்களுக்கு அதிகளவு சம்பளம் வழங்கியே ஆக வேண்டும். ஆனால், இங்கேயுள்ள பழமைவாத சண் பத்திரிகை, அதை ஒரு பெரிய விடயமாக்கி, சும்மா உட்கார்ந்திருப்பவர்களுக்கு பெரும் சம்பளம் கொடுக்கிறார்கள் என்று மக்கள் கொதித்துள்ளார்கள் என்று செய்தி வெளியிட்டிருந்தது.

ஆனால், இதே பத்திரிகைகள் தீயணைப்புப் படை, பொலிஸ் போன்றவற்றின் தொழிற்சங்கங்கள் பற்றி வாயே திறப்பதில்லை. எப்போதாவது ஒரு தடவை நடக்கும் தீ விபத்திற்கும், குற்றச் செயலுக்கும் இப்படி உயர்ந்தளவு சம்பளம் கொடுக்க வேண்டுமா என்று கேட்பதில்லை. இதற்கு இரண்டு காரணங்கள், ஒன்று அவர்கள் மிகவும் பலம் வாய்ந்தவர்கள் என்பது. மற்றது அவற்றில் பெரும்பான்மையாய் இருப்போர் வெள்ளையர்களே.

இப்படி தொழிலாளர்களான மக்களிடையே பரஸ்பர வெறுப்புணர்வை இந்தப் பழமைவாதம் வளர்த்தபடியே இருக்கிறது.

இதை இந்தச் சாதாரண மக்கள் புரிந்து கொள்வதுமில்லை.

இந்த நிலை மேற்கு நாடுகளுக்கு மட்டும் உரியதுமில்லை. இதே தந்திரங்களை இந்தியாவிலும் இந்துத்துவம் பயன்படுத்தத் தொடங்கியிருக்கிறது.

முன்பு அடிக்கடி இந்து மதத்தின் பெருமை, திருநள்ளாறு சனீஸ்வரன் கோவிலுக்கு மேலால் போன சட்டலைட் பிரேக் அடித்து நிற்கிறது, முன்னோர்கள் முட்டாள்கள் அல்ல என்றெல்லாம் வட்சப்பில் பரப்பப்பட்ட செய்திகள் எல்லாம் உதிரிகளால் எழுதப்பட்டதாக நான் நம்பவில்லை.

இது இந்தியாவின் ஆட்சியைக் கைப்பற்ற நினைத்த பார்ப்பனிய, இந்துத்துவச் சக்திகளால் உருவாக்கப்பட்ட ஆய்வு மையங்களால் தான் திட்டமிட்டு உருவாக்கப்பட்டவையாகத்தான் நான் நினைக்கிறேன்.

**முன்பு அடிக்கடி இந்து மதத்தின் பெருமை, திருநள்ளாறு சனீஸ்வரன் கோவிலுக்கு மேலால் போன சட்டலைட் பிரேக் அடித்து நிற்கிறது, முன்னோர்கள் முட்டாள்கள் அல்ல என்றெல்லாம் வட்சப்பில் பரப்பப்பட்ட செய்திகள் எல்லாம் உதிரிகளால் எழுதப்பட்டதாக நான் நம்பவில்லை.**

**இது இந்தியாவின் ஆட்சியைக் கைப்பற்ற நினைத்த பார்ப்பனிய, இந்துத்துவச் சக்திகளால் உருவாக்கப்பட்ட ஆய்வு மையங்களால் தான் திட்டமிட்டு உருவாக்கப்பட்டவை யாகத்தான் நான் நினைக்கிறேன்.**

**பொதுப்புத்தியில் இந்து மதம் பற்றிய எழுச்சி ஒன்றை இவ்வாறான முட்டாள்தனமானதும் உணர்வு பூர்வமானதுமான கட்டுக்கதைகளால் உருவாக்கி, அதை அரசியல் லாபத்திற்காகப் பயன்படுத்தும் நோக்கத்துடன் தான் இவை ஆரம்பித்திருக்க வேண்டும்.**

பொதுப்புத்தியில் இந்து மதம் பற்றிய எழுச்சி ஒன்றை இவ்வாறான முட்டாள்தனமானதும் உணர்வு பூர்வமானதுமான கட்டுக்கதைகளால் உருவாக்கி, அதை அரசியல் லாபத்திற்காகப் பயன்படுத்தும் நோக்கத்துடன் தான் இவை ஆரம்பித்திருக்க வேண்டும்.

இன்றைக்கு இந்திய ஊடகங்கள் முழுக்க முழுக்க இந்துத்துவத்தின் கைக்குள் இருக்கிறது. தேர்தல் இயந்திரம் மூலமான மோசடிக்கு வசதியாக, இந்த ஊடகங்கள் கருத்துக் கணிப்பு என்ற பெயரில் ஏற்கனவே முடிவாக்கப்பட்ட வெற்றி எண்ணிக்கையை ‘எதிர்வு’ கூற ஆரம்பிக்கின்றன. வட்சப் புலுடாக்களை விட மோசமான செய்திகளை இந்த ஊடகங்கள் வெளியிடுகின்றன.

பொதுவெளிக்குள் இஸ்லாமியர்கள் பற்றிய வெறுப்புணர்வு பரப்பப்படுகிறது. இங்குள்ளது போன்றே, தங்களுக்கு வாக்களிக்க மாட்டார்கள் என்று முடிவாகத் தெரிந்த சிறுபான்மைக் குழுவை அடையாளம் காட்டி, அதன் மீதான வெறுப்புணர்வை அதிகரிப்பதில் இது தொடங்குகிறது.

அது தான் பல பிரச்சனைகளுக்குக் காரணம் என்று, ஜிகாத் திருமணங்கள் என்றெல்லாம் ஊதிப் பெருப்பிப்பது என அந்தச் சிறுபான்மை இனத்திற்கு எதிராக பெரும்பான்மையினரின் வாக்குகள் பிரிந்து போகாத படிக்கு உணர்வுபூர்வமாக கொண்டெழுப்புவது இந்துத்துவப் பழமைவாதத்தின் வேலைத்திட்டமாக இருக்கிறது.

அது பற்றிய திரைப்படங்கள் கூட தயாரிக்கப்பட்டு, இதே ஊடகங்களால் எல்லாரும் பார்க்க வேண்டிய கலைப்படைப்புகளாக போற்றிப் புகழப்படுகின்றன. தேவை ஏற்பட்டால், பாகிஸ்தான் தாக்குதல் அல்லது மதக்கலவரம் ஒன்றைக் கூட ஏற்படுத்துவதன் மூலம் தங்கள் நோக்கத்தை நிறைவேற்ற முடியும் என்ற நம்பிக்கை கூட இந்த

இந்துத்துவ வாதிகளுக்கு இருக்கிறது.

நாட்டின் உண்மையான பொருளாதாரப் பிரச்சனை குறித்த அறிவுபூர்வமான தெளிவடைதலை விட, மத ரீதியாக உணர்வுபூர்வமாக உசுப்பேத்துவது இலகுவானது.

அதற்கு மக்கள் எடுபட்டும் விடுகிறார்கள்.

எப்படி மேற்குநாடுகளில் முதலாளித்துவம் சிறுபான்மையினர் மீதான வெறுப்புணர்வை ஏற்படுத்தி, அதிகாரத்தைக் கைப்பற்ற நினைக்கிறதோ, அதே போல பார்ப்பனிய இந்துத்துவமும் அதே வழியில் மக்களை உணர்வூட்டி உசுப்பேத்தி அதிகாரத்திற்கு வர முயற்சிக்கிறது. மேற்கு நாட்டு முதலாளித்துவம் பயன்படுத்தும் அதே playbook ஐ பார்ப்பனிய இந்துத்துவம் கையில் எடுத்துக் கொண்டிருக்கிறது.

ஒரே வித்தியாசம் மேல்நாட்டு முதலாளித்துவம் பணத்தை மட்டுமே குறியாகக் கொண்டது. இந்தியாவில் பார்ப்பனியம் சிறுபான்மையாக இருந்து கொண்டு அதிகாரத்தைக் கையில் எடுத்துக் கொண்டு தன் நலன்களைப் பாதுகாப்பது.

அதற்கு மதம் என்பது ஊட்டப்படும் நஞ்சுக்குப் பூசப்படும் இனிப்பாக இருக்கிறது. தான் கொண்டாடுகிற அதே மதம் தன்னை ஒரு சம அந்தஸ்துள்ள பிரஜையாக என்ன, பிறவியாகக் கூட ஏற்றுக் கொள்வதில்லை, தங்களைத் தீண்டக் கூடத் தகாதவர்களாக வைத்திருக்கிறது என்ற உண்மையைக் கூட புரிந்து கொள்ள முடியாத நிலையில் மதம் உணர்வுபூர்வமாக ஊட்டப்பட்டிருக்கிறது.

இது இன்னொரு பிரிவினர் மீது வெறுப்பை ஏற்படுத்தப் பயன்படுகிறது.

பழமைவாதம் எந்த ரூபத்திலிருந்தாலும், அது அதிகாரத்தைக் கைப்பற்ற முயலும் தந்திரங்கள் ஒன்றாகத் தான் இருக்கின்றன.

என்னுடைய வரிப்பணத்தில் தனித் தாய்மார்கள் சொகுசாக வாழ அனுமதிக்க மாட்டேன் என்று உணர்ச்சிவசப்பட்ட என்னுடைய பிலிப்பினோ நண்பனுக்கும், என்னுடைய பெண் இன்னொரு மதத்தினனையோ, சாதியினனையோ மணம் முடிப்பதை அனுமதிக்க மாட்டேன் என நினைக்கிற ஒரு இந்துத்துவ வாதிக்கும் எந்த வித்தியாசமும் இல்லை.

தான் கொண்டாடுகிற அதே மதம் தன்னை ஒரு சம அந்தஸ்துள்ள பிரஜையாக என்ன, பிறவியாகக் கூட ஏற்றுக் கொள்வதில்லை, தங்களைத் தீண்டக் கூடத் தகாதவர்களாக வைத்திருக்கிறது என்ற உண்மையைக் கூட புரிந்து கொள்ள முடியாத நிலையில் மதம் உணர்வுபூர்வமாக ஊட்டப்பட்டிருக்கிறது.
இது இன்னொரு பிரிவினர் மீது வெறுப்பை ஏற்படுத்தப் பயன்படுகிறது.
பழமைவாதம் எந்த ரூபத்திலிருந்தாலும், அது அதிகாரத்தைக் கைப்பற்ற முயலும் தந்திரங்கள் ஒன்றாகத் தான் இருக்கின்றன.

அவர்கள் இனிப்பு பூசப்பட்ட நஞ்சுகளின் போதையில் மிதப்பவர்களே. அவர்களுக்கு தங்களுக்கு அந்த நஞ்சைத் தருகிறவர்களின் நோக்கங்கள் தெரிவதும் இல்லை.

அவர்கள் தங்களைப் போன்றே, தங்கள் வாழ்வை ஓட்டிக் கொள்ள அல்லலப்படும் சக மனிதர்கள் மீது காரணமில்லாமல் வெறுப்பை வளர்த்துக் கொள்கிறார்கள்.

அந்த வெறுப்பினால் இந்தக் கட்சிகளும் தலைவர்களும் தங்களின் மீட்பர்களாக இருப்பார்கள் என்று நம்பி அவர்களைத் தலைவர்களாகத் தெரிவு செய்கிறார்கள்.

உணர்வுபூர்வமான சிந்தனையில் தெரிவு செய்யப்படும் தலைவர்கள் இவர்களின் நலன்களுக்காக, இவர்களின் பொருளாதார உயர்வுக்காக எதையும் செய்வதில்லை. அவர்கள் ஒரு குறிப்பிட்ட தரப்பினரின் நலன்களையே முழுமையாக கருத்தில் கொண்டு செயற்படுகிறார்கள்.

மோடி தலைமையிலான ஆட்சி வந்ததிலிருந்து குஜராத்தி தொழிலதிபர்கள் நாட்டைக் கொள்ளையடித்து வளர்ந்தது போல, இந்தியப் பொருளாதாரம் வளர்ந்து மக்களின் வாழ்க்கைத் தரத்தை அதிகரிக்கவில்லை.

இவ்வாறான தலைவர்களைத் தெரிவு செய்வதால் தாங்கள் செலுத்தும் விலையை இவர்கள் அறிந்து கொள்ளும்போது அது ஏற்படுத்தும் பாதிப்பு திரும்பவும் மீள முடியாத நிலைக்கே கொண்டு போய் விடுகிறது.

இந்தியா போன்ற நாடுகளில் தேர்தல் இயந்திர மோசடி உட்பட்ட சகல சட்டத்திற்கு புறம்பான வழிகளிலும் இந்தத் தலைவர்களால் தங்கள் அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்ள முடிகிறது.

என்னவோ, மேற்குலகில் இவ்வாறான உணர்வுபூர்வமான விடயங்களுக்காக உயிரை எல்லாம் எடுத்துக் கொள்ளுகிற முட்டாள்தனம் இல்லாதிருப்பதால், அவ்வாறான ஒரு நாட்டில் சகல உரிமைகள், சலுகைகள், வசதிகளோடு, உயர்ந்த வாழ்க்கைத்தரத்தோடு வாழ்வதற்கான விலையாக அதிகளவு வரியைச் செலுத்துவதோ, என்னை ஒரு வரியிறுப்பாளனாக மட்டுமே கருதிக் கொள்வதோ எனக்குப் பிரச்சனையாக இருப்பதில்லை.

மக்களின் வரிப்பணத்தை பகிரங்கமாகவே எந்த கூச்சமும் தயக்கமும் இன்றிக் கொள்ளையடிக்கும் அரசியல்வாதிகள் இருக்கும் நாட்டில் 'வரியிறுப்பாளனாக' வாழ்வதை விட, இவ்வாறான ஒரு நாட்டில் எனது வரிப்பணம் விளிம்பு நிலை மக்களுக்கு உதவுவதிலும் எந்தப் பிரச்சனையும் எனக்கு இல்லை.

ஒரு மனிதனாக, சுதந்திரத்துடனும் சுயகௌரவத்துடனும் வாழ்வதற்கு எந்த விலையையும் செலுத்த நான் எப்போதும் தயாராகவே இருக்கிறேன்.

ஆனால், இந்த தீவிரவாத உணர்வுகளுக்குள் அமிழ்ந்திருப்போர், அதற்கு தாங்கள் செலுத்தப் போகும் விலை அதிகமானது என்பதைத் தெரிந்து கொள்ளாமல், 'தாங்கள் செய்வது என்னவென்று அறியாதிருக்கிறார்கள்'.

# கருங்குயில்




## தமிழ்நாட்டு அரசியல்வாதி போலவும் ஈழத்து இயக்கக்காரன் போலவும் இலக்கியத்தைக் கையாள முனையும் சோபாசக்தி

சோபாசக்தியினது இந்தச் சிறுகதைத் தொகுப்பினை நான் வாசிக்கத் தொடங்கும் போது, அவருடைய 'கொரில்லா' (அடையாளம் வெளியீடு) நாவலையோ அல்லது அவரது தேசத் துரோகி (கருப்புப் பிரதிகள் வெளியீடு) என்ற சிறுகதைத் தொகுப்பினையோ வாசிக்கத் தொடங்கும் போது இருந்த மனநிலை எனக்கு இருக்கவில்லை. அவரை அருகிருந்து அறிந்தவன் என்ற அடிப்படையில் அவருடைய திறமைகளையும் அதற்கான உழைப்பினையும் அறிந்து கொள்ள முடிந்த போதிலும், 'கொரில்லா' என்ற அவருடைய முதல் நாவல் என்னைக் கவர்ந்ததில்லை. அதன் செய்நேர்த்தி பற்றிப் பலர் வியாபித்திருந்தாலும் அதற்குள் ஒரு சிறிய 'நஞ்சு' ஒன்று, வார்த்தைகள் எங்கிலும் இழையோடிக் கொண்டேயிருந்தது. அதனால் தான் அதனை ஒரு 'ஹேராம்' திரைப்படத்தினை ஒத்த கருத்தியல் என்று அப்போதே சொன்னேன். அந்தக் காலத்தில் ஹேராம் ஒரு பேசு பொருளாயிருந்ததினை வைத்து அப்படிச் சொன்னேன். இன்று வேறு வேறு வடிவங்களுக்கும் ஒப்பிடலாம். அனால் அதனை இன்னொருதடவை வாசிக்கும் எண்ணம் எனக்கில்லை.

அதன் பின் 'தேசத்துரோகி' என்ற சிறுகதைத் தொகுதி வெளிவந்த காலத்தில் அவர் தமிழ் நாட்டில் அறியப்பட்ட ஒரு ஈழ எழுத்தாளராக இருந்தார். அதற்காகவே, அவ்வாறு அறியப்படவும், தமிழ் நாட்டவர்கள் ஈழம் சார்ந்து ஏற்கனவே விரும்புகின்ற விடயங்களையும், புகலிடம் சார்ந்து புல்லரிக்கின்ற விடயங்களையும் சொல்லி எழுதிவிடும் போக்கு

# கற்சுறா

அவரிடம் குடிகொள்ளத் தொடங்கிக் கனகாலமாக இருந்தது. அவரது தேசத்துரோகி என்று தொகுத்த சிறுகதைகளில் இருந்தவையில் பின்பாதிக்காக எழுதப்பட்டு சேர்க்கப்பட்ட கதைகள் அவைதான் என்பதனைச் சொல்லி, அவருடனான ஒரு 'கணக்குத் தீர்ப்பு' ஒன்றினை 2003 காலத்தில் எழுதியிருக்கிறேன் (எக்ஸில் 2003). அதில் காணப்பட்ட பெரும்பாலான கதைகள் போல ஒன்றை எழுதியும் காட்டி அதனை விமர்சித்திருந்தேன்.

தமிழ்நாட்டிலிருக்கும் பல ஏமாளிகளுக்கும் கோமாளி களுக்கும் கம்பு சுத்திக் காட்டிய கதைகள் அவை. இன்று இந்தக் 'கருங்குயில்' என்ற கதைத் தொகுப்பினை வாசிக்கும் போது, முன்னரான அவரது இரண்டு நூல்களை வாசிக்கத் தொடங்குமுன் இருந்த எண்ணம் என் மனதிற்குள் இருந்ததேயில்லை. ஒரு இலக்கியத் தேடலுக்கான தெரிவாகவும், அதற்குள் நம் காலத்தின் இருளும் ஒளியும் கலந்த சனத்தின் கதைகளை ஒரு புள்ளியிலேனும் கண்டடையும் நோக்குடனும் அவருடைய இந்தக் கருங்குயிலின் தொகுப்புக் கதைகளில் நான் எந்த வார்த்தைகளையும் தேடவில்லை. இந்தக் கதைத் தொகுப்புக் குறித்து வாசிக்கத் தொடங்குமுன் எனக்குள் ஒரு முடிவு இருந்தது. அந்த முடிவிற்கு இந்தத் தொகுப்பு எந்தளவில் ஒத்துச் செல்கிறது என்ற வாசிப்பு மட்டுமே அதுவாக இருந்தது. இன்றைய சோபாசக்தி என்ற எழுத்தாளரின் செயற்பாடுகளில் நான் அக்கறை கொள்ளும் இடம் அதுதான்.

ஒரு தமிழ் நாட்டு அரசியல்வாதி போல், ஒரு தமிழீழ இயக்கக்காரனைப் போல் என்ன அநியாயமும் செய்து தன்னை ஒரு இலக்கியப் பிதாவாகக் கொண்டாடி நிறுவ சோபாசக்தி செய்து வரும் கூத்துக்களைக் கடந்தகாலமாக நான் நன்றாக உணர்ந்து வருகிறேன். ஆரம்பத்தில் இந்த மாதிரியாக, அவர் வந்தடைந்த வழிக்குத் தெரியாமல் நாமும் ஒருவகையில் காரணமாயிருக்கிறோம் என்ற குற்றவுணர்ச்சி எனக்கிருக்கிறது. என்னோடிருந்த மற்றய நண்பர்களுக்கும் அவ்வாறு இருக்கும் என்பது எனக்குத் தெரியும். ஆனால் அவர்களால் வெளிப்படையாக அவை குறித்துப் பேச முடியாத நிலை இருக்கும். ஆனால் நான் அந்தக் காலங்கள் குறித்து வெட்கப்படவில்லை. அவற்றை வெளிப்படையாகப் பேசவேண்டும் என நினைக்கிறேன். அந்தப் பேச்சும் ஒரு பொறுப்புக் கூறலின் வெளிப்பாடுதான்.

ஒரு தற்குறியாளன், தன்மீது மோகம் கொண்டு அலையும் ஒரு எழுத்தாளன் என்பவனிடம் எந்த சமூகப் பெறுப்பும் பெறுமதியும் இருந்ததில்லை. இருக்கப் போவதுமில்லை. ஒரு இயக்கக்காரனுக்குத் தன்னுடைய இயக்கத்திற்காகக் குண்டு ஒன்றை வைக்கத் துணிச்சல் இருப்பதுபோல், ஒரு அரசியல்வாதிக்குத் தன்னுடைய கதிரைக்காக ஒருவரைக் கொலை செய்யவும் தயங்காத மனநிலை

**ஒரு தமிழ் நாட்டு அரசியல்வாதி போல், ஒரு தமிழீழ இயக்கக்காரனைப் போல் என்ன அநியாயமும் செய்து தன்னை ஒரு இலக்கியப் பிதாவாகக் கொண்டாடி நிறுவ சோபாசக்தி செய்து வரும் கூத்துக்களைக் கடந்தகாலமாக நான் நன்றாக உணர்ந்து வருகிறேன். ஆரம்பத்தில் இந்த மாதிரியாக, அவர் வந்தடைந்த வழிக்குத் தெரியாமல் நாமும் ஒருவகையில் காரணமாயிருக்கிறோம் என்ற குற்றவுணர்ச்சி எனக்கிருக்கிறது. என்னோடிருந்த மற்றய நண்பர்களுக்கும் அவ்வாறு இருக்கும் என்பது எனக்குத் தெரியும். ஆனால் அவர்களால் வெளிப்படையாக அவை குறித்துப் பேச முடியாத நிலை இருக்கும்.**

இருப்பதுபோல் நீண்ட காலமாக தன்னுடைய இலக்கிய இருப்பிற்காக எதை வேண்டுமானாலும் செய்யத் துடிக்கும் ஒரு தற்குறியாக மாறியிருக்கிறார் சோபாசக்தி என்ற அவதானம் எனக்கிருக்கிறது.

இவ்வாறான மனநிலையிலிருந்தே இந்தக் 'கருங்குயில்' என்ற தொகுப்பினை நான் வாசிக்கத் தொடங்கினேன். என்னுடைய மிக நெருங்கிய நண்பரும் என்னுடனும் எனது நண்பர்களுடனும் இணைந்து பலவேலைகளைச் செய்து வருபவர் என்ற ஒரு ஆதரவு நிலையிலிருந்தே அவரின் பல எழுத்துக்ளை வாசிக்கத் தொடங்கியவன். ஆனால் அவை எனக்கு ஏமாற்றம் அளித்தன. வாசிக்கும் போது இருக்கும் அந்த சுவாரசியத் தகவலுக்குள் சிறிய சிறிய நஞ்சு எப்பொழுதும் இருந்து கொண்டேயிருந்தது. இலக்கியத்தின் பக்கம் இருந்து செயற்படும் ஒரு கதை சொல்லிக்கு இருக்க வேண்டிய தர்மம் அங்கே சிதைந்திருந்தது.

ஆனாலும் அவரை என்னுடைய நண்பராகவே நான் அணுகினேன். அக்காலத்தில் அவருடன் முரண்பட்ட அல்லது கொடுமுரண்பட்ட பல பல சந்தர்ப்பங்கள் உண்டு. அவருடைய எழுத்து மீது நான் வைத்த முரண்களை விட அவரது நடைமுறை பற்றியும் அதிகம் முரண்பட்டிருக்கிறேன். (அவைப ற்றி இன்னொரு இடத்தில் பேசலாம். இங்கே அது அவசியமில்லாதவை.) ஆனால் அவை அவரைத் தொலைத்துவிடும் அளவிற்கு இருந்ததில்லை என அப்பொழுது நினைத்திருந்தேன்.

ஆனால் இன்றைய எனது மனநிலை அதுவல்ல.

மெல்ல ஊறிய நஞ்சை இனியும் பரவ விடமுடியாது என்ற நிலை இன்று எனக்குள் தோன்றியிருக்கிறது. இந்த முரண் எல்லாம் தாண்டி அவர் சினிமாவிற்குள் அறியப்பட்டபோது நான் அடைந்த சந்தோசம் அளவற்றது. சினிமா என்பது வியாபாரம்- பணம் சார்ந்த ஒரு தளம். அதில் அவர் ஒரு இடத்தை அடைவது அவரோடு இருந்த நண்பர்களுக்கெல்லாம் மகிழ்ச்சியைத்தான் கொடுத்தது. ரெஸ்ரோரண்டுகளில் கோப்பை கழுவியும் அலுவலகங்களில் தூ சுதட்டியும் கழித்த வாழ்விலிருந்து விடுபடும் தருணம் உன்னதமானது தானே. கான் திரைப்படவிழாவில் (Cannes Film Festival) அவரைக் கண்டபோது நண்பர்களுடன் இணைந்து நான் அடைந்த சந்தோசம் அளவில்லாதது. அந்த சினிமாத் தொழில் அவருக்கு தொடர்ந்தும் கைகொடுக்க வேண்டும் என்பதுவே இன்றும் எனது விருப்பம். புகலிடச் சூழல் என்பது அவ்வளவு எளிதானதல்ல. அது சொர்க்க பூமியுமல்ல. அதிலிருந்து ஒவ்வொருவரும் தமது திறமையின் அடிப்படையில் வெளியேறுவது என்பது தேவையானதே. அவருக்குக் கிடைக்கும் சினிமாவின் வாய்ப்புக்கள் சார்ந்து அறியும் போது நான் ஒவ்வொருதடவையும் சந்தோசம் கொள்கிறேன். சிலவேளை அந்தப்பக்கம் எனது அறிவின்மை காரணமாகவும் நான் அதனைச் செய்து கொண்டிருக்கலாம். அதன் உண்மைப் பக்கங்களை நான் அறியும் போது இதே மனநிலை தோன்றிவிடவும் கூடும். ஆனால் இலக்கியத்தில் செய்யும் அவருடைய நடிப்புச் சார்ந்து நான் மிகவும் எரிச்சலடைகிறேன். கோபம் கொள்கிறேன்.

இலக்கியத்தில் ஒரு ஜெயமோகனைப் போல் ஒரு சாருநிவேதிதா போல் இன்னும் ஒருபடி மேலேபோய் கருத்தியலாக அ.மார்க்சைப் போல் அவர் திட்டமிடலுக்குள் இருக்கிறார். அவரை ஒரு நல்ல கதை சொல்லி என்றுதான் பலர் சொல்கிறார்கள். நாங்களும் அப்படித்தான் ஆரம்பத்தில் நம்பினோம். ஆனால் உண்மை அதுவல்ல. இன்னொரு தளத்தில் 'கதை சொல்லி' என்ற பெயருக்கான அர்த்தத்தை நாம் பூரணமாக விளங்கிக் கொண்டால் அதுவே உண்மையானதாக இருக்குமோ என்றும் மாற்றி யோசிக்க வேண்டிவரும். 'கதை சொல்லி' என்றும், கதையைச் சொல்பவர் என்றும் அதன் அர்த்தங்களை உடைத்து மொழியைச் சிதைத்துப் பார்க்கும் போது அவர் நல்லதொரு கதை சொல்லியாகவே இருப்பார். கிட்டத்தட்ட நாலைந்து சம்பவங்களைக் கோர்த்துக் கதை சொல்பவர். ஒற்றை அடையாளமாகச் சொல்லின், அவர் ஒரு 'கோர்த்துக் கட்டி' அவ்வளவுதான்.

கதை சொல்லி என்ற அடையாளத்தை விட அவருக்குக் 'கோர்த்துகட்டி' என்ற சொல்லே மிகப் பொருத்தம் என்றே நினைக்கிறேன். அவர் கதைகளுக்குள் வாழ்பவர் அல்ல. கதைகளின் அலகுகளை வியாபித்துச் செல்பவரும் அல்ல. எந்தக் கதைகளும் எந்தச் சம்பவங்களும் அவரை இடைஞ்சல் செய்து, துருத்தி நிற்பவையும் அல்ல. அந்த இடைஞ்சல்களை தன்மனவோட்டத்தில் நுழைத்து அதற்கான வியாக்கியானங்களை சமூகத்தில் பரவச் செய்பவருமல்ல. மானசீகமான அணுகுமுறையுடன் நிவர்த்தி செய்யக் கூடியதும் பொதுப் புத்தியை மெல்லிதாகவேனும் கழற்றி ஒழித்து வைத்துவிடும் எந்த உரையாடல்களும் அவரது தற்காலக் கதைகளுக்குள் நிகழ்பவை அல்ல. மிகத் திட்டமிட்டு தமிழ்நாட்டின் பொதுப்புத்தி விரும்பும் வார்த்தைகளை எழுதி அவர்களுக்குள் தன்னை அடையாளம் காட்ட முனைபவர் என்பதற்குமேல் அவரது கதைகளில் எதுவும் இருந்துவிடாது என்பது அறிந்த கதைதான்.

என்மனதறிந்து நமது சூழலில், அவ்வாறான ஒரு நிலையை தன்னுடைய வார்த்தைகளுப் பின்னாலும் நம்மைத் தூங்கவிடாது இடையூறு செய்தபடி இருக்கும் எழுத்து ஒன்று ககலாமோகனுடையது. மற்றது ஜெயரூபன் மைக்கேலினுடையது. தன்முனைப்பற்ற எழுத்துக்கள் அவை. இவர்களின் எழுத்துக்களுக்குள் யாரும் ஒருபொழுதும் எழுதியவர்களை அறியமுடிவதில்லை. அங்கே பிரதியாளனுக்கான வேலை இருப்பதில்லை. அவனை யார் என்று அடையாளம் தேடிக் கொண்டிருப்பதுமில்லை யாரும்.

அவர்களது எழுத்துக்களில் வரும் பாத்திரங்கள் மனங்களை இடையூறு செய்யும். வாசகனின்

நிம்மதியைக் குலைக்கும். ஆனால் இன்றைய சோபாசக்தியின் எழுத்துக்கள் அவ்வாறானதல்ல. அவருக்குத் தமிழ் நாட்டவர்களது முட்டாள்த்தனமான அங்கீகாரம் மட்டும் போதுமானது. அதற்கு எந்தச் சரக்கையும் விற்பனையாக்க அவர் தயங்குவதில்லை. அவருக்கு வியாபாரம் செய்ய அதி மகோன்னத 'கருப்புப்' பிரதிகள்' எதற்கும் தயார் நிலையில் இருக்கிறது. ஆக, அங்கே ஒரு ஆத்மார்த்தமான இலக்கியக்காரனுக்கு வேலையில்லை. அதற்குள் கதை சொல்லிக்கு என்ன வேலை? 'கோர்த்துக்கட்டி' க்குத் தான் வேலை! அவரை ஒரு கோர்த்துக் கட்டியாக உரு மாற்றியதற்கு ஒரு பாதிப் பொறுப்பு கருப்புப்பிரதிகள் என்ற பதிப்பகத்திற்குந்தான்.

இந்தக் கருப்புப் பிரதிகள் என்ற பதிப்பகமனமும் தன்முனைப்பு என்ற சோபாசகத்தியின் கோர்த்துக்கட்டி மனமும் என்று இணைந்த இரட்டை நிலையை அறிந்து கொண்டுதான் கருங்குயில் என்ற அவரது தொகுப்பின் முதலாவது கதையை வாசிக்கத் தொடங்குகிறேன்.

'கருங்குயில்' என்ற தொகுப்பினை வாசிக்கத் தொடங்கு முன் ஒரு 'கோர்த்துகட்டி' சொல்லும் கதைகளுக்குள் என்ன தார்ப்பரியம் இருந்து விடப் போகிறது என்ற மனநிலையில்தான் இந்தக் கதைகளையும் வாசிக்கத் தொடங்குகிறேன். ஒரு இலக்கியத் தேடலுக்கான ஒரு விகாசிப்பில் இதனை நான் வாசிக்கத் தொடங்கவில்லை. தமிழ் நாட்டு முட்டாள் வாசகனுக்கு எந்தப் 'பூ'வை எந்தக் காதில் சுற்றியிருக்கிறார் சோபாசக்தி என்ற விபரம் அறியவே வாசிக்கத் தொடங்குகிறேன் என்பதனைத் தெளிவாகச் சொல்லிவிடுகிறேன்.

## மெய்யுணர்வு

இது வெளிப்படையாக விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்த, அவர்களால் தியாக தீபம் என்று அழைக்கப்படும் திலீபன் அவர்கள் சார்ந்த கதை. அவரின் அடையாளத்தை மையமாக வைத்து உருவாக்கப்பட்ட ஒரு எழுத்தமைப்பு. இலக்கியத்தில் இது ஒரு சிறுகதை என்றே அடையாளம் காட்டப்படுகிறது. இந்தக் கதை குறித்த ஒரு சிறு உரையாடல் அ.ராமசாமி அவர்களுடனான அபத்தம் உரையாடலில் ஜோர்ஜ் குருசேவ் அவர்களால் முன்வைக்கப்பட்டது. திலீபனின் ஊரான உரும்பிராயிலேயே ஜோர்ஜ் அவர்களும் வாழ்ந்ததாலும், திலீபனைச் சிறுவயதிலிருந்தே தெரிந்ததாலும் அந்தக் கதையில் வரும் அம்மன் கோயிலின் அமைப்பிடம் சார்ந்து அந்தக் கேள்வியை அவர் எழுப்பியிருந்தார். வரலாற்றிற்கும் புனைவிற்குமான வெளி குறித்த ஒரு இடைஞ்சல் பற்றியதான கரிசனைதான் அதுவே. ஆனால் உரும்பிராயிலோ அல்லது ஊரெழுவிலோ ஏன் யாழ்ப்பாணத்தின் வேறு பகுதிகளிலேயே வாழாத ஒருவருக்கு திலீபன் பற்றிய வாசிப்பு இந்தக் கதையில் என்னவாக இருக்கிறது? என்றும், இலங்கையிலே வாழாது இன்று தமிழ்நாட்டில் வாழ்ந்து ஈழம் பற்றிய கதைகளை மட்டும் கேட்டு வாழும் ஒரு இலக்கியக்காரனுக்கும் தமிழ் நாட்டுத் தேசிய வெறி கொண்டவனுக்கும் கதையில் எதைத் தேடமுடியும் என்பதும் இந்தக்கதை குறித்த முக்கிய உரையாடற்புள்ளி என்று நினைக்கிறேன்.

அதனை விடவும் திலீபன் பற்றியே அறியாத ஒரு இலக்கிய வாசகனுக்கு இந்தக் கதையில் இருக்கும் உன்னத கரு என்ன என்பதுவும் நமது உரையாடற் புள்ளியாக இருக்க வேண்டும் என்று நினைக்கிறேன். புனைவின் அதீததம் என்பது சோபாசக்தியின் கதைகளில் எங்கே நிகழ்கிறது? என்று தேடும் ஒரு உரையாடலைத்தான் நான் உரையாட நினைப்பது?

பெரும்பான்மையான ஈழத் தமிழ்ச்சமூகத்தால் மட்டுமல்ல ஈழம் பற்றிய கனவோடும் தமிழ் என்ற ஒற்றை அடையாளம் பற்றிய கனவோடும் அலையும் தமிழ்நாட்டினைச் சேர்ந்த ஒருவருக்குள் புகுத்தப்பட்ட திலீபன் பற்றிய அதீத புனைவுகளுடன் உருவாக்கப்பட்ட விம்பத்திற்கு ஒரு இடையூறும் நிகழ்ந்துவிடாதபடி வடிவமைக்கப்பட்ட ஒரு பிரதியே மெய்யுணர்வு. இங்கே ஒரு புனைகதை என்று அடையாளம் காட்ட நமக்கு இருக்கும் வெளிப்படையான ஆகக் குறைந்த ஒரு தரவு, ஏற்கனவே பொதுச் சூழலிற்குள் கட்டமைக்கப்பட்ட தியாக தீபம் என்ற அடையாளம் குலைக்கப்பட்டு 'தண்ணியைக் குடி சுண்ணியைக் குடி' என்று திலீபன் என்ற விம்பம் சொல்லும் இடம் மட்டுமே. இன்று சமூகத்தின் அமைதிக்கானதும் அகிம்சைக் கானதுமாகக் காட்டப்படும் திலீபன் என்ற சொல் இந்த வார்த்தைகளைக் கூட அனுமதிக்கப் போவதில்லை. ஆனால் சோபாசக்தி, திலீபனின் இயல்பு எனக் கருதிச் சொல்லும் இந்தச் சொற்களும் கூட புனைவுகளால் நிரப்பப்படும்.

இவர் தனது முதல் நாவலான கொரில்லாவிருந்து 'கொண்டு பரப்பும்' ஒரு செயலைத் தொடர்ந்தும் தன் புனைவுகளினூடாகக் காவிச் செல்கிறார். திலீபனின் பாடசாலை நண்பன் என்ற ஒருவனது பாத்திரத்தின் கதைக்குள்ளால் திலீபனைத் தமிழ்நாட்டில் செப்பனிடுகிறார். திலீபன் என்ற ஈழவரலாற்றுப் பாத்திரத்திற்கு இருக்கும் உண்மையான கதைகளை மறக்கடித்து புனைவு என்ற பெயரில் உண்மை அடையாளத்தைத் திரித்துவிடும் உன்னத வேலையைத் தன்னுடைய எழுத்துக்களில் நிகழ்த்துகிறார்.

இதேபோன்றதொரு இன்னொரு புனைவாகத்தான் இந்தகதைத் தொகுப்பின் தலைப்பினைக் கொண்ட 'கருங்குயில்' என்ற கதைக்கும் நடந்து விடுகிறது.

## கருங்குயில்

அண்மையில் பப்லோ நெருடா என்ற சிலி நாட்டுக் கவிஞனின் இலங்கைப் பெண் மீதான பாலியல் வல்லுறவு குறித்த விடயங்கள் பேசுபொருளாகியிருந்ததை நீங்கள்

அனைவரும் அறிந்திருப்பீர்கள். அதுகுறித்து சிங்களத் திரைப்படம் ஒன்றும் அண்மையில் வெளியாகியிருந்த பின்னால் அவர் குறித்த சர்ச்சை இன்னும் பெரிதாக உருமாறியிருந்தது. உலகப் புகழ் பெற்று உன்னத தளத்தில் பேசப்பட்டுக் கொண்டிருக்கும்- மகா கவிஞன் என்று அடையாளம் இடப்பட்டிருக்கும் ஒருவர் மீது முன்வைக்கப்பட்ட ஒரு பாலியல் விமர்சனமாக அத்திரைப்படம் அடையாளம் காணப்பட்டது. அதனைத் தக்கபடி தன் கைக்குள் அகப்படுத்திய சோபாசக்தி அவர்கள் அதற்கு ஒரு புனைகதையைச் செதுக்கினார்.

இந்தக் கதையை யாரும் வாசிக்கத் தொடங்கும் போது ஒரிரு வரிகளிலேயே இது பப்லோ நெருடாவின் இலங்கைப் பெண் பற்றிய கதைதான் என்று அனுமானித்துவிடலாம். அதனை அறிவதற்கு எந்தச் சிக்கலும் இருக்கவில்லை. ஏற்கனவே சமூகத்தின் மனம் பொதுவாக எண்ணியிருந்த நிலையும் அதுதான். நமது சமூகத்தில் பழம் பெரும் எழுத்தாளர்கள்- கவிஞர்கள்- கலைஞர்கள்- என்று அடையாளம் கொண்டவர்களின் கதையும் இதுபோன்றதுதான். எழுத்தாளர் கவிஞர் என்ற அடையாளங்கள் எல்லாம் தமக்கு ஒரு ‘வீட்டோ பவர்’ என்ற கணக்கில் தங்களையும் பப்லோ நெருடாவாக நினைக்கும் அளவிற்குத்தானே இன்றைய தமிழ் இலக்கியச் சூழல் இருக்கிறது. இதற்குள் தமிழ் நாடென்ன? ஈழமென்ன? புகலிடமென்ன?

ஆக இந்தக் கதையில் ஏற்கனவே சமூகத்தில் உரையாடப்பட்ட விடயங்களைத் தாண்டி ஒரு பேசு பொருளைக் கண்டடைய முடியாது. ஒரு சம்பவத்தை மட்டும் அடையாளம் காட்டி அதனைப் போன்ற மற்றய சம்பவங்களின் கோர்வையைக் கொண்டுவந்து பிரதியிட்டு ஒன்றின் பின் ஒன்றாகக் கோர்த்துகட்டும் ஒரு வேலைதான் அவருடைய அதிகமான கதை சொல்லும் பாணி. பாலியல் இச்சைகளின் மோசமான வடிவங்கள் எப்படியிருக்கும் என்பது அனைவரும் அறிந்து கொள்ள முடிந்த வடிவங்கள்தான். அந்த வடிவங்களுக்கு மேலும் கீழுமாக வர்ண சாயங்கள் பூசிக் கொண்டு செல்லக் கூடிய வார்த்தைகளைக் கோர்ப்பதில் அவருக்குச் சிக்கலில்லை. அவருடைய வாசகர்களுக்கும் அது பழக்கப்பட்ட ஒன்று என்ற படியால் அவரது கதைகளுக்கும் கதைகளின் வார்த்தைகளுக்கும் புரிதலில் குழப்பங்கள் ஏற்படுவதில்லை.

இந்தக் கதையில் என்ன வர்ணனைகளை அவர் விபரித்துச் சொல்லியிருந்தாலும் இந்தக் கதை முடியும் போது, ‘பப்லோ நெருடா நினைவுக்குறிப்புக்கள்’ என்ற நானூறு பக்கங்களைக் கொண்ட சுயசரிதை நூலில் ஒரு பக்கத்தைச் சம்பங்கிக்காக ஒதுக்கியிருக்கிறான். என்று சொல்லி முடிக்கிறார்.

பப்லோ நெருடாவின் சுயசரிதை நூலின் ஒருபக்க கதையை வைத்துத் தன்னுடைய கதையில் 19 பக்கக் கதையை அவர் சுற்றிச் சுழன்றடித்துக் கோர்த்துக் கட்டி எழுதுவதற்கு முக்கிய காரணம் என்னவாக இருக்கும்? இந்தத் தமிழ் நாட்டின் இலக்கிய வெற்று வெளியினை நன்றாகப் புரிந்து கொண்ட ஒரு தற்குறியாளன் தன்னை முன்நிறுத்துவதற்காகச் செய்யப்பட்ட ஒரு பிரதிதான் இது என்பதனைத் தவிர வேறு என்ன இருக்கிறது.

ஆக, சமூகத்தில் பரபரப்பாகப் பேசப்படும் சர்ச்சைகளையும் முரண்பாடுகளையும் தன்கைக் கொண்டு அதனை ஒரு சுழற்சி முறையில் கதை பண்ணுபவருக்குப் பெயர் எழுத்தாளர் அல்ல.

**எழுத்தாளர் கவிஞர் என்ற அடையாளங்கள் எல்லாம் தமக்கு ஒரு ‘வீட்டோ பவர்‘ என்ற கணக்கில் தங்களையும் பப்லோ நெருடாவாக நினைக்கும் அளவிற்குத்தானே இன்றைய தமிழ் இலக்கியச் சூழல் இருக்கிறது. இதற்குள் தமிழ் நாடென்ன? ஈழமென்ன? புகலிடமென்ன?**

## ஆறாங்குழி

இது இலங்கை வரலாற்றில் என்றும் மறக்கமுடியாத ஒரு புரட்சிகர இயக்கமாக தன்னை அடையாளம் காட்டிய ஜே.வி.பி. என்ற இயக்கத்தின் தலைவர் ரோஹண விஜயவீர அவர்களது அடையாளத்தை முகப்பாகக் கொண்டு புனையப்பட்ட எழுத்து. 1989 காலத்தில் அதன் தலைவர் உட்படபட் பல ஜே.வி. பியினரை பிரேமதாச அரசாங்கம் கொன்றொழித்தது. இது நடந்தது 1989 அக்டோபர் நவம்பர் மாத காலப்பகுதி. இந்த அழிப்பின் கதைகளில் ‘உடுகம்பொல’ என்ற டி.ஐ.ஜி இன் பெயரை அறியாதவர்கள் யாரும் இருக்கமாட்டார்கள். சித்திரவதைக்கும் கொலைக்கும் பெயர்போன உடுகம்பொலவின் கதைகள் அந்தக் காலத்திலேயே ஊருக்குள் விசிறத் தொடங்கியிருந்தன. இலங்கை பூராவும் பத்திரிகைகளிலும் வானொலிகளிலும் உடுகம்பொல என்ற சொல் ஒரு அச்சமூட்டும் சொல்லாகவே யிருந்தது. அந்த நேரங்களில்அதன் மீதான உண்மைக்குச் சாட்சியமாக தெருவோரம் கிடந்து எரிந்த பிணங்களும் களனி ஆற்றில் மிதந்த பிணங்களும் சாட்சியாக இருந்தன.

ஆனால் அந்தக் கொடூர வாழ்வின் அடையாளங்களைத் தன்வசதிக்கேற்றாற் போல் புனைவின் பெயரில் கொண்டுவந்து தருகிறார் சோபாசக்தி. வரலாறான சம்பவங்களையும் வதந்திகளாக வந்த சம்பவங்களையும் கொண்டு, தமிழ் நாட்டவர்களுக்கு புதிய கதை ஒன்றைச் சொல்லித் திகிலூட்டுகிறார். இலங்கையின் வாழ்வும் அரசியலும் பற்றிய எந்த அனுபவமோ அறிவோ இல்லாத முட்டாள்களுக்கு ஈழத்தின் கதை- புலம்பெயர் கதை என்று சொல்லி ஒன்றைக் காட்ட முனைகிறார் சோபா சக்தி. ஓ இதுதானா அது என்பதுபோல் தமிழ் நாட்டின் சாதாரண வாசகர்கள் தொடக்கம் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் வரை புல்லரித்து நிற்கிறார்கள். என்ன கொடுமை

என்றால், இந்தத் தமிழ் நாட்டவர்கள் எங்களுக்கே ‘இதுதான் அது’ என்று சோபாசக்தி காட்டிய கதையை திரும்ப எங்களுக்கே சொல்லிக் காட்டுவதுதான் அதிசிறந்த கொடுமை.

வரலாற்றிற்கும் புனைவிற்குமான இடைவெளியைக் கூட சோபாசகத்தியால் புரிந்து கொள்ள முடியவில்லை. புனைவு என்ற பெயரில் வரலாறு போல கோர்த்துக் கட்டும் ஒரு செயலைத்தான் அ. முத்துலிங்கம் அவர்களும் சோபாசக்தி போல் ஒருமுறை செய்து காட்டி மாட்டிக் கொண்டார். ஆனால் சோபாசக்தியோ இதனைத்தான் அவரது கதைகளில் தொடர்ந்து செய்கிறார். சோபாசக்தியால் எழுதப்பட்ட ‘யாப்பாணச் சாமி’ என்ற சிறுகதையை வாசிக்கும் ஈழத்தவர்களுக்கு அவர் தன்னுடைய கதைகளில் செய்கின்ற அயோக்கியத் தனத்தினை விளங்கிக் கொள்ள முடியும். அது முழுக்க முழுக்க ‘தன்னைக் கவனியாத ‘FUNNY BOY‘ திரைப்படக் குழு குறித்த எரிச்சலில் எழுதப்பட்ட கதை. ஆனால் அதனை தமிழ் நாட்டு வாசகர்களால் விளங்கிக் கொள்ளவே முடியாது. ஆனால் தமிழ் நாட்டு விமர்சகளுக்கும் ஈழம் மற்றும் புகலிடச் சூழலுடன் தொடர்பிலிருக்கும் எழுத்தாளர்களுக்கும் அங்கிருக்கும் இலக்கியப் பேராசிரியர்களுக்கும் கட்டாயம் விளங்க வேண்டும். இதன் பின்னாலுள்ள நஞ்சை நீங்கள் அறிந்து கொள்ளாது விட்டால், இலக்கியத்தின் பக்கமிருந்து நீங்கள் எதனையும் ஒருபொழுதிலும் விளங்கிக் கொள்ளப் போவதேயில்லை.

## வர்ணகலா

இந்தக்கதை புலம்பெயர் சூழலிலும் பண்பாடு எனச் சொல்லிக் கடத்தப்பட்டுப் பாதுகாக்கப்படும் அடையாளங்கள், சடங்குகள் என்பவற்றைச் சொல்லி அதற்குள் சாதி ஒழிந்திருக்கும் இடத்தைக் காட்டும் கதை. கதை தொடங்கும்போதே கதையின் முடிவை நான் சொல்லப் போவதில்லை நீங்களே ஊகியுங்கள் என்று சொல்லப்படுகிறது. கதையின் முடிவிலும் அப்படித்தான் சொல்லப்படுகிறது. பாரீசில் வாழும் ஒரு நளவர் சமூகப் பெண் வட்டுக் கோட்டையில் வைத்துக் கொல்லப்படுவது பற்றிய கதை இது. இதில் சோபாசக்தி அவர்கள் ‘வட்டுக்கோட்டை‘ என்ற ஊரை அடையாளமாகத் தேர்ந்தெடுத்தது அண்மையில்சாதிச் சண்டைக்குள் பொதுவெளியில் பேசப்பட்ட பிரபலமான ஊர் என்ற அடிப்படையில் மட்டுந்தானே ஒழிய வேறு இல்லை. இல்லேயேல் தமிழ் நாட்டுக்கு இந்தக் கதையை அவர் கொண்டு செல்ல மிகப் பெருந் தடை இருக்கும். வெளிப்படையாக ஆணவக் கொலைகள் நடைபெறும் மண்ணுக்கு, ஈழத்தின் சாதியக் கொடூரத்தை வெளிக்காட்ட அவருக்குக் கிடைத்த சாக்கு (கோணிப்பை) இது.

ஈழத்தமிழ்ச்சூழல் பூராவும் சாதிய அடையாளங்களுடன் தான் வாழ்கிறது. சாதிய முரண்பாடுகளும் சண்டைகளும் அந்த மண்ணெங்கும் பரவித்தான் கிடக்கிறது. வடக்கைப் போல் அல்லாது சாதியமுரண் குறைந்த சமூகம் கிழக்கு சமூகம் என்று அடையாளம் கொள்ள முடிந்தாலும் அங்கேயும் சாதிவெறி பிடித்தலையும் புரட்சியாளர்களைக் கூட நான் அறிவேன். அப்படித்தான் நமது சமூகம் இருக்கிறது. ஆனால் இந்தக் கதையை புனைவாக நடத்தி- கோர்த்துக் கட்டி- தன்னுடைய மற்றைய கதைகள் போல் இழுத்துச் செல்ல சோபாசக்தியால் முடியாது போகிறது. தான் எங்கேயாவது ஒரு இடத்திலாவது மாட்டுப்படுவேன் என்ற ஐயத்தை அவர் கதை சொல்லிப் போகும் விதத்திலிருந்து தொடர்ந்து நீங்கள் கண்டு போக முடியும். அவரது வழமையான எழுத்துக்கள் போல வெறும் சம்பவங்களின் கோர்வைகள்தான் இங்கேயும் படர்ந்திருக்கிறது.

புலம்பெயர் தமிழர்கள் தமது குடும்பங்களில் நிகழும் சடங்குகளை எப்படி நடத்துகிறார்கள் என்றுதானே நாம் அன்றாடம் அறிகிறோம். அவர்களின் வீடியோக்களிலிருந்து நாம் பார்க்கிறோம். அதனை வரிசையாக அடுக்குவதில் என்ன புனைவு உருவாகிறது. மற்றவருடைய சாமத்தியவீட்டுச் சடங்கு எப்படி நடக்கிறது என்று அறியமுற்படுபவருக்குத் தரும் அடையாளத் தகவல்களாக அவற்றின் விரிவு இருக்கிறதோடல்லாது தமிழ்நாட்டு வாசகர்கள் தமது வாயைப் பிளந்து நின்று வாசிக்கச் செய்யும் எழுத்தாக மட்டும் இது இருக்கிறது. அதற்காகவே திட்டமிட்டு எழுதப்படும் எழுத்து அவருடையது என்பதனை இந்தக் கதையும் தொட்டு நிற்கிறது. மற்றப்படி இதன் பின்னால் ஒரு திறந்த வெளியை புனைவுத்தளத்தில் உருவாக்கிவிட முடியாத வெறும் வெற்று அரட்டல்.

இந்தக் கதையை ஒரு சமூக உரையாடலாகக் கூட நடத்திச் செல்லத் தேவையற்று ஒரு அட்டவணைபோல் பதியப்படுகிறது. தமிழ் நாட்டவருக்கும் சோபாசக்திக்கும் இதுவொரு புலம்பெயர் சிறுகதை. மற்றப்படி இதில் ஒரு மயிரும் இல்லை. தமிழ் நாட்டவருக்குக் காதில் பூ சுற்றிய வெற்று அரட்டல். ஆனால் தன்னுடைய வழமையான யுத்த அடையாளங்களுடன் விபரிக்க முடியாது போய் முடிவு சொல்லப் பயந்த கதை இது.

## One Way

தன்னுடைய தகப்பனான யேசுதாசன் அவர்களை நிவூட்டும் கதை. தகப்பனுடைய ஊர் ஆட்டகாசம் பற்றிப் புனைவுகளோடு, பல்வேறு தடவைகளில் வேறு வேறு முறையாக எங்களுக்குப் பகிடிக்கதையாச் சொல்லி வந்த கதையின் இன்னுமொரு மாதிரி வடிவந்தான் இது. புனைவு என்ற வடிவத்துள் அந்தக் கதையின் அளப்பரிய உண்மைகளைத் தவிர்த்து ஒரு புனைவாக இது எப்படியிருக்கிறது எனக் கேட்டால், புத்தகத்தில் இந்த ஒரு கதை மட்டும் புனைவிற்கான ஒரு உரையாடற் தளத்தை அங்கங்கே கொண்டு உருவாக்கியிருக்கிறது.

ஆனாலும் இந்தக் கதையும் அகதிகளின் பாரிஸ் வாழ்வு குறித்துத் தமிழ் நாட்டவர்களுக்குக் கதை சொல்லும்படியாகத்தான் பல்வேறு இடங்கள் நினைவூட்டிச் செல்கிறது. ஈழத்தின் வாசகர்கள் இந்தக் கதையில் கூட எதையும் புதிதாக அறியவும் உள்ளார உரையாடவும் எதுவுமில்லாத கதை. ஒவ்வொரு புகலிட அகதியும் அன்றாடம் வாழும் வாழ்வை வெறும் சம்பவங்களாகத் தமிழ்நாட்டவர்களுக்கு விபரிக்க முடிந்த கதைதான் இதுவும்.

இன்று சோபாசக்தியால் தமிழ் நாட்டு வாசகர்களது மனநிலைக்குக் கதை சொல்லும் விதம் தாண்டி ஒரு கதையை அவரால் வேறுமாதிரி எழுத முடியாது இருப்பதனை யாரும் விளங்கிக் கொள்ளவேயில்லை. ஆனால் அவருக்கு அது நன்றாகத் தெரிந்துவிட்டது. அதனை மூடி மறைக்க அவர் எடுக்கும் பிரயத்தனங்கள் பல்வேறு விதமானவை.

## பல்லிராஜா

இந்தக் கதையை நான் வாசிக்கத் தொடங்குமுன்னர் அவரது யாப்பாணச்சாமி என்ற கதையின் வடிவத்தில் அல்லிராஜா சுபாஸ்கரன் என்ற லைக்கா நிறுவனக் காரரை வைத்துச் சொல்ப்பட்ட கதை என்றுதான் நானும் நினைத்துத்தான் வாசிக்கத் தொடங்கினேன். அப்படித்தான் இருக்கக் கூடும் என்று பலர் எனக்கு முன்னர் அறிவுறுத்தியும் இருந்தார்கள். அப்படிச் செய்யக் கூடியவர் என்பது நமக்கு எற்கனவே தெரிந்த கதைதான். அவருடைய ஊரில் தாழ்த்தப்பட்டவர்களது பெயர்களை தன்னுடைய கதைகளில் எப்படிப் பாவித்தார் என்று ஜோர்ஜ் குருசேவ் அவர்களும் ஒருமுறை அபத்தம் இதழில் குறிப்பிட்டிருந்தார். அப்படியான ஒரு எண்ணத்தில்தான் நான் வாசிக்கத் தொடங்கினேன். ஆனால் கதை அவ்வாறு இல்லை. அது முழுக்க முழுக்க சிங்கள பவுத்த மேலாதிக்கத்தின் வடிவமாகத் தமிழ்ப்பகுதிகளில் புத்தர் சிலை நிறுவும் சம்பவங்கள் பற்றியது. பவுத்த தேரர்கள் இலங்கையில் அரசியலில் ஈடுபடுவதையும் அதன் பின்னால் இன்றுவரை இலங்கையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அரச நிர்வாகத்தின் சீர்கேடுகளையும் வரிசையாக அடுக்கிச் சொல்லும் சம்பவங்களின் கோர்வையாகக் கதை எழுதப்படுகிறது. இதனையும் ஒரு புனைவு என்ற தளத்தில் வைத்துப் புல்லரித்துப் போகிறார்கள் பலர்.

என்ன கொடுமை என்றால் இவரைப் போல ஒரு எழுத்தினை எழுதினால் தமிழ் நாட்டவர்களால் தாமும் போற்றப்படுவோம் என்ற ஆசையில் பலர் இவரைப் போல் எழுதத் தொடங்குகிறார்கள். சோபாசக்தி கூட அப்படியான ஒருநிலை வருவதனையேதான் விரும்புகிறார். அதற்காகச் சில செம்மறிகளை அவரே உருவாக்குகிறார். அதனைப் புறக்கணித்து தன்னியல்பாய் எழுதுபவர்களை என்ன பாடுபட்டேனும் ஒழித்து ஓரங்கட்ட முனைகிறார். அதற்காகப் பல்வேறு வழிகளைக் கையாள்கிறார். தமிழ் நாட்டில் ஒரு அரசியல் வாதியைப் போல், ஈழத்தில் ஒரு இயக்கக்காரனைப் போல் அவர் இலக்கியத்தில் செயற்பட முனைகிறார். மற்றவர்கள் என்ன நினைக்கிறார்களோ தெரியாது. அந்தச் சிந்தனையை என் கையாலேயே கிள்ளி வெளியே எறிய வேண்டும் என்று நான் எண்ணியிருக்கிறேன்.

> என்ன கொடுமை என்றால் இவரைப் போல ஒரு எழுத்தினை எழுதினால் தமிழ் நாட்டவர்களால் தாமும் போற்றப்படுவோம் என்ற ஆசையில் பலர் இவரைப் போல் எழுதத் தொடங்குகிறார்கள். சோபாசக்தி கூட அப்படியான ஒருநிலை வருவதனையேதான் விரும்புகிறார். அதற்காகச் சில செம்மறிகளை அவரே உருவாக்குகிறார். அதனைப் புறக்கணித்து தன்னியல்பாய் எழுதுபவர்களை என்ன பாடுபட்டேனும் ஒழித்து ஓரங்கட்ட முனைகிறார்.

அதனை வைத்து பணம் பண்ணமுனையும் வெளியீட்டாளர் களையும் சமூகத்தின் ஒரு சிறந்த பதிப்பகம் என்று நாம் வரையறுப்பதில்லை. காலச்சுவட்டை எப்படி நாம் அணுகினோமோ அதன் தரத்திற்கு இன்று கருப்புப் பிரதிகளும் இறங்கியிருக்கிறது. மொத்தத்தில் இன்றைய தமிழ்நாட்டவர்களுக்கு அடிப்படையில் அறம் என்பது இருப்பதில்லை. ஆனால் நாட்கணக்கில் அறம் பற்றிப் பேசுவார்கள். மாற்றுக் கருத்தும் கருத்து முரண்பாட்டையும் வாரி அணைப்பதாகப் படம் காட்டுவார்கள். பணம்- புகழ் தாண்டி அவர்களிடம் எதையும் எதிர்பார்க்க முடியாத நிலை இன்று தோன்றியிருப்பது அபத்தம்.

சோபாசக்தி அவர்கள் தன்னை ஒரு கதைசொல்லி என நகரும் வார்த்தைகள் எங்கும் சம்பவங்களின் நகர்வே. அங்கொன்றும் இங்கொன்றுமாக எடுத்துக் கோர்த்துக்கட்டி அதனைப் புனைவு என்கிறார். புனைவுக்கு இங்கே என்ன வேலை இருக்க முடிகிறது?. தமிழ்நாட்டிலிருக்கிற விடுபேயன்கள் வாயைப் பிளந்து நின்று கேட்பார்கள், வாசிப்பார்கள் என்ற ஒரேயொரு அதீத நம்பிக்கையில் எழுதப்படும் வார்த்தைகள்தான் இவையே அன்றி, ஆழ்மனதிலிருந்து வருகின்ற இலக்கிய விகாசிப்பு அல்ல இவை. அங்கே இருக்கிறவன் தொன்மங்களை வைத்துக் கதை சொல்கிறார் சோபா என்று எங்களிடம் வந்து கதை சொல்லிக் கொண்டிருக்கிறான். இங்கே இவனுக்கோ தனக்கான கதையைச் சொல்லத் திண்டாட வேண்டியிருக்கிறது. இந்த இழுபறிகளில் எதையாவது தேடியெடுத்து ஒவ்வொரு கதைகளிலும் தமிழ் நாட்டவனின் மண்டையைக் கழுவுகிறார் சோபாசக்தி. இவ்வாறு கதைகளை அவர் எழுதிச் செல்வதும் மற்றவர்களை அவரைப்போல் எழுதச் செய்வதுமாக ஒரு இலக்கிய அடையாளத்தைக் காட்டி நிற்கும் அயோக்கியத் தனத்தை நாம் புரியத் தொடங்கினாலே போதும்.

மிகுதி பின்னர் பார்க்கலாம். அ



# மண்டையில் போட்ட மண்டேலா





எங்கள் தமிழ்த் தலைமைகளின் இல்லாமையும் இயலாமையும் குறித்து எனக்கு இருந்த ஆதங்கத்தையும் ஏக்கத்தையும் குத்திக் காட்டிய சில கணங்கள் இன்றும் என் நினைவில் உண்டு. இதெல்லாம் இன்று நேற்றல்ல, நீண்ட காலத்திற்கு முந்தியவை.

றொனால்ட் றீகனின் இரண்டாவது ஆட்சிக் காலம் முடியும் காலத்தில் பலஸ்தீன விடுதலை இயக்கத்தை அவசர அவசரமாக அங்கீகரிக்கும் முயற்சி நடைபெற்றது. அப்போது பலஸ்தீன இயக்கம் பயங்கரவாதத்தை மறுதலிக்க வேண்டும் என்பது நிபந்தனை. அப்போது விமானம் ஒன்றில் பயணித்துக் கொண்டிருந்த அரபாத்தை டைம் சஞ்சிகையினர் பேட்டி கண்டிருந்தனர். அந்தப் பேட்டியை நான் டைம் சஞ்சிகையில் வாசித்த போது, அவர் அளித்திருந்த

**ஜோர்ஜ் இ.**

**அந்தச் சிறிய உலகத்திற்குள் இவர்கள் எல்லாம் எனக்குப் பெருந்தலைவர்களாகத் தான் தோன்றினார்கள். அவர்களுடைய உணர்ச்சிப் பேச்சுக்கள், அவர்களுக்கு அந்தச் சமூகத்தில் இருந்த மதிப்பு என்பன அவர்கள் பற்றிய பிரமிப்பையே எனக்குத் தந்திருந்தது.
என் கண் முன்னாலேயே அந்தத் தலைமை துரோகியாக்கப்பட்டு அழிக்கப்பட்டதையும் பார்க்கவும் நேர்ந்தது.
உணர்ச்சிப் பேச்சுக்களுக்கு எடுபட்ட சமூகம், சினிமா ஹீரோயிச துப்பாக்கி விளையாட்டுக்களுக்கும் எடுப்பட்டதில் வியப்பு எதுவும் இல்லை.**

புத்திசாதுரியமும் புத்திஜீவித்தனமும் நிறைந்த பதில்கள் உண்மையிலேயே 'எங்களுக்கு ஏன் இப்படி ஒரு தலைவர் கிடைக்காமல் போனார்?' என்ற ஆதங்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

நெல்சன் மண்டேலா விடுதலை செய்யப்படப் போகிறார் என்று செய்திகள் வெளிவரத் தொடங்கியிருந்தன. அதற்கான நாளும் குறிக்கப்பட்டிருந்து தொலைக்காட்சியில் பெரும் அல்லோலகல்லோலம். அந்த விடுதலை நாள் இன்றைக்கும் மனதில் நிற்கிறது. பெரும்பான்மையான இனத்தை அடிமைத்தனத்திற்குள் வைத்து ஆண்ட சிறுபான்மை அரசு, சர்வதேச தடைகளுக்குத் தாக்குப்பிடிக்க முடியாமல், கடைசியில் அடிபணிந்திருந்தது.

தன்னை இத்தனை வருடங்கள் சிறையில் வைத்திருந்த ஒரு அரசையும் இனத்தையும் பழிவாங்கும் உணர்வோடு உணர்ச்சிகளைத் தூண்டி அழித்து ஒழித்திருக்க முடியும். அது அன்றைய மனநிலையில் இலகுவானதாகவும் இருந்திருக்கும்.

அதையும் கடந்து, அதே அரசோடு தேசிய அரசாங்கத்தை அமைத்து அந்த நாட்டை வழிநடத்தி, வாழ்நாள் பூராவும் தேசியத் தலைவராக வாழ நினைக்காமல் தன் பணி முடிந்ததும் புதிய தலைவர்களை உருவாக்கி வழிவிட்டுத் தான் ஒதுங்கிக் கொண்டார்.

தென்னாபிரிக்கா போன்றே வெள்ளையர்களால் ஆளப்பட்ட றொடீஷியா, முகாபேயின் தலைமையில் சுதந்திரம் பெற்று ஸிம்பாவே ஆகி எப்படி சிதைவடைந்து போனதோ, அவ்வாறான ஒரு நிலைமை தென்னாபிரிக்காவில் ஏற்படாமல் இருப்பதற்கான காரணம் மண்டேலா மட்டுமே. அது போன்ற தீர்க்கதரிசனம் மிக்க தலைமை ஏன் எங்களுக்குக் கிடைக்கவில்லை என்ற உண்மையான ஏக்கம் எனக்கு இன்றைக்கும் இருக்கிறது.

கேரள முதல்வர் பினராயி விஜயன் நிகழ்த்திய உரை ஒன்றை வலைத்தளம் ஒன்றில் பார்த்தேன். மலையாள மொழியில் அந்த உரை இருந்தாலும், அதில் இருந்த தர்க்கரீதியான நியாயங்கள் என்னை மெய்மறக்க வைத்து, நான் அதை பேஸ்புக்கில் பகிர்ந்தும் இருந்தேன். சாதிய அடக்குமுறையிலும், பெண்களை அடக்கியாள்வதிலும் பெருமை கொண்டிருந்த சமூகம் எவ்வாறு அதையெல்லாம் கடந்து எப்படி அடுத்த கட்டத்திற்கு நகர்ந்தது என்பதை அழகாகவும் ஆழமாகவும் சொல்லிக் கொண்டிருந்தார்.

அப்போது கூட, ஏன் இது போன்ற தலைவர்கள் எங்களுக்குக் கிடைக்காமல் போனார்கள் என்ற கேள்வியையும் எழுப்பியிருந்தேன்.

சமீபத்தில் கூட, பலஸ்தீன பிரச்சனை குறித்து பிபிசிக்கு பாலஸ்தீன அமைப்பின் இங்கிலாந்துப் பிரதிநிதி வழங்கிய பேட்டியில் கூட, கேட்கப்பட்ட தர்க்கமில்லாத கேள்விகளுக்கு வழங்கிய பேட்டியைப் பார்த்த போதும், பிரமிப்படைய வேண்டி இருந்தது. அத்தனை சாதுரியமாக தனது இனத்தின் நிலையையும், அதன் நியாயப்பாடுகளையும் சொல்லிக் கொண்டிருந்தபோது, 'நம் தகுதிக்கு தமிழ்ச்செல்வன் தான் நமக்கு ஹென்றி கிசிங்கர்' என்ற நிலைமை இருந்த காலத்தை நினைத்துக் கொண்டேன்.

இந்தக் கணங்கள் எல்லாம் எங்கள் தமிழ் இனத்தின் தலைமை இல்லாமையையும், வந்து வாய்த்தவற்றின் இயலாமையையும் குத்திக் காட்டுகின்றனவாகவே எனக்கு இருந்தன.

சிறுவயதில் என்னுடைய அப்பா தான் போகிற அரசியல் கூட்டங்களுக்கு எல்லாம் என்னையும் கூட்டிச் செல்லும் வழக்கத்தைக் கொண்டிருந்தார். ஜி.ஜி.பொன்னம்பலத்தை நேரில் கண்ட ஞாபகம் இல்லை. மற்றும்படி அந்தக் காலத்தின் பின்னால் இருந்த சகல அரசியல் தலைவர்களையும், டட்லி, ஜே.ஆர் உட்பட, அவர்களின் உரைகளையும் நேரடியாகவே கண்டு, கேட்டுக் கொண்டு தான் நான் வளர்ந்திருந்தேன். சுதந்திரன், ஒரு தீப்பொறி எல்லாம் அப்பா கிரமமாக வாங்கி மிகவும் சிறுவயதில் நான் வாசித்தவை தான்.

அந்தச் சிறிய உலகத்திற்குள் இவர்கள் எல்லாம் எனக்குப் பெருந்தலைவர்களாகத் தான் தோன்றினார்கள். அவர்களுடைய உணர்ச்சிப் பேச்சுக்கள், அவர்களுக்கு அந்தச் சமூகத்தில் இருந்த மதிப்பு என்பன அவர்கள் பற்றிய பிரமிப்பையே எனக்குத் தந்திருந்தது.

என் கண் முன்னாலேயே அந்தத்தலைமைதுரோகியாக்கப்பட்டு அழிக்கப்பட்டதையும் பார்க்கவும் நேர்ந்தது. உணர்ச்சிப் பேச்சுக்களுக்கு எடுபட்ட சமூகம், சினிமா ஹீரோயிச துப்பாக்கி விளையாட்டுக்களுக்கும்

எடுப்பட்டதில் வியப்பு எதுவும் இல்லை.

எம்.ஜி.ஆர் படங்களை கலரியில் இருந்து பார்த்தவன் நான். இன்றைய நாயகர்களின் ஸ்லோ மோஷன் என்ட்ரிகளைப் பார்த்துப் பரவசம் அடைந்து 'தலைவா' என்று புல்லரிக்கும் தலைமுறையையும் கண்டவன் நான்.

ஆனால், அன்றைக்கு பிளேட்டால் கீறி இரத்தத் திலகம் வைத்த தலைமுறை முதல், மின்கம்பத்தில் கட்டி நெற்றியில் பொட்டு வைத்த தலைமுறை வரைக்குமாய் இருந்த உலகத்தில் இருந்து நான் எப்போதோ வெளியில் வந்து விட்டேன். (என நினைக்கிறேன்.)

தலைவர்கள் பற்றி நான் கொண்டிருக்கும் மதிப்பீடுகள் உணர்வுகள் கொதிக்கும் அன்றைய மனநிலைக்கும் அப்பால் வந்து விட்டது. ஆனால் எங்கள் யாழ்ப்பாணச் சமூகம் அந்தக் கிணற்றுக்குள் இருந்து இன்னமும் வெளியில் வரவில்லை.

நாங்கள் முற்போக்கு என்று சொல்லும் சிந்தனை உள்ளவர்கள் கூட, தலைவர்கள், தலைமை என்பவை குறித்துக் கொண்டிருக்கும் கருத்துக்களோடு எனக்கு உடன்பாடு இருப்பதில்லை. இடதுசாரித் தலைவர்களாக நாடுகளை ஆள்கிறவர்களை, அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்பு என்ற அளவுகோலை மட்டும் வைத்துக் கொண்டு நான் அளவீடு செய்வதுமில்லை. மதிப்புக் கொள்வதுமில்லை.

அவர்களை விமர்சனங்களுக்கு அப்பாற்பட்டவர்கள் என்றோ, பிரபாகரனை புலி ஆதரவாளர்கள் சூரியதேவன் என்றது போல அவர்களையும் வழிபட வேண்டும் என்றோ நான் நினைப்பதுமில்லை. சர்வாதிகாரமும், அடக்குமுறையும், மனித உரிமை மீறல்களும் இன்றைய ஜனநாயக உலகத்தில் நிராகரிக்கப்பட வேண்டியவை. அவர்கள் உண்மையாகவே அந்த மக்களால் நேசிக்கப்படுகிறவர்களாக இருந்தால், தேர்தலை எதிர்கொள்வதற்கு அவர்கள் தயங்கவும் வேண்டியதில்லை.

**இந்தச் சமூகம் காலாகாலம் தனக்கான தலைவர்கள் என்று பின்னால் போன ஒரு பட்டியல் உண்டு. அந்தப் பட்டியலில் அடுத்து வந்தவர்களுக்கு எல்லாம் அதற்கு முன்னால் இருந்தவர்கள் துரோகியாக இருந்தார்கள் என்பது தான் எங்கள் சமூகத்திற்கான சிறப்பியல்பு.**

**இராமநாதன் பொன்னம்பலத்திற்கு துரோகி, அமிர்தலிங்கத்திற்கு பொன்னம்பலம் துரோகி, மாத்தயாவிற்கு அமிர்தலிங்கம் துரோகி, பிரபாகரனுக்கு மாத்தயா துரோகி.**

**காலத்திற்குக் காலம் தாங்கள் பின்னால் போனோமே என்ற வெட்க, குற்ற உணர்வுகள் கூட இல்லாமல் அவர்களைத் துரோகி என்று மண்டையில் போட்டு கடந்து போவது வசதியாகும் அளவுக்கு இந்தச் சமூகம் இருக்கிறது.**

**வைரவருக்கு வாய்ச்ச நாய்கள் மாதிரி, இந்தச் சமூகத்திற்கு இப்படி வந்து வாய்த்த தலைவர்கள் எல்லாம் இந்தச் சமூகத்தை இன்றைக்கு எங்கே கொண்டு வந்து விட்டிருக்கிறார்கள்?**

ஒரு இனத்திற்கான தலைமை என்பதும் அரசியல் தலைமை என்பதும் வேறுவேறானவை. இனத்திற்கான தலைமை என்பது அதன் சிந்தனைப் போக்கை புறக்காரணிகளின் மாற்றங்களுக்கு ஏற்ப மாற்றி, அதை முன்னேற்றப் பாதையில் வழிநடத்திச் செல்வது. அரசியல் தலைமை அதிகாரமும் நிர்வாகமும் சம்பந்தப்பட்டது. தேர்தலில் வெற்றி பெறுவது மட்டுமே அதன் இலக்காகவும் இருக்கும்.

அரசியல் தலைமைக்கு சரியான தீர்க்கதரிசனமும் திறமையும் இருக்கும்போது, அந்தச் சமூகத்திற்கான முன்னேற்றத் திட்டங்களை அமுல்படுத்துவது இலகுவானதாக இருக்கும்.

இனத்தின் தலைமை, அதுவும் சுதந்திர நாடாக இல்லாமல், தன்னுடைய தலைவிதியை தானே நிர்ணயிக்கும் நிலைக்கு வர விரும்புகிற ஒரு இனத்தின் தலைமை, வெறும் உணர்ச்சிப் பிளம்பாக மட்டும் இருந்து விட முடியாது. 'அடிச்சுப் பறிப்பம்' என்ற சினிமாத்தனமான ஒற்றைச் சிந்தனையோடு செயற்பட முடியாது. போராட்டத்திற்கான காலம் நீண்டு செல்ல, தொடங்கிய நோக்கம் மறந்து போய், களநிலைமைக்கு ஏற்ப புதிய நோக்கங்களும் காரணங்களும் என மாறிக் கொண்டே இருக்கும்.

ஐம்பது வருடத்திற்கு முந்திய தரப்படுத்தல் கதையை, வடக்கு கிழக்கில் இத்தனை பல்கலைக்கழகங்கள் வந்த பின்னாலும் சொல்லிக் கொண்டிருக்க முடியாது. இன்றைய பிரச்சனை இந்தச் சமூகத்திற்கு கல்வி மீது எந்த அக்கறையும் மதிப்பும் இன்றைக்கு இல்லாமல் இருப்பது.

இந்த ஐம்பது வருட காலத்திற்குள் உலகளாவிய அளவில் நடைபெற்ற மாற்றங்கள், போராட்டங்கள் எல்லாம் பயங்கரவாதம் என்ற கருத்தியல் நிலைக்கு வந்த நிலைமை, மக்கள் வெளியேற்றத்தால் சிறுபான்மை இனம் அருகிக் கொண்டே இருக்கும் நிலை என அந்தந்தக் காலங்களில் ஏற்படும் நிலைமைகள் குறித்து கருத்தில் கொண்டு தான் ஒரு இனத்தின் தலைமை செயற்பட முடியும்.

'வெற்றி அல்லது வீரமரணம்', 'மண் மீட்பு' 'அடிச்சுப் பறிப்பம்' போன்ற வெற்றுக் கோஷங்கள் எல்லாம் போராட்டமும் இல்லை. மீட்ட மண்ணில் வாழ்வதற்கு மக்கள் இல்லை என்றால், வெற்றி வந்தால் என்ன? வீரமரணம் வந்தால் என்ன?

துயிலும் இல்லங்கள் மட்டும் தான் மிஞ்சும்.

இதையெல்லாம் தெரிந்து கொண்ட தீர்க்கதரிசனத் தலைமை இல்லாமல், தலைவர் மண்டேலா, திலீபன் காந்தி, தமிழ்ச்செல்வன் கிசிங்கர் என்று ஒப்பீட்டு ஆய்வுகள் செய்து கொண்டிருப்பது எங்களைச் சுய இன்பத்திற்குள் வைத்திருக்க மட்டுமே உதவும்.

இந்தச் சமூகம் காலாகாலம் தனக்கான தலைவர்கள் என்று பின்னால் போன ஒரு பட்டியல் உண்டு. அந்தப் பட்டியலில் அடுத்து வந்தவர்களுக்கு எல்லாம் அதற்கு முன்னால் இருந்தவர்கள் துரோகியாக இருந்தார்கள் என்பது தான் எங்கள் சமூகத்திற்கான சிறப்பியல்பு.

இராமநாதன் பொன்னம்பலத்திற்கு துரோகி, அமிர்தலிங்கத்திற்கு பொன்னம்பலம் துரோகி, மாத்தயாவிற்கு அமிர்தலிங்கம் துரோகி, பிரபாகரனுக்கு மாத்தயா துரோகி.

காலத்திற்குக் காலம் தாங்கள் பின்னால் போனோமே என்ற வெட்க, குற்ற உணர்வுகள் கூட இல்லாமல் அவர்களைத் துரோகி என்று மண்டையில் போட்டு கடந்து போவது வசதியாகும் அளவுக்கு இந்தச் சமூகம் இருக்கிறது.

வைரவருக்கு வாய்ச்ச நாய்கள் மாதிரி, இந்தச் சமூகத்திற்கு இப்படி வந்து வாய்த்த தலைவர்கள் எல்லாம் இந்தச் சமூகத்தை இன்றைக்கு எங்கே கொண்டு வந்து விட்டிருக்கிறார்கள்?

நான் அகழ் மின்னிதழுக்கான பேட்டியில் சொன்னது போல, பிரபாகரன் போன்ற ஒரு துப்பாக்கி ஏந்திய தற்குறி யாழ்ப்பாணச் சமூகத்தில் மட்டும் தான் தேசியத் தலைவர் என்று உருவாக முடியும். சிங்கள சமூகத்தில் பிரபாகரன் போன்ற அதே இயல்பு கொண்ட றோகன விஜயவீர கூட சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

வெள்ளைக்கொடியோடு போய், கண் முன்னால் தோல்வியைத் தழுவிக் கொண்டாலும், பிரபாகரன் எங்களுக்கு சூரியதேவன். 'வீழ்ந்து விடாத வீரம், மண்டியிடாத மானம்!' என்று எங்களுக்கு நாங்களே கதை சொல்லிப் புல்லரிக்கலாம். கேட்க ஆள் கிடையாது. கை தட்ட நிறைய இருக்கும்.

**நான் அகழ் மின்னிதழுக்கான பேட்டியில் சொன்னது போல, பிரபாகரன் போன்ற ஒரு துப்பாக்கி ஏந்திய தற்குறி யாழ்ப்பாணச் சமூகத்தில் மட்டும் தான் தேசியத் தலைவர் என்று உருவாக முடியும். சிங்கள சமூகத்தில் பிரபாகரன் போன்ற அதே இயல்பு கொண்ட றோகன விஜயவீர கூட சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.**

**வெள்ளைக்கொடியோடு போய், கண் முன்னால் தோல்வியைத் தழுவிக் கொண்டாலும், பிரபாகரன் எங்களுக்கு சூரியதேவன்.**

**'வீழ்ந்து விடாத வீரம், மண்டியிடாத மானம்!' என்று எங்களுக்கு நாங்களே கதை சொல்லிப் புல்லரிக்கலாம். கேட்க ஆள் கிடையாது. கை தட்ட நிறைய இருக்கும்.**

எங்களுக்கு வந்த சமூகத் தலைவர்கள் எவருமே, எங்கள் சமூகத்தின் சிந்தனையை மாற்றி, சமூக நீதியை வலியுறுத்தியவர்கள் இல்லை.

தமிழ்நாட்டில் பெரியார் நடத்திய அந்தச் சிந்தனை எழுச்சி யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்ததில்லை. பார்ப்பனிய ஆதிக்கம் தமிழ்நாடு போல எங்களுக்கு இல்லாவிட்டாலும், எங்களுக்கு எங்களுக்குள்ளேயே ஒரு 'ஆண்ட பரம்பரை' இருந்தது. அந்த ஆண்ட பரம்பரை தனது நலன்களைக் காத்துக் கொள்ளத் தேடிய தலைமைகள் எங்களுடையவை.

இராமநாதன் எல்லாருக்கும் வாக்குரிமை என்ற போது, நிலம் வைத்திருக்கிறவர்களுக்குத் தான் நாட்டு விசுவாசம் இருக்கும் என்று அவர்களுக்கு மட்டுமே வாக்குரிமை வேண்டும் என்றதில் இருந்தது அந்த 'ஆண்ட பரம்பரைச் சிந்தனை'.

பொன்னம்பலத்தின் மலையக மக்களின் வாக்குரிமை பறிப்பு ஆதரவிலும், ஐம்பது ஐம்பது கோரிக்கையிலும் மறைமுகமாகத் தொக்கி நின்றது யாழ்ப்பாணத்தில் படித்த சமூகத்தின் 'ஆண்ட பரம்பரைச் சிந்தனை தான்.

தமிழரசுக் கட்சியின் ஆங்கிலப் பெயருக்குள் இருந்ததும், மோட்டுச் சிங்களவனைப் பேய்க்காட்டும் அதே சிந்தனை தான்.

கூட்டணியின் 'மீண்டும் ஒரு முறை ஆளநினைப்பதில் என்ன குறை?' கோஷத்துக்குள் முழுமையாக இருந்ததும் அதே சிந்தனை தான்.

தந்தை செல்வா பெரியாரைப் போன்று சமூகநீதிக்கான போராளி இல்லை. அந்த ஆண்ட பரம்பரையின் நலன்களை எந்தக் 'கேட்டுக் கேள்வியும் இல்லாமல்' நீடிக்க வசதியான ஒரு ஆட்சியை உருவாக்க விரும்பியவர் மட்டுமே.

இந்தத் தலைமைகள் எங்கேயும் இந்தச் சமூகத்தில் இருந்த ஏற்றத் தாழ்வுகள் நீங்கி, தமிழர்கள் அனைவரும் சம உரிமையுள்ள ஒரே இனமாக முன்னோக்கி நகர வேண்டும் என்ற எண்ணத்தில் இருந்ததாக எந்த ஆதாரங்களும் இல்லை. உலகத்தில் உள்ள மற்ற எல்லாரையும் முட்டாள்கள் என்றும் தங்களை மட்டுமே கூர்ப்பில் உயர்ந்த நிலையில் இருக்கும் அதிபுத்திசாலிகள் என்றும் நினைக்கும் யாழ்ப்பாண மேலாதிக்கச் சிந்தனைக்கு சர்வதேச அங்கீகாரம் பெறும் முயற்சியாகத்தான் தமிழ் ஈழம் இருந்தது.

இந்தச் சமூகத்தில் பாடசாலைகளிலும், கோவில் களிலும், உணவகங்களிலும் இருந்த 'இன ஒதுக்கல்கள்', ஆண்ட பரம்பரைக்கு எந்தக் குற்ற உணர்வையும் வருவித்ததில்லை. இடதுசாரிகள் அதற்கான போராட்டத்தை முன்னெடுத்தபோது, 'தமிழர் தலைமை' அதற்கு எதிரானதாகவே இருந்தது. கம்யூனிசம் வந்து எல்லாரையும் சமம் ஆக்கி விடும் என்ற பயம் மட்டுமே யாழ்ப்பாணிகள் அதை எதிர்ப்பதற்கான காரணமாக இருந்தது.

எவ்வாறு ஒரு ஆதிக்கம் செலுத்த முனையும், சகல அதிகாரங்களையும் சலுகைகளையும், வசதிகளையும், சுகபோகங்களையும் அனுபவிக்கும் ஒரு பிரிவினர் அதில் எவற்றுக்கும் பங்கம் வராதபடிக்கு அவற்றை தொடர்ந்தும் அனுபவிக்க நினைக்கும்போது, அதை நடைமுறைப்படுத்தக் கூடியவர்களை தலைவர்களாக உருவாக்குவது வழமையானது. தங்களுடைய எதிர்பார்ப்புகளுக்குப் பங்கம் வரும் அல்லது அதை நிறைவேற்ற முடியாது என நினைக்கும்போது, அந்தத் தலைமையைத் தூக்கி எறிந்து விட்டு இன்னொன்றைத் தேடுவது அதற்கு இயல்பானது.

அவ்வாறாகத்தான் தேர்தல் அரசியல் ஆயுத அரசியல் ஆனபோது இருந்தது. இத்தனை இயக்கங்களுக்குள்ளும் புலிகள் மட்டுமே யாழ்ப்பாணத்தில் ஆதிக்கம் பெறக் கூடியதாகவும், மற்ற இயக்கங்கள் ஒடுக்கப்பட்ட சமூகங்களோடு அடையாளப் படுத்தப்படக் கூடியதாகவும் இருந்தது அந்த ஆண்ட பரம்பரைச் சிந்தனையின் தொடர்ச்சி தான்.

தங்களுடைய 'அப்பே ஆண்டுவ' தொடர்வதற்கு சரியான தலைமையாக புலிகள் தான் யாழ்ப்பாணிகளுக்கு இருந்தனர். புலிகள் எந்தச் சமூக மாற்றத்தையும் நடைமுறைப் படுத்தியவர்கள் இல்லை. புலிகள் சாதியை அழித்தார்கள் என்று கதை விடுகிறவர்கள் எல்லாம் 'இப்ப ஆர் சாதி பாக்கினம்?' என்றபடியே, கலியாணப் பேச்சுக்களில் முதலில் 'எங்கட ஆக்களோ?' என்று விசாரிப்பவர்கள் தான்.

இப்படி மலையாக நம்பிய ஆயுதப் போராட்டமும் கண் முன்னாலேயே கடற்கரை மணல் கோட்டை போல, முள்ளிவாய்க்காலில் முடிவுக்கு வந்து விட்டது.

இயற்கை ஒரு போதும் வெற்றிடங்களை விட்டு வைப்பதில்லை.

உதிர்ந்து கொட்டுண்ட சோவியத் குடியரசுகள் ஆக இருந்தாலும், ஏன் ஆப்கானிஸ்தானாக இருந்தாலும், ஏதோ வழியில் அந்த வெற்றிடங்கள் நிரப்பப்பட்டுக் கொண்டு தான் இருக்கின்றன. ஏதோ வகையில் சட்டமும் ஒழுங்கும் அங்கே நடைமுறைக்கு வந்து தான் இருக்கின்றன.

ஏன் யாழ்ப்பாணிகளுக்கு மட்டும் ஏக பிரதிநிதிகள் போய், ஏகப்பட்ட பிரதிநிதிகள் தலைவர்களாக உருவாகி யிருக்கிறார்கள்? அவர்களும் எந்த விதமான தீர்க்கதரிசனமோ, அறிவோ இல்லாத கோமாளிக்கூட்டமாக மட்டுமே வந்து வாய்த்திருக்கிறார்கள்?

ஒன்றே குலம், ஒருவனே சூரியதேவன் என்று, மற்றத் தலைவர்களை எல்லாம் துரோகிகள் என்று போட்டுத் தள்ளியபோது வெடி கொழுத்திக் கொண்டாடிய சமூகத்திற்கு எப்படி முப்பத்து முக்கோடித் தேவர்கள் கடவுளர் ஆகியிருக்கிறார்கள்?

இந்தச் சமூகம் இன்றைக்கு அரசியல், சமூக, சமயம், அறிவு என்ற அளவில் எந்த ஒரு நம்பிக்கையும் தரக்கூடிய தலைவர்களைக் கொண்டிராத நிலைமைக்கு ஏன் வந்திருக்கிறது?

'தலைவர் எண்டா எங்களுக்கு ஒரே ஒருத்தர் தான்' என்று நேற்று வரைக்கும் சொல்லிக் கொண்டிருந்த கூட்டம், இன்றைக்கு தன்னுடைய இனத்தில் தலைமை என்று சொல்லி, சிங்கள அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தவோ, சர்வதேசத்திற்கு தனது நிலையைப் புரிய வைக்கவோ கூடிய அளவுக்கு முன்னால் நிறுத்தக் கூடிய தலைமை என்று ஒரு மனிதராகத் தான் வேண்டாம், ஒரு கட்சியாகக் கூட ஒன்றைக் காட்ட முடிகிறதா?

இதற்கான காரணங்களைத் தேடும்போது எங்கே இருந்து ஆரம்பிப்பது?

ஒரு சமூகம் அரசியல் தலைமைகளைத் தேடுவதற்கு முன்னால், அதற்கு ஒரு சிந்னைத்தெளிவு இருக்க வேண்டும். உலகத்திலேயே புத்தகப் படிப்பையும், கடதாசிப் பட்டத்தையும் பெருமையாக நினைக்கும் இனம் இந்த யாழ்ப்பாணச் சமூகமாகத் தான் இருக்க வேண்டும். கல்வியைக் கூட அறிவைத் தேடுவதற்கானதாகவும், சிந்தனையை வளர்ப்பதற்கானதாகவும் கருதாமல், சீதனம் வாங்கவும், 'கோழி மேய்ச்சாலும் கொர்ணமேந்தில மேய்க்க வேணும்' என்ற

**மலையாக நம்பிய ஆயுதப் போராட்டமும் கண் முன்னாலேயே கடற்கரை மணல் கோட்டை போல, முள்ளிவாய்க்காலில் முடிவுக்கு வந்து விட்டது.**

**இயற்கை ஒரு போதும் வெற்றிடங்களை விட்டு வைப்பதில்லை. உதிர்ந்து கொட்டுண்ட சோவியத் குடியரசுகள் ஆக இருந்தாலும், ஏன் ஆப்கானிஸ்தானாக இருந்தாலும், ஏதோ வழியில் அந்த வெற்றிடங்கள் நிரப்பப்பட்டுக் கொண்டு தான் இருக்கின்றன. ஏதோ வகையில் சட்டமும் ஒழுங்கும் அங்கே நடைமுறைக்கு வந்து தான் இருக்கின்றன.**

**ஏன் யாழ்ப்பாணிகளுக்கு மட்டும் ஏக பிரதிநிதிகள் போய், ஏகப்பட்ட பிரதிநிதிகள் தலைவர்களாக உருவாகியிருக்கிறார்கள்? அவர்களும் எந்த விதமான தீர்க்கதரிசனமோ, அறிவோ இல்லாத கோமாளிக்கூட்டமாக மட்டுமே வந்து வாய்த்திருக்கிறார்கள்?**

**ஒன்றே குலம், ஒருவனே சூரியதேவன் என்று, மற்றத் தலைவர்களை எல்லாம் துரோகிகள் என்று போட்டுத் தள்ளியபோது வெடி கொழுத்திக் கொண்டாடிய சமூகத்திற்கு எப்படி முப்பத்து முக்கோடித் தேவர்கள் கடவுளர் ஆகியிருக்கிறார்கள்?**

வேலைவாய்ப்புக்கான வழியாகவும் மட்டுமே கருதுகிற ஒரு சமூகத்தில் சிந்தனை எழுச்சி எப்படி வரும்?

பல்கலைக்கழகத்தில் படித்தாலும், அதே 'பொங்குதமிழ்' யாழ்ப்பாணித் தமிழ்த்தேசியச் சிந்தனையும், பட்டப்படிப்பும், உத்தியோகமும், சீதனமும், வெளிநாட்டுக்கனவும் என இருப்பதைத் தவிர்ந்து, சமூகம் சார்ந்த ஒரு முற்போக்குச் சிந்தனையை இந்தச் சமூகம் கொண்டிருக்கிறது என்று எங்கே காண முடிகிறது?

'படித்த யாழ்ப்பாணம்' என்று, கல்வி சார்ந்த சமூகமாகப் பெருமை கொண்ட சமூகம் அன்றையது போல இன்றைக்கு கல்வி குறித்து எந்த ஆர்வமும் பெருமையும் இல்லாத சமூகமாக மாறி விட்டிருக்கிறது. வெளிநாட்டுக் கனவு இன்றைக்கு இந்தச் சமூகத்தின் எல்லாக் கனவுகளையும் விழுங்கி விட்டிருக்கிறது. இன்றைக்குத் தான் எதிர்கொள்கிற எந்தப் பிரச்சனை குறித்தும் இந்தச் சமூகத்திற்குத் தெளிவும் இல்லை. சமூகத் தலைமை என்று ஏதாவது இருந்தால் அதற்கு அதில் அக்கறையும் இல்லை.

இந்தச் சமூகம் ஒரு அறிவார்ந்த சமூகமாக இருந்திருந்தால், தீர்வுக்கான சந்தர்ப்பங்கள் எல்லாவற்றையும் பற்றிப் பிடித்து அதிலிருந்து தன்னை வளர்த்துக் கொள்ள முயற்சித்திருக்கும். கிடைத்த சகல தீர்வுகளையும், 'விட்டால் குடுமி, சிரைத்தால் மொட்டை' என்ற சிந்தனையோடு, 'அடைந்தால் தமிழீழம், இல்லையே வீரமரணம்' என்று நாசமாக்கி விட்டிருக்கிறது.

தன்னைப் படித்தவர்கள் என்று பெருமை கொள்கிற சமூகம், எட்டாம் வகுப்பையே தாண்டாத துப்பாக்கி தாங்கிய ஒருவரை சூரியதேவன் என்று வழிபடும் நிலை வந்த போது, இந்தச் சமூகம் பற்றி எந்த நம்பிக்கையைக் கொண்டிருப்பது? ஒரு சிந்தனையுள்ள சமூகமாக இருந்திருந்தால், அன்றைக்கே அந்தத் தலைமைக்கு தீர்வுக்கான கட்டாயத்தை வலியுறுத்தி யிருந்திருக்கும். துப்பாக்கிக்குப் பயந்து, அந்தப் பயத்தை ஆதரவு என்று தானே நியாயம் சொல்லி, அந்தத் தலைமை மற்றத் தலைமைகளை அழிப்பதை வரவேற்றும் கொண்டிருந்த இந்தச் சமூகம் அந்த ஒற்றைத் தலைமை அழிந்த பின்னால், '47 நாடுகளின் சதி' என்று தன்னுடைய தவறை மறைத்துக் கொள்ள முயற்சிக்கிறதே அன்றி, தன்னுடைய தவறை ஏற்றுக் கொள்ளவோ, எங்கே தவறு நடந்திருக்கிறது என்பது பற்றி அறிந்து கொள்ளவோ இன்றை வரைக்கும் முயற்சிக்கவில்லை.

ஆயுதத் தலைமையின் தொடர்ச்சியாக வந்து சேர்ந்திருக்கிற வெத்துவேட்டுத் தலைமைகளால் தீர்வு ஒன்றைப் பெற்றுத் தர முடியும் என்று இப்போது ஆளுக்காள் ஒவ்வொரு தலைமையின் பின்னால் என இந்தச் சமூகம் அணி திரண்டிருக்கிறது.

இந்தச் சமூகம் தனக்கான ஒரு தீர்க்கதரிசனம் மிக்க, சமகால உலக அரசியலின் உண்மை நிலையைத் தெரிந்து கொண்டு தன்னை வழிநடத்தக் கூடிய தலைமையை ஏன் தெரிவு செய்ய முடியாதிருக்கிறது?

இன்றைய தலைமையை முடிவு செய்யும் திறன் வெறுமனே அங்கே வாழும் மக்களின் கையில் மட்டும் இல்லை. இன்றைக்கு ஈழப் போராட்டம் என்பதும், அதற்கான தீர்வு என்பதும் இன்றைக்கும் பலருக்கு பிழைப்புக்கான, கோடிக்கணக்கான பணம் புரளுகின்ற வழியாகி விட்டிருக்கிறது.

அது வெளிநாடுகளில் மாவீரர்களுக்கு விளக்குக் கொளுத்துகிறவர்கள் முதல் அங்கே அரசியல் கட்சிகளில் பாராளுமன்ற ஆசனங்களுக்காக மோதிக் கொள்கிறவர்கள் வரைக்கும் கோடிக்கணக்கான சொத்துக்களைச் சேர்க்கக் கூடிய அளவிற்கு வழிவகுத்திருக்கிறது.

இதில் எவருக்குமே ஒரு தீர்வைக் கண்டடைய வேண்டிய தேவை இல்லை என்பது மட்டுமன்றி, அதைக் கண்டடையக் கூடிய வழிகளையும் நிர்மூலமாக்க வேண்டிய தேவை இருக்கிறது.

ஒரு தீர்வு உண்மையிலேயே நாளைக்குக் காணப்பட முடிந்தால், பலருடைய பிழைப்பில் மண் விழுந்து விடும். இவர்கள் யாருமே அந்த வருமானத்தை இழக்க விரும்ப மாட்டார்கள்.

பிச்சைக்காரனுக்குப் புண் மாறுவதில் விருப்பம் இல்லாததுபோல, பிரச்சனை தீர்வதும் இந்தச் சமூகத்திற்கு உவப்பதானதும் இல்லை. உழைக்காமல் பிச்சை எடுக்க முடியும் போது, உடல் உழைப்பு அனாவசியம்.

அதையும் மீறி, இந்தச் சமூகத்தில் ஒரு சிந்தனை எழுச்சியைத் தோற்றுவித்து, மாற்றுப் பாதைகளைக் கண்டடையக் கூடிய வழிகளைத் தேடுவதற்கான திட்டங்களை முன்மொழிவோரைத் துரோகிகள் ஆக்கக்கூடிய நிலைமை இன்றைக்கு இருக்கிறது. சமூக மாற்றத்திற்காகவும், முன்னேற்றத்திற்காகவும் உழைக்கக் கூடிய எவரும் இன்றைக்கு முன்னால் வர முடியாதபடிக்கு, இந்த பிழைப்பு அயோக்கியர்கள் மட்டுமன்றி, உதிரிகளும் தற்குறிகளும் இன்றைய சிந்தனைப் போக்கைத் தங்களின் கைக்குள் வைத்து உசுப்பேத்திக் கொண்டுள்ளனர். அவ்வாறானவர்களை துரோகி களாக்கி விடுவது இலகுவானதாக இருப்பதால், அதை எதிர்த்து முகம் கொடுக்க முடியாமல், ஆர்வமுள்ள எவரும் பொதுவெளிக்கு வர முடியாமல் ஒதுங்கிக் கொள்ள வேண்டி வருகிறது.

இன்றைய உசுப்பேத்தல் உணர்வு அரசியலுக்குள் மிதவாதப் போக்குக்கு எந்த இடமும் இல்லை. உங்களால் முடிகிறதோ, இல்லையோ, 'காட்டம், இடித்துரைப்பு, ஆவேசம், எச்சரிக்கை' என்ற வெறும் சொற்களாலேயே இன்றைய அரசியலை சுலபமாக நடத்தி விடக் கூடிய அளவில் இந்தச் சமூகம் இருக்கிறது.

எந்தத் தீர்வையும் காண வேண்டிய தேவை இல்லாமல், கோட்டை முதல் ஜெனிவா வரைக்கும் போய் தீர்வு வாங்கித் தருவோம் என்று தேர்தல் வாக்குறுதி அளித்தால் போதும்.

முட்டாள்களுக்கு கொலைகாரர்களும் அயோக்கியர்

களும் தானே தலைவர்களாக இருக்க முடியும்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தலைமுறையும், யுத்தத்திற்குள் பிறந்த தலைமுறையும் அந்த பழிவாங்கும் சிந்தனைக்குள் இருந்து வெளிவராதவரைக்கும், யுத்தத்தில் எந்தப் பாதிப்பும் இல்லாமல் சோபாக்களில் உட்கார்ந்திருக்கும் வெறும் பார்வையாளர்களாக இருந்து விளையாட்டு வீரர்களை 'அப்பிடி அடியடா! இப்படி குத்தடா!' என்று திட்டித் தீர்க்கும் புலன் பெயர் பார்வையாளர்களின் ஆதிக்கம் இல்லாது ஒழியும் வரைக்கும், ஜனநாயக ரீதியிலான எந்தத் தீர்வும் சாத்தியமில்லை.

ஆயுதத் தீர்வு கண் முன்னாலேயே தோற்றுப் போனபின்னாலும், கோவணம் உரியப்பட்ட பின்னாலும், 'நான் தான் கோவணத்தைக் கழற்றி வீசினேன்' என்று வீராப்பு பேசுவதுபோல, ஆயுதங்களை மௌனித்திருக்கிறோம் என்று தங்களைப் புத்திசாலிகளாகவும், மற்றவர்களை முட்டாள்களாகவும் நினைத்துக் கதை சொல்லிக் கொண்டிருக்கலாம்.

அது எந்தத் தீர்வை நோக்கியும் இந்தச் சமூகத்தை நகர்த்தப் போவதில்லை. 'ஆவேச' அரசியல்வாதிகளுக்கு, 'மீண்டும் ஆயுதம் ஏந்தவேண்டி நேரிடலாம்' என்று அறிக்கை விட மட்டுமே அது உதவும்.

இந்தச் சமூகத்திற்கு இன்னொரு தலைமை உருவாக முடியுமா என்ற கேள்வி உங்களுக்கும் இருக்கலாம்.

இந்தச் சமூகம் ஜனநாயகம் பற்றிய எந்த அறிதலும் இல்லாத சமூகம். துப்பாக்கியை வைத்துக் கொண்டு வாயைத் திறந்தால் மண்டையில் போடுகிற தலைமையால் தான் இதைக் கட்டுக்குள் வைத்திருக்க முடியும். புலிகள் அழிந்த பின்னால், இந்தச் சமூகம் இருக்கும் நிலையே அதற்கான சரியான ஆதாரம். இன்றைக்கு எந்தத் தற்குறிகளும் தங்களைத் தாங்களே தலைவர்களாக நினைத்துக் கொண்டு வன்முறையைக் கையில் எடுக்கலாம். அதைக் கேள்வி கேட்க ஆளில்லை என்பதல்ல பிரச்சனை. அதை ஆதரித்துக் கை தட்ட ஆள் நிறைய என்பது தான் மிகப்பெரிய பிரச்சனை.

தலைமை என்பது ஏதோ வானத்தில் இருந்து இறங்கி வந்து வழிநடத்துவதில்லை. அது இந்தச் சமூகத்திற்குள் இருந்து தான் மேலெழ வேண்டும். அதற்கு இந்தச் சமூகம் அறிவார்ந்த பக்குவ நிலையில் இருக்க வேண்டும். அதற்கு ஜனநாயக விழுமியங்கள் பற்றிய தெளிவு இருக்க வேண்டும். நடைமுறைச் சாத்தியங்கள் பற்றிய புரிதல் இருக்க வேண்டும். சமூக நீதி பற்றிய அக்கறை இருக்க வேண்டும். கருத்துச் சுதந்திரம், மாற்றுக் கருத்துக்கள் உட்பட்ட மனித உரிமைகள் பற்றிய கடமைப்பாடு இருக்க வேண்டும்.

பன்மைத்துவ அரசியல் தலைமைகள், எதிர்க்கட்சிகள் ஒரு சமூகத்தில் இருக்க வேண்டிய தேவை குறித்துத் தெரிந்திருக்க வேண்டும். சுதந்திரமான கருத்துப் பரிமாற்றத்தின் தேவை பற்றித் தெரிந்திருக்க வேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக நான் சுயநலம் மிக்க மனிதன் என்பதை விட, பொதுநலம் வேண்டும் சமூகத்தின் அங்கம் என்ற மனநிலை வேண்டும்.

இதெல்லாம் இருக்கும் ஒரு சமூகத்தில் தான் ஒரு தலைமை மேலெழ முடியும்.

இன்றைய அரசியல் நாற்காலிக்கும் உண்டியல் களுக்குமான பிழைப்பு அரசியல் மட்டுமே, தீர்வுக்கான அரசியல் இல்லை என்ற உண்மையைத் தெரிந்து கொள்ளாத சமூகத்தில் எப்படி ஒரு நல்ல தலைமை உருவாக முடியும்?

அன்றைக்கு இராமநாதன், பொன்னம்பலம், அமிர்தலிங்கம் என்று தலைவர்களை உருவாக்கிய பழக்க தோஷம். கஜேந்திரகுமார், விக்னேஸ்வரன், அனந்தி என்று தனது நலன்களைக் காப்பார்கள் என்று நம்பிய அத்தனை அடுத்த தலைமுறைத் தலைவர்களும் அதே பாணியில் இன்றைக்கு துரோகிகளாகவும் உதிரிகளாகவும் தான் உள்ளார்கள்.

இன்றைக்கு யாழ்ப்பாணி களுக்கான தலைவர்கள் யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல, லாச்சப்பலிலும் உள்ளார்கள்.

உதிரிகளும் தற்குறிகளும் 'எட்டாம் வகுப்புப் படிச்சவர் தேசியத் தலைவர் என்றால், எனக்கென்ன குறைச்சல்?' என்ற கணக்கில் போராட்டத்தைக் கையில் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தச் சமூகத்தில் இப்போது தலைமைக்கான தகுதி என்ன என்பது உங்களுக்குத் தெரியும்.

தலைவருக்கு எப்பிடி சிங்களவனுக்கு வேலையைக் குடுத்து ஈழத்தைப் பிடிக்கலாம் எண்டு தெரியும். சர்வதேசம் தன்ரை வேலையைப் பாத்துக் கொண்டு இருந்தால் காணும் என்கிற சமூகத்தில் இருந்த ஒரு தலைவன் எழுவான் என்று எதிர்பார்ப்பது சற்று ஓவர்!

ஈழம் கிடைத்து பிரபாகரன் ஐ.நா சபைக்குப் போனாலும், பாலேய்ங்கண்ணை பக்கத்தில நிக்க வேணும்!

உலகில் எங்கே போய் குடியேறினாலும் சிந்தனை யாழ்ப்பாணக் கிணற்றுக்குள்ளேயே இருக்கும்போது, எங்களுக்கு நல்ல தலைவர்கள் இல்லையே என்ற ஏக்கமும் ஆதங்கமும் இந்தச் சமூகத்திற்கு எப்படி வரும்?

மண்டையில் போடுகிற பிரபாகரனில் மண்டேலாவையும், கம்பத்தில் கட்டிச் சுட்ட திலீபனில் மகாத்மா காந்தியையும் காணுவதில் பெருமை கொள்ளும் சமூகத்தில் வேறு எந்தத் தலைவர்கள் உருவாக முடியும்?

இந்தச் சமூகத்தில் மண்டேலாவும் மகாத்மா காந்தியும் தலைவர்களாக வருவார்கள் என்று எதிர்பார்ப்பது மகா அபத்தம்.

யாழ்ப்பாணிகளின் தகுதிக்கு கிடைக்கக் கூடியவர்கள் இவர்கள் தான்.

சட்டியில் இருப்பது தான் அகப்பையில் வரும்.

யாழ்ப்பாணிகள் என்ன வைச்சுக் கொண்டா வஞ்சகம் செய்கிறார்கள்?

## அதிகாரம் 10



# ‘ஒரு ஏதோ..!’

## அங்கும் இங்கும், எங்கும் ஒரு Novel

அங்கு..

‘அது விசர் நாய் கடிச்சதாலைதான் உந்த வீக்கம். சும்மா போனவளுக்கு போக்கறுந்த நாய் பல்லு வைச்சிட்டுது,‘ என்று விளக்கம் சொல்லிற்று சீதவனத்தி அம்மா. சீதவனத்தி அம்மா, கொடிச்சிவாலியின் அம்மா. சுவாரஸ்யமான, உதட்டொழுகும் வதந்திகளுக்கு பேர்போன, வேலிக்குப் புறகான பக்கத்து வீட்டுக்கிழவி, குட்டியாச்சி கொடிச்சிவாலியின் வயிறு நாளுக்கு நாள் உப்பிக்கொண்டு வருவதை தினமும் மிக உன்னிப்பாக கவனித்துக் கொண்டு வந்திருக்க வேண்டும். ஆள் குள்ளமாக இருப்பதால் வேலிக்குப்புறகு வீட்டு ஆச்சி குட்டியே தவிர, ‘இஞ்சால் உள்ளதை அங்கால் சொல்லி, அங்கால் உள்ளதை இங்கால் சொல்லி, வதந்திப்பதில் எல்லாம் குட்டியாச்சி படுபெரு விண்ணி. மனுஷியின் நாளாந்தப் பொழுது போக்கு, ஊர்த் துளாவாரங்களைத் துளாவி, ஊர்பூரா விற்பதுதான்.

நீள மூக்கும் நீள நாக்கும் கிழவிக்கு. வாய் ஆழமும் அகலமும். தன் வீட்டுக் கோழிக்குஞ்சு பறந்து போய் பனை உச்சியில் கட்டியிருந்த முட்டிக்கள்ளை மூக்கு முட்ட முட்ட குடித்ததாகச் சொல்லி சனத்தை நம்ப வைக்கக்கூடிய பாந்தம் கிழவியின் விஷேஸம். கெளித்து இடப்புறம் சற்றுச் சாய்ந்த கழுத்துடனும் வெளி வளைந்த நாரியுடனும் முழங்கால் சிரட்டை தேய்ந்ததால் இடக்கால் முட்டியின் நீண்டகால வீக்கத்தால் இடாய்த்து இடாய்த்து நடக்கும் கு.ஆச்சிக்கு இன்னும் பற்பல விஷேஸங்கள் இருப்பினும் அவை

**சிறினோ சிறி சிறிசு**

நீள்கதைகள். சொல்லி முடியா. கொடிச்சிவாலியின் அடியுதரம் எப்பன் உப்பியிருந்ததையே கழுகுக்கண்ணால் நோட்டம் விட்டு, எல்லிப்போலை அசுமாத்தத்தையுமே கண்டு பிடிக்கக்கூடிய பாந்தமும் கு. கிழவியின் இன்னோர் விசித்திர விஷேஸந்தான்.

வயிறு வரவர வீங்கிக்கொண்டு வருவதை, விசரநாய்க்கடியுடன் தொடர்பு படுத்தி நம்புகிற வகைக்கு விளக்கம் கொடுத்து, பக்கத்து வீட்டு குட்டியாச்சியின் கழுகுக் கண்ணிலிருந்து தப்பிப்பது இயலாக்காரியமென்று உணர்ந்ததாலோ என்னவோ சீதவனத்தி ஏதாவது செய்தே ஆகவேண்டுமென்று நினைத்திருக்க வேண்டும்.

சிலநாட்கள் தங்கியிருந்து நோய் வாய்ப்பட்ட மாமிக்காரிக்கு உதவியாக இருக்கவென்பதற்காய் கொடிச்சாவாலியை தூ(ஊ)ர ஊரிலிருந்த மாமன் வீட்டுக்கு அனுப்பி விட்டதாக சீதவனத்தி சொல்லிற்று. அது பொய். கொ.வா. மகள் வீட்டிலேயே இருந்தாள்! 'ஊரெல்லாம் வயிறு வீங்கிக்கொண்டு வாறது பிரசித்தமாய்ப் போச்சு. கொஞ்ச நாளைக்கு வெளியிலை வராமலுக்கு சமுசியம் காட்டாமலுக்கு வீட்டுக்குள்ளை இரு. பிறகு குட்டியாச்சி தோறைச்சியிட்டை நான் தப்பேலாது. நீ செய்த எளிய வேலைக்கு நாங்கள் எக்கணம் ஊரெல்லாம் நாறப்போறம்.' சீதவனத்தி மகளைத் திட்டி வீட்டுக்குள் அடைய விட்டது

சீக்கிரத்தில் நாறிப் போயிற்று. என்ன பருந்துக்கண்ணோ தெரியவில்லை, ஒருநாள் பொழுது தாழ்ந்து மைம்மல் படரும் நேரமாகப் பார்த்து, உயர இடைவேலி கட்டிய வீட்டு கிணற்றடியில் கொடிச்சிவாலி குளித்துக் கொண்டிருந்ததை குட்டியாச்சி கண்டு விட்டது. பேந்தென்ன;??!! 'உவள் பாவி சீதவனத்தி மோளக்காறி, மாமிக்காறிக்கு பத்தியம் பார்க்கவெண்டு சித்தா வூருக்கு போனதெண்டெல்லே சொன்னாள். அது சும்மா. படு பொய். உண்ணாணைச் சொல்லுறன்.

நேற்று பொழுது படேக்கை கொடிச் சிவாலிப்பெட்டை வீட்டுத்துரவுக் கிணத்திலை, துடைக்கு கஸ்தூரி மஞ்சல் தேய்ச்சு குளிச்சுக் கொண்டிருந்ததைக் கண்டனான். கொப்பராணை சத்தியமாய். நான் சொன்னனெல்லோ, அவளுக்கு வரவர அடி வயிறு வீங்கிக்கொண்டு வருகுதெண்டு. என்ன நாசமறுந்த கோதாரியோ;?? தங்கிக்கிங்கி விட்டுதோ, ஆர் கண்டது?

நால் மடத்தடிச் சந்தையில் போகிறவர், வருகிறகிறவரையெல்லாம் இடை மறித்து, தான் கண்ட 'பேரதிசயத்தை' குட்டியாச்சி வதந்தித்தது. 'சீ.. ஆய்ஞ்.. அப்பிடியே சங்கதி?' என்று கேட்டவர்கள் எல்லோரும் இந்த முக்கியமான விஷயத்தைக் கேட்டு, வாய் பிளந்து கியாதிப்பட்டனர். 'வயிறும் வீங்கிக்கொண்டு வருகுது எண்டு சொல்லுறாய், எணை. தங்கிக்கிங்கிதான் விட்டுதோ, ஆர் கண்டாரெணை?' 'தங்கிக்கிங்கி' விட்டுதோ என்று ஊர் இந்த விஷயம் பற்றி பறைந்து திரிவது சீதவனத்தியின் காதிலும் சிக்காராய் விழுந்தது.

போச்சு ! நாற்றந் தான். வீட்டில் ஒளித்து வைப்பது முடியாக்காரியம் என்று புரிந்து போயிற்று. குட்டியாச்சியின் கழுகு. கருடக் கண்களிலிருந்து தப்ப முடியாதென்று தெரிந்து போயிற்று. உண்மையிலேயே, சித்தாவூர் மாமிக்காரியிடம் அனுப்பவே வேண்டியது ஆயிற்று. அருகில் சூழ் விவகாரங்கள் தொங்காத போது, அவற்றின் சூடு தணிவது வழமை.

கொடிச்சிவாலிப் பெட்டையின் அடி உதர வீக்கம் பற்றிய குட்டியாச்சியின் சப்பல்களும் இடையிடை அரிதாய் மூக்குக்காட்டுவது நீங்கலாய் ஒப்பீட்டுக்கு தணிந்து தான் போயின. இடையிடை நால் மடத்து 'சொப்பையான விண்ணாணிகளுக்கு', 'உவள் பாவி சீதவனத்தியின்ரை பொடிச்சி கொடிச்சிவாலிக்கு வண்டி வீங்கிக்கொண்டு வாறதாலை ஆளைக் கொண்டுபோய் மாமிக்காறி வீட்டிலை தாட்டு வைச்சுக்கிடக்கு,' என்று சொல்வதோடு சரி.

மாமிக்காரி வீட்டில், 'தாட்டு வைத்த' இளம் கொடிச் சிவாலிப் பெட்டைக்கு மாதப்பருவம் முடிய, ஆண் குழந்தையொன்று பிறந்தது..!! குட்டியாச்சி 'தங்கிக்கிங்கி விட்டதோ?' என்று கேட்டது உண்மை ஆகியதுதான் உண்மை. தங்கிக்கிங்கித் தான் விட்டிருந்தது. ஆவளைப் பிள்ளையார் கோவில் தேர்முட்டி வலப்புற இருள் காறையறையில், காலுடைந்த மயில் வாகனம் உன்னிப்பாய் உற்றுப் பார்த்துக் கொண்டிருக்க, செங்குப்பு ஐயாவும் தூக்கி வந்த கொடிச்சிவாலியும் குலவிக் கலவியதால், எம்பிய துதிக்கை உறிஞ்சிய நீர் விசிறி துளாவல் செய்ததால், 'தங்கி' வயிறு உப்பி, மாதப் பருவம் முடிய பிறந்த ஆண்சிசு தான், பின்னடிக்கு, ஊராவூரெல்லாம் மாப்பிள்ளை பிடிக்க முடியாமல் தூரவூரிலிருந்து இறக்கப்பட்டு, சசிவாணிக்கு மணம் செய்து வைக்கப்பட்ட கணவன். சுசிவேணியின் தகப்பன்.

இங்கு...

'உனது காலை அலுவல் முடிய, என்ன இன்றைக்கு ஒருபோதுமில்லாதது போல் உடனே வெளியேறு என்று விரட்டுகிறாய். யாரும் பெட்டைகளைச் சந்திக்க இருக்கிறதோ..?' என்று படு சினத்துடன் கேட்டாள் உஸோமி.

கட்டிலில் போர்வைகள் சுருங்கியிருந்தன. அவை துளாவற்றீ வெக்கையாலும் 'உஸோமித்தீ' கொதியாலும் கரியாய் எரிந்தும் இருந்தன.

அவள் சொன்ன 'உனது காலை அலுவல் முடிய,' என்பதிலிருந்த 'உனது' என்றது இவணது அலுவல் அல்ல. அந்த அலுவல் அவளது உஸோமியது அலுவல். கொதிச்சூட்டில் எம்பிப் பருத்த பலத்துதிக்கை துளாவி முடித்து ஓய்ந்தடங்கியிருந்தது. அத்துளாவல் இவணின் இஷ்டக்காரண தேவையாலோ விருப்பாலோ நிகழவில்லை. அனுமானிக்க முடியாதபடிக்கு இடையிடை திடீர் திபுக்கடீர் என மதன நரம்புகளில் குருதி பொசியும் சுடு பரிமாணத்திற்கேற்ப ஏறும் அமரினால் உஸோமியிடம் கிளரும், தேவையும் விருப்பமும் காரணமாக மட்டுமே எம்பித் துளாவல் நேர்ந்திருந்தது.

'இவளுக்கென்ன, சிக்காராய், செம்மையான காரணம் கருதி மூக்கடி வியர்க்கிறதா..?? எப்படி அச்சொட்டாய் இதை ஊகிக்கிறாள்..?' என்று ஆச்சர்யப்பட்டான் இவண். பெண்ணைச் சந்திக்கத்தான் போக இருந்தான். அதை இப்போதைக்கு உஸோமியிடம் சொல்ல முடியாது. இப்போதைக்கென்ன, எப்போதைக்குமே சொல்ல முடியாது என்பது போலத்தான். எரிச்சலில் காது கன்னமெல்லாம் புகைய, 'என்னவோ ஏதுக்கோ, இவன்.ண் புதினமாக இன்று காலை, காலை வாருமாற்போல என்னை விரட்டுகிறான்' என்ற புதிரில் மேலும் சினந்து, அவசரப்பட்டு தாறுக்கு மாறாய் உடையணிந்து, உள்ளாடை, ஒரு பாத உறை என்பவற்றை கொழுவுவதை விநோதகரமாய் மறந்து, கதவை ஆக்ரோஷமாய் அறைந்து சார்த்தி விட்டு வெளியேறியிருந்தாள் உஸோமி. அப்போது, அது உச்ச உஷ்ண முதுவேனில் காலம். சூழலை சூடு தின்று கொண்டிருந்தது.

அப்பேர்ப்பட்ட பதற்றத்தை இவண் என்றுமே உணர்ந்ததில்லை, என்று சொல்வதற்குமில்லை. அப்பேர்ப்பட்ட சுடு பதற்றத்தை முன்னொருபோது உணர்ந்திருந்தான். ஒரே பெண்ணின் வருகையாலேயே இரு முறையும் இந்தப்பதற்றம் நேர்ந்தது. ஒரே பெண் அம்பிகை. இப்போது இரண்டாம் தடவை இவணைச் சந்திக்க வருகிறாள். இம்முறை பிரசின நிலைமை முன்னிலும் சிக்காராக கூர்மையுற்றிருப்பதை இவண் நன்றாகவே அறிவான். அதனாற்றான் படு(ஊ) பதற்றம்.

அதே cafétéria இதற்குத்தான் வரச் சொல்லியிருந்தான். அவளுக்கு முன்னர் வந்த பழக்கம். இலகுவில் வருவாள். சோலி இல்லை. வருவதில்தான் சோலி இல்லை. வந்தபின் சோலி எகிறும் என்பதை இவண் அறிந்திருந்தான்

போனமுறை குந்திய, சிற்றுண்டிச்சாலையின் பின் கோடி கதிரையிலேயே குந்தியிருந்தான். புறத்துக்கு விசாலித்திருந்த பெருங்கண்ணாடி சாரளத்தூடு தெருவொழுங்கைச் சங்கைகள், ஈனங்கள் தெட்டாய்த் தெரிந்தன. பெரு நகர சபை ஊழியர்களால் உபத்திரவ சங்கடம், என கொலைத் தண்டனை விதிக்கப்பெற்று, தறித்து, அகற்றப்படவென கால் வயிற்றுக் குத்தியில் சிவப்பு வளையக்கோடு போடப்பட்டிருந்த விநோத மரத்தைக் காணவில்லை. மரண தண்டனை நிறைவேற்றப் பட்டிருந்தது. அந்த முன்னாளைய சிட்டுக் குருவிச்சோடி அந்த விநோத மரக்கொம்பரில் குந்திக் குஸாலிக்க விழைந்தாலும், இனி அது சாத்தியமில்லை. தனிக்குருவியும் வந்து, இருந்து, வெறுப்பேறிப் பறந்து காற்றில் கரைந்து மறைய முடியாது. மனுஷ்ய வாழ்வும் இப்படித்தான். ரஞ்சகமானவை திபுக்கடீனென மறைந்தழிந்து போகின்றன.

வியப்புகரமாக, போன தடவை அம்பிகையைச் சந்திக்க வந்த போது கண்ட, மோஸமான உடல்வாகு கொண்ட, ஊதா நிறத்தில் ஊத்தைச் சட்டையும் வலப்புறத்தில் நூல் பிசிறுண்ட பொத்தல்கள் கொண்ட கால் சராயும் அணிந்த அதே கிழவர்,- அதே அழுக்குமயக் கோலத்தில், அதே கோர விநோதப்பாங்கில், விந்தி விந்தி நடந்து கடக்க, அதே கடந்த தடவைபோல், அவருக்கு நேரே பின்னால் அம்பிகை வந்தாள். சில விஷயங்கள் காரணமேதுமற்று கிரமமாக நடந்தேறுகின்றன. அவற்றுக்கு புரியப்பாலதான விளக்கம் கிடையாது. அம்பிகை கடும் மஞ்சல் நிற அரைக்கைச் சட்டையும் வெளிர் நீல ஜீன்ஸ்ஸூம் அணிந்திருந்தாள். இரண்டுமே இன்னும் சற்று தோப்பலாகத் தெரிந்தன. மேலும் மெலிந்திருக்கிறாள். படு பாவம். கடந்த வாட்டி போல, உள்ளே நுழைந்ததும் திகைத்து நிற்காமல், தெரிந்த சூழலில் சீரிப்பது போன்ற வாடிக்கையுணர்வுடன் எதிர்க்கதிரையில் வந்து குந்தினாள். ஆனால் அதில் கிகிஞ்சித்தேனும் சாவஹாச ஓயல் இல்லை. படு பதற்றந்தான். இவணிலும் மேலான பதற்றம். நான்கு நிமிஷங்கள் ஆளையாள் மூஞ்சியைப் பார்த்தபடி குந்தியிருந்தனர். எதைப் பேசுவது என்று தெரியாததாலோ, எங்கே தொடங்குவது என்ற சில்லெடுப்பிலோ அம்மௌனம் என்பது கிரஹிப்பிற்கு அப்பாலாய் இருந்தது. மிக மிக நொய்ந்திருந்தாள். நொய்ந்து பிசிறுப்பட்ட நூல் ஆகவில்லை இன்னும், என்பது பெருத்த அளவில் மனஸூக்கு சொஸ்தம் அளிக்கும் விஷயமுமல்ல. முகம் உள்ளிழுத்திருந்தது வியாகூலத்தின் வரிகள் ஆயிரம் முகம் பூரா நெளிந்தோடின. இது கண்டு இவண், இதயத்தினை

ஆயிரமாயிரம் குறு முள் குத்துவதாய் வலியுணர்ந்தான். தேக்கங்குற்றியாக இருந்தவள் எவ்வாறு நிழல்வாடிக் கதிகால் ஆனாள், இப்படி..?! இவனுக்கு அழுகை வருமாற்போல இருந்ததையுங்கூட உணர்ந்தான். வழமை போல, வெளியழுகையை கட்டுப்படுத்த படு பிரயத்தனப்பட்டான். வெளியே வழியாது உள்ளே எவ்வாறு இவனது கண்ணீர் எப்போதும், ஒவ்வோர் தடவையும் உறைகின்றது, என்பது பற்றித் தெரியாது. இவனுக்குக் கூட. 'இனி அவருடன் ஒரே வீட்டில் எப்படியும் வாழவே ஏலாது. அரியண்டப்பேச்சு, மொக்குத்தனமான அடி எண்டதெல்லாம் போக, தினமும் பயத்தோடை வாழுகிற மன உலைச்சலைத் தாங்கேலாது. அதில் பார்க்க செத்துப் போகலாம்.'

'ஓஹோ;..அவ்வளவு இறுகிப் போச்சோ! அப்பிடியெண்டால், வீட்டை விட்டு வெளியேறி வெளியிலை எங்கையெண்டாலும் இருக்கிறதுதான் வழி. அவன் பக்கா பொறுக்கியாய் இருப்பான் போலை கிடக்கு' பரமேஸ்வரன் பக்காவிலும் பக்காவான கக்கா பொறுக்கிதான். 'வெளியிலை எங்கை போய் இருக்கிறது? எனக்கு ஒருத்தரையும் தெரியாது உங்களைத்தவிர.' இந்தக் கேள்வியை இவண் எதிர்பார்த்தானோ அல்லது அதற்கான பிரயோஜனமான, யதார்த்தமான பதிலைக் கொண்டிருந்தானோ என்பது பற்றித் தெரியவில்லை. இவனுக்குத் தெரியாததுபோல் அவளுக்கும் தெரியவில்லை.

'நான் வேறையெங்கை போறது, உங்களிட்டை வாறதைத்தவிர?!'

,உஸோமி பற்றிய விவகாரம் அம்பிகைக்கு சிறிதும் தெரியாது. சுசிவேணியுடனான இப்போதைக்குமான இன்னமும் மான ஏதோ வகையான உறவு பற்றி அம்பிகைக்குத் தெரியவே தெரியாது. அது பற்றி உஸோமிக்கு சின்னச் சந்தேகந்தான். முழு விபரமும் தெரியாது. மூஞ்சியும் தெரியாது. இவனுக்கு எல்லாம் தெரியுந்தான். ஆனால் யாருக்கும் தெரியப்படுத்த முடியாது!

அங்கு..

'இதென்ன கீச்சு மாச்சுத் தம்பலம் மாதிரி? ஒரு காச்சு மாஸ்ரர். இப்ப இஞ்சை ஒரு கீச்சு மாஸ்ரர்! ஒரே காச்சு, கீச்சுக்கதைதான்,' என்று நெருக்கமாய் அருகில் நின்ற குஞ்சிலையான் குட்டி ஒலாவின் காதில் கடித்தான். கீச்சு மாஸ்ரருக்கு தெரியக் கூடாதென்பதற்காக வந்த குபீரென்ற சிரிப்பை கொடுப்புக்குள் அடக்கி பல்லைக் கடித்தபடி சிறிதாய்ச் சிரித்தான் குட்டி ஒலா. பல்லைக் கடித்தபடி சாதாரணமாகச் சிரிக்க முடியாது. அது கோபக்கறுவலில் பல் நெருமுவது போல இருக்கும். குஞ்சிலையானுக்கு வேறு பெயர் இருக்குமோ தெரியாது. குழந்தையாய் இருக்கையில், வீட்டில் பெட்டைத்தனமாய் குஞ்சு என்று அழைத்ததாகவும் பிறகு ஆரம்ப பாடசாலை வாத்தியார் அவனது சாதி சார்ந்த விரோத குரோதத்தால் இலையான் என்று விளித்ததால், திட்டியதால் அது குஞ்சிலையானாகப் புணர்ந்ததாக, பயிற்சி முகாம் கொட்டகையில் ஆமைக்கறி, சோறு சாப்பிடுகையில் குட்டி ஒலாவின் காதில் கடித்திருந்தான் குஞ்சிலையான். பெருபெருபெருந் தலைவரின் பிறந்த நாளைக் கொண்டாடுமுகமாகவே அந்த பெருபெரு சிறப்பு பிறப்பு நாளில் ஆமைக்கறி விருந்தென்று பயிற்சிப் பொறுப்பாளர் கீச்சு மாஸ்ரர், கொட்டகைப் பையன்களுக்கு ஒரு கர்வங் கலந்த பெருமிதத்துடன் சொல்லியிருந்தார். கு.ஒலா ஆமைக்கறி சாப்பிடவில்லை. அதற்கு பெரு காரணமுண்டு. கு.இலையான் ஆமைக்கறியை சோற்றுடன் குழைத்து முதல் கவளம் வைத்த உடனேயே, 'யாய்ய்க்க்' என்று முகம் சகஸ்ர கோணமாய் மாற துப்பி விட்டான். 'என்ன கோதாரியெண்டு இதைத் தின்னிறது? சக்குக்குப்பிடிச்ச பாண்டல் ஆமணக்கெண்ணை மாதரியெல்லோ ஆமைக்கறி சவண்டுது.'

'ஏன்? என்னெண்டு தெரியும்? அடிப்பாண்டல் ஆமணக்கெண்ணை குடிச்சுப் பார்த்திருக்கிறாயோ?'

'இல்லை. ஆனால் அப்பிடித்தான் இருக்கு.' நக்கிப் பார்க்காமலே இவன் எப்படி சப்பாமல் துப்புகிறான் என்று இவனுக்கு புரியவில்லை.

ஊரெல்லாம் கொழுத்தாடு பிடிக்கும், காடு கரம்பை எங்கும் போய், பன்றி, மான், மரை சுட்டு, உப்புக்கண்டம் போடும், ஊரைக்குழப்பி 'வள் வாள் வாள் வள்' என்று அடாராக குரைத்துத் தள்ளும் நாய்களுக்கு ஏகலைவன் தினுஸில் வள்-வாள்- வாய்க்கட்டு போடுவது மட்டுமன்றி, பெட்டை நாய்களைத் துரத்தி, doggy நிலைக்கலாம் போட்டு, பிற்பாடு பிட்டம் பிட்டம் கொழுவி, சோர வழியின்றி சோரம் போய் இழுபடும் கடுவன் நாய்களுக்கு காயடிக்கும், இவனது 'ஒன்றுக்கு ஒன்றுக்கு விட்ட' மாமனார் ஒருபோது சத்து சதைப்பிடிப்பான உயிராமை ஒன்றைக் கொண்டு வந்து, 'சா வெள்ளாமை' என்று பிற்பாடு ஊர் சொன்ன, வழமைக்கு மாறாய் எக்கச்சக்கமாய் காய்த்துக் கொட்டிய பலா மரத்தடியில் புரட்டிப் போட்டு, ஓட்டு வளைவுக்கு தோண்டத் தொடங்கினார். அது கோரம். காட்டு விறாண்டியருக்கு 'கீறு' வேறு. சுற்று வட்டாரப் பையன்கள் எல்லாம், 'காட்டுவிறாண்டியார் ஆமை வெட்டிறாராம்,' என்று வேடிக்கை பார்க்கும் ஆவலில் கிலாரடித்து பலா மரத்தைச் சூழ்ந்து அதகளிப்பட்டனர்.

ஆமையை வெட்ட முடியாது. இலகுவில் கொல்ல முடியாது. துடிக்கத்துடிக்க, அந்தரிக்கும் பிராணியின் தசை ஊனைப்பெற ஓட்டை விட்டு வறுகுவது மஹா குரூரம். அதன் இறைச்சி, முட்டை, எண்ணெய்க்கு சொஸ்தப்படுத்தும் மருத்துவ பெறுதி இருப்பதாக வாகடம் பறைவதாக சனம் நம்பி குரூர கோரம் இணக்கப்படுகின்றமை ஊரெல்லாம் வழமை.

அந்த கோரக் குரூரத்தைக் காண முடியாமல், இவண் வீட்டுக்கோடி, வீட்டுக் கோடியில் நின்ற தாயாரிடம் சொன்னபோது, 'அந்த நசலையெல்லாம் பார்க்க நீ ஏன் போறாய்? காட்டு விறாண்டியார் அரக்கர்' என்று இவணின் அம்மா திட்டினார்.

உலக உயிர்களில் ஆகக் கூடுதலான காலம் வாழும், பிறதிற்கு தீங்கு பரத்தாத, தாவர பக்ஷ்ணியான ஆமைக்கு அனர்த்தம் இழைப்பதன் பயங்கரம் பற்றி அம்மா நீண்ட நேரம் தந்த விளக்கத்தின் பின் இவண் இரவிரவாய் அழுத ஞாபகம் உண்டு.

ஆமை செத்து எட்டாம் நாள் காட்டு விறாண்டியார் செத்தார். இரத்தாஸயம் திபுக்கடீரென்று நின்று போயிற்று. அதுதான் அவர் வீட்டு பின் வளவுப் பலா, சா வெள்ளாமையாய் காய்த்துக் குலுங்கியதற்கான காரணம், என ஊர் பறைந்தது. ஊர் எல்லாம் பறையும்.

கீச்சு மாஸ்ரரின் பயிற்சி முகாமில் அவரது கட்டுப்பாடு வரம்புகளுக்கு மேலாகப் பாயும் கர்ண கடூரம். இம்மென்றால் அடி. தும்மினால் இடி. கிளுவை வேலிகள், பீநாறிப் பற்றைகள் தாண்டி, பனங்கூடல் தணிந்து பொட்டல் தரிசாகும், துருக்கல் மண் வெளியில்தான் பயிற்சி முகாம் கொட்டகைகள் தெறியன் தெறியனாக குடி(ல்) குத்தியிருந்தன. அருகு வெளியிலேயே ஆயுதப்பயிற்சி. ஆரம்பத்தில் அணி வகுப்பு, கனிஷ்ட ஆயுத இயக்குகை என்றே குட்டி ஓலாவின் அணியிணை ஆரம்பம் இருந்தது. கீச்சு மாஸ்ரர் கண்டதற்கும் 'காச்சு பீச்சு' என்று கத்துவார். முதுகில் அறையும் பிட்டத்தில் உதையும் நேர்ந்ததுமுண்டு. அவருக்கு ஏழெட்டு ஆயுதப் பயிற்சிக்கு துணை செய்யும் உதவி வெடிவால்கள். ஒரு body guard வேறு. வரிசை அணி வகுப்பில் முன் வரி வீரவான்களிடம் சில உயிர்த் துவக்குகள் இருந்தமை போக, பின் வரிசை ஆட்கள் கைகளில் துப்பாக்கிக்கு பதில் மரக்கட்டை சட்டச் சலாகை தான் இருந்தது. தாக்குதலுக்கு போவதற்கான முஸ்தீபுகள் தீவிரங் கொள்கையில் தான் உயிர்ச்சன்ன சுடு பயிற்சி வேகம் பிடிக்கும். அதற்கு முன் கனிஷ்ட வீரவான்களின் கனிஷ்டப் பயிற்சிக்கு மர சட்டச் சலாகைதான். கொதிக்குழுவின் 'அரசியல் ஆனா ஆவன்னா' சொன்ன விளக்கமொன்று விசித்திரமானது. 'ஹெஹஹ்ஹெஹஹ்ஹே... . நாங்கள் காசு குடுத்து ஆயுதம் வாங்கத் தேவையில்லை. வெளிநாட்டிலிருந்து கடத்தத் தேவையில்லை. அரசாங்கம் காசு குடுத்து வாங்கும். அதை நாங்கள் இராணுவ முகாம்களை அடித்து, அவங்கடை மண்டையைப் பிளந்து அள்ளுவம். ஹெஹஹ்ஹெஹஹ்ஹே..!!'

பெருமுகாம் தாக்குதலுக்கு தயார் தயாரிப்புகள் நடந்தன. எல்லாம் ரகஸ்யப்போரில் தான். ஆயுதப்பயிற்சி சூடு கண்டது. ஐந்நூறு பேர்வரை தெரிவு செய்யப்பட்டனர். பற்பல சண்டைக்குழுக்களில் முதன்மை ஆயுதத்தாக்குதல் அணியாக கீச்சு மாஸ்ரனின் பிரிவு இருந்தது.

குட்டி ஓலாவும் அதில் ஒருவன். அவனுக்கு சண்டை பிடிக்க எப்பனும் விருப்பமில்லை. போட்டுத் தள்ள போகாவிடின் போட்டுத் தள்ளப்படக்கூடிய அபாயமுங்கூட இருந்ததாக நம்பினான். போக வேண்டியதாய்ப் போயிற்று. விடிந்து புலராத கருக்கல் இருளிலேயே தாக்குதல் துவங்கிற்று. அணியணியாய் வீரவான்கள் இருளோடு இருளாக, பற்றைகளில் ஒளித்து, பதுங்கி, முன்னேறி, வெறியுத்வேகத்துடன் மூர்க்கமாக முன் தாவ...

அங்கு...

முன் தாவ, 'வை வெடி,' என்றான் குஞ்சிலையான். 'திடீரப் படார்'. குண்டு பாய்ந்தது. வெடித்தது.

இங்கு...

குண்டு பாய்ந்த/ வெடித்த அதே நேரம், 'திடீரப் படார்'. முன்னர் போல இங்கு bar இல் குட்டி ஓலா தொபுக்கடீரென்று கிடையாய் குப்புற தரையில் விழுந்திருக்கிறான். இம்முறை விசித்திரமாய், வழமைக்குப் புறம்பாய் குட்டி ஓலா, இவணுடனோ குட்டி விலாவுடனோ குட்டி பீலாவுடனோ போகவில்லை. தனியனாகச் சென்று போதைப்பட்டுள்ளான். பெரு பெருத்த மன இறுக்கம் இல்லாது அப்படிச் செய்திருக்க மாட்டான்.

திடுமென்று படு பின்னிரவில் இவணுக்கு தொலைபேசி அழைப்பு வந்தது. படு இங்கிதமாக முழு ஒளிப் புன்னகையுடன் இராப்பூரா குடிபானம் பரிமாறும், உடல் பூரா பச்சை குத்திய, நீலக்கண் இளம்பெண் தான் phone இல் அழைத்தாள்.

'உனது நண்பன் தொபுக்கடீரென்று நிலத்தில் விழுந்து கிடக்கிறான். ஏதோ குண்டு, வெடி என்கிறான். 'நான் சுட மாட்டேன். நான் சுட மாட்டேன்' என்று அரற்றுகிறான். எனக்குப் பயமாக இருக்கிறது. உடனே வா,' என்றாள்.

,இன்னும் வர உண்டு.

# ‘சிதைப்பு’

## அல்லது ‘ஊழி ஊழ’

அதிகாரம் 11

## Chapter: 11

தொடங்குவதெல்லாம் முடிவுக்கு வர வேண்டும் என்பாய்.
அது விதி அல்ல.

தொடங்காததொன்று முடியுமா?
எப்படி ஒன்று தொடங்காதிருக்கும்?
அப்போ, எப்போதுமிருப்பது எப்போ.
எப்படித் தொடங்கிற்று?

நிமிர்ந்து பார்.

எல்லையில்லா வெளி இருக்கிறதல்லவா?

அண்ட யோனி என்கிற யோனிஅண்டம்.

ஒளி கூட ஊடறுக்காத ‘கருங்கோறை‘ ஈர்ப்பில்
உணர்வு நரம்பு தெறிக்க

மண்டை மூளை உருகி புதர்ப்புற்றுள் கரைகிறாய்.

கீழே பார்.

பாதம் படுகிறதா?

நிலத்துக்கும் பாதத்துக்கும் இடையில்
இடைவெளி இல்லை.

ஆகவே, நீ பாவவில்லை.
பாயலாம்.

உயிர்க்குருத்து நடுத்தண்டில் ஸ்திரம் பெற
மேலேயும் கீழேயும் பார்.

பாத நிலம் பாவுகிற வெளியின் உயிர்க்கருவுக்காய் மேலே
அண்ட வெளி.

வெளி அண்டம்.

யோனி வெளி.

வெளி யோனி.

யோனி அண்டம்.

அண்ட யோனி.

அண்டம்

யோனி.

பிறகு நீ.

அ;!!!

## “RUIN”

## [Or Apocalyptic Karma]

You would say, “All that begin would end.”
That’s not the destiny/ rule.
Would something that doesn’t begin, ends?
How something doesn’t begin?

Then, how and when something
that’s eternal did begin?

Look up.

There exists infinite space,
doesn’t it?

Yoni-space that is Space-yoni.

You melt in the mystery-hole
due to black-hole pull
as sense- nerve bumps
and skull-brain fuses.

Look down.

Does the foot touch the ground?
There is no space between
the ground and the foot.

Therefore, you don’t hover.
(But, you could) jump.

To have the Life-pith straighten
in the middle spine,
(Just) look up and down.

For the Life-core of the space,
where foot-ground floats,
up there is Universe-space.

Space-universe.
Yoni-space.
Space-yoni.
Yoni-universe.
Universe-yoni.
Universe.
Yoni.
Then you.
Ah… .

# எக்ஸில்

# புகலிட இலக்கியச் சூழலில் மறந்து போகமுடியாத சில பக்கங்கள்

*பரீசில் இருந்து வெளிவந்த ஒரு சிறு சஞ்சிகை எக்ஸில்.*

*எக்ஸில் சஞ்சிகை 1998 இலிருந்து 2003 வரையான இடைப்பட்ட காலப்பகுதியில் 13 இதழ்கள் மட்டுமே வெளிவந்த ஒரு சிற்றிதழ். வெறுமனே ஒரு 13 இதழ்களுக்கு இந்தக் காலப்பகுதி ஒரு நீண்ட காலப்பகுதிதான். ஆனாலும் இதற்குள் ஒரு முக்கிய அனுபவ வெளி இருப்பதாகவே நான் உணருகிறேன். அந்த வெளிக்குள் நடைபெற்ற பல விடயங்கள் பேச வேண்டியிருப்பதாகவும் உணருகிறேன்.*

*உண்மையில் இந்தக் காலத்தை இப்பொழுது எழுத வேண்டிய எந்த அவசரமும் இல்லை. எப்போதாவது ஒரு காலத்தில் இதனை எழுதலாம் என்றுதான் இருந்தேன். ஆனால் சிலர் இக்காலத்திலேயே இவற்றை வாசித்தவிடவேண்டும் என்று என் மனது விரும்புகிறது. அதனையும் விட இன்னும் காலம் போனால் மறதியும் நோயும் எங்களைப் பற்றி பிடித்துவிடும் என்பதாலும் இதனை எழுதிவிட வேண்டும் என்றும் நினைக்கிறேன்.*

*இந்த எக்ஸில் காலம் மிகவும் சுவாரசியமான காலம். அதற்குள் பலரை என்னால் அடையாளம் காண முடிந்த காலம் என்றபடியால் அவற்றிற்கு என் மனதளவில் ஒரு முக்கியத்துவம் இருப்பதாகவே நான் நினைக்கிறேன்.*

பாரீசில் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட சபாலிங்கம் அவர்களது கொலையின் பின்னர் புகலிடச் சூழலில், இலக்கியச் சந்திப்பினைத் தவிர பெரும்பாலும் அத்தனை இலக்கிய அரசியற் செயற்பாடுகளும் ஸ்தம்பித்தன. சபாலிங்கம் அவர்கள் அவரது வீட்டிற்குள் மனைவியின் முன் வைத்துப் புலிகள் அவரைச் சுட்டு செயலற்றதாக்கினார்கள். இது ஐரோப்பிச் சூழலையே அதிர்ச்சிக்குள்ளாக்கிய நேரம் அது.

அந்த அதிர்ச்சிக்குப் பின் வெளிப்படையாக அரசியற் கருத்துக்களை முன்வைத்து வெளிவந்த ஒரு தொகுப்பு 'இனியும் சூல் கொள்'. இது 1997இல் பாரீஸ் புகலிட இலக்கியச் சந்திப்பினரால் வெளிக் கொண்டுவரப்பட்ட தொகுப்பு. அதன் பின் பாரீசில் அரசியற் கருத்துக்கைளை வெளிப்படையாகப் பேசவேண்டும் என்ற நோக்கத்தோடு சிற்றிதழாகத் தொடங்கப்பட்டதுதான் எக்ஸில்.

அக்காலத்தில் அம்மா என்றதொரு சிற்றிதழை ஓசை மனோ அவர்கள் வெளியிட்டுக் கொண்டிருந்தார். அது தனியே சிறுகதைகளுக்காக வெளிவந்து கொண்டிருந்தது. அக்காலத்தில் ஈழத்தில் யுத்தம் மிகவும் பிரபலமாகச் செயற்பட்டுக் கொண்டிருந்தது. புகலிடத்திலும் குறிப்பாகப் பாரீசிலும் புலிகளது அதிகாரம் மேலோங்கியிருந்த காலம். அக்காலத்தில் ஒரு பேச்சுரிமைக்கான ஒரு குரலாக ஒரு சிற்றிதழைத் தொடங்க நானும் ஞானமும் ஆரம்பித்தோம்.

நானும் ஞானமும் (இன்று நீங்கள் அழைக்கும் எம்.ஆர்.ஸ்ராலின்- சின்னா மாஸ்டர்) 1990ம் ஆண்டு காலப்பகுதியில் பயண முகவர்களால் கைவிடப் பட்டவாகளாக 'துருக்கி- இஸ்ரன்புல்' நகரத்தில் ஒரு வருடகாலம் வாழ வேண்டியிருந்தது. அங்கேதான்

**கற்சுறா**

நாங்கள் நண்பர்களானோம். ஞானத்தின் தன்ம்பிக்கையையும் துணிச்சலையும் அந்த இடைப்பட்ட ஒரு வருடத்தில் நான் பல தடவைகள் பர்த்திருக்கிறேன்.

ஞானம் ஒரு பாடசாலையில் கல்வி கற்பித்துவிட்டு வந்தபடியால் பலர் அவனை மாஸ்டர் என்றே அழைத்தார்கள். நானும் ஆரம்பத்தில் மாஸ்டர் என்றுதான் அழைத்தேன். அங்கே வாழ்ந்திருந்த அத்தனை பேருக்கும் இன்றும் அவனது அடையாளம் மாஸ்டர் தான். அங்கே ஒரு நேரச் சாப்பாட்டிற்கே திண்டாடிக் கொண்டிருந்த அதிகமான நேரங்களில் நாங்கள் பேசிய விடயங்கள் பற்பல. அவ்வாறான பேச்சுக்கிடையில் நாங்கள் ஐரோப்பா சென்றவுடன் ஒரு பத்திரிகை தொடங்குவதுதான் அதிகமான பேச்சாக இருந்தது. உண்மையில் நாங்கள் இருந்த நிலைக்கு, யார் யார் எங்கே எங்கே செல்வோம் என்று கூடத் தெரியாத நிலையில் பேசிய விடயங்கள் அவை. அங்கேயே நாங்கள் பத்திரிகைக்கான பெயரையும் 'கவனி' எனத் தேர்வு செய்திருந்தோம். சிற்றிதழ் என்ற எண்ணம் எமக்கு அப்போது இருந்ததில்லை. ஒரு பத்திரிகையைத் தான் நாங்கள் தொடங்கவேண்டும் என யோசித்திருந்தோம். ஆனால் வெவ்வேறு காலத்தில் வெவ்வேறு திசைகளுக்குள்ளால் நாங்கள் பாரீசில் ஒன்றாகினோம்.

ஆனாலும் நம்முடைய குடும்பச் சூழல் மற்றும்பொருளாதாரச் சிக்கல்களில் மிக நீண்ட காலம் அதுபற்றி யோசிப்பதற்குச் சாதியமேயற்றுப் போனது. ஆனாலும் 1997ம் வருடம் நாம் முழுமூச்சாக ஒரு சஞ்சிகையை ஆரம்பிக்கத் திட்டமிட்டோம். அதன்படி நாம் வெளிக் கொண்டுவர இருக்கும் சஞ்சிகையின் அரசியல் வெளிப்பாடு குறித்து நண்பர்களுடன் பேசி ஆக்கங்களைச் சேகரிக்கும் முயற்சியினைத் தொடங்க ஆயத்தமானோம்.

அப்பொழுது எங்களுடன் நெருக்கமாக இருந்த கலைச்செல்வன் அவர்கள் இந்தச் செயற்பாட்டிற்குத் தானும் ஒத்துழைப்பதாகவும் நாங்கள் யோசித்திருப்பது போல் இல்லாது இன்னும் விசாலமாக்கி, பலர் இணைந்து செயற்படுவோம் என்றார். எமக்கு அதில் சிக்கல்கள் ஏதும் இருக்கவில்லை. அப்பொழுது நாங்கள் கவனி என்ற பெயரில் தொடங்க இருக்கும் சஞ்சிகை எப்படியானது என்பதனை விளக்கி அதற்காக எழுதியிருந்த ஆக்கம் கோரும் குறிப்பினையும் அவரிடம் காண்பித்தோம். அவர் அதற்குச் சம்மதித்துக் கொண்டு நாங்கள் அனைவரும் இதுசம்பந்தமாகக் கூடிக் கதைப்போம் என்றார். நாங்கள் சம்மதித்தோம்.

அக்காலத்தில் பாரீசில் Porte de la Chapelle இல் உள்ள ஒரு பிட்சாக் கடையில் வேலை செய்து கொண்டும், அதன் மேல் உள்ள அறையில் குடும்பமாக ஞானம் வாழ்ந்து கொண்டிருந்தான். எங்கள் ஆசிரியர் குழுவின் முதலாவது சந்திப்பு அங்கேயேதான் நடந்தது. அதில் நான் உட்பட ஜெபா, விஜி, லக்ஷ்மி, கலைச்செல்வன், ஞானம் என்கிற ஆறுபேர் கலந்து கொண்டோம். இன்னும் சுருக்கமாகச் சொன்னால் மூன்று குடும்பம் கலந்து கொண்ட சந்திப்பு அது. அப்பொழுது கலைச்செல்வன் ஒரு முக்கிய கருத்தினை முன்வைத்தார்.

அதாவது, கவனி என்ற சொல் ஒரு சஞ்சிகைக்கான சொல் அல்ல என்றும் இன்னும் கொஞ்சம் இறுக்கமானதாகவும் செறிவானதாகவும் இருக்கவேண்டும் ஏன் நாங்கள் இன்னொரு பெயரைத் தெரிவு செய்யக் கூடாது? எனக் கேட்டார். எங்களுக்கு அதில் எந்தச் சிக்கலும் இல்லை என்பதுடன் இது ஞானமும் நானும் தெரிவு செய்த பெயர். தற்பொழுது ஆறுபேர் சேர்ந்திருக்கிறோம் ஒரு புதிய பெயரைத் தெரிவு செய்வதில் எமக்குச் சிக்கலில்லை என்று சொல்லியிருந்தோம்.

ஆக, அடுத்த சந்திப்பில் பெயர் தெரிவு செய்வதாகவும் தீர்மானித்து அன்றைய கூட்டம் முடிவு செய்யப்பட்டது. நாங்கள் கவனி என்ற சொல்லை விடவும் வேறு சொல் ஒன்றைத் தேடத் தொடங்கினோம். (இன்றுள்ள மனநிலையில் இறுக்கமானதாக இருக்க வேண்டும் என்றால் ஒரு சொல்லில் 'கயிறு' என்று சொல்லியிருப்பேன். அப்பொழுது அந்த மனது எனக்கிருக்கவில்லை)

ஞானத்தின் வேலையிடத்தின் முன்னுள்ள பஸ் தரிப்பிடத்திலிருந்து தான் அதிகமாக அம்மா மனோ அவர்கள் தன்னுடைய வீட்டிற்குச் செல்வது வழமை. அதிகமாக ஞானத்துடன் வந்திருந்து சில நிமிடங்களேனும் பேசிவிட்டுத்தான் அவர் தனது பயணத்தைத் தொடங்குவார். அக்காலத்தில் மனோவிடம் இந்த விடயத்தைச் சொல்லி ஒரு சஞ்சிகை ஒன்றிற்குப் பெயர் வைக்க வேண்டும் என்ன பெயர் வைக்கலாம் என்று ஒரு ஐடியா சொல்லுங்களேன் என ஞானம் கேட்ட போது, பேசாமல் 'அப்பா' என்று வையுங்களேன் எனச் சொல்லிவிட்டு பஸ்ஸில் ஏறிவிட்டார் அம்மா மனோ.

தொடரும்

அங்கே ஒரு நேரச் சாப்பாட்டிற்கே திண்டாடிக் கொண்டிருந்த அதிகமான நேரங்களில் நாங்கள் பேசிய விடயங்கள் பற்பல. அவ்வாறான பேச்சுக்கிடையில் நாங்கள் ஐரோப்பா சென்றவுடன் ஒரு பத்திரிகை தொடங்குவதுதான் அதிகமான பேச்சாக இருந்தது. உண்மையில் நாங்கள் இருந்த நிலைக்கு, யார் யார் எங்கே எங்கே செல்வோம் என்று கூடத் தெரியாத நிலையில் பேசிய விடயங்கள் அவை. அங்கேயே நாங்கள் பத்திரிகைக்கான பெயரையும் 'கவனி' எனத் தேர்வு செய்திருந்தோம்.



# சொல்ல மறந்த கதை:03

**அவன் எதையெதை மனதில் உயர்வாக, மதிப்பாக நினைத்திருந்தானோ அவையனைத்தும் நீதிநியாய வழிகளில் இருந்து தடம் புரளும்போது அல்லது பக்கசார்பாக, கண்டும் காணாதது போன்று நகரும்போது... அக்கணத்தில் ஏற்படும் வலியானது, நகரும் காலம் வரைக்கும் மனதிற்குள் கிடந்து குமையும் அன்றேல் பழிவாங்கத் துடிக்கும்.**

எண்பதுகளில் நடந்த இச்சம்பவம் வெறும் புனைவல்ல. இது அவனது வாழ்க்கையில் நடந்தது. மனதை அழுத்தும் பல துயரச் சுமைகளிலிருந்தும் அதனூடாக ஏற்பட்ட மன அழுத்தங்களிலிருந்தும் அவன் கடந்திருக்கிறான். ஆனால், சில சம்பவங்கள் அவன் மனதிலிருந்து இன்னமும் விலகுவதாக இல்லை. காரணம், அவன் எதையெதை மனதில் உயர்வாக, மதிப்பாக நினைத்திருந்தானோ அவையனைத்தும் நீதிநியாய வழிகளில் இருந்து தடம் புரளும்போது அல்லது பக்கசார்பாக, கண்டும் காணாதது போன்று நகரும்போது... அக்கணத்தில் ஏற்படும் வலியானது, நகரும் காலம் வரைக்கும் மனதிற்குள் கிடந்து குமையும் அன்றேல் பழிவாங்கத் துடிக்கும்.

அவனால் எதையும், எவரையும் பழிவாங்க முடியாது. ஏனெனில், அவன் இந்த மண்ணில் பிறந்தநாள் தொட்டு, இன்றுவரையும் இதே மண்ணில் வாழ்ந்து கொண்டிருக்கும் சாதாரணதொரு தினவேதனக்காரன் (தினக்கூலி).

அவன் தனித்தவன். எந்தவொரு அரசியல் பின்புலமற்ற, இயக்க ஆதரவற்ற மனிதன். எவரையும் பழிவாங்கமுடியாத நிலையில், அவனுக்காக எவரும் இன்றுவரையிலும் பரிந்து பேசியதில்லை. அவனுக்காகப் பேசுவதும் பக்கபலமாக நிற்பதும் அவனது கரத்திலிருக்கும் பேனா மட்டுமே!

இதோ! அவனது வாழ்வியலில் ஏற்பட்ட ஒரு 'துன்பியல் நிகழ்வு' இது! இந்நிகழ்வை அவனது பேனா பேசுகிறது. எழுதுகிறது... கேளுங்கள், படியுங்கள்.

•••

**அலெக்ஸ் பரந்தாமன்**

1983ஆம் ஆண்டு ஆடிக்கலவரத்தில் அகப்பட்டு, அவனும் அவனது தாய் சகோதரிகளும் கப்பலில் வடபகுதி நோக்கி வருகிறார்கள். வடபகுதியில் அவர்களுக்கு வாழக் கிடைத்த இடம் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள புதுக்குடியிருப்பு எனும் பிரதேசம். அவன் அதிகம் படித்தவனல்ல. பத்தாம் வகுப்பு மட்டுமே அவனது இறுதிப்படிப்பாக அமைந்தது. ஊரிலே அவ்வப்போது கிடைக்கின்ற தினவேதன வேலைகளைச் செய்து கொண்டிருந்த போதும், குடும்பத்துக்கு ஏற்ற வருவாயாக அது அமையவில்லை. அதனால் அவன் தனது படிப்புக்கேற்ற வேலைதேடி யாழ்ப்பாணம் செல்கிறான். அங்கு தனக்குத் தெரிந்த பலரிடம் வேலை கேட்டு அலைகிறான். இறுதியில், ஓர் அரிசி ஆலையில் வேலை கிடைக்கிறது. முன்றுநேரச் சாப்பாடும், நாளொன்றுக்கு முப்பது ரூபாய் வேதனமும், தங்க இடமும்... என்ற அடிப்படையில் அங்கு இணைந்து கொள்கிறான்.

ஆலை முதலாளியும் அவரது சகோதரர்களும், அவரது கூட்டாளிகளும் நன்கு வசதியானவர்கள்.

யாழ்ப்பாண மண்ணுக்கே உரிய

சாதித் திமிரும், பணத் தடிப்பும் அவர்களிடம் மேலோங்கி நின்றன.

இதைவிட, பிரதேசவாதம் அவர்களது பேச்சில், வெளிப்படையாகவே தெரிந்தது. ஆலையில் மலையகம், மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த இளைஞர்கள் குடும்பஸ்தவர்கள் வேலை செய்து கொண்டிருந்தார்கள். அவர்கள் பலரும் படிப்பு வாசனை குறைந்தவர்கள்.

குறைந்த படிப்பும் வளர்ந்த, வளர்க்கப்பட்ட சூழ்நிலையும் அவர்கள் பேசும் கெட்ட வார்த்தைகளில் இருந்து அறியக்கூடியதாக இருந்தது.

மூன்று நேரச் சாப்பாடும் முப்பது ரூபா வேதனமும் என்ற மகிழ்ச்சியில் இருந்தவனுக்கு, அவர்களது பேச்சும், பழக்க வழக்கங்களும் தன்னையும் அவர்களைப் போல அச்சூழ்நிலைக்குள் தள்ளி விடுமோ என அஞ்சினான். காரணம், அவன் அவர்களில் இருந்து வேறுபட்டவனாக இருந்தான். அவன் ஒரு தீவிர வாசகன். கலை இலக்கிய சஞ்சிகைகளில் வரும் கதை, கவிதைகளைப் படிப்பவன். இதன் நிமித்தம், வேலை நேரங்கள் தவிர்ந்த ஏனைய பொழுதுகளில் சக தொழிலாளிகளோடு சற்று அந்நியமாகவே பழகிக் கொண்டான்.

ஆலை முதலாளிக்கு இவனது போக்குக் குறித்து ஒரு ‘பார்வை’ இருந்தது. அந்தப் பார்வை சந்தேகப் பார்வையாக இருந்தது. அடிக்கடி அவர் ஓரக்கண்ணால் தன்னைக் கண்காணிப்பதை அவதானிப்பதை அவன் உணர்ந்து கொண்டான். அதுமட்டுமன்றி, இந்த முதலாளியினுடைய குடும்பத்தாரிடம் ஓர் அநாகரிகமான பழக்கம் இருந்தது.

ஆலையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு வரும் கடிதங்களை பிரித்து, அதன் உள்விடயம் என்னவென்று அறிந்த பின்பே, அதை உரியவரிடம் ஒப்படைப்பார்கள். இதைக்குறித்து, அத்தொழிலாளர்கள் ஆட்சேபனை எதுவும் தெரிவிப்பதில்லை. அவனுக்கோ அது ஓர் அருவருப்பான

**முதலாளியின் வீட்டுமுற்றத்தில், அவரோடொத்த சகபாடிகள் ஒன்றுகூடுவார்கள். அரசியல் போக்குக் குறித்து அவரவர் வாய்களில் இருந்து விமர்சனங்கள் எழும். இதில் பிரபாகரனும் இயக்கத்தின் செயல்பாடுகளும் நார்நாராகக் கிழிக்கப்படும். பொதுவாகச் சொன்னால் யாழ்ப்பாணத்து எந்தவொரு முதலாளிக்கும் பிரபாகரனைப் பிடிக்காது.**

**வெளிப்பார்வைக்கு ஆதரவாளர்களாகக் காட்டிக் கொண்டு, மறுபுறத்தில் தங்களுள்ளும், தங்களது உரையாடலிலும் எதிர்ப்பைக் காட்டிக் கொண்டிருந்தார்கள்**

செயலாகத் தெரிந்தது. படிப்பிலும் பணத்திலும், சாதியிலும், ஆன்மிகத்திலும் தங்களை முதன்மையானவர்களாகக் காட்டிக்கொள்ளும் இந்த முதலாளிகள், ஏன் இவ்வாறு நடந்து கொள்கிறார்கள்? என அவன் தனக்குள் சிந்திப்பதுண்டு.

அப்பொழுது, புலிகள் இயக்கம் அரசியலிலும், அடிபாட்டிலும் முன்னேறிக் கொண்டிருந்த காலம். பிற்பகல் மூன்று மணிக்குப் பின்பு முதலாளியின் வீட்டுமுற்றத்தில், அவரோடொத்த சகபாடிகள் ஒன்றுகூடுவார்கள். அரசியல் போக்குக் குறித்து அவரவர் வாய்களில் இருந்து விமர்சனங்கள் எழும். இதில் பிரபாகரனும் இயக்கத்தின் செயல்பாடுகளும் நார்நாராகக் கிழிக்கப்படும். பொதுவாகச் சொன்னால் யாழ்ப்பாணத்து எந்தவொரு முதலாளிக்கும் பிரபாகரனைப் பிடிக்காது.

வெளிப்பார்வைக்கு ஆதரவாளர்களாகக் காட்டிக் கொண்டு, மறுபுறத்தில் தங்களுள்ளும், தங்களது உரையாடலிலும் எதிர்ப்பைக் காட்டிக் கொண்டிருந்தார்கள் ஒரு தடவை அங்கு பின்னேரப் பொழுதில் வந்து போகும் ஓர் அரிசி ஆலை முதலாளியின் மைத்துனருக்கு இரண்டு நாள்களுக்கு முன்பு திருமணம் நடைபெற இருந்தது. தகவலறிந்த இயக்கம் அந்த ஆலைமுதலாளியை அவசரமாக முகாமுக்கு வரச் சொல்லிவிட்டு, ‘ஐந்து இலட்சம் காசு தந்தால்தான் ஆளை விடுவம்…‘ என்று கூறியிருக்கிறது. வேறுவழியின்றி காசைக் கொடுத்த பிற்பாடுதான், கலியாணம் நிறைவேறியது. இதற்குப் பிறகு அவனது ஆலை முதலாளி இயக்கத்துக்கு நிரந்தரமானதொரு எதிரியாகியே விட்டார்.

இவ்வாறாக சுமார் மூன்று ஆண்டுகள் கழிந்து, நான்காம் ஆண்டில், நிலைமை இப்படிப் போய் கொண்டிருக்கையில், ஒருநாள் அவனது பெயருக்கு ஓர் இலக்கியச் சஞ்சிகை தபாலில் வருகிறது. வழக்கம்போல, அச்சஞ்சிகை முதலாளியினுடைய தம்பியால், பிரிக்கப்படுகிறது. அதற்குள் அவனது வீட்டு விவகாரங்கள் எதுவும் இல்லாததால், சஞ்சிகை முதலாளி வீட்டு வேலைக்காரனிடம் கொடுத்தனுப்பப்படுகிறது.

சஞ்சிகையை வாங்கிப்பார்த்த அவனுக்கு, கடுப்பேறி விடுகிறது. ‘இதை ஆர் உடைச்சுப் பார்த்தது…?’ வேலைக்காரனிடம் கேட்கிறான் அவன்.

அதற்கு வேலைக்காரப் பொடியன், ‘முதலாளியின் தம்பி உடைச்சுப் பார்த்திட்டுத் தந்தவர்…‘ என்று கூறிவிட்டுப் போய்விடுகிறான். அவனால் சினத்தை அடக்க முடியவில்லை. ஆலைக்குள் வேலை அதிகமாக இருந்தது. ஆள் பற்றாக்குறை. போதாக்குறைக்கு, உள்ளேயிருந்து சகதொழிலாளி அவனைக் கூப்பிடுகிறான். அவன் கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டான். இதை இப்படியே விடக்கூடாது. ஒருக்காக் கேட்டு, தனக்கு வாற தபாலுகளை

உடைக்கவேண்டாம்... எனச் சொல்லவேணும்... என நினைத்துக் கொண்டு, வேலையில் கவனம் செலுத்தினான். ஆயினும், அவனால் முடியவில்லை. மாலை நேரம் வேலை முடிந்து, ஏனைய தொழிலாளர்கள் வெளியே சென்றுவிட்டார்கள்.

ஆலை வளவையும் முதலாளியின் வீட்டையும் பிரிக்கும் மதிலிலுள்ள கேற்றூடாக வீட்டைப் பார்த்தான். முதலாளி 'ரீ' குடித்தபடி... வழக்கமாக அவரிடம் வருபவர்களில் இருவரும், அவரின் உறவினர் ஒருவரும் கதைத்துக் கொண்டிருந்தார்கள். அவனுக்குள் வெகுநேரமாகக் குமைந்து கொண்டிருந்த உணர்வுகள் மேலெழத் தொடங்கின. தபாலுறை கிழிக்கப்பட்ட சஞ்சிகையை அவன் எடுத்துக்கொண்டு முதலாளியின் முன்னே போய் நின்றான்.

'அண்ணை... இது எனக்குவந்த தபால். உங்கட தம்பி உடைச்சுப் பார்த்தவராம்... ஏன் உடைச்சவர்?'

முதலாளியின் முகம் சுருங்கிவிட்டது. ஏனைய தொழிலாளிகள் இதுவரையிலும் கேட்காத கேள்வி அது. அவர் தன்னைச் சுற்றி இருப்பவர்களைப் பார்த்தார். அவரிடம் வழக்கமாக வரும் இருவரும் அவரை ஒருவித அருக்குளிப்போடு நோக்கினர். முதலாளி இதைக் கவனித்து விட்டார்.

'சரி கொண்டு போ... பிறகு பார்ப்பம்...' அவர் அலட்சியமாகக் கூறியது அவனுக்கு மேலும் கடுப்பை ஏற்றியது.

'இனி வாற எந்தவொரு கடிதங்களையும் உடைச்சுப் பார்க்க வேண்டாம், படிக்கவும் வேண்டாம்...'

முதலாளி இந்த வார்த்தையை அவனிடமிருந்து எதிர்பார்க்கவில்லை. திடீரென கையில் வைத்திருந்த ரீயை விசுக்கென அவனது முகத்தில் ஊற்றிவிட்டார். கொதிநீர் முகத்தில் பட்டதும் அவன் துடித்துப்போனான்.

'எளிய நாய்ப்பயல். ஒரு கடிதம் உடைத்ததற்கு, இவ்வளவு வீம்பு...'

எல்லாம் ஒருகணம்தான். அவன் தன் கையைப் பொத்திப் பிடித்து முதலாளியின் முகத்தில் ஒரு குத்துக் குத்தினான். அவரிடம் வந்த இருவர் விலக்குப் பிடிக்கும் நோக்கில், அவனது கையையும் உடம்பையும் பிடிக்க, முதலாளிக்குப் பின்பாக நின்ற அவரது உறவினன், அவனது கன்னத்தில் அறைந்தான். அவன் திமிறினான். அதற்கிடையில் உறவினன் மேற்கொண்டு, அவனில் தாக்காதபடிக்கு, அவனை பலவந்தமாகப் பிடித்து இழுத்துக் கொண்டு, ஆலைவளவுக்குள் புகுந்தனர் இருவரும். அவர்களது முகம் இரண்டும் சிவந்திருந்தன.

'என்னப்பா இந்தாள்... கொதிக்கிற தண்ணியை பொடியன்ர முகத்தில ஊத்திப்போட்டு இருக்குது...'

அவர்களில் ஒருவர் கூறவும், மற்றவர் கடுங்கோபத்துடன் முதலாளியின் வீட்டு வளவுக்குள் நடந்தார். வீட்டு முற்றத்தில் இருவரது குரலும் ஒலியில் ஓங்கியபடி இருந்தன.

அவனோடு நின்ற மற்றவர், 'தம்பி... அவர் செய்தது பிழையான காரியம். போய் பொடியளின்ர முகாமில சொல்லு. அடிபடாதை. உனக்காக அடிபட இப்ப மில்லில ஒருதருமில்ல...' கூறிவிட்டு அவர் செல்ல, அவர் பின்னே அவனும் சென்றான்.

முகாமில் பொறுப்பாளர் இருந்தார். அவன் கூறியதை எல்லாம் கேட்டார். ' சரி... நாளைக்கு வாரும் விசாரிப்பம்...'

'நாளைக்கு நான் என்னெண்டு வாறது? அங்கை மில்லிலை போய் தங்கேலாது...' அவன் கூறியதை பொறுப்பாளர் கவனத்தில் எடுக்கவில்லை. அவன் அன்றிரவு ஆலையில் வேலை செய்யும் ஊரவனான சக தொழிலாளியின் வீட்டில் தங்கினான். சகதொழிலாளி முகாம் பொறுப்பாளரைப்பற்றிச் சொன்ன சில தகவல்கள்... தனக்கு நீதி கிடைக்கப்போவதில்லை என்பது மட்டும் விளங்கியது அவனுக்கு.

மறுநாள்காலை முகாமுக்குப் போனபோது, பொறுப்பாளர் இருக்கவில்லை. இரண்டாம் தரநிலையில் உள்ளவன் இருந்தான். அவன் சொன்னபதில் அவனுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

**முகாமில் பொறுப்பாளர் இருந்தார். அவன் கூறியதை எல்லாம் கேட்டார். ' சரி... நாளைக்கு வாரும் விசாரிப்பம்...'**

**'நாளைக்கு நான் என்னெண்டு வாறது? அங்கை மில்லிலை போய் தங்கேலாது...' அவன் கூறியதை பொறுப்பாளர் கவனத்தில் எடுக்கவில்லை. அவன் அன்றிரவு ஆலையில் வேலை செய்யும் ஊரவனான சக தொழிலாளியின் வீட்டில் தங்கினான். சகதொழிலாளி முகாம் பொறுப்பாளரைப்பற்றிச் சொன்ன சில தகவல்கள்... தனக்கு நீதி கிடைக்கப்போவதில்லை என்பது மட்டும் விளங்கியது அவனுக்கு.**

மேற்படி, சம்பவம் பெரிதாகப் பாரதூரமானது இல்லையென்றும், இதை இயக்கத்தின் மேல்நிலை விசாரிக்காதென்றும், இதை விசாரிப்பதற்கு, இணக்கமன்று ஒன்று இருக்குது என்றும், அங்கே போய் விசாரிக்கும்படியும், அந்த இடம் இருக்கும் பகுதியையும் அதன் பொறுப்பாளருடைய பெயரையும் கூறினான் இரண்டாம்நிலைப் பொறுப்பாளன்.

அவனுக்கு மனம் சலித்துவிட்டது. இயக்கத்தைக் குறித்து அவன் உயர்வாக நினைத்து கொண்டிருந்த எண்ணங்கள் சிதிலமடைய ஆரம்பித்தன. வேலை செய்த பணம் முதலாளியிடம் இருக்கிறது. அதை வாங்கவேணும். உடுப்புகள் வேறு அங்கு உண்டு. அதையும் எடுக்கவேணும்... இவ்வாறாக, அவன் பலதையும் நினைத்துக்கொண்டு, இணக்கமன்றுப் பொறுப்பாளர் யார் எனத் தேடி விசாரித்ததில், அவர் சந்தைக்குள் மரக்கறி வியாபாரம் செய்பவரெனத் தெரிய வந்தது. அவன் சந்தைக்குப் போனான். அவரைத் தேடிக் கண்டுபிடிச்சு, அவரிடம் நடந்த

சம்பவத்தைக் கூறியபோது, அவர், ஞாயிற்றுக் கிழமைகளில்தான், விசாரணை. மற்றும்படி இல்லை என ஒரே முத்தாய்ப்பா முடித்தார். மேற்கொண்டு அவன் அன்று நடந்த நிகழ்வுகளைத் தெளிவாகக் கூறிக் கொண்டிருக்கையில், அவரோ தனது வியாபாரத்தில் கண்ணாயிருந்தார். அவனுக்கு மனதுக்குள் ஏதோ குமைவதும் வேதனைப்படுத்துவதுமாக இருந்தது. திரும்பி அவன் புதுக்குடியிருப்புக்கு வந்துவிட்டான். தொடர்ந்து மூன்று தடவைகள் சென்றபோது, மன்றப் பொறுப்பாளரிடம் தெளிவான பதில் இல்லை. இறுதியில் அவன் 'எனக்கு இதற்கொரு தீர்வு இல்லையெனில், நான் தலைவருக்குக் கடிதம் போடுவன்...' கூறிவிட்டு வந்துவிட்டான்.

மறுஞாயிறு மதியம் போல் போனபோது, மன்றப் பொறுப்பாளர் சந்தையில் இருந்தார். அவனைக் கண்டதும் 'விசாரிச்சனான். நீர்தானாம் முதலில் அடித்தனீர்...?'

'ஓம்... நான்தான் அடிச்சனான். கொதிநீரை முகத்தில ஊற்றினால், ஆர்தான் அடிக்காமல் விடுவாங்கள்...?'

'என்ன இருந்தாலும் அவரொரு முதலாளி. நீர் கைநீட்டி அடிச்சது தப்பு...' என்று கூறியவர், தனது பொக்கெற்றில் இருந்து ஐநூறு ரூபாவை எடுத்துக் கொடுத்தார்.

'என்ன இது.. ?'

'உம்முடைய சம்பளம்...'

அவன் சினத்தின் உச்சிக்கே சென்றுவிட்டான்.

'எனது சம்பளம் ஐநூறல்ல. குறைஞ்சது மூவாயிரத்து ஐநூறு ரூபா வரும்...'

'எனக்கு உதைப்பற்றித் தெரியாது. இதைத்தான் முதலாளி தந்தவர்...'

'அப்ப என்னத்துக்கு இணக்கமன்று பேர் வைச்சு, அதுக்குப் பொறுப்பாளராய் இருக்கிறாய்?

உதை நான் வாங்கினால், அவனைவிட நான் பிச்சைக்காரன். கொண்டுபோய் அவனிட்டை குடு. கடைசி நேரத்தில வாய்க்கரிசியோடை கலந்துபோட உதவும்...' கூறிவிட்டு அவன் வந்துவிட்டான்.

**ஆனால் : ஆலைமுதலாளி? முகாம் பொறுப்பாளர்? இணக்க மன்றப் பொறுப்பாளர்...? சக தொழிலாளர்கள்...? புலிகள் அமைப்பு...?**

**இவர்களெல்லாம் இன்று எங்கே?**

**கயமை மிகுந்த மனிதர்களுக்கு, குறிப்பாக இயக்கத்தில் இருந்தவர்களுக்கு கண்ணில்லாமல் இருக்கலாம். ஆனால், காலத்திற்குக் கண்ணுண்டு என்பதை அது சிலரது வாழ்வியலில் நிகழ்த்திவிட்டு நகருகிறது.**

ஊருக்குச் செல்வதற்கான கடைசி பஸ்சைத் தவறவிட்ட நிலையில், அவன் அன்றிரவு ஊரிலுள்ள சக தொழிலாளியின் வீட்டில் தங்கினான். சகதொழிலாளி கூறிய சில விடயங்கள் அவனை ஆச்சரியப்பட வைத்தன.

இணக்கமன்றுப் பொறுப்பாளர் ஆலை முதலாளியின் தூரத்துச் சொந்தக்காரன். இஞ்சை முதலாளிமார், வியாபாரிமாரெல்லாம் ஒண்டுக்கை ஒண்டு. ஒருத்தரை ஒருத்தர் காப்பாற்றுறதுக்குத் தான் அவங்கள் சொந்த பந்தத்தை பொறுப்பாளராகவும், வட்டச் செயலாளராகவும் வைச்சிருக்கிறாங்கள். மற்றும்படி உவங்களுக்கு இயக்கத்தில விசுவாசம், விடுதலை எண்டது இல்லை. நீ கவனிச்சுப் பார்த்திருக்கிறியே! இயக்கம் தங்களிட்டை பவுணாக, காசாக வாங்கிறது உவங்களுக்குக் கொஞ்சம் கூட விருப்பமில்லை. இருந்துபார் உது கடைசியில எல்லாம் அழிவிலதான் போய் முடியும்...'

மறுநாள் காலையில் அவன் தனது ஊருக்கு வந்துவிட்டான். அவனது உழைப்பின் வேதனம் முதலாளியின் பணப் பெட்டிக்குள் உறங்கிக் கிடந்தது. உடுதுணிகள் அவனது பெட்டிக்குள் அடுக்கிக் கிடந்தன. அத்தோடு, அவனுக்கான நீதியும்...

•••

காலம் ஒவ்வொருத்தரைக் குறித்துக் கணக்குப் போட்டு வைத்திருப்பதைப் பலர் அறிவதில்லை. காலத்திற்கு ஒரு நோக்கம் உண்டு. அது யாரை, எங்கே? எந்தப் பாதையூடாக... வழிநடத்த வேண்டும் என்பதும் அதற்குத் தெரியும். அவனைக் குறித்துக் காலத்திற்கு ஒரு கணக்கு இருந்தது. அந்தக் கணக்கின்படி அவனை வழி நடத்த ஆரம்பித்தது. அதன்படி... அவன் ஒரு தீவிர வாசிப்பாளனாக இருந்ததில், தனது அனுபவங்களை எழுதத் தொடங்கினான். ஒரு உண்மை சம்பவத்தைக் கதையாக எழுதியதில், வெற்றியும் கண்டான். கூடவே பத்திரிகைத் துறைக்குள் பணிசெய்யும் நிலை அவனை நாடிவந்தபோது, அந்த மாற்றமே தனது வாழ்வினை மாற்றப்போகிறது என்பதை அவன் அறிந்திருக்கவில்லை. ஏற்றுக்கொண்டான். எப்போதும் ஒரே வாசிப்பு... வாசிப்பு... வாசிப்பு...! ஒரே எழுத்து... எழுத்து... எழுத்து...

இன்று அவன் ஊரறிந்த நாடறிந்த எழுத்தாளன். எழுத்துத் துறைக்கான விருதுகளுக்கும், சான்றிதழ்களுக்கும் சொந்தக்காரன்.

ஆனால் -

ஆலைமுதலாளி.. ?

முகாம் பொறுப்பாளர்...?

இணக்கமன்றப் பொறுப்பாளர்...?

சகதொழிலாளர்கள்...?

புலிகள் அமைப்பு...?

இவர்களெல்லாம் இன்று எங்கே?

கயமை மிகுந்த மனிதர்களுக்கு, குறிப்பாக இயக்கத்தில் இருந்தவர்களுக்கு கண்ணில்லாமல் இருக்கலாம். ஆனால், காலத்திற்குக் கண்ணுண்டு என்பதை அது சிலரது வாழ்வியலில் நிகழ்த்திவிட்டு நகருகிறது. அந்தவகையில், ஒரு அரிசி ஆலையில் தினக்கூலியாக பணிபுரிந்தவனை... ஒரு பண முதலாளியால் அவமானப் படுத்தப்பட்டவனை... புலிகள் அமைப்பிலுள்ள முகாம் பொறுப்பாளரால் ஒதுக்கப் பட்டவனை... இணக்கமன்றுப் பொறுப்பாளரால் உதாசீனப் படுத்தப்பட்டவனை... காலம் மக்கள்முன் இனம்காட்டிவிட்டு, இன்றும்கூட இனம்காட்டிக்கொண்டு நகருவது வெறும் புனைவல்ல!

( பத்தியின் உள்கருக்களம் யாவும் புனைவல்ல)

அ

# எங்கே போய் முட்ட?

நல்ல காலம் நான் ஒரு இலக்கியவாதியாக இல்லாதிருப்பது. இல்லாவிட்டால், எந்தக் கோஷ்டி மோதலிலும் கலந்து கொள்ளாவிட்டால், 'கள்ள மௌனம் சாதிப்பதாக' இரு தரப்பினரும் குற்றம் சாட்டியிருப்பார்கள். நடுநிலையாளராக இருந்து நீங்கள் விலக்குப் பிடிக்கப் போகவும் முடியாது. உங்களுடைய எந்தக் கருத்து நிலைப்பாடு குறித்து அவர்களுக்கு விமர்சனம் இருக்கும் என்றும் தெரியாது. மனைவியை இணையர் என்று சொல்லாமல், வீட்டுக்காரி என்று சொல்வதே பெண்ணியத்திற்கு எதிராக இருக்கும். பெண்ணியத்திற்கு எதிர் என்றாலேயே, மோதிக் கொள்ளும் கோஷ்டி இரண்டுமே வேறுபாடுகளை மறந்து சேர்ந்து வந்து கும்மிப் போட்டுப் போய் விடும்.

இதற்குள் பாலியல் சுரண்டல் என்றால் கதையே வேறு. பகிரங்க மின்கம்பத் தண்டனை அல்லது Mob lynching தான். கார்ள் மார்க்ஸ்க்கே இந்தக் கதி என்றால், நமக்கு என்ன நடக்குமோ என்று குலை நடுங்குகிறது. மனைவி, துணைவி, இணைவி, வேலி பாய்கிற கதைகள் எல்லாம் ஏதோ நகைச்சுவைக்காகச் சொல்வதாக சனம் நம்பிக் கொண்டிருப்பது, இதில் இருந்து எல்லாம் தலை தப்ப வைக்கும் தம்பிரான் புண்ணியமாகி இருக்கிறது.

நல்ல காலம், நான் விட்ட புத்தகங்கள் அமசோன் கிண்டிலில். கிழிக்கவும் முடியாது. எரிக்கவும் முடியாது.

சிறுகதைகளைத் 'தொடர்ந்தும்' எழுதாததும் ஒரு வகையில் தலை காத்திருக்கிறது. தொடர்ந்து எழுதியிருந்தால், என்னையும் புலன் பெயர்ந்த சிறுகதையாளனாக்கி, அதுவே என்னையும் guilty by association ஆக்கியிருக்கும்.

இலக்கியச் சந்திப்பில் இப்படிப் பலவிடயங்கள் உரையாடப்பட்டதாக வீடியோக்கள் வந்திருந்தன. இதையெல்லாம் பார்க்கும்போது, இலக்கியவாதியாகும் உத்தேசமோ, விருப்பமோ எனக்கு இப்போதைக்கு வராது.



•••

சாருவின் போன் பழுதடைந்து விட்டதாம். பேஸ்புக்கில் பார்த்தேன். எவ்வளவு கேட்கப் போகிறார்களோ தெரியவில்லை என்று மனம் பதைபதைத்திருந்தார். இப்படி ஒரு நம்பர் வண்ணின் போன் செயலிழந்து போக விடுவது இனமானம் கொண்ட தமிழருக்கு அழகும் அல்ல.

அவ்வாறு புலம்பியதன் நோக்கமே 'சாமி, இந்த ஏழைக்கு தர்மம் போடுங்க, சாமி' என்பதாகத் தானே இருக்கும்? 'யோவ், சும்மா இலக்கியகாரர்களின் மானத்தை வாங்காதே, உன்னோட போன், அதை நீ தானே திருத்துவிக்கணும்' என்று எந்த இலக்கியகாரர்களும் கேட்க மாட்டார்கள்.

ஆனால், யாராது காமன்மேன்கள், 'உனக்கு Beer முதல் Burberry shirt வரைக்கும் எவனாவது வாங்கிக் கொடுக்கணும். செக்ஸ் டூரிசத்திற்கு பாங்கொக் போகவும் எவனாவது துட்டு அழணும். இப்ப இது வேறயா?' என்று கேட்டால்...

அதற்கு இந்த நாய் என்ன சொல்லும் என்பதும் எனக்குத் தெரியவில்லை.

•••

யதார்த்தனின் பாலியல் சுரண்டல் விவகாரம் விதை குழுமம் முதல் இலக்கியச் சந்திப்பு வரைக்கும் எதிரொலித்தது. அது விதை குழுமத்தின் கிரிஷாந்தையும் தோலுரித்து விட்டிருக்கிறது. அருண்மொழிவர்மன் எழுதிய கட்டுரையில் செலவுகளுக்கு கணக்குக் காட்டாமல், பணத் துஷ்பிரயோகம், மோசடி என்ற குற்றச்சாட்டுக்கள் இருந்தன.

கிரிஷாந்த் வெளிநாட்டில் இருந்து சந்திக்கப் போன நண்பர்கள் இருவரை குடிசாலைக்கு அழைத்துச் சென்று விலையுயர்ந்த குடிவகைகளை அவர்களின் செலவில் ஓடர் பண்ணியது பற்றி கடந்த அபத்தத்தில் எழுதியிருந்தேன்.

ஆனால், தன்னைப் பற்றி கிரிஷாந்த் எழுதிய ஒன்றை கவிஞர் கருணாகரன் தனது பேஸ்புக்கில் பகிர்ந்திருந்தார். சரி, அது அவர் பற்றியதாக இருந்தாலும், இப்போது அதைப் பகிர்வது பொதுவெளியில் எப்படிப் பார்க்கப்படும் என்று தலையைச் சொறிவதற்குள் அடுத்து இன்னொரு பதிவையும் பகிர்ந்திருந்தார்.

கிரிஷாந்த் தன்னை நியாயப்படுத்த தனது ஆசான் ஜெயமோகனை உதவிக்கு இழுத்திருந்தார். தன்னுடைய குருவை தனக்கு வழிகாட்டி என்று எழுதியிருந்தது குருவுக்குப் பெருமையாகக் கூட இருந்திருக்கும். அதையே வாசகர் கடிதமாக அனுப்பியிருந்தால், ஆசான் பெருமையோடு பிரசுரித்தும் இருப்பார்.


நான் இலக்கிய உலகத்திற்கு அப்பாற்பட்டவன். இருந்தாலும், கவிஞர் கருணாகரன் இப்படி இந்த நேரம் கிரிஷாந்தை பகிர்வது இலக்கிய வெளிக்குள் எப்படிப் பார்க்கப்படுமோ? என்று பேஸ்புக்கில் கண்ணை எறிந்து விட்டு இருந்தேன்.

பேஸ்புக்கில் அது எந்த அதிர்வுகளையும் ஏற்படுத்தவில்லை. இலக்கியவாதி(னி)கள் அது குறித்துப் பொங்கியதாகவும் இல்லை.

தமிழர்களுக்கு வந்து வாய்த்த இலக்கியவாதிகள் இப்படித் தான் இருக்கிறார்கள். இந்தச் சமூகத்திற்குள் outlier ஆக இருப்பது ஒருவகையில் தலையிடிகளுக்குள் இருந்து தப்பித்துக் கொள்ள உதவுகிறது.

இதற்கெல்லாம் போய் எங்கேயாவது முட்டியிருந்தால், தலை முறிகண்டித் தேங்காயாகித் தான் இருக்கும்.

**ஜோர்ஜ் இ.**





# கிழக்குப் பிளவும் வெருகல் படுகொலையும்

இற்றைக்கு சரியாக இருபது வருடங்களுக்கு முன்னர் 2004 ஆம் ஆண்டு மார்ச் 03 ஆம் நாள். கிழக்கு வானம் வழமைக்கு மாறாக சற்று அதிகமாகவே சிவந்திருந்தது. அன்றைய விடியல் இவ்வுலகுக்கு மாபெரும் செய்தியொன்றுடன் தொடங்கியது. சூரியன் தனது கதிர்களை அளவுக்கதிகமாகவே விசிறிக்கொண்டிருந்தான்.

அந்தப் பொழுதில்தான் ‘தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து கிழக்குப் போராளிகள் 6000 பேரும் கருணாம்மான் தலைமையில் பிளவுபட்டு நிற்கின்றோம்‘ என்னும் செய்தி கிழக்கின் மூத்த தளபதியான கரிகாலன் அவர்களின் கையெழுத்துடன் பகிரங்கப்படுத்தப்பட்டது.

இச்செய்தி வெளியானதும் வன்னிக்காடுகள் அதிர்ந்தன. உடனடியாகவே கரிகாலனின் அந்த அறிவிப்பை எந்த ஊடகங்களும் வெளியிடக் கூடாதென்கின்ற கட்டளை வன்னியிலிருந்து நாற்திசையும் பறந்தன. அதன் காரணமாக செய்தியை வெளியிடுவதில் தமிழ் ஊடகங்கள் தயக்கம் காட்டின. ஆனால் குறித்த செய்தியானது சிங்கள மற்றும் ஆங்கில ஊடகங்களில் வெளியாவதை யாராலும் தடுக்க முடியவில்லை.

கருணாம்மான் பெப்ரவரி 29ஆம் திகதியன்று தனது அனைத்து தளபதிகளையும் பொறுப்பாளர்களையும் அழைத்து கலந்துரையாடிய பின்னர் அனைவரும் இணைந்து நின்றே கிழக்கு பிரிந்து செயற்படுவதென்கின்ற முடிவுக்கு வந்திருந்தார். எவருமே ஆட்சேபனை தெரிவித்திருக்கவில்லை. அந்தளவு தூரத்துக்கு இனிமேலும் வன்னித் தலைமையுடன் இணைந்து செயற்பட முடியாதென்கின்ற நிலை கிழக்குத் தளபதிகள் முன் இருந்தது.

இறுதியாக பிரியும் முடிவினை பகிரங்கப்படுத்தும் முன்னர் மார்ச் 01ஆம் திகதி தமிழீழ விடுதலைப்புலிகளின் மட்டு-அம்பாறை தேசிய புலனாய்வுத் துறையினை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் தீர்மானத்துக்கு வந்திருந்தார் கருணாம்மான்.

அதிகாலையில் புலிகளின் மட்டு-அம்பாறை தேசிய புலனாய்வுத் துறையின் முகாம்கள் சுற்றி வளைக்கப்படுகின்றன. மூத்த தளபதிகளான பிரபா மற்றும் ரமேஷ் போன்றவர்களே இதற்குத் தலைமை ஏற்று செயலில் இறங்குகின்றனர். புலனாய்வுத்துறை முக்கியஸ்தர்களான கீர்த்தி, நீலன், மற்றும் இளங்கோ போன்றவர்கள் கைது செய்யப்படுகின்றனர். இதில் நீலன் என்பவர் இந்திய பிரதமர் ராஜீவ் காந்தியின் படுகொலைக்கான உளவுப்பிரிவின் செயற்பாடுகளுக்கு முக்கிய பாத்திரம் வகித்தவர் என்று அறியப்பட்டவராகும். ஆரையம்பதியைச் சேர்ந்த இவர் சீனித்தம்பி சோமநாதன் என்னும் இயற்பெயரைக் கொண்டவராகும். மேற்படி நடவடிக்கை ஊடாக புலிகளின் வன்னி கட்டளைத் தலைமையகத்துக்கும் புலிகளின் மட்டு-அம்பாறை தேசியபுலனாய்வுத் துறைக்குமான தொடர்புகள் மற்றும் செயற்பாடுகள் அனைத்தும் நிர்மூலமாகப்பட்டிருந்தன.

இச்செய்திகள் மட்டு-அம்பாறை பிரதேசங்களில் அமைந்திருந்த புலிகளின் முகாம்கள் எங்கும் தீயாகப் பரவத் தொடங்குகின்றன. வன்னியிலிருந்து உறுட்டலும் மிரட்டலுமான குரல்கள் கிழக்குத் தளபதிகளை வந்தடைகின்றது. ஒருமித்து முடிவெடுத்த மறுநாளிலேயே சில பொறுப்பாளர்கள் நிலை தடுமாறத் தொடங்கி விட்டனர்.

எம்.ஆர்.ஸ்டாலின் ஞானம்

அந்த வகையில் மட்டு-அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளரான கௌசல்யன், மட்டு-அம்பாறை துணை அரசியல் துறைப் பொறுப்பாளரான குயிலின்பன், மட்டக்களப்பு மாநகர அரசியல் துறைப் பொறுப்பாளரான சேனாதி போன்றவர்கள் கருணாம்மானை மறுதலித்து கிழக்கு மாகாணத்தை விட்டு இரகசியமாக வெளியேறி வன்னிக்கு ஓடிச்சென்றனர்.

இதனைத் தொடர்ந்து உடனடியாகவே தனது நிர்வாகக் கட்டமைப்பை சரிசெய்யும் வண்ணம் மட்டு-அம்பாறை பிரதேசத்துக்கான புதிய பொறுப்பாளர்களை நியமித்தார் கருணாம்மான்.

'அரசியல் துறைப் பொறுப்பாளர்-கரிகாலன்

'அரசியல் துறை துணைப் பொறுப்பாளர்-விசு

' புலனாய்வுத் துறைப் பொறுப்பாளர்-ரமணன்

' நிர்வாகத் துறைப் பொறுப்பாளர்-துரை

' இராணுவத் துறைப் பொறுப்பாளர்-ஜிம்கலி தாத்தா

'துணை இராணுவத் துறைப் பொறுப்பாளர்-றொபேட்

'இணைப்பாளர்- கிருஷன்

மேற்படி கருணம்மானின் துரித நடவடிக்கைகள் வன்னித்தலைமைக்கு தொடர்ந்தும் பேரிடியாகவே இருந்தன.

## தராக்கி என்னும் சிவராமின் பித்தலாட்டம்

தமிழ் நெட் இணையத்தளம் ஊடாக புலிகளின் பிரதான பரப்புரைப் பொறுப்பாளராக அதுவரை காலமும் செயற்பட்டு வந்த தராக்கி என்றழைக்கப்படும் சிவராம் இந்த கிழக்குப் பிளவு அறிவிக்கப்பட்ட போது மட்டக்களப்பிலேயே இருந்தார். இப்பிளவானது குறித்து அவர் எவ்வித சார்பு நிலையையும் பகிரங்கமாக எடுத்திருக்கவில்லை. தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடங்கிய காலத்திலிருந்து எப்போதுமே இரட்டை முகவராக

**தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடங்கிய காலத்திலிருந்து எப்போதுமே இரட்டை முகவராக செயற்பட்டுவந்த தராக்கி சிவராம் 'தராசு சரியும் பக்கம்' எதுவென்று காத்துக் கொண்டிருந்தார். ஆனாலும் மட்டக்களப்பில் நின்று கொண்டு கருணாவின் எல்லாவித முடிவுகளுக்கும் தானே ஆலோசனை வழங்கி வருவதாக இரகசியச் செய்திகளை கிழக்குக்கு வெளியே இருந்த தனது நண்பர்களுக்கு சொல்லிக் கொண்டிருந்தார்.**

செயற்பட்டுவந்த தராக்கி சிவராம் 'தராசு சரியும் பக்கம்' எதுவென்று காத்துக் கொண்டிருந்தார். ஆனாலும் மட்டக்களப்பில் நின்று கொண்டு கருணாவின் எல்லாவித முடிவுகளுக்கும் தானே ஆலோசனை வழங்கி வருவதாக இரகசியச் செய்திகளை கிழக்குக்கு வெளியே இருந்த தனது நண்பர்களுக்கு சொல்லிக் கொண்டிருந்தார்.

இந்நிலையில் வன்னி யிலிருந்து சிவராமுக்கு அவசர அழைப்பு வந்தது. தன்னை எப்போதும் கிழக்கு மக்களின் தனித்துவத்தை உணரும் ஒருவராய் காண்பிப்பதில் கண்ணும் கருத்துமாக இருந்து வந்தவர் சிவராம். ஆனால் கிழக்குப் பிளவு குறித்து கள்ள மௌனம் காத்திருந்தார். அதுவே அத்தகைய அழைப்பொன்றுக்கு அச்சமின்றி சமூகமளிப்பதற்கு தராக்கிக்கு வாய்ப்பாக அமைந்தது. வன்னிக்கு சென்ற சிவராம் உடனடியாகவே கருணாவின் முடிவை எதிர்த்து வீரகேசரியில் ஒரு பகிரங்க கடிதம் எழுதுமாறு அறிவுறுத்தப்பட்டார். அங்கேயே வைத்து உடனடியாக அத்தகைய கடிதமொன்றை தராக்கியிடமிருந்து எழுதி வாங்கிக் கொண்ட பின்னேரேயே அவர் கொழும்புக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டார். பின்னர் அக்கடிதமானது பின்னர் வீரகேசரியில் வெளியானது.

கருணாவின் முடிவுக் கெதிரான இப்பகிரங்க கடிதமும் கிழக்குத் தளபதிகள் பலரை நிலைகுலையைச் செய்து கருணாவை மறுதலித்து வன்னி நோக்கி ஓடவைப்பதில் பெரும் பங்கு பங்காற்றியது.

## பிரபாகரனுக்கு கருணாம்மான் எழுதிய கடிதம்

மார்ச் மூன்றாம் நாள் கிழக்கு பிளவு பொது வெளியில் அறிவிக்கப்பட்டதும் கருணாம்மான் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு ஒரு பகிரங்கக் கடிதம் எழுதினார். அதில் அவர் மிகத்தெளிவாக புலிகளின் கட்டமைப்பில் காணப்படும் யாழ் மேலாதிக்க அணுகுமுறை பற்றி பிரஸ்தாபித்ததோடு வடக்கு கிழக்கு மாகாணங்களிடையே இணைந்த நிர்வாகம் இனியொரு போதும் சாத்தியமில்லை என்பதையும் அழுத்தம் திருத்தமாக தெரிவித்திருந்தார். அதற்கு ஆதாரமாக பதின்னான்கு முக்கிய விடயங்களை அவர் சுட்டிக் காட்டியிருந்தார்.

'எமது போரில் வரலாற்றில் எங்கள் மட்டக்களப்பு அம்பாரை மாவட்டம் பெரும் பங்காற்றியுள்ளது என்பதை எவருமே மறுக்கவோ மறைக்கவோ முடியாது. அது மட்டும் அல்ல பல படுகொலைகளையும் அழிவுகளையும் எங்கள் மாவட்டங்கள் சந்தித்துள்ளன.

'இதுவரை நடந்த போராட்டத்தில் 6800 மட்-அம்பாறை போராளிகள் களத்தில் வீரச்சாவு அடைந்துள்ளார்கள். இவர்களில் கிட்டதட்ட 4000 வீரர்கள் உங்களின் கட்டளையை ஏற்று வந்து யாழ் வன்னி மண்ணில் வீரச்சாவு அடைந்துள்ளார்கள்.

'நாங்கள் வன்னி களமுனையில் போரிட்டு கொண்டிருந்த போதெல்லாம் பல பல பிரதேசவாத கருத்துக்களையும் சிக்கல்களையும் விமர்சனங்களையும் எதிர் கொண்டு வந்திருக்கிறோம். இவைகள் யாவும்

உங்களுக்கு தெரிந்த விடயங்கள் இருந்தாலும் உங்கள் மீதுள்ள பக்தியின் காரணமாக எல்லா விடயங்களையும் சமாளித்தே வந்திருக்கிறோம்.

'தற்போது இந்த பிரச்சினை பெரிதாகி விட்டுள்ளது. இதற்காக காரணத்தையும் உங்களுக்கு தெளிவுபடுத்த கடமைப்பட்டுள்ளேன்.

இதுவரை 32 தமிழீழ பொறுப்பாளர்கள் உங்களால் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இவர் களில் எவருமே மட்- அம்பாறையை சேர்ந்தவர்கள் கிடையாது.

'போர் மிக உக்கிரமான நடைபெற்ற காலங்களில் இங்குள்ள மக்களும் போராளிகளும் இதை உணர்ந்து கொள்ள விட்டாலும் தற்போது ஏற்பட்டுள்ள இந்த அமைதியான சமாதான சூழ்நிலையில் இதை அனைவரும் அவதானித்து பல கேள்விகளை எழுப்புகிறார்கள். இதற்கு நாங்கள் பதில் கூறுவதற்கு கடமைப்பட்டுள்ளோம்.

'அதுமட்டுமல்ல இதுபோன்ற வெளி மாவட்ட தமிழீழத் துறை பொறுப்பாளர்கள் இங்கு வேலை செய்வதால் பல சிக்கல்கள் உருவாகிக் கொண்டே இருக்கின்றன. அவர்களால் எங்களின் மக்களின் உணர்வுகளையோ போராளிகளின் உணர்வுகளையோ புரிந்து கொள்ள முடியாதுள்ளது.

'இதை விட வேதனையான விடயம் என்னவென்றால் வடக்கிலிருந்து வந்த தமிழீழ நிர்வாக துறை பொறுப்பாளர்கள் இங்கு சொகுசு வாகனங்களில் உலா வரும்போது 400 க்கும் மேற்பட்ட மட்-அம்பாறையைச் சேர்ந்த ஜெயந்தன் படையணிப் போராளிகள் வன்னி களமுனைக் காவலரண்களில் இன்னும் கடமை பார்க்கிறார்கள். இது எந்தவகையில் நீதியாகும்?.

'இந்த சமாதான காலங்களில் எந்தவொரு வீரனும் தனது சொந்த இடத்தில் இருப்பதையும் தனது உறவுகளோடு இருப்பதையுமே விரும்புவான் இதைப்பற்றி அங்குள்ள

**தெருக்களெல்லாம் தமக்கான அரசியல் தலைமையொன்று உருவாகி விட்டதென்கின்ற மகிழ்ச்சியில் விழாக்கோலம் பூண்டிருந்தது. அதுவரைகாலமும் தமது குழந்தைகளை இழுத்துச் சென்று பலியிட்டு வந்த ஒரு இருண்டகாலத்திலிருந்து விடுதலை கிடைத்து விட்ட உணர்வு சாமானிய மக்களிடம் மேலோங்கியிருந்தது. பிரபாகரனை சுற்றியிருந்த மேதகு,தேசியத் தலைவர், ஏகபிரதிநிதி என்கின்ற ஒளிவட்டங்கள் எல்லாம் வீதி வீதியாகப் பந்தாடப்பட்டன. பிரபாகரனின் உருவப் பொம்மைகள் கூட படுவான்கரை வீதிகளில் கொளுத்தப்பட்டன.**

பொறுப்பாளர்கள் சிந்திப்பதாக தெரியவில்லை.

'இனியொரு போதும் இங்கிருந்து படைநகர்த்துவதையோ இங்குள்ள வீரர்கள் அங்கு வந்து மடிவதையோ இங்குள்ள பெற்றோர்கள் ஒருபோதும் அனுமதிக்க மாட்டார்கள். இதை நீங்களும் நன்கறிவீர்கள்.

'என்னை பொறுத்தவரை இதுவரை காலமும் வட தமிழீழ மக்களுக்காக விலைமதிக்கமுடியாத உயிர்களையும் கொடுத்து திருப்திகரமாக கடமை செய்துள்ளதாகவே உணர்கின்றேன். தற்போது இந்த வாய்ப்பான காலகட்டத்தில் கிழக்கு மக்களுக்கு கடமை செய்வதையே விரும்புகின்றேன்.

'இந்த விடயத்தில் எவரும் தலையிடுவதை நான் விரும்பவில்லை. தமிழீழ நிர்வாக பொறுப்பாளர்களை தவிர்த்து நேரடியாக உங்களின் கீழ் சுதந்திரமாக இங்கு பணியாற்றுவதையே விரும்புகிறேன்.

'இதனால்தான் இங்கு புலனாய்வுத்துறையும் இடை நிறுத்தியுள்ளேன்.

'நாங்கள் உங்களை விட்டுப் பிரிந்து செல்லவோ உங்களை வெறுக்கவோ இல்லை மாறாக உங்களை எங்களின் கடவுளாகதான் பார்க்கிறோம். சிலவேளை இந்த முடிவு உங்களுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தலாம். இதற்காக உங்களிடம் மன்னிப்பும் கேட்கின்றேன். ஏனெனில் இங்குள்ள மக்களினதும் போராளிகளினதும் உணர்வுகளுக்கு மதிப்பளியாமல் அவர்களின் அபிலாசைகளை சுட்டிக்காட்டாமல் இருந்த வரலாற்று தவறை நான் விட விரும்பவில்லை.

'இங்குள்ள மக்களை நீங்கள் நேசித்தால் இங்குள்ள போராளிகள் பொறுப்பாளர்கள் மீது நம்பிக்கை இருந்தால் எங்களை உங்களின் தலைமையின் கீழ் நேரடியாக சுதந்திரமாக செயற்பட விடுங்கள். மேற்படி கடிதமானது பிரசுர வடிவில் கிழக்கு மாகாணமெங்கும் விநியோகிக்கப் பட்ட போதிலும் செய்தி ஊடகங்கள் எதிலும் வெளிவரவில்லை. நான்காம் ஐந்தாம் திகதிகள் முழுக்க தமிழ் ஊடகங்கள் கள்ள மௌனம் காத்தன.

ஆனால் கிழக்கு மாகாணத்தின் சார்பில் கருணாம்மான் எழுப்பிய நியாயமான கோரிக்கைகளை பல தளபதிகளும் புத்திஜீவிகளும் பொதுமக்களும் ஆதரித்து ஆர்ப்பாட்டங்களையும் ஊர்வலங் களையும் மாகாணமெங்கும் நடாத்தினர். தெருக்களெல்லாம் தமக்கான அரசியல்தலைமையொன்று உருவாகி விட்டதென்கின்ற மகிழ்ச்சியில் விழாக்கோலம் பூண்டிருந்தது. அதுவரைகாலமும் தமது குழந்தைகளை இழுத்துச் சென்று பலியிட்டு வந்த ஒரு இருண்டகாலத்திலிருந்து விடுதலை கிடைத்து விட்ட உணர்வு சாமானிய மக்களிடம் மேலோங்கியிருந்தது. பிரபாகரனை சுற்றியிருந்த மேதகு, தேசியத் தலைவர், ஏகபிரதிநிதி என்கின்ற ஒளிவட்டங்கள் எல்லாம் வீதி வீதியாகப் பந்தாடப்பட்டன. பிரபாகரனின் உருவப்

பொம்மைகள் கூட படுவான்கரை வீதிகளில் கொளுத்தப்பட்டன.

இந்த வேளைகளில் கருணாம்மானோ மட்.ஈரலக்குளம் காட்டுப்பகுதியிலுள்ள தனது மீனகம் முகாமில் இருந்து கொண்டு கையிலே ஓரஞ் ஜூஸ் கிளாஸுடன் தன் படையணிகள் புடைசூழ சாவகாசமாக பேட்டி கொடுத்துக் கொண்டிருந்தார். ஒரு வெளிநாட்டு நிருபர் இப்படிக்கேட்டார் 'பிரபாகரனுக்கு இதுவரைகாலமும் இப்படியொரு சவாலை யாரும் விட்டதில்லை. அப்படியிருக்க அவரது ஆளுமை, அதிகாரம், இரும்புக்கரம் என்பவற்றை உடனிருந்து அறிந்தவர்கள் நீங்கள். உங்களால் அவரை வெற்றி கொள்வதென்பது எவ்வளவு தூரம் சாத்தியம்'? இந்தக்கேள்விக்கு கருணாம்மான் அதுவெல்லாம் அவரைப்பற்றி நீங்கள் அறிந்தவை, ஆனால் அவரது உண்மை முகம் எனக்குத்தெரியும் என்று அநாயசமாக சிரித்துக்கொண்டு பதிலளித்தார். இந்தப் பதிலை பிரபாகரன் வெறும் கோழை, கொலைகளை மட்டுமே நம்பி அரசியல் செய்பவர், அவரை விட நானே இராணுவ வித்தகன் என்று பலவறாகப் புரிந்துகொள்ளலாம்.

அதனால்தான் அவர் வன்னிக்கு வருமாறு வந்த அழைப்பை நிராகரித்து சுதாகரித்துக்கொண்டார். பிரபாகரனுக்கு சவால் விட முயன்றவர்கள் யாரும் உயிரோடு மீண்டதில்லை என்பதை கருணாம்மான் தெரியாதவரல்ல. பிரபாகரனை நோக்கி கேள்வியெழுப்புவதானால் இடைவெளியை பேணிக் கொள்ளவேண்டும் என்பதை அறியாதவரல்ல. தனக்கு பாதுகாப்பான சூழல் மட்டு-அம்பாறையில் மட்டுமே உள்ளது என்பதை அவர் நன்கே அறிந்திருந்தார். தலைவர் வன்னிக்கு அழைப்பது 'அன்பாக பேசுவதற்கு' அல்ல என்பதையும் அறிந்தேயிருந்தார் அவர்.

**பிரபாகரன் கொண்டிருக்கக் கூடிய நோய்களைக் காரணம் காட்டி விரைவில் இந்தப் பிரச்சனை தீராது விடின் 'அண்ணையின் உயிருக்கு ஆபத்து' என்கின்ற பாசக்கயிறுகள் வீசப்பட்டன. 'அண்ணைக்கு மயக்கம் வருகின்றது', 'இதோ வீழப்போகிறார்' என்று தொடர் வலைவீசல்கள் தொடர்ந்தன. இத்தகைய நயவஞ்சகப் பேச்சுக்களின் மயங்கி மேலும் பல தளபதிகள் கருணாம்மானை மறுதலித்து வன்னிக்கு ஓடத்தொடங்கினர்.**

### பொட்டம்மான் வீசிய பாசக்கயிறு

இப்படியானதொரு சூழலில் கிழக்கில் கருணாம்மானை எப்படி கையாளப்போகின்றோம் என்கின்ற கேள்வி வன்னி புலிகளின் நிலைமைகளை மென்மேலும் சிக்கலுக்கு உள்ளாக்கியது.

கிழக்கு மாகாணத்தின் பல பொறுப்பாளர்கள் வன்னிக் களமுனைகளில் நீண்ட காலத்துக்கு பணியாற்றி வந்தமையினால் அவர்களில் பலர் வட மாகாணப் பெண்களையே திருமணம் முடித்திருந்தனர். எனவே இந்த கிழக்குப் பிளவு அறிவிக்கப்பட்ட போது பொறுப்பாளர்களான பலரின் மனைவியர் பலர் வன்னிப் பகுதிகளிலேயே மாட்டிக்கொண்டனர். எனவே அவர்களை தூண்டிலாகப் பயன்படுத்தி கருணாம்மானை சுற்றியுள்ள மூத்த பொறுப்பாளர்களை உளவியல் ரீதியாக திசை திருப்பும் படலம் ஒன்றை பொட்டம்மான் தலைமையிலான புலனாய்வுத்துறை முடுக்கி விட்டது.

பிரபாகரன் கொண்டிருக்கக் கூடிய நோய்களைக் காரணம் காட்டி விரைவில் இந்தப் பிரச்சனை தீராது விடின் 'அண்ணையின் உயிருக்கு ஆபத்து' என்கின்ற பாசக்கயிறுகள் வீசப்பட்டன. 'அண்ணைக்கு மயக்கம் வருகின்றது', 'இதோ வீழப்போகிறார்' என்று தொடர் வலைவீசல்கள் தொடர்ந்தன. இத்தகைய நயவஞ்சகப் பேச்சுக்களின் மயங்கி மேலும் பல தளபதிகள் கருணாம்மானை மறுதலித்து வன்னிக்கு ஓடத்தொடங்கினர். இந்த வேலைத்திட்டத்தை கரிகாலனின் மனைவியின் தலைமையில் ரமேஷ், ராம் போன்றோரின் மனைவியரும் இணைந்து வன்னியிலிருந்து தொலைபேசிகள் ஊடாக மிகக் கச்சிதமாகச் முன்னெடுத்தனர்.

இதன் காரணமாக அடுத்தடுத்து வந்த நாட்களில் கருணாம்மானின் புதிய நிர்வாகக் கட்டமைப்பு பொறுப்பாளர்களாக நியமனமாகிய கரிகாலன், ரமணன் மற்றும் தளபதிகளான ரமேஷ், ராம், பிரபா போன்றோரும் வன்னிக்கு ஓடிச்சென்று சரணடைந்தனர்.

அதே போன்று பாராளுமன்றத் தேர்தலை எதிர்கொண்டிருந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்களுக்கும் கருணாவை எதிர்த்து அறிக்கை விடுமாறு பல்வேறுவிதமான நெருக்கடிகள் வன்னியிலிருந்து கொடுக்கப்பட்டன. அதன்படி ஜோசேப் பரராசசிங்கம் மட்டுமே தாம் தமிழ் தேசியத்தின் பக்கமிருந்து விலக முடியாதென்றும் கருணாவின் முடிவை ஆதரிக்க முடியாதென்றும் அறிக்கைகள் வெளியிட்டார். அவரைத்தவிர ஏனைய வேட்பாளர்கள் கருணாவின் பக்கமே நின்றனர்.

குழப்ப நிலைகள் அதிகரிக்க அதிகரிக்க கொழும்பிலிருந்த உள்நாட்டு, வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் ஓடுவது வன்னிக்கா? அன்றி மட்டக்களப்புக்கா? என்று திக்குத்தெரியாமல் திணறி நின்றனர். அதுவரையும் வெளியான தகவல்களை உறுதி செய்யும் படிக்கு வன்னிக்கு தொடர்பு கொண்ட ஊடகவியலாளர்களுக்கு 'அப்படியொன்றுமில்லை' என்று சொல்லிக்கொண்டு இராணுவத் தீர்வுக்கான திட்டமிடல்கள் ஒரு புறம் இரகசிய விலைபேசல்கள் மறுபுறம் என்று ஒவ்வொரு கணப்பொழுதினதும் அர்த்தம் முழுமையாக உணரப்பட்டு நாலாபுறமும் செயற்பாடுகள் முடுக்கி

விடப்பட்டுக் கொண்டிருந்தன. இறுதியாக புலிகளின் தலைமையகம் நின்று நிதானித்து பதில் சொல்லியாக வேண்டிய நிலைக்கு வரலாற்றில் முதற்தடவையாக தள்ளப்பட்டது.

## கிளிநொச்சி பத்திரிகையாளர் மாநாடு

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்செல்வன் தலைமையில் மார்ச்-06 ஆம் திகதி இம்மாநாடு புலிகளின் கிளிநொச்சி சமாதானச் செயலகத்தில் இடம்பெற்றது. கிழக்கிலிருந்து அம்மக்களின் விருப்பங்களுக்கு மாறாக வன்னிக்கு ஓடிச்சென்றுபிரபாகரனின் காலடியில் வீழ்ந்தவர்களான கௌசல்யன், குயிலின்பன், சேனாதி,கரிகாலன், பிரபா,ரமேஷ் போன்றவர்களின் நடுவே தனக்கேயுரிய அந்த பொய்யான புன்னகையுடன் தமிழ்ச்செல்வன் அமர்ந்திருந்தார். கிழக்குப்பிளவு ஏற்பட்டு மூன்று நாட்களுக்கு வடக்கு கிழக்குக்கு வெளியே செய்தி கசிந்து விடக் கூடாதென்று புலிகள் பகீரதப் பிரயத்தனம் மேற்கொண்டனர். பத்திரிகைகளுக்கான அவர்களது இரும்புத்திரைகளையும் தாண்டி மட்டு-அம்பாறை பிரதேசமெங்கும் புலிகளுக்குள் பூகம்பம் என்னும் செய்திகள் பரவத் தொடங்கியிருந்தன. எனவே பிரச்சனைகளை ஒப்புக்கொண்டு பூசி மெழுகும் நிலைக்கு வன்னித் தலைமைகள் வந்திருந்தன. அதன்படி குறித்த பத்திரிகையாளர் மாநாட்டில் தமிழ் செல்வன் கீழ்வருமாறு அறிவிப்புகளைச் செய்தார்.

'தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு எதிரான சில தீய சக்திகளின் தூண்டுதலில் பெயரில் மட்-அம்பாறை விசேட தளபதியாக இருந்த கருணா தமிழீழத் தேசியத் தலைமைக்கும் தமிழீழ மக்களுக்கும் துரோகம் இழைத்து பிரிந்து செல்ல முற்பட்டுள்ளார்.

'இந்த அப்பட்டமான துரோகத்தை ஏற்றுக்கொள்ளாது அவரின் கீழிருந்த தளபதிகளும் பொறுப்பாளர்களும் போராளிகளும் அவரது கட்டளைக்கு கீழ்ப்படிய மறுத்ததோடு இங்குவந்து தமிழீழ தேசியத் தலைமையை சந்தித்து அங்குள்ள நிலைமைகளை விளக்கியுள்ளனர்.

'இதற்கமைய அவரது பொறுப்பி லிருந்தும் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்தும் கருணா நீக்கப்பட்டுள்ளார். என்றும் இதன் காரணமாக மட்டு-அம்பாறை பிரதேசத்துக்கு புதிய நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றினை புலிகளின் தலைமை ஏற்படுத்தியுள்ளதாக அறிவித்தார்.

**கிழக்குப்பிளவு ஏற்பட்டு மூன்று நாட்களுக்கு வடக்கு கிழக்குக்கு வெளியே செய்தி கசிந்து விடக் கூடாதென்று புலிகள் பகீரதப் பிரயத்தனம் மேற்கொண்டனர். பத்திரிகைகளுக்கான அவர்களது இரும்புத்திரைகளையும் தாண்டி மட்டு:அம்பாறை பிரதேசமெங்கும் புலிகளுக்குள் பூகம்பம் என்னும் செய்திகள் பரவத் தொடங்கியிருந்தன. எனவே பிரச்சனைகளை ஒப்புக்கொண்டு பூசி மெழுகும் நிலைக்கு வன்னித் தலைமைகள் வந்திருந்தன.**

அதனடிப்படையில் மட்டு-அம்பாறை விசேட தளபதியாக ரமேஷ், தளபதியாக ராம்,துணைத் தளபதியாக பிரபா, மற்றும் அரசியல் துறை பொறுப்பாளராக கௌசல்யன் போன்றோர் தமிழீழத் தேசியத்தலைமையினால் நியமிக்கப் பட்டுள்ளதாக இம்மாநாட்டில் அறிவிக்கப்பட்டது. இந்த நீக்கிவிடும் அறிவிப்பின் ஊடாக கருணாவும் அவரது போராளிகளும் தலைமையின் கட்டுப்பாட்டில் இல்லை எனும் செய்தியை வெளிஉலகுக்கு மறைத்து ஏதோ தாங்கள்தான் நீக்கிவிடுவதாக நடித்து வன்னித் தலைமை தான் எதிர்கொண்ட சரிவை நிலை நிறுத்திக்கொள்ள எத்தனிப்பது தென்பட்டது. காரணம் மாத்தையாவின் பிரச்சனைபோல் கருணாவின் பிரச்சனையை வன்னித் தலைமையால் இலகுவாக கையாள முடியாதிருந்தது. இதற்கான முதன்மையான காரணம் 02.02.2002 ல் இருந்து இராணுவ ரீதியாக அமுலில் இருந்த போர்நிறுத்த சூழலாகும். சமாதான ஒப்பந்தத்தின் படி அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் புலிகள் ஆயுதங்களுடன் நடமாடுவதோ படைநகர்த்தல்களை மேற் கொள்வதோ தடை செய்யப்பட்டிருந்தது.

இரண்டாவது காரணமாக கிழக்கின் நிலைகொண்டிருந்த கருணாவின் படை வலு சமநிலை வன்னித் தரப்பினரை சற்று யோசிக்க வைத்தது. மாத்தையாவின் பிரச்சனை எழுந்தபோது அவரைப் பொறுத்தவரை அவர் தனது கட்டுப்பாட்டில் பெரும்தொகையான போராளிகளை கொண்டிருந்த போதிலும் புவியியல் அமைப்பின் கிட்டிய தன்மையானது நேரடியாகவே அப்போராளிகளை தலைப்பீடமும் தனது கண்காணிப்புக்குள் மீளக் கொண்டுவருவது சாத்தியமானது. ஆனால் கருணா நிலைகொண்டிருந்த இடமும் அவரது படையணிகளும் பிரத்தியேகமானதொரு புவியியல் கள, தள நிலமையை கொண்டதாக இருந்தன. கருணாவை இலகுவாக கைதுசெய்வதோ நினைத்த மாத்திரத்தில் தீர்த்துக் கட்டிவிட்டு துரோகி என அறிவிப்பதோ அவ்வளவு எளிதானதொன்றல்ல. எனவேதான் வழமைக்கு மாறாக கருணாவை இயக்கத்தில் இருந்து நீக்கிவிடும் ‘பெருந்தன்மையான’ முடிவொன்றை பிரபாகரன் எடுக்கும் நிலைக்கு உள்ளானார். இதற்கு துணையாக வடக்கில் இருந்து வெளியாகின்ற எல்லாவிதமான பத்திரிகைகள் மட்டும் அல்ல கொழும்பை மையமாகக் கொண்டியங்கும் தேசியப்பத்திரிகைகளும் கூட தமது சுயங்களை காற்றோடு கலந்துவிட்டு கிளிநொச்சியில் இருந்து அறிவிக்கப்படும் முடிவுகளின் படியே செய்திகளைத் தயாரித்து

**இந்தக் கடை யடைப்பும் மாணவர்கள், தொழிலாளர்கள் அனைவரது பகிஸ்கரிப்பு நடவடிக்கைகளும் கருணா முன்வைத்த கேள்விகள் அனைத்தும் தமது அடிப்படை பிரச்சனைகளில் இருந்து எழுந்தவையாகும் என்பதை நிரூபித்தன. இந்தளவு தூரத்திற்கு கருணா முன்வைத்த கேள்விகள் மக்கள் மயமானதானது வன்னித்தலைமையை மேலும் நிலைகுலைய செய்தது. இந்த ஹர்த்தாலானது மென்மேலும் கருணாவினது ஆத்ம பலத்தை அதிகரிக்கச் செய்யும் ஓர் நிகழ்வாய் இருந்ததைக் கண்டு வன்னித்தலைமை அஞ்சியது.**

வெளியிடக் காத்திருந்தனர்.

இந்த மாநாட்டின் பின்னர் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறை பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் அறிவித்தபடியே தீய சக்திகளின் சதி, துரோகத்தனம், தனிமனிதன் என்ற சொல்லாடல்களோடு தமது பக்கங்களை நிரப்பத் தொடங்கினர். அதற்கேற்றாப்போல் வன்னிப்புலிகளின் விருப்பத்தின் படியும் அவர்களின் ஆசீர்வாதத்தோடும் புற்றீசல்களாய் கிளம்பிய பலவிதமான வெகுசன அமைப்புகளும் புது புதுச் சங்கங்களும் கிழக்கு மக்களுக்கு எதிராக இப்பிளவினை கொச்சைப்படுத்தி தமது பிரச்சாரங்களை கட்டவிழ்த்து விட்டனர்.

இலங்கை தமிழ் சூழலின் புத்திசாலிகளாகக் கருதப்படக்கூடிய பிரபல பத்திரிகையாளர்கள், பேராசிரியர்கள், எழுத்தாளர்கள் மற்றும் இன்னபிற வகையினரான கருத்துச் சொல்லவும், கட்டுரை எழுதவும் தகுதி படைத்திருந்த பெரும்பாலானோர் தமிழீழ விடுதலைப் புலிகளுக்காக தமது வரலாற்றுக் கடமைகளை செய்வதில் திருப்தி கண்டனர். அதேவேளை கிழக்குமாகாண மக்களிடையே ஏற்பட்ட அரசியல் விழிப்புணர்வினை அடக்க நினைத்த புலிகளின் மிலேச்சத்தனமான முடிவுகளுக்கு முன்கூட்டியே ஆத்மீக ஆதரவுத்தளத்தினை பொது மக்களிடையே உருவாக்குவதிலும் வெற்றியும் கண்டனர். இவ்வரிசையில் குறிப்பிடத் தக்கவர்களாக பத்திரிகையாளர் சிவராம்(தராகி), தினக்குரலாசியர் சிவநேசச்செல்வன் (மாதொருபாகன்), பேராசிரியர் சிவத்தம்பி, கவிஞர்கள் காசிஆனந்தன் போன்றோரை குறிப்பிடலாம்.

இங்கு முதலாவது வரியிலேயே தீயசக்தியின் தூண்டுதலின் பெயரில் என தமிழ்ச்செல்வன் குறிப்பிட்டதானது கருணா தூக்கியுள்ள பிரதேச ரீதியான ஒடுக்குமுறை குறித்த பிரச்சனைகளை அப்பட்டமாக மறைக்க வேண்டும் என்ற பத்திரிகையாளர்களுக்கான அறிவுறுத்தலாகும். அத்தோடு கருணாவை ஒரு விலை போய்விட்ட தனிநபராக காட்டுவதற்கு வசதியாக வெளித்தூண்டுதல் குறித்து போலியான பிரச்சாரத்தை கட்டவிழ்த்து விடுமாறு பத்திரிகையாளர்களை கேட்டுக் கொள்வதாகும். இதுபோன்ற தமிழீழ விடுதலைப் புலிகளின் தந்திரமான பிரச்சார நடவடிக்கைகளுக்காகவே இப்பத்திரிகையாளர் மாநாடு நடத்தப்பட்டது. தமிழீழ தேசியத் தலைமைக்கும் தமிழீழ மக்களுக்கும் துரோகம் இழைத்தது என சொல்வதனூடாக கருணாவை அன்றி அவர் முன்வைத்த கேள்விகளை பத்திரிகைகளோ மக்களோ ஒரு விவாதப் பொருளாக்குவதைத் தடுத்து அவரை ஒரேயடியாக துரோகியாக்கும் பிரச்சாரத்துக்கு கட்டளையிட்டதாகவே இப் பத்திரிகையாளர் மாநாடு நடந்தேறியது.

## மட்டு:அம்பாறை மார்ச் 08 ஹர்த்தால்

வன்னியில் இருந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் பேச்சாளராக தமிழ்ச்செல்வன் விடுத்த செய்திக்கு மட்டக்களப்பு அம்பாறை மக்கள் கடுமையான எதிர்ப்பு தெரிவிக்கும் நோக்கில் இந்த ஹர்த்தால் ஒழுங்கு செய்யப்பட்டது. கருணாவின் பிரச்சனையை ஒரு தனிமனித பிரச்சனையாக உருமாற்றி அனைத்து பொறுப்புகளில் இருந்தும் அவரை நீக்குகின்றோம் எனும் செய்தி அவர்களுக்கு அளவு கடந்த ஆத்திரத்தை கொடுத்தது. இதனூடாக யாழ்பாண ஆதிக்கத்தினது ஒடுக்குமுறைக்கு எதிராக தம்மைப் பிரதிநிதித்துவப் படுத்திய கருணாவை ஒரு தனிமனித பிரச்சனையாளனாக குறுக்கி ஒரு வெற்று நபராக்க புலிகள் முனைவது அவர்களது கண்டனத்துக்கு உள்ளானது. இதற்காக மக்கள் பெரும் ஹர்த்தால் ஒன்றை பிரகடனப்படுத்தியிருந்தார்கள். மட்.மாமாங்க பிள்ளையார் ஆலய முன்றலில் அடையாள உண்ணா விரதமொன்றும் இடம்பெற்றது.

கிழக்குப் பல்கலைக்கழகமும் வீதியில் இறங்கி இந்த ஹர்த்தாலை வெற்றிகரமாக நடத்த முன்வருமாறு பொதுமக்களுக்கு அறைகூவல் விடுத்தது. கருணா முன்வைத்த பிரச்சனைகளுக்கு வன்னித்தலைமை பதில் கூற வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்தனர். கருணாவை விலக்கி விட்டதாக அறிவிப்பதனூடாக தமது பிரச்சனைகளை வன்னித்தலைமை மண் அள்ளிப்போட்டு மூடுவதற்கு முயல்வதாக அவர்கள் குற்றம் சாட்டினார்கள்.

இந்தக் கடை யடைப்பும் மாணவர்கள், தொழிலாளர்கள் அனைவரது பகிஸ்கரிப்பு நடவடிக்கைகளும் கருணா முன்வைத்த கேள்விகள் அனைத்தும் தமது அடிப்படை பிரச்சனைகளில் இருந்து எழுந்தவையாகும் என்பதை நிரூபித்தன. இந்தளவு தூரத்திற்கு கருணா முன்வைத்த கேள்விகள் மக்கள் மயமானதானது வன்னித்தலைமையை மேலும் நிலைகுலைய செய்தது. இந்த ஹர்த்தாலானது மென்மேலும் கருணாவினது ஆத்ம பலத்தை அதிகரிக்கச் செய்யும் ஓர் நிகழ்வாய் இருந்ததைக் கண்டு வன்னித்தலைமை அஞ்சியது.

எப்படியாவது கருணாவிற்காக பொதுமக்கள் களத்தில் இறங்குவதை தொடரவிடக்கூடாது என்பதற்காக தினக்குரல் பத்திரிகை உதவியுடன் புலிகள் பல வகையான பித்தலாட்டங்களை மேற் கொண்டனர்.

அதேவேளை மேற்படி கிளிநொச்சி பத்திரிகையாளர் மாநாட்டில் வன்னித் தரப்பினால் அறிவிக்கப்பட்ட மட்டு-அம்பாறை பிரதேசத்துக்குரிய புதிய நிர்வாகக் கட்டமைப்புக்கு எதிராக கருணாம்மானும் தனது புதிய நிர்வாகக் கட்டமைப்புக்கான நியமனங்களை அறிவித்தார். அதன்படி றொபேர்ட் இராணுவ தளபதியாகவும் ஜிம்கலி தாத்தா துணை இராணுவ தளபதியாகவும் விசு அரசியல் துறைப் பொறுப்பாளராகவும் துரை நிருவாகத் பொறுப்பாளராகவும் பெண்கள் படையணி தளபதியாக நிலாவினியும் நியமிக்கப்பட்டார்கள்.

கிழக்குப் பல்கலைக்கழக சமூகம் கருணாம்மானுக்கு ஆதரவான நிலைப்பாட்டினை எடுத்து வன்னித்தலைமைக்கு எதிராக ஹர்த்தால்களில் ஈடுபட்ட பின்னர் தொடர்ந்து வந்த சிலநாட்களில் கிழக்கு பல்கலைக்கழக விவசாய பீடாதிபதி தம்பையா திருச்செல்வம் அவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டார். மார்ச் 24ஆம் திகதி மட். கல்லடியிலுள்ள அவரது வீட்டில் இருந்தபோது சுமார் மலை 8.30 மணியளவில் ஆயுதமேந்திய இரு இளைஞர்களால் அவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இக்கொலையை கருணா தரப்பினரே செய்ததாக வன்னிப்புலிகள் குற்றம் சாட்டியிருந்தனர்.



## இராஜன் சத்தியமூர்த்தி படுகொலை

2004ஆம் ஆண்டின் பாராளுமன்ற தேர்தலுக்கான தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளரான இராஜன் சத்தியமூர்த்தி அவர்கள் மட்டக்களப்பு மக்களின் பெருமதிப்புக்குரியவர். யுத்த காலங்களில் மக்கள் எதிர்கொண்ட பல்வேறு இடர்களை துடைக்க அயராது பாடுபட்டு வந்தவர். சமாதானக்குழுவின் தலைவராக இருந்து பல்வேறு இன முறுகல் நிலைகளை தீர்த்து வைத்தவர். வர்த்தக சங்கத்தலைவர், மற்றும் மட்டக்களப்பு மாவட்ட உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தலைவராக இருந்து இளைஞர்களின் வழிகாட்டியாக பயணித்தவர்.

புலிகளுக்குள் ஏற்பட்ட பிளவினைத் தொடர்ந்து அதனிமித்தம் அழிவுகளோ இழப்புகளையோ ஏற்பட்டு விடக்கூடாதென்று இராஜன் சத்தியமூர்த்தி அவர்கள் மிகக் கரிசனை கொண்டிருந்தார். கிழக்கின் தனித்துவம் பற்றியும் யாழ் மேலாதிக்கம் பற்றியும் மக்களின் உணர்வுகள் கொந்தளிக்கத் தொடங்கியிருந்த காலங்கள் அவை.

மார்ச் 08 ஆம் திகதி ஹார்த்தாலை யொட்டி மட்டக்களப்பில் இருந்த எல்லோருடைய கடைகளும் பூட்டப்படவேண்டும் என்பது மட்டக்களப்பு வர்த்தக சங்கத்தினரது முடிவாயிருந்தது. அதன்படி கடையடைப்புக்கான பொது வேண்டுகோள் ஒன்று மட்டக்களப்பு நகரெங்கும் பிரசுரமாக வெளியிடப்பட்டிருந்தது. இதனை திரித்து யாழ்ப்பாண வர்த்தகர்களையும் யாழ்ப்பாண மக்களையும் மட்டக்களப்பை விட்டு உடனடியாக வெளியேறுமாறு அறிவிப்பு என்று தினக்குரலில் செய்தி வெளியானது.

இச்செய்தி தினக்குரல் பத்திரிகையின் கீழ்த்தரமான பண்பை வெளிக்காட்டியது. இது தவிர யாழ்ப்பாணப் பரம்பரையினர் குறித்து பிரித்துப் பார்க்கும் அளவிற்கு அவர்கள் மட்டக்களப்பில் தனிப்பெரும் சமூகப்பிரிவொன்றாக வாழவில்லை.

இத்தகைய பொய்யான செய்திகளை வெளியிடுவதினூடாக மட்டக்களப்பு மக்களின் தனித்துவத்திற்கான எழுச்சிகளை யாழ்ப்பாணத்தவர் மீதான காழ்ப்புக்கொண்ட நடவடிக்கைகளாக திசைதிருப்பிவிடுவதும் அதுபோன்ற ஜனநாயக மீறல்களில் அவர்களை ஈடுபடத்தூண்டுவதும் தினக்குரலின் நோக்கமாக இருந்தது. இப்படியாக கருணாவை ஒரு பிரதேசவாதியென நிறுவி விடுவதற்கு தினக்குரல் கீழ்தரமான செய்திகளை வெளியிட்டு அம்பலமானது.

கிழக்கில் உருவாகியிருந்த யாழ்ப்பாண மேலாதிக்கத்திற்கெதிரான ஒரு எதிர்க்குரலை, யாழ்ப்பாண பிரதேசவாதத்திற்கெதிரான ஒரு போராட்டத்தை மட்டக்களப்பு மக்கள் மீதே திருப்பிவிட்டு பிரதேசவாதியெனும் பட்டத்தை கருணாவின் தலையில் கட்டிவிடுவதற்கான சூழ்ச்சியாகவே இவ்வாறான வதந்திகளை பரப்பும் பிரச்சாரங்களை யாழ்ப்பாணத்தின் அறிவுலகம் மேற்கொண்டது.

இதன் காரணமாக மட்டக்களப்பிலுள்ள யாழ்ப்பாணத்து வியாபாரிகளுக்கு ஏதாவது அசம்பாவிதங்கள் நடந்து விடக்கூடாது என்பதனைக் கருத்தில் கொண்டு ராஜன் சத்தியமூர்த்தி ஒரு கருமத்தில் இறங்கினார். மட்டக்களப்பு வர்த்தகர்களை தன் வீட்டுக்கு அழைத்து அவர்களுடன் கலந்துரையாடினார். தற்போது ஏற்பட்டுள்ள கொந்தளிப்புக்கள் அடங்கும் வரையில் ‘யாழ்ப்பாணத்து வியாபாரிகள் இங்கிருப்பது நல்லதல்ல’ என்றும், ‘சிறிது காலத்துக்கு அவர்கள் வியாபார நிலையங்களை மூடிவிட்டு வடக்கு நோக்கி சென்றுவிடுவது உசிதமானது’ என்றும் அவர்களுக்கு ஆலோசனை சொன்னார். அதுமட்டுமன்றி அவருடன் உடன்பட்ட அத்தனை வர்த்தகர்களும் வவுனியாவுக்கு சென்று சேரும் வரையான போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு விடயங்களையும் அவரே ஒழுங்கு செய்து கொடுத்தார்.

ஆனால் கிழக்குப் பிளவு ஏற்படுத்தபோது அவர் கிழக்கு மக்கள் கொண்டிருந்த மனக்கிலேசங்களின் குரலாக கருணாம்மான் ஒலிப்பதை ஆதரித்து நின்றார் என்பதனால் வன்னித் தலைமையின் கோபத்துக்குள்ளானார். விரைவில் வரவிருந்த தேர்தலில் அவர் பெரு வெற்றியீட்டுவதற்கான வாய்ப்புகள் அதிகம் இருந்தன. அப்படி அவரது வெற்றி நிகழ்ந்தால் அது கிழக்குப் போராளிகளை தனித்தரப்பாக அங்கீகரிக்கக் கோரும் கருணாம்மானின் நோக்கத்தை சர்வதேச அரங்குவரை கொண்டு செல்ல வாய்ப்பாகப் போகும் என்று புலிகள் அஞ்சினர். இதன் காரணமாக அவரை உயிருடன் விட்டுவைத்தால் தமது எதிர்காலத்துக்கு ஊறுவிளைவிக்கும் என்று புலிகளின் புலனாய்வுத் துறையினர் கணித்தனர்.

அதன் காரணமாக மட். தாண்டவன்வெளி பிரதேசத்திலுள்ள வெட்டுக்காடு என்றழைக்கப்படும் புறநகர் பகுதியில் உள்ள அவரது வீட்டுக்கு வந்த ஆயுததாரிகள் அவரை சுட்டுக்கொன்றனர். மார்ச் மாதம் 30ஆம் திகதி அதிகாலை 07.40 மணிக்கு அவர் தன்னுடைய பூசையறையில் முருகன் படத்தில் முன்னால் நின்று தீபம் ஏற்றி சாம்பிராணி கொளுத்தி வழிபாடு செய்து கொண்டிருக்கையில் சாராமரியாகச் சுடப்பட்டார்.

பேரின்பராஜா சத்தியமூர்த்தி என்னும் இயற்பெயரைக் கொண்ட 61 வயது நிரம்பிய இராஜன் சத்தியமூர்த்தி அவர்கள் சுடப்பட்டபோது வீட்டிலிருந்த அவரது மைத்துனரான 52 வயதான கந்தையா கனகசபை என்பவரும் சூட்டுக் காயங்களுக்குள்ளாகிக் கொல்லப்பட்டார். அவரது மகள் சத்தியமூர்த்தி சிவகீத்தா இச்சம்பவம் நடப்பதற்கு சற்று முன்னரே வீட்டை விட்டு வெளியேறி கல்விசார் கருத்தரங்கு ஒன்றுக்காக சென்றிருந்தமையால் அவரது உயிர் பிழைத்தது. பிற்காலங்களில் இந்த சத்தியமூர்த்தி சிவகீத்தா அவர்களை மட்டக்களப்பு மாநகர மேயராக மக்கள் தெரிவு செய்தனர்.

கொல்லப்பட்ட ராஜன் சத்தியமூர்த்தியின் மரணச்சடங்கில் பெரும் தொகையான மக்கள் கோபக்கனல் தெறிக்க கலந்து கொண்டார்கள். பிரமாண்டமான ஊர்வலத்துடன் அவரது உடல் மட்.நாவலடியிலுள்ள அன்னை பூபதி நினைவுத் தூபிக்கருகில் அடக்கம் செய்யப்பட்டது. எனினும் வன்னிப்புலிகளது கொலை வெறி அத்தோடு அடங்கவில்லை. அவரது புதைக்கப்பட்ட உடலத்தை அன்றிரவே தோண்டியெடுத்து சன்னதமாடி வாவிக்கரையிலே போட்டு எரித்து துவம்சம் செய்து மகிழ்ந்தனர். ஆயுதம் தூக்காது அமைதியை என்றும் விரும்பிய அந்த மனிதனை, மட்டக்களப்பு மக்களின் மனங்களை வென்ற அந்த சிவில் சமூகப் பிரதிநிதியை கொலைசெய்து அழித்தமையானது கிழக்குப் பிளவினை வன்முறை மூலம் அடக்கிவிடுவதற்கான உறுதியான தீர்மானம் ஒன்று வன்னித் தலைமையால் எடுக்கப்பட்டுவிட்டது என்பதை உணர்த்தியது.

இதன் காரணமாக பதட்டம் மேலும் அதிகரித்தது. இராஜன் சத்தியமூர்த்தி கொல்லப்பட்ட மார்ச் 30 ஆம் திகதி நள்ளிரவுக்குள்ளே மட்டக்களப்பிலுள்ள யாழ்ப்பாணத் தவர்களை உடனடியாக வெளியேறுமாறு கோருகின்ற அறிவிப்பு கருணா தரப்பால் விடப்பட்டுள்ளதாக வதந்தி பரவியது. அதன்படி ஏற்பட்ட அச்ச நிலை காரணமாக மட்டக்களப்பு வைத்தியசாலையில் கடமையாற்றிய வட மாகாணத்தைச் சேர்ந்த சில வைத்தியர்கள் மட்டக்களப்பை விட்டு வெளியேறினர்.

அதேபோன்று தன்மம்பிள்ளை கனகசபை என்னும் வேட்பாளரை கொலை செய்ய தயாரான வன்னிப்புலிகளின் பிஸ்டல் குழு ஒன்றை களுதாவளையில் அமைந்திருந்த அவரது வீட்டுக்கு அருகே வைத்து கிராமத்து இளைஞர்கள் சுற்றிவளைத்து பிடித்தமையால் அவரது உயிர் காப்பாற்றப்பட்டது. பின்னர் அந்த கொலையாளிகள் கருணாம்மான் தரப்பினரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தனர்.



### மட்டு:அரச அதிபர் மௌனகுருசாமி மீது கொலைத்தாக்குதல்

ஏப்ரல் 02 ஆம் திகதி பொதுத்தேர்தலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்ததது. இவ் வேளையில் மட்டக்களப்பின் அரசாங்க அதிபராக இருந்தவர் மௌனகுருசாமி அவர்கள் ஆகும். அவரே தேர்தல் அதிகாரி என்னும் வகையில் அனைத்து மக்களினதும் வாக்குரிமையை நிலைநாட்ட பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டு வந்தார். அவ்வேளையில் வடக்கு கிழக்கு பிரதேசங்களில் நடைமுறையில் இருந்த இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசம், புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசம் என்னும் இரு பகுதிகளிலும் வாக்களிப்பு நடத்தப்படுவதை உறுதி செய்ய பல முயற்சிகளை அவர் மேற்கொண்டிருந்தார். எனவே அதுவரைகாலமும் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த வாக்காளர்களுக்கு வாக்களிக்கும் உரிமையை நிலைநாட்டுவதற்கு அவர் முயற்சித்தார். அதனை புலிகளும் வரவேற்றிருந்தனர். இதுவரை காலமும் தேர்தல் மறுப்பு அரசியல் செய்துவந்த புலிகள் முதன்முறையாக குறித்த தேர்தலுக்கு ஒத்துழைப்பு செய்ய முன்வந்தனர். யுத்த நிறுத்த காலம் என்பதோடு புலிகள் தமது பின்னணியில் போட்டியிட தமது பினாமிகளாக தமிழ் தேசிய கூட்டமைப்பு ஒன்றினை உருவாக்கியிருந்தமையும் அதற்கு காரணமாகும்.

இந்த தேர்தலை எதிர்கொள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் சிபார்சின் பெயரில் புலிகளது அறிவுறுத்தலுக்கமையவே தமிழ் தேசிய கூட்டமைப்பு தனது வேட்பாளர்களை தெரிவு செய்து

நிறுத்தியிருந்தது. ஆனால் தேர்தலுக்கு ஒரு மாதத்துக்கு முன்பாகத்தான் மார்ச் மாதம் 4ம் திகதி புலிகளுக்குள் கருணாம்மானின் தலைமையில் குறித்த கிழக்கு பிளவு உருவானது. எனவே பிளவின் பின்னர் ஜோசேப் பாரராசசிங்கம் தவிர்ந்த ஏனைய வேட்பாளர்கள் அனைவரும் கருணா சார்பு நிலையில் உள்ளமையால் அவர்கள் வெற்றி பெறும் பட்ஷத்தில் அந்த பாராளுமன்ற பலத்தை வைத்துக்கொண்டு கருணா கிழக்குப் புலிகளை தனித்தரப்பாக அங்கீகரிக்கக்கோரும் நிலைக்கு வந்து விடுவார் என்று வன்னிப்புலிகள் அஞ்சினர்.

அதன் காரணமாக கருணாவின் கட்டுப்பாட்டில் உள்ள படுவான்கரை மற்றும் வாகரை போன்ற இடங்களில் தேர்தல்கள் நடத்தப்படக்கூடாது என்று புதிய நிலைப்பாட்டை முன்வைத்தனர். அதற்காக அரச நிர்வாக உத்தியோகஸ்தர்களை மிரட்டும் பணியில் நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டன.

இந்நிலைமைகள் சூடு பிடிக்கத் தொடங்குகையில் மட். அரசாங்க அதிபர் மௌனகுருசாமி கூட்டமொன்றில் பேசுகையில் 'மட்டக்களப்பில் இராணுவ கட்டுப்பாடற்ற பகுதிகளில் வாழும் வாக்காளர்கள் தேர்தலில் வாக்களிக்க அனுமதிக்கப் படாவிட்டால் மட்.மாவட்ட தேர்தல் முடிவுகளை இரத்துச் செய்யக்கோரி தேர்தல் ஆணையாளருக்கு சிபாரிசு செய்வேன்' என தெரிவித்தார். அதாவது படுவான்கரை மக்களின் வாக்குரிமையை நிலைநாட்டுவதில் அவர் உறுதியாக இருந்தார். அவரது இந்த நிலைப்பாடானது வன்னித்தலைமைக்கு பெரும் சிக்கலைக் கொடுத்தது.

இந்நிலையில்தான் 63 வயதான மட்டக்களப்பு அரசாங்க அதிபர் இரத்தினம் மௌனகுருசாமி, தேர்தலுக்கு சில தினங்களுக்கு முன்னரான மார்ச் 27ல் மட். பிள்ளையாரடியில் வைத்து கைத்துப்பாக்கி ஏந்திய வன்னிப் புலிகளால் சுடப்பட்டார். எனினும் அதிஷ்ட வசமாக அவருடைய உயிர் காப்பாற்றப்பட்டது.

## வெருகல் படுகொலை

வெருகல் ஆறு மட்டக்களப்பு தமிழகம் என்றழைக்கப்படும் கிழக்கு மாகாணத்தின் உள்ள மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களை தெற்காகவும் திருகோணமலை மாவட்டத்தை வடக்காகவும் பிரித்து கடலில் கலக்கின்ற மகாவலிகங்கையின் கிளையாறு ஆகும். இது மட்டக்களப்பு நகரிலிருந்து வடக்கே சுமார் 79 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது.

கிழக்கு பிளவினை அறிவித்த கருணாம்மானும் அவரது கட்டுப்பாட்டில் இருந்த 6000 படையணிகளும் இந்த வெருகலாற்றின் தெற்கிலுள்ள மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களிலேயே நிலை கொண்டிருந்தனர். புலிகளின் திருகோணமலை மாவட்ட பொறுப்பாளர் பதுமன் இந்த பிரச்சனையில் நடுநிலை வகித்து சமாதானத் தூதுவராக வன்னி சென்றார். எனவே திருகோணமலை மாவட்டத்திலுள்ள வெருகல் (ஆற்றின் வடக்கே) பிரதேசம் வன்னித் தலைமையின் கட்டுப்பாட்டில் இருந்தது.

இதன் காரணமாக கருணாம்மானின் படையணிகள் மட்டக்களப்பு மாவட்டத்தின் வடக்கு எல்லையான வாகரை பிரதேசமெங்கும் நிலை கொண்டிருந்தன. இதனால் வெருகலாற்றுக்கு தெற்கு கரையில் கிழக்குப் படையணிகளும் வடக்கு கரையில் வன்னிப்படையணிகளும் பாசறையமைத்து நிலை கொண்டிருந்தன. இந்த வெருகலாறு என்பது மிக ஆழம் கொண்டதாயினும் வெறும் கூப்பிடு தூரமளவிலான மிகக்குறைந்த அகலத்தினையே கொண்டமைந்ததாகும் .

மார்ச் 30 திகதி கிழக்குக்குள் ஊடுருவிய வன்னிப்புலிகளின் பிஸ்டல் குழுவொன்று மட்டக்களப்பில் வைத்து இராஜன் சத்தியமூர்த்தியை கொலை செய்ததோடு வெருகலாற்றிலே முறுகல் நிலையும் பதட்டமும் தோன்ற ஆரம்பித்திருந்தன. இராஜன் சத்திய மூர்த்தியின் கொலை ஊடாக பாரிய படுகொலைப் படலம் ஒன்று கிழக்கில் கட்டவிழ்த்து விடப்படுவதற்கான முதல் எச்சரிக்கை பிரபாகரனால் விடப்பட்டது. ஆனாலும் ஏப்ரல் 02 ஆம் திகதி தேர்தல் முடியும்வரை வன்னிப்புலிகள் தகுந்த நேரம் பார்த்து காத்திருந்தனர். எப்படியும் மோதல்கள் தொடங்குவதற்கான வாய்ப்புகளே அதிகம் இருந்தன. மக்களிடையே அச்சம் குடிகொண்டது. புலியும் புலியும் மோதினால் எச்சம் எதுமே இருக்கப் போவதில்லை. .

கருணாம்மானும் யுத்த மொன்று மூளுமானால் தனது வெற்றியை உறுதிப்படுத்திக்கொள்ள இடராக இருக்கும் பல்வேறு காரணிகளை கண்டறிந்தார். கிழக்கிலிருந்த சுமார் 6000 படையணிகளில் கட்டாய ஆள்பிடிப்பில் இணைத்துக் கொள்ளப்பட்டு பயிற்சி பெற்ற ஆனால் போரியல் அனுபவமற்ற படையினர் சுமார் 2000 பேராகும். இவர்களை வைத்துக் கொண்டு பெரும் சண்டையொன்றை வெற்றி கொள்ளமுடியாது. அதேபோன்று இங்கே யுத்தம் தொடங்கினால் வன்னிக் களமுனைகளில் காவல்காத்து நிற்கும் சுமார் கிழக்கைச் சேர்ந்த 400 க்கும் மேற்பட்ட ஜெயந்தன் படையணி போராளிகளின் நிலை ஆபத்துக்குள்ளாகும் சாத்தியங்கள் அதிகமாயிருந்தன. .

அனைத்தையும் விட

**ஏப்ரல் 02 ஆம் திகதி தேர்தல் முடியும்வரை வன்னிப்புலிகள் தகுந்த நேரம் பார்த்து காத்திருந்தனர். எப்படியும் மோதல்கள் தொடங்குவதற்கான வாய்ப்புகளே அதிகம் இருந்தன. மக்களிடையே அச்சம் குடிகொண்டது. புலியும் புலியும் மோதினால் எச்சம் எதுமே இருக்கப் போவதில்லை.**

போராளிகளின் பெற்றோர்கள்,சமூக ஆர்வலர்கள், புத்திஜீவிகள் என்று பலதரப்பட்டோரும் தேனகம் போன்ற புலிகளின் பெரும்பெரும் முகாம்களை நோக்கி படையெடுக்கத் தொடங்கினர். ஒரு சகோதர யுத்தம் ஏற்படுவதை தவிக்குமாறு கெஞ்சி மன்றாடினார். இவ்விதமான பல்வேறு சிக்கல்கள் அவரையும் நிலை தடுமாறச் செய்தன. முகாம்களிலும் மெல்ல மெல்ல கட்டுப்பாடுகள் குலைய ஆரம்பித்தது.

இத்தனையையும் கண்ணுற்ற கருணாம்மான் ஒரு முடிவுக்கு வந்தார். முதலாவதாக தமது கட்டுப்பாடு பகுதியில் இருந்த புலிகளின் நீதிமன்றங்கள், காவல் நிலையங்கள், வரியிறுப்பு அலுவலகங்கள், புலனாய்வு மற்றும் நிருவாகப் பிரிவுகள் போன்ற அனைத்து கட்டமைப்புகளையும் மூடுமாறு உத்தரவு பிறப்பித்தார். அவற்றில் பணிபுரிந்த வடக்கைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்கள் அனைவரையும் எவ்வித நிபந்தனையுமின்றி வெளியேறிச் செல்ல அனுமதித்தார்.

அடுத்த கட்டமாக புதியதாக இணைக்கப்பட்ட போராளிகளையும் சிறுவர்கள் மற்றும் பெண்போராளிகளையும் பகுதி பகுதியாக வீடுகளுக்கு அனுப்ப முடிவெடுத்தார். அவ்வேளையில் அவசியமானால் மீள அழைக்கப்படுவீர்கள் என்றும் அதுவரை வீடு சென்று தங்கலாம் என்றும் ஒவ்வொருவர் கையிலும் நூறு ரூபாய்கள் கொடுத்து முகாம்கள் திறந்து விடப்பட்டன. கண்டவுடன் அடையாளம் தெரிந்து கொள்ளக்கூடியவாறான ஒட்ட வெட்டிய கூந்தலுடன் வெளியேறி வந்த ஆயிரக்கணக்கான பெண்போராளிகள் தத்தமது கிராமங்களுக்கு செல்லும் வழித்தெரியாது திக்குத்தெரியாத காடுகளிலும் படுவான்கரை பெருநிலப்பரப்பின் வயல் வெளிகளிலும் அலைந்து திரிந்த சோகக்கதைகள் சொல்லி மாளாதவை.

**கண்டவுடன் அடையாளம் தெரிந்து கொள்ளக்கூடியவாறான ஒட்ட வெட்டிய கூந்தலுடன் வெளியேறி வந்த ஆயிரக்கணக்கான பெண்போராளிகள் தத்தமது கிராமங்களுக்கு செல்லும் வழித்தெரியாது திக்குத்தெரியாத காடுகளிலும் படுவான்கரை பெருநிலப்பரப்பின் வயல் வெளிகளிலும் அலைந்து திரிந்த சோகக்கதைகள் சொல்லி மாளாதவை.**

இறுதியாக கருணாம்மானின் சகோதரர் ரெஜி, ஜெயம் போன்ற முக்கிய தளபதிகள் தலைமையில் வெருகலாற்றைக் கடந்து வன்னிப்புலிகள் ஊடுருவியோ தாக்குதல் நடத்தியோ மட்டக்களப்பின் எல்லைக்குள் வந்துவிடாதவாறு சுமார் 500 பேர் கொண்ட மூத்த போராளிகளை மட்டும் நிறுத்தி வைத்தார் கருணாம்மான். அவர்கள் வாகரை, பால்சேனை போன்ற கடலோர முகாம்கள் தொடங்கி வீதிகள் காட்டுவழிப்பாதைகள் தெருக்கள் என்று மட்டக்களப்புக்குள் நுழைகின்ற அனைத்து இடங்களிலும் சோதனைச் சாவடிகளை நிறுவினர்.

அக்காலங்களில் இலங்கை யரசுக்கும் புலிகளுக்கும் இடையே நடந்து கொண்டிருந்த சமாதானப் பேச்சுக்களின் ஓரங்கமாக இலங்கையில் நோர்வே தலைமையிலான சர்வதேச கண்காணிப்பாளர்கள் பணிகளில் ஈடுபட்டிருந்தனர். ஆனால் அவர்கள் நிலைமைகள் எல்லை கடந்து கொண்டிருந்தபோது தமது பொறுப்பிலிருந்து விலகி கிழக்கு மாகாணத்தில் இருந்து தற்காலிகமாக வெளியேறிச் சென்றனர்.

இந்நிலையில் ஏப்ரல் 9 ஆம் திகதி மார்ச் மாதம் பி.பி.சி வானொலிக்கு தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறை பொறுப்பாளர் தமிழ்செல்வன் கொடுத்த பேட்டியில் கருணாவின் பிரச்சனைக்கு வன்முறை ஏதும் இன்றி மிகவும் சுமுகமானமுறையில் தீர்வு காணப்படும் என இரத்தினச் சுருக்கமாகப் பதிலளித்தார். அதாவது தாம் ஜனநாயகப் பண்புகளை மதிப்பவர்கள் என்று சர்வதேச நாடுகளுக்கு வெளிக்காட்டினார். அதேவேளை வன்முறை ஊடாகவும் தாம் தீர்வு காண்போம். காணமுடியும் என்கின்ற முன்னெச்சரிக்கையை இந்த வாசகங்கள் மூலம் மறைமுகமாக தமக்கேயுரிய பாணியில் மட்டக்களப்பு மக்களுக்கு விடுத்தார். அவரது பேட்டி ஒலி பரப்பாகிக் கொண்டிருக்கையில் வடக்கிலிருந்து 13 பஸ்களில் ஆயுதமேந்திய சுமார் 600-700 வரையான போராளிகள் தளபதிகளான பானு,சொர்ணம், ரமேஷ் போன்றோர் தலைமையில் வெருகல் பகுதியில் களமிறக்கப்பட்டனர். அது ஒரு பெரிய வெள்ளி தினம்.

மறுநாள் ஏப்ரல் 10 திகதியன்று அதிகாலை தாக்குதல் தொடங்கியது. கடல்வழியாகவும் வாகரைப் பகுதிக்குள் வந்திறங்கிய வன்னிப்புலிகள் பெரும் படுகொலையொன்றை கட்டவிழ்த்து விடுகின்றனர். தகவல் கருணாம்மானுக்கு பறக்கிறது. யுத்தம் செய்ய வேண்டாம் பின்வாங்குங்கள் என்று களத்தில் நின்ற தளபதிகளுக்கு கருணாம்மான் கட்டளை பிறப்பிக்கிறார்.

வெருகல் ஆற்றங்கரையில் மிகப்பெரிய படுகொலையொன்றை வன்னியிலிருந்து வந்த பிரபாகரனின் படையினர் நிகழ்த்தினர். பலர் கொல்லப்பட்டனர். பின்வாங்க முடியாத நிலையிலிருந்த பலர் சரணடைகின்றனர். ஐயோ அண்ணா வேண்டாம் வேண்டாம் என்று பெண்போராளிகளின் அவலக்குரல் கதிரவெளி கடலோரமெங்கும் எதிரொலித்தது. சரணடைந்தவர் களும் கைகள் கட்டப்பட்டு பின்னர் கொல்லப்படுகின்றனர். மானபங்க படுத்தப்பட்ட பெண் போராளிகளின் உடலங்கள் சின்னா பின்னப் படுத்தப்பட்டுக் கிடந்தன.

அந்த பிரதேசத்து கிராமவாசிகள் எல்லோரும் துரத்தியடிக்கப்பட்டு எவரது உடல்களும் புதைக்கப்படாமலும்

**தமிழீழ விடுதலைபுலிகளில் பாதிக்கு மேல் கிழக்குப் போராளிகளே இருந்தார்கள். இறந்த மாவீரர்களில் கிழக்கு மாகாண போராளிகளே அதிகளவில் இருந்தார்கள்.' அவர்களெல்லாம்' வெளிநாடுகளுக்கு ஓட கிழக்குப் போராளிகளோ வடக்கு நோக்கி ஓடினார்கள். அந்த மண்ணைக் காத்தார்கள். ஜெயந்தன் படையணி என்று ஒன்று இல்லாது விடின் தமிழீழ விடுதலைபுலிகளின் வெற்றி வரலாறுகளெல்லாம் வேறுமாதிரியே எழுதப்பட்டு இருக்கும். . ஆனால் 2002ம் ஆண்டு சமாதான ஒப்பந்தம் வந்தபோது உருவாக்கப்படவிருந்த இடைக்கால நிர்வாகத்துக்காக தெரிவான 32 துறை செயலாளர்களில் ஒருவரை கூட கிழக்கு மாகாணத்திலிருந்து நியமிக்கும் அளவிற்கு அவர்களின் நெஞ்சில் ஈரம் இருக்கவில்லை. அதை தட்டிகேட்டது குற்றமா?**

அடையாளம் காணப்படாமலும் சுமார் ஒரு வாரத்துக்கு வெருகல் பிரதேசம் நாற்றமெடுத்து கிடந்தது. அதிகாலையில் செய்தியறிந்து பிணங்களை அள்ளிச்செல்ல வாழைச்சேனையிலிருந்து வந்த அம்புலன்ஸ் வண்டிக்குக்கூட செல் அடிக்கப்பட்டு ஓட்டுனர் கொல்லப்பட்டார். .

எதிரி என்று சொல்லப்பட்ட இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த முடிந்தவர்களுக்கு தமது சொந்த போராளிகளுடன், நேற்றுவரை ஒன்றாகவிருந்து உணவு உண்டவர்களுடன் பேச தெரியாது போனது. .

யாழ்-மேலாதிக்கத்தின் இராணுவ வடிவமான தமிழீழ விடுதலை புலிகளால் மூர்க்கத்தனமாக கையாளப்பட்டன கிழக்கின் குரல்கள் என்கின்ற வரலாறு அன்று வெருகலில் எழுதப்பட்டது. .

ஒரு வெலிகடை படுகொலை போல,ஒரு கொக்கட்டிச்சோலை படுகொலை போல, ஒரு குமுதினிப்படகு படுகொலை போல, ஒரு கந்தன் கருணை படுகொலை போல, ஒரு காத்தான்குடிப் படுகொலைபோல, ஒரு வீரமுனைப் படுகொலை போல, ஒரு அரந்தலாவை படுகொலை போல ஒரு அனுராதபுரப் படுகொலைபோல, இந்த வெருகல் படுகொலையும் மிலேச்சத்தனமான ஒரு படுகொலைதான். ஆனால் இது கிழக்கில் மட்டுமே இன்றுவரை பேசுபொருளாக இருக்கின்றது.

ஆனால் ஏனைய படுகொலை நினைவுகளை பேசுவது போலவோ, அதையிட்டு எழுதுவதுபோலவோ, அத்தினங்களை நினைவுகூருவது போலவோ இந்த வெருகல் படுகொலை பற்றி தமிழ் கூறும் இந்த நல்லுலகம் கண்டுகொள்வதில்லை. அது ஏன் என்றும் எமது மக்கள் ஒருபோதும் சிந்திப்பதுமில்லை. கேள்வி எழுப்புவதுமில்லை. ஏன் தமிழ் பத்திரிகைகளில் பெரும்பாலானவை கூட இந்த வெருகல் படுகொலையையிட்டு இன்றுவரை கள்ளமௌனம் காக்கின்றன. இந்த வெருகல் படுகொலை நடந்த போது மூடிக்கொண்ட இந்த இந்த தமிழ் பத்திரிகைகளின் கண்கள் இன்றுவரை ஏன் திறக்கப்படவில்லை?

இந்த படுகொலை நிகழ்ந்த வரலாறு எமது அடுத்த சந்ததிக்கும் எடுத்துச்செல்லப்பட வேண்டும். ஆம் தமிழனை தமிழனே வெட்டிவீழ்த்திய, சுட்டு வீசிய வரலாற்றையிட்டு இன்றைய இளம் சமூகம் கேள்வியெழுப்ப வேண்டும். கிழக்குப் போராளிகள் என்ன குற்றம் செய்தார்கள்? போராட்டத்தில் இணைந்தது குற்றமா? உண்ணாமலும் உறங்காமலும் உறவுகள் ஏங்கிக்கிடக்க வடக்கு வரை நடந்து சென்று அந்த மண்ணைக்காக்க போராடியது குற்றமா? வடக்கு போர்முனைகளில் ஆயிரக்கணக்கில் உயிர் நீத்தது குற்றமா? ஏன் இந்த அநீதி அவர்களுக்கு இழக்கப்பட்டது? அவர்கள் என்ன கேட்டார்கள்? எமது மக்களுக்கான உரிமைகள் உறுதிபடுத்தப்பட வேண்டும். என்றுதானே கேட்டார்கள்.? தமிழீழ விடுதலைபுலிகளில் பாதிக்கு மேல் கிழக்குப் போராளிகளே இருந்தார்கள். இறந்த மாவீரர்களில் கிழக்கு மாகாண போராளிகளே அதிகளவில் இருந்தார்கள்.' அவர்களெல்லாம்' வெளிநாடுகளுக்கு ஓட கிழக்குப் போராளிகளோ வடக்கு நோக்கி ஓடினார்கள். அந்த மண்ணைக் காத்தார்கள். ஜெயந்தன் படையணி என்று ஒன்று இல்லாது விடின் தமிழீழ விடுதலைபுலிகளின் வெற்றி வரலாறுகளெல்லாம் வேறுமாதிரியே எழுதப்பட்டு இருக்கும். .

ஆனால் 2002ம் ஆண்டு சமாதான ஒப்பந்தம் வந்தபோது உருவாக்கப்படவிருந்த இடைக்கால நிர்வாகத்துக்காக தெரிவான 32 துறை செயலாளர்களில் ஒருவரை கூட கிழக்கு மாகாணத்திலிருந்து நியமிக்கும் அளவிற்கு அவர்களின் நெஞ்சில் ஈரம் இருக்கவில்லை. அதை தட்டிகேட்டது குற்றமா? கிழக்கு மக்களின் உரிமைகளை கேட்டது எந்த வகையில் குற்றமாகும்? போராடும் பொழுதுகளில் கிழக்கு வீரர்களை பாராட்டினார்கள், மட்டக்களப்பு வீரம் விளைநிலம் என்று சான்று தந்தார்கள். வன்னித் துயிலும் இல்லங்களில் தென்தமிழீழத்து மாவீரன் என்று கல்வெட்டு எழுதினார்கள். ஆனால் அந்த போராளிகள் உரிமைகளை கேட்ட மாத்திரத்தில் ஒரே நாளில் துரோகிகள் ஆக்கப்பட்டார்கள். அப்படியென்றால் பிரிந்து செல்கின்றோம் என்றார்கள்.

**2004ம் ஆண்டு இந்த வெருகல் படுகொலை நடந்தபோது யுத்த நிறுத்தம் அமுலில் இருந்தது அதுமட்டுமா நோர்வே தலைமையிலான யுத்த நிறுத்த கண்காணிப்பு குழு கடமையிலிருந்ததே அப்படியிருக்க எப்படி இந்த படுகொலை சாத்தியமாகும்?. வன்னியிலிருந்து ஓமந்தையூடாகவும் கடல் வழியாகவும் எப்படி வன்னிபுலிகள் இந்த வாகரை பிரதேசம் வரை ஆயுதங்கள் சகிதம் வந்து சேர்ந்தனர்? இதற்கு அனுமதி வழங்கியவர்கள் யார்? அன்றைய அரசுடன் வன்னிபுலிகளுக்காக தூது சென்ற தமிழ் தேசிய தலைவர்கள் யார்? இந்த உண்மைகள் அம்பலமாக்கப் படவேண்டும். எமது மக்களுக்கு நீதி வழங்க படவேண்டும். இன்று யுத்த குற்றம் யுத்த குற்றம் என்கின்றார்களே? இது யுத்தநிறுத்தத்தின் பொது நடந்த படுகொலை அல்லவா? இது அதைவிட குற்றமாகாதா?**

**ஒரு சர்வதேச சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு இருக்கையில் நடாத்தப்பட்ட இந்த வெருகல் படுகொலை ஒரு மாபெரும் மனித உரிமை மீறலாகும்.**

அதற்காக படையெடுத்து வந்து படுகொலைகளை கட்டவிழ்த்து விட்டார்கள். வெருகலாற்று படுக்கையில் யுத்த பேரிகை முழங்கியது. சரணடைந்த கிழக்கு போராளிகள் மீது படுகொலை கட்டவிழ்த்து விடப்பட்டது. பெண் போராளிகள் மானபங்க படுத்தப்பட்டார்கள். சுமார் இருநூறுக்கும் மேற்பட்ட போராளிகளின் உயிர் பறிக்கப்பட்டது. சித்திரை வெயிலில் வெம்பி வெடித்து கதிரவெளி கடற்கரை மணலெங்கும் எமது போராளிகளின் உடலங்கள் நாற்றமெடுத்து கிடந்தன. அவற்றை அடக்கம் செய்ய கூடாதென்ற கட்டளை வன்னிபுலிகளால் விடுக்கப்பட்டிருந்தது. இது எதிரி செய்த படுகொலையல்ல. கிழக்குப் போராளிகள் யாரை சொந்த தமிழர்கள் என்று நம்பினார்களோ, தமது தலைவர்கள் என்றார்களோ, தம்மை வழிநடாத்துவார்கள், தமக்கு விடுதலை வாங்கி தருவார்கள் என்று நம்பியிருந்தார்களோ அவர்களால் நடாத்தப்பட்ட படுகொலைதான் இது. படைகொண்டு தீர்வுக்கான வடக்கும் கிழக்கும் என்ன அந்நிய தேசங்களா? யார் இந்த அநியாயத்தை பற்றி கேள்வி எழுப்பினார்கள்?

2004ம் ஆண்டு இந்த வெருகல் படுகொலை நடந்தபோது யுத்த நிறுத்தம் அமுலில் இருந்தது அதுமட்டுமா நோர்வே தலைமையிலான யுத்த நிறுத்த கண்காணிப்பு குழு கடமையிலிருந்ததே அப்படியிருக்க எப்படி இந்த படுகொலை சாத்தியமாகும்?. வன்னியிலிருந்து ஓமந்தையூடாகவும் கடல் வழியாகவும் எப்படி வன்னிபுலிகள் இந்த வாகரை பிரதேசம் வரை ஆயுதங்கள் சகிதம் வந்து சேர்ந்தனர்? இதற்கு அனுமதி வழங்கியவர்கள் யார்? அன்றைய அரசுடன் வன்னிபுலிகளுக்காக தூது சென்ற தமிழ் தேசிய தலைவர்கள் யார்? இந்த உண்மைகள் அம்பலமாக்கப் படவேண்டும். எமது மக்களுக்கு நீதி வழங்க படவேண்டும். இன்று யுத்த குற்றம் யுத்த குற்றம் என்கின்றார்களே? இது யுத்தநிறுத்தத்தின் பொது நடந்த படுகொலை அல்லவா? இது அதைவிட குற்றமாகாதா? ஒரு சர்வதேச சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு இருக்கையில் நடாத்தப்பட்ட இந்த வெருகல் படுகொலை ஒரு மாபெரும் மனித உரிமை மீறலாகும்.

ஒஸ்லோ உடன்படிக்கையையும் 2002 சமாதான ஒப்பந்தத்தையும் கிழித்தெறிய வழிசமைத்த முதலாவது பாரிய யுத்தநிறுத்த மீறலே தமிழீழ விடுதலை புலிகளால் நடாத்தப்பட்ட இந்த வெருகல்படுகொலையேயாகும்.

தமிழ் மக்களின் காவலர்கள் என்று வலம் வருகின்ற தமிழ் தேசிய கூட்டமைப்பினர் இதுகுறித்து ஏன் கள்ள மௌனம் காத்தார்கள்? இன்று வரை ஜெனிவாவுக்கு படையெடுக்கும் இந்த கூட்டமைப்பினரும் புகலிடத்தமிழர்களும் இந்த வெருகல் படுகொலைக்கு ஏன் நீதி கேட்பதில்லை? மட்டக்களப்பானுக்கு என்ன நீதி? என்கின்ற அலட்சியமா?

அந்த வெருகல் படுகொலை நடந்த ஐந்து வருடங்களுக்குப் பின்னர் புகலிடம் வாழ் கிழக்கிலங்கை நண்பர்கள் அடங்கிய குழாம் ஒன்றுடன் (சட்டத்தரணி பஷீர், மனித உரிமைவாதி இராஜேஸ்வரி பாலசுப்ரமணியம், எழுத்தாளர் குமாரதுரை, குமரன்,....) இந்த கட்டுரையாசிரியரான நானும் வாகரை மற்றும் வெருகல் பகுதிகளுக்குச் சென்று பலரிடம் வாக்குமூலங்களைப் பெற்றோம். கண்ணீர் மல்க அவர்கள் ‘அங்கே எட்டுப்பேர், இங்கே நாலுபேர், அந்த மரத்தடியில் பத்துபேர் என்று வரிசையாக பிணங்களை ஒருமித்து புதைத்த கணக்குகளை ஒன்றன்பின் ஒன்றாக ஒப்புவித்தார்கள். அவர்களின் தகவல்களின்படி சுமார் 210 பேர் அந்த வெருகல் படுகொலையில் கொல்லப்பட்டிருந்தனர் என நாங்கள் கணக்கிட்டுக் கொண்டோம்.

இப்படுகொலை ஊடாக கருணாவை தோற்கடித்து துரத்தி விட்டதாக புலிகள் தம் வரலாற்றை எழுதினார். ஆனால் 32 துறைசார் செயலாளர்களில் ஏன் ஒருவர் கூட கிழக்கு மாகாணத்தவர் இல்லை என்று கருணாம்மான் அன்று கேட்ட கேள்விக்கு இன்று வரை பதிலிறுப்பார் யாருமிலர்.

# பதின்மூன்று

# "Thirteen 13

1. என்னைப்பற்றி
சகலதையும் சொல், என்றான்.
ஆதியோடந்தமாய் எல்லாம் சொன்னேன்.

2. பிறகு, என்னைப் பற்றியும் சொல்,
என்றேன் .

3. நான் சொன்னதையே எனக்குச்
சொன்னான்.

4. என்னைப் பற்றியல்லவா
சொல்லக் கேட்டேன் என்றேன்.
என்னைப்பற்றி, உன்னைப்பற்றி அல்ல,
என்றேன்.

5.என்னைப்பற்றி சொன்னதுதான்
உன்னைப்பற்றியும், என்றான்.

6.அவனும் நானும் ஒன்று போலவோ,
என குழம்பினேன்.

7. ஆனால், அதுதான் உண்மை (?).

8. ஆனால், அதுவற்ற உண்மையும்
உண்டு.

9. அப்போ, அவனும் நானும் ஒன்றா?

10. ஆம். அதுதான் உண்மை.

11. அப்போ, அவனும் பொய் நானும்
பொய்யா?

12. ஆம்!

13. பதின்மூன்று ' 13 ' கெட்ட எண் அல்ல.

1. "Say everything about me," he said.
Start to finish, I said everything.

2. Then, I asked, "Say about me too."

3. He said what I had said to him.

4."I asked to say about me, didn't I ?"
I said.

5. "What you said about me is what is about you too," he said.

6. I was confused whether he and I are the same.

7.But, that's the truth (?).

8. But, there is truth without that (?) too.

9. Then, he and I are the same.

10. Yeah! That's the truth.

11. Then, is he a fake; Am I a fake?

12. Yes!

13. Thirteen — 13 — is not a bad number.

**சிறினோ சிறி சிறிசு**



## உலக மயமாக்கல்
## வயற்காட்டு பம்பு செட்டுகளுக்குள் வந்து சேர்ந்தாலும்...
## தவளைகளுக்கு கிணறு தான் உலகம்!

# பண்ணைபுர ராஜாவின் பயோபிக் பர்ஸ்ட் லுக் டீசர்!

துரோணர் தன்னிடம் வில்வித்தை கற்ற மாணவர்களிடம் மரத்தில் உள்ள மாங்காய் ஒன்றைக் காட்டி, உங்களுக்கு என்ன தெரிகிறது என்று கேட்க, எல்லாரும் மாங்காய் என்று சொல்ல, அர்ச்சுனன் 'காம்பு தெரிகிறது' என்று சொல்லி பாராட்டு வாங்கினான் என்று அந்தக் காலத்தில் எங்கோ வாசித்த ஞாபகம்.

எனக்கும் அப்படித் தான். மற்றவர்களின் கண்கள் போகாத இடங்களுக்கு என் கண்களும் என்னை அறியாமலேயே போய் விடுகின்றன. அதுவே துன்பமாகியும் விடுகிறது.

பிறந்த இடங்களையும் கறந்த இடங்களையும் இந்த பேதை மடநெஞ்சம் நாடாமல், 'காம்புகளை' மட்டுமே கண்கள் நாடுவது அதனால் தான் போலும்!

இளையராஜாவின் பயோபிக் போஸ்டரின் பர்ஸ்ட் லுக் டீசர் பேஸ்புக்கை உலுப்பியிருந்தது.

உலக மயமாக்கல் தமிழை ஒரு சொல்வறுமை மிக்க மொழியாக்கியிருக்கிறது. கௌபீனம் கட்டி வயற்காட்டில் உழுது கொண்டிருக்கிற சிக்ஸ்




பேக் செல்லக்கண்ணுகள் எல்லாம் ரவிக்கை போடாத கருப்பாயி சுவீட்ஹார்ட்டுகளுக்கு கஞ்சிக்கலயம் சுமந்து வரும்படி செல்போனில் ஆணையிடுகிறார்கள். அவர்களுக்கு எல்லாம் இந்தச் சொற்கள் சிரமம் இல்லாமலேயே புரிந்து விடுகின்றன. ஆளரவம் இல்லாத வயற்காட்டுக்கு கலயம் சுமந்து வருகிற கருப்பாயி செல்லக்கண்ணுவோடு லிப்லாக்

பேரறுஞர்
கல்லாநிதி
கியூறியஸ் ஜி


பண்ணாமலா போய் விடுவாள்?

பம்ப்செட் இருந்தா, 'அவங்க பண்ணின காரியத்தைப் பாத்தீங்களா?' என்று யூடியூப் பயில்வான்கள் விளக்குப் பிடித்த நேரடி வர்ணனை... ஓ.. 'காமன்'டரி வேறு செய்வார்கள்.

பேஸ்புக்கில் அந்த இளையராஜாவின் வரலாற்றுப் படத்திற்கு ரஹ்மான் இசையமைத்தால் நன்றாயிருக்கும் என்பது முதல் யார் இயக்குனராக இருந்தால் படம் பிய்ச்சுக் கொண்டு ஓடும் என்றெல்லாம் கருத்துக் கந்தசாமிகள், கந்தசாமினிகள் ஒரே களேபரம். இந்தக் கருத்துக் கந்தசாமி(னி)களின் பேஸ்புக் விமர்சனத்தைப் பார்த்துப் படம் பார்க்கலாமா என்று முடிவு செய்யலாம் என்று நினைக்கிற ரசிகன் நிலையை நினைக்க சிரிப்பாக இருந்தது.

எனக்கோ அந்த சினிமா போஸ்டரைப் பார்க்க பரிதாபமாக இருந்தது.

சினிமா போஸ்டர் என்பதுதான் ஒரு திரைப்படத்தின் அடையாளமாக




இருந்த ஒரு காலம் இருந்தது. யாழ்ப்பாணத்து சிகை அலங்கார நிலையங்களிலும் சைக்கிள் திருத்தும் இடங்களிலும் அவற்றின் சுவர்களை, அந்தந்த உரிமையாளர்கள் ரசிகர்களாக இருந்த நாயகர்கள் நடித்த படங்களின் போஸ்டர்கள் அலங்கரித்துக் கொண்டிருந்தன. 'தீபாவளி முதல் தென்னாடெங்கும்' என்று மேலே இருக்கும். எனக்கோ அதெல்லாம் புதிராகவே இருக்கும்.

யாழ்ப்பாணமே வடக்கு!?

ஓடி முடிந்த படங்களின் இந்த போஸ்டர்களை எல்லாம் ஒருவேளை தியேட்டர்காரர்களைப் பிடித்து வாங்கியிருக்கக் கூடும். அல்லது தமிழ்நாட்டில் இருந்து வல்வெட்டித்துறை ஊடாக கள்ளக்கடத்தலாய் வந்து சேர்ந்திருக்க வேண்டும்.

சரியான கனக்ஷன்கள் இல்லாமல் இவையெல்லாம் கையில் கிடைக்க நியாயம் இல்லை. கடைகளில் விற்பனைக்குக் கிடைக்காதவை இவை.

தியேட்டர்களின் கண்ணாடிப் பெட்டிக்குள் கை படாத காட்சிப் பொருளாக இருந்தவை அவை. அங்கே மட்டும் இல்லாமல், பெரும் சுவர்களில் மாற்று நாயகனின் ரசிகர்கள் எறிந்த சாணி சகிதம் காட்சியும் தந்தன. யாழ்ப்பாண வீதிகளின் கட்டாக்காலி மாடுகளின் உணவுப் பொருளாகவும் பயன்பட்டன.

அதே போஸ்டர்கள் தான் வணிக வார சஞ்சிகை விளம்பரங்களிலும், பாட்டுப் புத்தகங்களிலும் சிறிய உருவத்தில் மறுபிறவி அடைந்தன.

எங்களுக்கு எல்லாம் எங்கள் உலக மகாகாவியங்களை இன்றும் மனதில் நிறுத்துகின்றவை இந்த போஸ்டர்களாக இல்லாமல், தியேட்டர்களின் முன்னால் நாற்பது அடி உயரத்தில் கட்டப்பட்ட கட்டவுட்டுகளாகத் தான் இருந்தன. பஸ்நிலையத்தின் முன்னான ராணி தியேட்டரின் கட்டவுட்டுகள் எங்கள் யாழ்ப்பாணிக் கலாசாரத்தின் பெருமை மிகு புராதன வரலாற்றுப் பொக்கிஷங்கள். எங்களுக்கு அதை வரைவதற்கென்றே நல்லூரர் மணியம் இருந்தார்.

அந்த கட்டவுட் கலாசாரம் தனியான கதை.

அப்படி இந்த போஸ்டர்களின் வடிவமைப்புகளின் பின்னாலும் பெரும் கலைஞர்கள் இருந்தார்கள். கோடம்பாக்கத்து நடைமுறையில் 'கலை' என்று டைட்டில் காட்டில் வருகிற, செட் போடுகிற ஆர்ட் டைரக்டர்கள் 'கலை'ஞர்கள் தான் அந்தப் படங்களின் வடிவமைப்புகளுக்குப் பொறுப்பாக இருந்தார்களா என்பது தெரியாது. சிலநேரம் 'ஓவியம்' என்ற பெயரில் 'மற்றும் பலரோடு' வந்தவர்களாகவும் அது இருக்கலாம்.

சினிமாவின் போஸ்டர் வடிவமைப்பு என்பது ஒரு பெரும் கலை. அதற்காக பல ஆயிரக்கணக்கில் விளம்பர நிறுவனங்களுக்குச் செலவிடுகிற திரைப்படங்கள் இங்கே உண்டு. அந்த வடிவமைப்பில் ஸ்டார்களான வடிவமைப்பாளர்களும் உண்டு. அவர்களுக்கான வருடாந்த விருதும் உண்டு. Internet Movie Poster Awards எனப்படும் இணையத்து ரசிகர்கள் அமைப்பு ஒன்று ஒவ்வொரு வருடமும் சிறந்ததும் மோசமானதுமான திரைப்படப் போஸ்டர்களுக்கான விருதுகளை வழங்குகிறது.

பல்வேறு ஹொலிவூட் படங்களின் போஸ்டர்கள் இன்றைக்கும் மனதில் நிற்கக் கூடிய அளவுக்கு கலைத்துவத்தோடு வடிவமைக்கப்பட்டிருக்கின்றன. அந்த போஸ்டர்களைப் பார்த்ததுமே அந்தப் படம் பற்றிய சகல நினைவுகளையும் தூண்டுகிற அளவுக்கு காலம் கடந்தும் பொதுவெளி நினைவில் பதிவுற்றிருக்கின்றன.

Jaws, Star Wars, Raiders of the Lost Ark, The Silence of the Lambs, The Shining, Juassic Park, Back To The Future, E.T, The Godfather, Apocalypse Now, Rosemary's Baby, The Exorcist, Gone With The Wind, Batman, American Beauty, Scarface, Matrix என்று எக்கச்சக்கமான படங்களின் படப் போஸ்டர்கள் இன்றும் பொதுவெளியில் அந்தப் படங்களை நினைவூட்டிக் கொண்டிருக்கின்றன. படங்களின் பெயரைச் சொன்னாலேயே அதன் போஸ்டர் நினைவில் வருகிற அளவுக்கு அந்தப் படங்களோடு ஒன்றித்திருந்தவை அவை.

ஹீரோக்களை முதன்மைப் படுத்தி, கதாநாயகிகளின் நீச்சலுடை மார்புக் கவர்ச்சியை விற்க முயலும் தமிழ் சினிமா போஸ்டர்களின் இயல்பு ஹொலிவூட் படங்களில் இருப்பதில்லை. மேற்குறிப்பிட்ட பலவற்றில் நடிகர்கள் யார் என்பது பற்றி போஸ்டரில் கீழே சிறிய



எழுத்துக்களில் மட்டுமே காண முடியும்.

தமிழ் சினிமாவுக்கு ஜெயமாலினி தொடங்கி சிலுக்கு வரை, செந்தில் கவுண்டமணி முதல் வடிவேலு வரை, அந்தந்தக் காலங்களில் யாரை விற்க முடியுமோ, அவர்களை முதன்மைப்படுத்தி படத்தை சந்தைப்படுத்தும் சிந்தனை அதிகம். இளையராஜாவின் இசையமைப்பை 'மாஸ்ட்ரோ, ராகதேவன் வழங்கும்' என்றெல்லாம் முதன்மைப்படுத்தி போஸ்டரில் போடும் அளவில்கூட ஒரு காலம் இருந்தது.

'A film by' என்று போட அடம்பிடிப்பதிலும் பெருமை கொள்வதிலும் ஆர்வம் காட்டும் படத்தை இயக்குகின்ற பேர்வழிகளுக்குக் கூட தங்கள் திறமை மீதான தன்னம்பிக்கை எதுவும் இல்லை. காட்டக்கூடிய எல்லாவற்றையும் (திறந்து) காட்டி வெற்றிப் படமாக்கி விட்டால் போதும்!

கலைத்துவம் என்பதை விட, தலையைச் சுற்றி ஏமாற்றிய சந்தை வியாபாரம் என்ற அளவில் தான் எங்கள் போஸ்டர்கள் இருந்து வந்திருக்கின்றன.

தமிழ் சினிமாவில் படங்களின் பெயரைச் சொன்னால், போஸ்டர்கள் நினைவுக்கு வரும் அளவில் எனக்கு எந்தப் படமும் போஸ்டரும் ஞாபகம் இல்லை. பாடசாலைக்குப் பக்கத்தில் இருந்த ஒரு சைக்கிள் கடையில் கண்ட வாத்தியாரின் 'இன்று போல் என்றும் வாழ்க' போஸ்டரும், எங்கே என்று நினைவில்லாத மீனவ நண்பனும் தான் இன்றைக்கும் என் மனதில் நிற்கின்றன.


ஏன், தமிழ்ப் படங்கள் கூட அவ்வாறாக மனதில் நிற்காதவையாகத் தானே இருக்கின்றன? தமிழ்த் திரைப்படங்களில் 'மறுவாசிப்பு' செய்யக் கூடிய அளவில் செவ்வியல் படங்கள் எதுவும் எனக்கு மனதில் இல்லை.

முத்திரை சேகரிப்பவர்கள் முதல் படுத்தவர்களின் எண்ணிக்கையில் பெருமை கொள்ளும் பாலியல் சுரண்டல் இலக்கியக் கும்பல் வரைக்கும்




உள்ள quantity over quality மனநிலை போன்று, வருகின்ற தமிழ் படங்களை எல்லாம் தரம் பற்றிய கவலை இல்லாமல், ஒன்றும் விடாமல் பார்த்ததாக பெருமையோடு டிக் பண்ணுகிற தமிழ் சினிமா ரசிகர்களும், படங்களின் பாடல் காட்சிகளையும் நகைச்சுவைக் காட்சிகளையும் திரும்பத் திரும்பப் பார்க்கும் அளவுக்கு திரைப்படங்களைப் பார்ப்பதில்லை.

தமிழ்ப் படங்களின் கலைத்துவத்திற்காகவே திரும்பத் திரும்பப் பார்ப்பதாக பெருமை




கொள்ளும் cinema connoisseurs ஐ நான் கணக்கில் எடுப்பதேயில்லை.

இதற்குள் போஸ்டர்களும் கலைத்துவமும்...!?

செயற்கை நுண்ணறிவு இப்போது ஹொலிவூட்டுக்குள் நுழைந்து விட்டது. அது சினிமா, தொலைக்காட்சி எழுத்தாளர்களின் பிழைப்பில் மண் போடப் போகிறது என்று எச்சரிக்கையாகி, ஹொலிவூட் எழுத்தாளர்கள் நடத்திய வேலைநிறுத்தம் கொஞ்ச நாளைக்கு முன்னால் தான் முடிவுக்கு வந்தது. வெறும் அறிவுறுத்தல்களுடன் (Text prompts) மட்டுமே திரைக்கதையை எழுதக் கூடிய அளவுக்கு தொழில்நுட்பம் வந்திருக்கிறது. அது ஏற்படுத்தக் கூடிய ஆபத்தை முன்னுணர்ந்து போராட்டம் நடத்தி ஸ்ரூடியோக்களுடன் ஒப்பந்தங்கள் செய்து கொண்டிருக்கிறார்கள்.

லாபத்தை மட்டும் கருத்தாகக் கொண்டிருக்கிற முதலாளித்துவத்துக்கு, தொழிலாளிக்கான வேதனம் என்பது அனாவசியச் செலவு. அதை தவிர்ப்பதற்கான சகல முயற்சிகளையும் வழிகளையும் முதலாளித்துவம் கண்டு பிடித்துப் பயன்படுத்திக் கொண்டே இருக்கும். Special Effects என்பது கணினித் தொழில்நுட்பத்தினால் உருவாக்கத் தொடங்கிய பின்னால், பெரும் செட் போட்டுப் படம் எடுக்க வேண்டிய தேவை குறைந்து விட்டது. பச்சைத் திரையைப் பின்னணியாக வைத்துப் படம் எடுத்தால் போதும். Fix it in the post என்பது ஹொலிவூட் சினிமா வட்டாரங்களில் பயன்படுத்தப்படும் வசனம். படப்பிடிப்பில் நிகழ்கிற எந்தத் தவறாக இருந்தாலும், அதில் நேரத்தைச் செலவிடாமல், Post production நிலையில் திருத்தலாம் என்பதே அதன் கருத்து.

இந்த கணினி பயன்படுத்தப்படும் வடிவமைப்புகளால், பல தொழிலாளர்களின் வேலை வாய்ப்பு பறிபோய் விட்டது. இப்படியான செட்டுகளில் மரவேலைத் தொழிலாளியாக வேலை செய்த ஹரிசன் போர்ட் தான் இந்தியானா ஜோன்ஸ் நாயகன்.




அதே ஹறிசன் போர்ட் தனது எண்பது வயதுகளில் திரும்பவும் இந்தியானா ஜோன்ஸ் ஆக நடித்த போது, அவரது முகத்தை இளமையாக்கியது கணினித் தொழில்நுட்பம் தான்.

இப்போது செயற்கை நுண்ணறிவுச் செயலியான ChatGPT யை உருவாக்கிய OpenAI நிறுவனம் SORA எனப்படும், வெறும் அறிவுறுத்தல்களைக் கொண்டே வீடியோக்களை உருவாக்கும் செயலியை உருவாக்கியுள்ளது. அதை ஹொலிவூட் படங்களில் பயன்படுத்தலாம் என்பதை பெரிய ஸ்ரூடியோக்களுக்கு புரிய வைப்பதற்கான சந்திப்பில் இறங்கியுள்ளது.

இது Computer Generated Imagery எனப்படும் CGI graphics தொழில்நுட்பக் கலைஞர்களின் பிழைப்பில் மண்ணைப் போடுவதற்கான வழியாகியிருக்கிறது. ஹொலிவூட் பிரமுகர்களுக்கான demonstration இல் காட்டிய வீடியோக்கள் ஏறக்குறைய யதார்த்தம் ஆனவையாகவும் உயிர்த் தன்மையுள்ளனவாயும் இருக்கின்றன. இது ஆரம்பக்கட்டம் என்னும் போது, இன்னும் சில வருடங்களில் இதன் வளர்ச்சி சொல்லத் தேவையில்லாதபடிக்கு வளர்ந்திருக்கும்.

அது ஏற்படுத்தப் போகும் மாற்றங்கள் என்ன? அதெல்லாம் சாத்தியமா? அதில் உள்ள குறைபாடுகள் என்ன? என்பதெல்லாம் தனியாக எழுதப்பட வேண்டியவை. அபத்தத்தை நிறுத்துவதற்கு முன்னால் நேரம் கிடைக்கட்டும்.

எல்லாரும் ஏறின குதிரையில் சக்கடத்தாரும் ஏறிய கதையாக, இந்தத் தொழில் நுட்பத்தை நம்மவர்களும் கையாளத் தொடங்கி இருக்கிறார்கள். இணையத் தளங்கள், சஞ்சிகைகள் எல்லாம் படங்களுக்காக செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்துகின்றன. அபத்தத்திலும் அதைப் பயன்படுத்தியிருக்கிறோம். நான் என்னுடைய அபத்தம் கடந்த முயற்சிகளுக்குப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறேன்.

ஆனாலும், செயற்கை நுண்ணறிவு மூலமாக படங்களை சில அறிவுறுத்தல்களுடன் வடிவமைக்க முடியுமாக இருந்தாலும், அதை பிரசுரத்திற்காகத் தெரிவு செய்வதற்கு குறைந்த பட்ச கலையுணர்வு வேண்டும். தமிழ்நதியின் தங்கமயில்வாகனம் புத்தக அட்டைப்படத்தில் பயன்படுத்தப்பட்ட படத்தில் உள்ள பெண் ஏதோ சத்துணவுக் குறைபாட்டினால் பாதிக்கப்பட்ட, மாற்றுத் திறனாளி போல இருப்பது பற்றி அபத்தத்தில் எழுதியிருக்கிறேன். செயற்கை நுண்ணறிவு கை, கால்களைக் கீறுவதில் திணறுவது குறித்தும் அதில் குறிப்பிட்டிருக்கிறேன்.

இது செயற்கை நுண்ணறிவின் ஆரம்பக் கட்டம், அது வளர்ச்சியடையும் பட்சத்தில் அதனால் உயிர்த்துடிப்புள்ள ஓவியங்களை வரைய முடியும்.

**தமிழ்நதியின் தங்கமயில்வாகனம் புத்தக அட்டைப்படத்தில் பயன்படுத்தப்பட்ட படத்தில் உள்ள பெண் ஏதோ சத்துணவுக் குறைபாட்டினால் பாதிக்கப்பட்ட, மாற்றுத் திறனாளி போல இருப்பது பற்றி அபத்தத்தில் எழுதியிருக்கிறேன்.**




ஆனாலும், முடிவில் பொதுவெளிக்கு அதை அனுமதிக்கும் ஒருவர் இது குறித்து நுண்ணறிவைக் கொண்டவராக இல்லாவிடில், நான்கு விரல் மனிதர்களும், பாலியல் வறுமை உள்ளோர் தங்கள் பால் உணர்வுகளுக்கு 'வடிகாலாகப் பயன்படுத்தும் றப்பர் பொம்மை உருவப் பெண்களும் தான் பொதுவெளியில் படங்களாக வெளிவரும் நிலை ஏற்படும்.

செயற்கை நுண்ணறிவினால் கீற முடியும் என்பதற்காக, கலையுணர்வு இல்லாத ஒருவரால் அதன் மூலம் ஒரு கலையுணர்வு மிக்க படத்தைக் கீறி விட முடியாது. தமிழில் தட்டச்சிடத் தெரிந்தவர்கள் எழுத்தாளர்களாகவும், கமெரா வைத்திருப்போர் பாலு மகேந்திராக்கள் ஆவதும் தமிழில் மட்டுமே சாத்தியமானது.

தனது கற்பனைத்திறனுக்கு ஏற்ப, அறிவுறுத்தல்களை மாற்றி மாற்றித் தான், தான் விரும்பிய விதத்தில் அந்தப் படத்தைப் பெற முடியும். இல்லாவிடில், யாழ்ப்பாணத்து டீக்கடைகளின் மேல் உள்ள விளம்பரப் பலகையில், தியேட்டர் கட்டவுட் கீற சான்ஸ் கிடைக்காத, அந்தக் காலத்தில் மலிவு விலைக்கு அகப்பட்ட 'பெயின்டர்களால்' கீறப்பட்ட கமல், ரஜனி, சிறிதேவி தோற்றத்தில் தான் அது வந்து முடியும்.

இளையராஜாவின் சரித்திரப் படத்திற்கும் எவராவது ஒரு கலை இயக்குனருக்குப் பணம் கொடுக்க விரும்பாமல், யாரோ பிரகிருதிகள் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி அந்த போஸ்டரை வடிவமைத்திருக்கிறார்கள். கோடிக் கணக்கான பணம் போட்டுத் தயாரிக்கப்பட இருக்கும் படத்திற்கு சில ஆயிரங்களை மிச்சப்படுத்தும் முயற்சி.


எவனோ ஒருவனின் பிழைப்பில் மண்.

அவன் மண் அள்ளித் திட்டாமலா விடுவான்?

ஹொலிவூட் கௌபோய் படங்களில் தலையில் தொப்பியும், இடுப்பில் துப்பாக்கியுமாக, அமெரிக்க பாலைவனங்களின் நடுவில் உள்ள சிறுநகரங்களில் கிளின்ட் ஈஸ்ட்வூட் வந்திறங்குவது போல, இளையராஜாவின் படம் வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

வடிவமைப்பில் எழுத்துக்களைப் பயன்படுத்தும் Typography பற்றிய எந்த அடிப்படை அறிவும் இல்லாமல், பூதக்கண்ணாடி வைத்துத் தேடவேண்டிய எழுத்துக்கள்.

ஒரு ஓவியனுக்கு இருக்கக் கூடிய வண்ணங்கள் பற்றிய அறிந்துணர்வு எதுவும் இல்லாமல், செயற்கை நுண்ணறிவுக்கே உரித்தான செயற்கைத்தனமான







வண்ணக் கலவையுடன், மேலே தெரியும் வானத்திற்கும் நீருக்குள் தெரியும் அதன் விம்பத்துக்கும் எந்தத் தொடர்பும் இல்லாமல்...

ஆங்கிலேயர் காலத்து சென்னை, ஆங்காங்கே காணப்படும் பழைய அம்பாசிடர் கார்கள்...

பத்துக் கார்கள் அங்கும் இங்குமாக ஒரே நேரத்தில் பயணிக்கக் கூடிய கிரிக்கட் மைதான அளவு அகல சகலமான, வெள்ளத்தின் பின்னான சகதி நிறைந்த மட்ராஸ் தெரு.

கிளின்ட் ஈஸ்ட்வூட்டின் இடுப்பில் உள்ள துப்பாக்கி உயரத்து இளையராஜா கிளின்ட் ஈஸ்ட்வூட் போல் பிரமாண்டமாய் உயர்ந்திருக்க, அவரது கையில் நாங்கள் பாடசாலை நாட்களில் பஸ்ஸிற்கு காத்திருக்கும்போது, சாப்பாட்டுப் பெட்டியுடன் வைத்திருக்கும் புத்தக, கொப்பிக் கட்டு சைஸில் ஆர்மோனியம்!

கனவுத் தொழிற் சாலைக்கு கனவுகளோடு வந்திறங்கிய சாதிக்கத் துடிக்கும் ஒருவனாக இல்லாமல், தாய் கட்டிக் கொடுத்த கட்டுச் சோற்றுப் பார்சலுடன், சிவகாசிக்கு தீப்பெட்டித் தொழிற்சாலையில் வேலை தேடி வந்திருக்கிறவன் மாதிரி 'போகணும்னு தோணுது, எங்கே போறதுன்னு மட்டும் தெரியலை?' லுக்கோடு!

செயற்கை நுண்ணறிவிடம் படம் கேட்டால், அது Landscape format இல் தான் கீறிக் கொடுக்கும். அதற்கு போஸ்டருக்குத் தோதாக Portait format இல் கீறித் தா என்று கேட்க வேண்டும்.

அதைக்கூடக் கேட்கத் தெரியாமல், கணினி பயன்படுத்துகிற சிறுவர்களுக்குக் கூடத் தெரிகிற, படங்களை இழுத்து விரித்து, ஒடுக்கிச் சுருக்குகிற நகாசு வேலைகளால் உருவங்கள் பூசணிக்காய் போல உடம்பாய் அகல சகலமாகியும், கொத்தவரங்காய் போல உடம்பாய் மெலிந்து உயர்ந்து போவதையும் கூடக் கருத்தில் எடுக்காமல், கிடைத்த படத்தை ஒடுக்கி உயர்த்தி, ஆளை மெலிந்துயரப் பண்ணி போஸ்டர் பண்ணியிருக்கிறார்கள்.

பண்ணைபுரத்து ராஜாவின் பயோபிக் பர்ஸ்ட் லுக் டீசர் இப்படித் தான் வந்து உரசிச் சென்றிருக்கிறது.

போஸ்டருக்கே இந்தக் கதி என்றால் படத்திற்கு?

முதல் நாள் முதல் ஷோ பார்த்து பேஸ்புக்கில் படம் போடவும், விமர்சனம் எழுதவும் எப்போதடா விடியும் என்று எத்தனை அறிவுக் கொழுந்துகள் காத்திருக்குமோ?

இதுவே ட்ரெய்லராக இருந்தால், அல்லது அதில் உள்ள பாடலாக இருந்திருந்தால், யூடியூப்பில் பார்வைகள் கோடிக்கணக்கைத் தாண்டியிருக்கும்.

உலக மயமாக்கல் வயற்காட்டு பம்பு செட்டுகளுக்குள் வந்து சேர்ந்தாலும்...


தவளைகளுக்கு கிணறு தான் உலகம்!












# உலகெங்கும் அமசோனில்....

| | |
|---|---|
| இந்தியாவில்... | www.amazon.in |
| அமெரிக்காவில்... | www.amazon.com |
| கனடாவில்... | www.amazon.ca |
| இங்கிலாந்தில்... | www.amazon.co.uk |
| ஜேர்மனியில்... | www.amazon.de |
| பிரான்சில்... | www.amazon.fr |
| நெதர்லாந்தில்... | www.amazon.nl |
| அவுஸ்திரேலியாவில்... | www.amazon.com.au |
| இத்தாலியில்... | www.amazon.it |

**ஜோர்ஜ் இ.குருஷ்சேவ்**
**என்ற வார்த்தையைத்**

**தேடுங்கள்...**
**கண்டடைவீர்கள்!**

# செயமோகன் செக்ஸ் டேப்புகள் Porn addicts



## ஜோர்ஜ் இ.

புலன் பெயர்ந்த நாடுகளில் வாழும் யாழ்ப்பாணிகள் தங்கள் காலைக்கடன்களை முடித்த பின்னால், சாமி கும்பிட்டு, அதன் பின்னர் முடிக்கிற இன்னொரு காலைக்கடன் ஒன்றுண்டு. லங்காசிறி என்ற இணையத்தளத்தைப் பார்வையிடுவது தான் அந்த கடன் கழிப்பு. புலன் பெயர்ந்த நாடுகளில் இறந்தவர்கள் பற்றிய மரண அறிவித்தல்களை அந்த இணையத்தளமே பிரசுரிப்பதால், தங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள், தெரிந்தவர்கள் யாராவது இறந்திருக்கிறார்களா என்று பார்ப்பதற்காக ஒரு நித்திய கடமை போல, யாழ்ப்பாணிகள் அந்த இணையத் தளத்தைப் பார்வையிடுகிறார்கள்.

சரி, இவர்கள் தினசரி அள்ளுப்பட்டு வந்து பார்ப்பதால், அதை வைத்து விளம்பரத்தில் பெரும் பணம் சம்பாதிக்கலாமே என்று, செய்திப்பத்திரிகைகளில் மரண அறிவித்தல் வந்த காலம் போய், மரணஅறிவித்தல் தளத்தில் அவர்களும் செய்திகளைப் பிரசுரிப்பதால், 'செய்த அந்த' காரியம், சம்பவம் என்ன? என்று பார்ப்போமே என்று ஆர்வத்தோடு வாசிப்பதன் மூலமாகத் தான் யாழ்ப்பாணிகள் தங்களின் உலக அறிவை வளர்த்துக் கொள்கிறார்கள்.

இப்படியாக, கனடாவில் வசித்தாலும், கனடியப் பிரதமர் இறந்தால், லங்காசிறியில் வந்தால் தான் கனடா வாழ் யாழ்ப்பாணிகளுக்கு அந்தச் செய்தி தெரிய வரும்.

முன்பு வன்னியிலிருந்து செய்தி வந்தால் தான் கனடியத் தமிழ் வானொலிகள் அதைச் செய்தியாகத் தெரிவிக்கும். அது கனடியச் செய்தியாக இருந்தாலும், தாங்கள் சுயமாக எதையாவது

**செய்திப்பத்திரிகைகளில் மரண அறிவித்தல் வந்த காலம் போய், மரணஅறிவித்தல் தளத்தில் அவர்களும் செய்திகளைப் பிரசுரிப்பதால், 'செய்த அந்த' காரியம், சம்பவம் என்ன? என்று பார்ப்போமே என்று ஆர்வத்தோடு வாசிப்பதன் மூலமாகத் தான் யாழ்ப்பாணிகள் தங்களின் உலக அறிவை வளர்த்துக் கொள்கிறார்கள்.**

**இப்படியாக, கனடாவில் வசித்தாலும், கனடியப் பிரதமர் இறந்தால், லங்காசிறியில் வந்தால் தான் கனடா வாழ் யாழ்ப்பாணிகளுக்கு அந்தச் செய்தி தெரிய வரும்.**

**முன்பு வன்னியிலிருந்து செய்தி வந்தால் தான் கனடியத் தமிழ் வானொலிகள் அதைச் செய்தியாகத் தெரிவிக்கும். அது கனடியச் செய்தியாக இருந்தாலும், தாங்கள் சுயமாக எதையாவது செய்தியாக வெளியிடப் போய், வன்னி மேலிடத்தின் கோபத்திற்கு ஆளாகி விடக்கூடாது என்பதில் கனடிய ஊளையிடலாளர்கள் கவனமாக இருந்தார்கள்.**

செய்தியாக வெளியிடப் போய், வன்னி மேலிடத்தின் கோபத்திற்கு ஆளாகி விடக்கூடாது என்பதில் கனடிய ஊளையிடலாளர்கள் கவனமாக இருந்தார்கள்.

ஆனால், புலிகளின் தாக்குதலில் இறந்த இராணுவத்தினரின் எண்ணிக்கையை நினைத்த மாதிரி அதிகரிப்பதற்கு மட்டும் புலிகள் அவர்களுக்குப் பூரண சுதந்திரம் வழங்கியிருந்தார்கள்.

இப்படித்தான்...

இந்தத் தமிழ்நாட்டு இலக்கியவாதிகள் எல்லாம் காலைக் கடன் கழித்த கையோடு, முதல் வேலையாகச் செய்யும் விடயம், ஆசான் ஜெயமோகனின் இணையத்தளத்தைப் பார்த்து ஆசானின் 'இன்றைய பலன்' அருள்வாக்குப் பெறுவது போலத் தான் எனக்கு பேஸ்புக்கைப் பார்க்கும்போதெல்லாம் தெரிகிறது.

வேலை வெட்டிக்குப் போகாமல், வீட்டிலிருந்தபடியே 24 மணி நேரமும் அரசியல், இலக்கிய கருத்து உதிர்ப்பு என்று சதா இன்புற்றிருக்கும் யமுனா ராஜேந்திரனின் பதிவுகள் பேஸ்புக்கில் கண்ணில் படும்போது, அவரும் அதிகாலை எழுந்து, காலைக்கடன் கழித்து, சாமிப் படத்திற்கு சாம்பிராணி கொழுத்தி, அது தான் மார்க்ஸின் படத்திற்கு, அடுத்துச் செய்வது ஆசானின் இணையத்தளத்திற்கு புனித யாத்திரை செல்வது தான் போலிருக்கிறது.

அவருக்கு போதிய நேரம் இருப்பதால், அவரால் சர்வதேசப் பிரச்சனைகள் சகலவற்றுக்கும், தமிழ் இலக்கிய உலகின் அதற்கும் அதிகமான பிரச்சனைகள் குறித்தும் தன் அபிப்பிராயம், கருத்துகளை உதிர்க்கவும், சர்வரோக நிவாரணித் தீர்வுகளைப் பரிந்துரைக்கவும் முடிகிறது. அதற்கான 'ஆராய்ச்சிகளைச் செய்வதற்கென வாங்கும் புத்தகங்கள், சஞ்சிகைகளுக்காக அவர் செலவிடுவதாகச் சொல்லும் பணம் ஸிம்பாவேயின் மொத்த உள்நாட்டு உற்பத்தியை (Gross Domestic Product) விட அதிகம்.

24 மணி நேரமும் பதினைந்து நிமிடத்திற்கு ஒரு தடவை வெளியாகும் பதினைந்து நிமிடப் புகழ் பதிவுகளைப் பார்க்கும்போது, சதா அறச்சீற்றத்தால் வந்த மூல நோயால் உபாதைப்படுகிறாரோ என்ற எண்ணம் வந்து கொண்டே இருக்கிறது.

படுக்கையில் கிடந்த படி சுப்ரபாதம் கேட்கிற பக்தகோடிகள் மாதிரி, "காலைக்கடன் கழிக்கும்போது, செல்போனை வைத்துக் கொண்டு பொழுதுபோக்குக்காக தட்டிப் பார்க்கிறேனே ஒழிய, மற்றும்படி 'நாரோயில் நாறவாயனிடம்' எதுவும் இல்லை" என்று அவர் இன்னொரு பதிவு போடக் கூடும்.

எனக்கு என் வாழ்க்கையைக் கொண்டு ஓடுவதற்கு அதிகாலை நான்கு மணிக்கு எழுந்து வேலைக்கு ஓட வேண்டியிருக்கிறது. அதற்குள் இந்த மாதம் மட்டும் அதிகாலை இரண்டு மணிக்கு எழுந்து மூன்று மணி வேலைக்கு ஆஜராக வேண்டியிருக்கிறது. தொழிலாளவர்க்கத்தின் தோழரான அவருக்கு அந்தச் சிரமங்கள் எல்லாம் இல்லாதபடிக்கு, குடியேற்றவாத ஏகாதிபத்திய நாடான பிரித்தானியா சகல வசதிகளும் செய்திருக்கிறது. சில நேரம் அவருக்கு அங்கே அந்த ஏகாதிபத்தியம் வழங்குகிற 'உதவிப்' பணத்தை விட, இங்கே நான் கனடாவில் கட்டுகிற வருமான வரி அதிகமானதாக இருக்கக் கூடும். அதை விட, அவரது எழுத்து தவத்திற்காக அவருக்கு தலைவிதியாக வந்து வாய்த்த 'ஜென்னியும்' வேறு பெரும் வரம். இப்படி 'வீட்டோடு மாப்பிள்ளை'யாக (சமைத்தும்!) உட்கார்ந்து சாப்பிட முடிகிறது!

அவருக்கு 'அபாரம், தோழர்' போடுகிறவர்களும் அப்படியான புனித யாத்திரைக்கான மொட்டைக "கோவிந்தா, கோவிந்தா'க்கள் போலத் தான் இருக்க வேண்டும். இவர் மொட்டையாக சங்கேத மொழியில் போடும் பதிவுகளுக்கு, அவர்களும் முழுமையாக எதையோ புரிந்து கொண்டது போலப் பின்னூட்டம் போடும் போது, அவர்களும் மாலை போட்டுக் கொண்ட ஐயப்ப பக்தர்கள் மாதிரித் தான் எனக்குத் தோன்றும்.

இதென்ன மர்மமாக இருக்குமோ? என்று அதன் பின்னால் தான் கல்லும் முள்ளும் காலுக்கு மெத்தையாக நானும் சபரி மலைக்கு அள்ளிக்கட்ட நேரிடுகிறது.

நான் முன்பு அகழ் மின்னிதழுக்கான பேட்டியில் சொன்னது போல, ஆசானை வாசிப்பதால் அறிவு வளரும் என்றோ, சாருவை வாசிப்பதால் சிந்தனை வளரும் என்றோ, அவர்களைத் தேடி வாசிக்க முடியுமா? இப்படி யாராவது ஏதோ சர்ச்சைகளைப் பற்றி எதையாவது உளறும்போது, அது எதுவாக இருக்கும் என்று தேடித் தொலைக்க வேண்டி இருக்கிறது.

ஆசானும், ஆசான் மாதிரி

தங்களைப் பாவனை செய்து கொண்டிருக்கும் இலக்கியப் பிரகிருதிகள் மாதிரியும், 'நான் உதெல்லாம் வாசிப்பதில்லை', 'யாரோ வாசித்தவர்கள் சொன்னார்கள்' என்பதில் எல்லாம் நான் பெருமை கொள்ளும் கேள்விச்செவியன் கிடையாது. நான் தமிழ்ப் படம் பார்ப்பதில்லை என்று சொல்வது போல, ஆசானை வாசிப்பதில்லை என்று சொல்வதெல்லாம், அதெல்லாம் எனது அறிவையோ, சிந்தனையையோ வளர்க்கும் எதையும் எனக்குத் தருவதில்லை என்பதால் மட்டுமே.

எனது மேதாவித்தனத்தைக் காட்டுவதற்காக இல்லை.

நான் மேதாவியா, இல்லையா? என்பது எனக்குத் தெரியும்.

'படித்ததில் பிடித்த' வெறும் பொன்மொழிகளை மட்டுமே வைத்துக் கொண்டு, நிசைக்கிள் பண்ணியபடியே 'இய வாதிகளாக' இருக்கும் நமது இலக்கிய, அரசியல் முற்போக்குப் பிரபலங்கள் மாதிரி, பேஸ்புக் மீம் ரக 'வெட்டிய துண்டு'களை மட்டும் வைத்துக் கொண்டு நான் பொங்கிப் பிரளயம் பண்ணி, போர்க்கொடி தூக்குவதில்லை.

எது சொல்லப்பட்டாலும், அது உண்மையா என்பதும், அது சொல்லப்பட்ட தாற்பரியம் (Context) எது என்பதும் எனக்கு முக்கியம். அதை முழுமையாக வாசித்ததன் பின்னால் தான் அது சொல்லப்பட்டதற்கான சூழ்நிலையையும் காரணத்தையும் நோக்கத்தையும் புரிந்து கொள்ளமுடியும்.

இதனால் தான் பேஸ்புக்கில் வருகிற 'ஆன்றோர் வாக்கு' எதையும் நான் நம்புவதில்லை. அது உண்மையில் அவர்களால் மொழியப்பட்டதா என்பதை ஆராய்ச்சி செய்து கொண்டிருப்பேன்.

**'படித்ததில் பிடித்த' வெறும் பொன்மொழிகளை மட்டுமே வைத்துக் கொண்டு, நிசைக்கிள் பண்ணியபடியே 'இய வாதிகளாக' இருக்கும் நமது இலக்கிய, அரசியல் முற்போக்குப் பிரபலங்கள் மாதிரி, பேஸ்புக் மீம் ரக 'வெட்டிய துண்டு'களை மட்டும் வைத்துக் கொண்டு நான் பொங்கிப் பிரளயம் பண்ணி, போர்க்கொடி தூக்குவதில்லை.**

**எது சொல்லப்பட்டாலும், அது உண்மையா என்பதும், அது சொல்லப்பட்ட தாற்பரியம் (Context) எது என்பதும் எனக்கு முக்கியம். அதை முழுமையாக வாசித்ததன் பின்னால் தான் அது சொல்லப்பட்டதற்கான சூழ்நிலையையும் காரணத்தையும் நோக்கத்தையும் புரிந்து கொள்ளமுடியும்.**

**இதனால் தான் பேஸ்புக்கில் வருகிற 'ஆன்றோர் வாக்கு' எதையும் நான் நம்புவதில்லை. அது உண்மையில் அவர்களால் மொழியப்பட்டதா என்பதை ஆராய்ச்சி செய்து கொண்டிருப்பேன்.**

அது போல, குடும்பச் சண்டைகள் பற்றி எனக்குச் சொல்லப்படும் முறைப்பாடுகளிலும், முதலில் சொல்கிறவரின் கருத்தை நான் நம்புவதில்லை. மற்றவரின் கருத்தைக் கேட்ட பின்னால் தான், இவர்கள் சொல்வதன் உண்மை இதற்குள் எங்கோ இருக்கும் என்று பின்னணிகளை றிவைண்ட் பண்ணித் தேடிக் கொண்டிருப்பேன்.

ஆசான் மாதிரியே சீமானும் உளறிக் கொண்டிருந்தாலும், சீமான் ஒரு pathological liar. அந்த உளறல்களுக்குள் எல்லாம் தாற்பரியங்களைத் தேட முடியாது. வடிவேலு, கவுண்டமணி காமெடி ட்ராக் மாதிரி, எந்தப் படத்தில் வந்தது என்பது கூடத் தெரியத் தேவையில்லாமல் சிரித்து விட்டுப் போகலாம். புஹாஹா என்றெல்லாம் அதைப் பற்றி பேஸ்புக்கில் 'ஹாஹா' போடத் தேவையில்லை.

காலையில் சுப்ரபாதமாக வந்து சேர்ந்திருக்கும் பேஸ்புக்கை படுக்கையில் கிடந்தவாறே புரட்டினால், கண்ணில் படும் ஆசான் பற்றிய இந்த அறச்சீற்றங்களைப் பார்க்கும்போது, தாற்பரியத்தைத் தெரிந்தாக வேண்டி வருகிறது.

ஆசான் பேஸ்புக்கில் இருந்திருந்தால் இந்தத் தொல்லைகள் இருந்திருக்காது. எனது திரையில் ஓடிக் கொண்டிருக்கும் போது கண்ணில் பட்டிருக்கும்.

அவருக்கும் தெரியும், பேஸ்புக் திறந்த வெளி குருக்ஷேத்திரம். எந்தப் பக்கம் இருந்து அம்பு வந்து பந்தாடும் என்று தெரியாது. No holds barred, below the belt kicks are allowed Ultimate Fighting Championship யுத்த களம் அது. ஆசான் ஆயிரம் தான் சொன்னாலும், பேஸ்புக் பக்கம் தலைவைக்காமல் இருப்பதற்கான காரணமே அது தான்.

அங்கு எல்லாம் வந்து பகைவர் கூட்டத்தைப் பந்தாடுவதற்கு ஆசானுக்கு துணிச்சல் கிடையாது. சாரு மாதிரி, பர்ஸ்ட் கமெண்ட் பிளீஸ் என்று, கையோடு உண்டியலிலும் தர்மம் போடுங்க, சாமி என்பதற்குக் கூட தில் கிடையாது.

கும்பல் அடி போட முனைந்தால், கையெடுத்துக் கும்பிட்டாலும் அரைத்து தோசை மாவு ஆக்கி விடுவார்கள்.

பிறகு ஆஸ்பத்திரிக் கட்டிலில் வைத்து, கர்ணன் படத்து தேர்ச்சில்லில் சாய்ந்த சிவாஜி மாதிரி சீன் போட்டு, கண்ணீர்ப் பேட்டி தான் கொடுக்க முடியும்.

அல்லது தமிழ்ப்பட ஹீரோக்கள் மாதிரி, உடம்பு முழுக்க பண்டேஜினால் மூடிக் கட்டி கண் மட்டும் வெளியே தெரிய, கதாநாயகியின் சோகப் பாட்டுக்கு முகபாவனை செய்து கொண்டிருக்க நேரிடும்.

'செஞ்சோற்றுக் கடன் தீர்க்க சேராத இடம் சேர்ந்து, வஞ்சத்தில் வீழ்ந்தாயடா!'.

பேஸ்புக்கில் வாசகர் கடிதப் புலுடா விட முடியாது. பின்னூட்டத்திற்கு ஃபேக் ஐடியில் வந்தாலும், வாத்தியார் மாறுவேசத்தில் வந்த மாதிரி, மற்றவர்கள் எல்லாருக்கும் தெரியும். அடிப்பொடிகளுக்கு மட்டும் தெரியாது,

ஆக, ஆசிரமத்தில்

எழுந்தருளியிருத்தல் சிரமம் இல்லாத செயல்.

எனதே காடு! நானே ராஜா!

வேண்டினால் சிவராத்திரி தாண்டவமும் ஆடலாம். ஆச்சிரமத்து அந்தப்புரத்திலும் 'எழுந்தருள'லாம்.

இப்படி முதலைகள் நிறைந்த அகழிகள் சூழ்ந்த, பின்னூட்டம் விட முடியாமல், பகிரங்கமாக வாசிக்க முடியாத வாசகர் கடிதங்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்ட, தனக்குப் பாதுகாப்பான கோட்டைக்குள் எழுந்தருளியிருந்து (பதுங்கியிருந்து!?) அருள்வாக்கு மொழிய வேண்டியது தான்.

பக்த கோடிகளும் தொண்டரடிதடிப் பொடிகளும் அள்ளுப்படும்போது, திருவிழாவில் கன்னியர்களோடு முட்டி மோதி பாலியல் வக்கிரங்களை தீர்த்துக் கொள்ள முயலும் வாலிப வட்டங்கள் மாதிரி, நம்ம இலக்கிய வட்டங்களும் உள்ளே நுழைந்து விடுகின்றன. கேட்டால், நாங்கள் நாத்திகர்கள், சாமி கும்பிடுவதில்லை, அழகை ரசிக்க வந்தோம் என்று நியாயம் சொல்லலாம்.

'அப்போது காதுல பட்டுச்சுது!' கதை தான்.

ஆசானைப் பற்றி நான் எழுதுவது இது மூன்றாவது தடவையாக இருக்கக் கூடும். பெரும்பாலும் இவ்வாறு எழுத வேண்டியவற்றை, தர்க்கநியாயங்களுடன் சொல்லி முடித்த பின்னால், I rest my case என்று வேறு வேலை பார்க்க விரும்பினாலும், மௌனமாக இருக்க முடியாதபடிக்கு, ஆசான் முதலானோர் இந்தக் கோமாளிக் கூத்துக்களை தொடர்ந்தும் வாரி வாரி அருள்பாலித்துக் கொண்டே இருக்கிறார்கள். முட்டாள்தனமாக எதையாவது உளறிக் கொண்டே இருக்கிறார்கள். அந்த உளறல்கள் குறித்து, சீமானின் புஹாஹா மாதிரி சிரித்து விட்டுக் கடந்து போகாமல், அதை ஏதோ சீரியஸான தத்துவ முத்தாக எடுத்துக் கொண்டு, பெரும் ஆக்ரோஷமான விவாதங்களோடு நம் இலக்கியக் கும்பல் உடனே களமிறங்கி விடுகிறது.

A mob doesn't have a mind on its own.

**ஆசான் பற்றி எங்கள் 'இலக்கியக்' கும்பலுக்கு இருக்கும் இந்த obsession ஐத் தான் என்னால் விளங்கிக் கொள்ள முடியவில்லை. எதுவாக இருந்தாலும், அது ஆசானின் கருத்துக்கள் மீதான தர்க்கரீதியான முரண்பாடுகள் பற்றியதாகவோ, அந்த முரண்பாடுகள் பற்றிய அறச்சீற்றமாகவோ இருக்கும் என்று எதையும் காண முடியவில்லை.**

**இவர்களுக்கு ஆசான் மீது ஏதோ ஒரு love-hate மையல் ஒன்று இருக்கிறது. செருப்பால் அடி வாங்கிய பின்னாலும், அந்தப் பெண் மீதான மையல் குறையாமல் அந்தப் பெண் மனம் மாற மாட்டாளா என்று, அவள் வீட்டு வீதியால் போக நினைக்கிற வயதுக் கோளாறுகள் மாதிரி!**

கும்பல் கோவிந்தாவும் போடும். கூட்டாகச் சேர்ந்து தர்ம அடியும் போடும். ஏன் எதற்கு என்ற கேள்வி கூடக் கிடையாது.

ஆசான் பற்றி எங்கள் 'இலக்கியக்' கும்பலுக்கு இருக்கும் இந்த obsession ஐத் தான் என்னால் விளங்கிக் கொள்ள முடியவில்லை. எதுவாக இருந்தாலும், அது ஆசானின் கருத்துக்கள் மீதான தர்க்கரீதியான முரண்பாடுகள் பற்றியதாகவோ, அந்த முரண்பாடுகள் பற்றிய அறச்சீற்றமாகவோ இருக்கும் என்று எதையும் காண முடியவில்லை.

இவர்களுக்கு ஆசான் மீது ஏதோ ஒரு love-hate மையல் ஒன்று இருக்கிறது. செருப்பால் அடி வாங்கிய பின்னாலும், அந்தப் பெண் மீதான மையல் குறையாமல் அந்தப் பெண் மனம் மாற மாட்டாளா என்று, அவள் வீட்டு வீதியால் போக நினைக்கிற வயதுக் கோளாறுகள் மாதிரி!

ஆசான் பற்றிய எது குறித்து நீங்கள் மதிப்போ, பொறாமையோ கொள்ள முடியும்?

ஆசானின் அருண்மொழிகள் உங்களை இன்பப் பிரவாகத்துக்குள் ஆழ்த்தி மெய் மறக்க வைத்து ஆகர்ஷிக்கும் வல்லமை கொண்டவை என்பதா?

அவருடைய கருத்துக்கள் உங்கள் சிந்தனையைத் தூண்டி அதை வளர்க்கக் கூடியளவு வல்லமை மிக்கவை என்று சொல்ல முடிகிறதா?

அவரது சிந்தனைகள் மாவோ, லெனின் சிந்தனைகள் மாதிரி, ஏதோ சமூக மாற்றத்தை ஏற்படுத்தும் என்றோ, ஏன் கோரியோ நிற்கின்றன என்று சொல்ல முடியுமா?

அல்லது அவரது நிலைப்பாடுகள் அறம் பிறழாதவை என்று சொல்ல முடிகிறதா?

அல்லது சமூக நீதிக்காக தன் வாழ்வை இழந்தோ, அர்ப்பணித்தோ வாழ்கிறார் என்பதா?

எழுத்துக்களின் மூலமாக பெரும் பொருள் ஈட்டி, இலக்கிய உலகின் சூப்பர்ஸ்டாராக சுகபோக வாழ்க்கை வாழ்கிறார் என்ற எண்ணத்தால் வரும் பொறாமை பற்றியதா?

எதைக் குறித்து அவர் மட்டில் நீங்கள் மதிப்புக் கொள்ள முடியும்? எதைக் குறித்து பொறாமைப்பட முடியும்?

பெருமாள் முருகனுக்கு இருக்கும் பிறமொழி வாசகர்கள் கூட இவருக்கு இல்லை. ஏன், பக்கத்தில் இருக்கும் இவரது பூர்வீகக் கேரளாவில் கூட கணக்கெடுக்கப்படுவதாகத் தெரியவில்லை. அங்கே போனாலும் தோசை மா அபிஷேகம் நடக்கும் என்ற நிலைமை.

எழுதுகிறார். அவருக்கான வாசகர்கள் இருக்கிறார்கள். அந்த எண்ணிக்கை மற்றவர்களை விட அதிகமானதாக இருக்கலாம். தனது புத்தக விற்பனை மூலமாகக் கிடைக்கும் ரோயல்டி மூலமாக உட்கார்ந்திருந்து சாப்பிட்டு, இலக்கியம் படைக்கும் அளவிலா இருக்கிறார்? (இதில் யமுனா ராஜேந்திரனை ஆசானால் அடிக்கவே முடியாது!)

பெரிய இலக்கியத்தன(ர)ம் பேசும் அவர், தானே திட்டிய இந்தத் தமிழ்ச் சினிமாவில் தலையை

ஆசான் உட்பட்ட, ஒரு கவிதை மட்டுமே எழுதிய இன்னோரன்னோரும் தமிழ் உலகின் தவிர்க்க முடியாத (இலக்கிய) சக்திகளாகத் தான் தங்களை பாவனை பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். தாங்கள் பேசப்பட வேண்டும் என்பதில் இருக்கும் முனைப்பு, இலக்கியம் படைப்பதில் இல்லாத அளவுக்கு அங்கீகாரம் குறித்த வேட்கை இங்கே இருக்கிறது. அங்கீகாரம் என்பது உழைப்பினால் கிடைக்க வேண்டியது (to be earned) என்பதை விட, நிர்ப்பந்திக்கப்பட வேண்டியது (to be demanded) என்ற அளவில் தான் இலக்கிய உலகின் பொதுச்சிந்தனை இருக்கிறது.

அந்த லட்சணத்தில், ஊருக்கு நாலு நம்பர் வண் இலக்கியவாதிகள் கிடைக்கும் பெரும்பேறு பெற்றது இந்தத தமிழ்ச் சமூகம்.

நுழைக்க வேண்டிய அளவில் தானே இருக்கிறார்?

அவர் சொல்கிற அந்த ஒரு லட்சம் இலக்கிய உபாசகர்களைக் கடந்த இந்த கோடிக்கணக்கான தமிழர்களின் பொதுவெளியில் அவர் எவ்வளவு தூரம் அறியப்பட்டிருக்கிறார்? எவ்வளவுக்கு மதிக்கப்பட்டிருக்கிறார்?

மலையாள, வங்க எழுத்தாளர்களுக்கு அவர்களின் பொதுவெளிச் சமூகங்களில் கிடைக்கும் மதிப்பும் மரியாதையும் தமிழ்நாட்டில் எந்த எழுத்தாளருக்கும் இல்லை. ஒரு சினிமா நடிகனுக்கு இருக்கக் கூடிய ரசிகர்கள் போன்ற அளவில் தான் அந்தந்த எழுத்தாளருக்கான வாசகர்கள் இருக்கிறார்கள். அவர்களின் எழுத்துக்கள் குறித்த ரசனை தவிர்ந்து, அவர்களின் சமூகம் பற்றிய பார்வை, அந்தச் சமூகத்தின் வாழ்வின் உயர்வையும் இழிவையும் உண்மையோடு எழுத்தில் பதிவு செய்தமை குறித்த மதிப்பீடுகள் சமூகத்தில் பெரிதாக இருப்பதில்லை. அந்தளவுக்கு தமிழ் மொழியின் இலக்கியத்தைச் செழுமைப்படுத்தியவர்கள் என்று கொண்டாடப்படும் அளவிலும் எவரும் இல்லை என்பதற்கு, மற்றவர்களுக்கு அந்தப் பெருமை கிடைத்து விடக் கூடாது என்பதில் குறியாக இருக்கும் இலக்கியத் தமிழர்களின் பொறாமை உணர்வும் காரணம் என்பது பெரும் உண்மை.

இதற்குள் ஆசான் உட்பட்ட, ஒரு கவிதை மட்டுமே எழுதிய இன்னோரன்னோரும் தமிழ் உலகின் தவிர்க்க முடியாத (இலக்கிய) சக்திகளாகத் தான் தங்களை பாவனை பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். தாங்கள் பேசப்பட வேண்டும் என்பதில் இருக்கும் முனைப்பு, இலக்கியம் படைப்பதில் இல்லாத அளவுக்கு அங்கீகாரம் குறித்த வேட்கை இங்கே இருக்கிறது. அங்கீகாரம் என்பது உழைப்பினால் கிடைக்க வேண்டியது (to be earned) என்பதை விட, நிர்ப்பந்திக்கப்பட வேண்டியது (to be demanded) என்ற அளவில் தான் இலக்கிய உலகின் பொதுச்சிந்தனை இருக்கிறது.

அந்த லட்சணத்தில், ஊருக்கு நாலு நம்பர் வண் இலக்கியவாதிகள் கிடைக்கும் பெரும்பேறு பெற்றது இந்தத் தமிழ்ச் சமூகம்.

ஆசான் சமூகம் பற்றி என்ன சொன்னார் என்பதை விட, அவர் சொன்ன எந்தக் கருத்திலேயும் நிரந்தரமாக இருந்தவரும் இல்லை.

தானே சிலரைப் புகழ்கிறார். அதே வாயால் திட்டுகிறார். பின்னர் கூப்பிட்டு விருதும் கொடுக்கிறார்.

பொதுவெளியில் மட்டுமல்ல, தனிப்பட்ட வாழ்வில் கூட ஒருவரை எப்படித் திட்டலாம் என்பது குறித்த அடிப்படைப் பண்பு கூட அவரிடம் இல்லை. மனுஷ்யபுத்திரனிடம் கேட்டுப் பாருங்கள். (இந்த இலக்கியவாதிகளுக்கு இடையிலான சர்ச்சைகள் குறித்து நீங்கள் பெரிதும் அலட்டிக் கொண்டு, சைட் எடுக்கத் தேவையில்லை. அவர்களின் மேடைப்பேச்சுக்கள் எல்லாம் கட்சிகளுக்கு இடையிலான தேர்தல் கூட்டணி மாதிரித் தான்! எப்போது புகழ்வார்கள், எப்போது திட்டுவார்கள், எப்போது ஒட்டுவார்கள் என்பதெல்லாம் நமக்குத் தெரியாது.)

இயல் விருதை தானே உருவாக்கினேன் என்கிறார். தனக்குத் தரப்படவில்லை என்பதற்காக 'ஒரு விருதின் மரணம்' என்று எழுதுகிறார். பின்னர் தனக்குக் கிடைத்தவுடன் ஏறி இழந்து வந்து பேருரை நிகழ்த்துகிறார். ஓய், நீரே உருவாக்கிய விருதை உமக்கே கொடுத்துக் கொள்வதில் என்ன ஞாயம் இருக்கு? என்று யாரும் கேட்க மாட்டார்கள் என்று இந்தச் சமூகம் குறித்து அவருக்கு முழு நம்பிக்கை இருக்கிறது.

எவரையும் மதிப்பளிக்காமல், இளித்துரைத்து வீம்பு பேசுகிறார். தோசை மாவுக்கு சண்டையிடப் போய் அடிவாங்கிய பின்னால், எந்த வெட்கமும் இல்லாமல் தன்னை ஒரு victim ஆக நாடகம் போடுகிறார்.

தன்னைத் தானே புகழ்ந்து கொள்கிறார். இந்தச் சமூகம் பற்றிய சகலமும் குறித்த தன்னுடைய கருத்துக்களே அறுதியும் இறுதியுமானவை என்கிறார். அவ்வப்போது மனதில் தோன்றுகிற எதையும் எந்த தர்க்க நியாயங்களும் இன்றி, உலக நீதியாக, திருத்தி எழுத முடியாத தீர்ப்புகளாக சொல்கிறார். பின்னர், சொல்லி விட்டேனே என்பதற்காக மட்டும் அதை நியாயப்படுத்துகிறார். எங்கேயும் 'அட, சொதப்பியிட்டேன்' என்கிற அளவுக்குக் கூட அவருக்குப் பக்குவம் இல்லை.

பிறகு அதற்கு முரணான ஒன்றைச் சொல்கிறார்.

அவரைப் பொறுத்த வரைக்கும் தன்னைப் பற்றிய பரபரப்பு எப்போதும் இருக்க வேண்டும். அவ்வளவு தான்.

பாரிஸ் ஹில்டன் முதல் கிம் கார்டாஷியான் வரைக்குமான famous for nothing பிரபலங்கள், தங்களுடைய பிழைப்பு

வாழ்வுக்கான (Career) வழியாக, தங்களுடைய செக்ஸ் டேப்புகளை தாங்களே கசிய விட்டுக் கொள்வது போல, எப்போதுமே பேசப்படும் பிரபலமாக இருப்பதற்காக செய்யும் ஸ்டண்டுகள் தான் இந்த கருத்து உதிர்ப்பு எல்லாம்.

பொதுவெளியில் ஏற்றுக் கொள்ளப்படும் ஒன்றுக்கு எதிரான ஒன்றை, எந்த தர்க்க நியாயங்களும் இன்றி, எதிர்ப்பதன் மூலம் தன்னை பொதுவெளிச் சாமான்யர்களுக்கு மேலான ஒரு சிந்தனாவாதியாகக் காட்டிக் கொள்வதைத் தவிர இவரது கருத்து உதிர்ப்புகள் வேறு எதுவும் இல்லை.

ஒரு படத்தில் வருகின்ற பாத்திரங்களை வைத்துக் கொண்டே ஒரு இனத்தைப் பற்றி பகிரங்கமாகச் சொல்கிறவரின் பகுத்தறிவு பற்றி பிரமிக்க என்ன இருக்கிறது?

பிறகு அதே வாயால் அதே இனத்தை மறுநாள் புகழும் போது, அவருக்கு எந்த வெட்கமும் இல்லை.

அவருடைய பிரச்சனை இன்றைக்கு நான் பேசப்படுகிறேனா என்பது மட்டும் தான்.

அது சரியான, நியாயமான ஒன்றுக்கானதாக இருக்க வேண்டும் என்பது அவருக்கு அவசியமில்லாத ஒன்று. தன்னை மேலானவராக நினைப்பதும், காட்டிக் கொள்வதும், அவரது சுயமோக இயல்புக்கு மட்டும் அவசியமானது. அவரது வாழ்வும் இருப்பும் அதில் தான் தங்கியும் இருக்கின்றன.

தன்னை மட்டும் புத்திசாலியாகவும், மற்றவர்கள் எல்லாரையும் முட்டாள்களாகவும் (அற்பர்களாகவும்!) நினைப்பதைத் தவிர, அவரிடம் வேறு எதுவும் இல்லை.

கற்பனைக் கதை சொல்லி சீமான் pathological liar என்றால், ஆசான் உண்மை, பொய் தெரிந்த compulsive liar.

இதில் எங்கே இவரைப் பற்றி நாங்கள் மதிப்பு கொள்ள முடியும்? பேஸ்புக்கில் தாங்கள் பதிவு போட்ட பின்னால், உலகம் கலங்குவதாக நினைக்கிற ஆயிரம் பேர் இங்கே இருக்கிறார்கள். இவர் ஆயிரத்தில் ஒராமவர். அவ்வளவு தான்.

துரையப்பாவைச் சுட்டோம் என்று அகதித் தஞ்சம் கோரிய யாழ்ப்பாணிகள் மாதிரி, இலக்கிய உலகத்தின் நம்பர் வண்கள் என்று இங்கே ஆளுக்காள் உரிமை கோரிக் கொண்டிருக்கிறார்கள்.

சமூகமாக தமிழர்கள் அப்படி நம்பர் வண்கள் என்று எவரையும் கண்டுகொண்டதில்லை. அப்படி தன்னை நம்பர் வண் என்று பாவனை செய்கிறார் என்பதையும், அதை நம்பி அவரோடு தங்களையும் ஒட்டிக் கொண்டு ஈடேறலாம் என்று நம்புகிற ஒரு கூட்டத்தையும் தவிர்த்து அவர் யாருக்கு பெரும் கொம்பனாக இருக்கிறார்?

அவர் ஒரு தனிமனிதனாக பண்பாளனாக அறியப்பட்டிருக்கிறாரா என்றால், அப்படியும் இல்லை. அவரது சில செயற்பாடுகள் குறித்து எனக்கு மதிப்பு இருக்கிறது என்பது என்னவோ உண்மை.

ஆனால், அவரின் வாலில் தொங்கிக் கொண்டு, தங்களுக்கான அங்கீகாரத்தைப் பெற முடியும் என்று நினைக்கிற அ.முத்துலிங்கம், காலம் செல்வம் போன்றவர்கள் சொல்வது போல, ஆசான் போன்ற ஒருவரை என்னுடைய நண்பர் என்று சொல்லிக் கொள்வதில் நான் ஒருபோதும் பெருமைப்படப் போவதில்லை. ஏற்கனவே முப்பது வருடங்களுக்கு மேலாகத் தெரிந்து நான் ‘நஞ்சன்’ என்று பகிரங்கமாகச் சொல்கிறவர்கள் தங்களுடைய நெருங்கிய நண்பர் ஜெயமோகன் என்று சொல்லும்போது, அதே ஆசான் அவர்களை தனது நண்பர்கள் என்று பெருமையோடு குறிப்பிடும்போது, ஆசான் பற்றிய என்னுடைய மதிப்பீடு ‘அயோக்கியனுக்கு அயோக்கியன் தானே நண்பனாக இருக்க முடியும்?’ என்பதை விட வேறு எதுவாக இருக்கும்?

அவரை நண்பர் என்பதில் பெருமை கொள்கிற அ.முத்துலிங்கம், காலம் செல்வம் போன்றோர், ஆசான் அகப்பட்டுக் கொள்கிற சர்ச்சைகள் எதிலாவது ஆசானுக்கு சார்பாக ஓடி வந்து, ஆதரவளித்துக் கருத்துச் சொல்வதை என்றைக்காவது எங்காவது கண்டிருக்கிறீர்களா? நண்பர்களாக இருந்தால் ஓடி வந்து இடுக்கண் களையாமல், இடுக்கண் வரும்கால் இரகசியமாக ‘நகுந்து’ கொண்டு, அவர் மூலமாக பெறக் கூடிய அங்கீகாரத்தை மட்டுமே பெறும் அயோக்கிய நோக்கம் தவிர, தங்கள் நண்பர் என்று பீற்றிக் கொள்வதற்கான காரணம் வேறு எதுவாக இருக்க முடியும்?

புலிகளை வெறுக்கும் அவரது வாலில் தொங்கி தங்களையும் ஈடேற்ற முயலும் எங்கள் யாழ்ப்பாணிப் புலிவால் தமிழ்த்தேசிய இலக்கியவாதிகள் கூட அவருக்கு நண்பர்களாகத் தானே இருக்கிறார்கள்?

You are known by the company you keep. அவ்வளவு தான்.

நான் அந்தக் காலம் முதல் சொன்னது போல, ‘நண்பர்களிடம் இருந்து காத்துக் கொள்ளும் இறைவா, ஏனெனில் என் எதிரிகளிடம் இருந்து என்னைக் காத்துக் கொள்ள எனக்குத் தெரியும்’ என்பது எல்லாம் ஆசானுக்குத் தெரியாது.

உண்மையில் ஆசான் எனக்கு நண்பராக இருந்திருந்தால், உட்பெட்டியில் தொந்தரவு மட்டும் இல்லாமல், பகிரங்கமாகக் கூட சரியான இடங்களில் ஆசானை நியாயப்படுத்தவோ, தவறுகளைச் சுட்டிக்காட்டவோ தயங்கியிருக்க மாட்டேன்.

சுயநலமே குறியாக உள்ள அயோக்கியர்களுக்கு அதெல்லாம் பிரச்சனையாகவும் இருப்பதுமில்லை. அவர்களுக்கு நிரந்தர நண்பர்களும் கிடையாது. நிரந்தர பகைவர்களும் கிடையாது. தங்கள் சுயநலன் தான் அவர்களுக்கு நிரந்தரமானதாக இருக்கும்.

இதனால் தான், எவரோடும் கூட்டு வைத்துக் கொள்வதிலும், அவர்களுடனேயே மோதல் வந்து திட்டிக் கொள்வதிலும், திட்டியவர்களுடனேயே திரும்பவும் ஒட்டிக் கொள்வதிலும் எந்தக் கூச்சமும் இருப்பதில்லை.

இதற்குள் அவரோடு படம் எடுத்து பேஸ்புக்கில் படம் போட்டு ‘தனது நண்பர்’ என்று சுய இன்பம் அடையும் அல்லக்கை அபத்தங்கள் பற்றிச் சொல்ல வேண்டுமாக்கும்!?

ஆசானின் இந்த இயல்புகளுக்கான

உளவியல் பின்னணி என்ன?

ஆசான் போன்ற சுயமோகிகளின் வாழ்வும் இருப்பும் தாங்கள் பேசப்பட வேண்டும் என்பதன் அடிப்படையில் கட்டப்பட்டவையே. தங்களைப் பற்றி நல்லவைகள் சொல்லப்பட வேண்டும் என்பதில் கூட அவர்களுக்கு அக்கறையில்லை. அவர்களின் அனுசேப இயக்கங்களுக்கான ஒட்சிசன் அவர்கள் பொதுவெளியில் பேசப்படுவது தான்.

அது famous for nothing ஆக இருந்தாலும் கூட!

ஆசானோடு என்னால் ஒப்பிடக் கூடிய, எல்லாருக்கும் தெரிந்த ஒருவர் என்றால், டொனால்ட் ட்ரம்ப் மட்டும் தான். எனக்கு அருவருப்புத் தரும் தனது வாயினால், டொனால்ட் ட்ரம்ப் அவிழ்த்து விடும் பொய்களும் தன்னைப் பற்றிய அதீதமான மதிப்பீடுகளும் எனக்கு ஆசானை எப்போதுமே நினைவூட்டிக் கொண்டிருக்கும்.

ஆசானின் வாய் ட்ரம்ப் அளவுக்கு அருவருப்பு ஊட்டுவதில்லை என்ற வித்தியாசம் தவிர!

ட்ரம்பைப் போல, தன்னை மட்டும் புத்திசாலியாகவும், மற்றவர்கள் எல்லாரையும் ஒட்டுமொத்தமாக பாமரர்கள், அற்பர்கள், சாமான்யர்கள் என்று சொல்கிறவராகவும் தானே அவர் இருக்கிறார்?

அடிப்படை உண்மைகள் பற்றியும் எந்த பொருட்படுத்தலும் இன்றி, தான் சொல்கிறவைகளை உண்மையாகவும், மற்றவர்களை முட்டாள்கள் என்று நினைத்துக் கதை சொல்கிறவராகவும் தானே இருக்கிறார்? ட்ரம்ப் சொல்கிறவற்றின் உண்மைத்தன்மை பற்றி எத்தனை ஊடகங்கள் ஆதாரங்களோடு நிருபித்தாலும் அவர் அது குறித்து எந்தக் கவலையும் கொள்ளாதது போலத் தான், இந்த இலக்கியக் கும்பல் சொல்லும் எது பற்றியும் ஆசான் அலட்டிக் கொள்வதில்லை.

ஒரு சுயமோகியின் சிந்தனை அவ்வாறானது தான். அது தான் வாழும் உலகின் பொதுமதிப்பீடுகள் குறித்த எந்த அக்கறையும் இல்லாத,

**ஆசான் போன்ற சுயமோகிகளின் வாழ்வும் இருப்பும் தாங்கள் பேசப்பட வேண்டும் என்பதன் அடிப்படையில் கட்டப்பட்டவையே. தங்களைப் பற்றி நல்லவைகள் சொல்லப்பட வேண்டும் என்பதில் கூட அவர்களுக்கு அக்கறையில்லை. அவர்களின் அனுசேப இயக்கங்களுக்கான ஒட்சிசன் அவர்கள் பொதுவெளியில் பேசப்படுவது தான்.**
**அது famous for nothing ஆக இருந்தாலும் கூட!**

தன்னுடைய உலகத்துள் வாழும் வாழ்வு.

என்னோடு ஒரு எரித்திரியன் வேலை செய்தான். அங்கே என்னோடு வேலை செய்த பல எரித்திரியர்களில் அவனும் ஒருவன். அவன் தனக்கான உலகில் வாழ்ந்து கொண்டிருந்தான். எரித்திரிய ஜனாதிபதி கடவுள் போன்றவர், எரித்திரியா தான் உலகத்திலேயே சிறந்த நாடு, அதன் பொலிசார் உலகத்திலேயே சிறந்தவர்கள், அதன் இசை தான் உலகத்தில் சிறந்தது என்று அவன் நம்பிக் கொண்டிருந்தான்.

எங்கள் யாழ்ப்பாணிகள் மாதிரி!

என்னோடு வேலை செய்த மற்ற எரித்திரியர்களுக்கே அவனைப் பற்றிச் சொன்னால் சிரிப்பு வரும். அவன் அதைப் பற்றி எல்லாம் கவலைப்பட்டதே கிடையாது. கிட்டத்தட்ட எருமை மாட்டில் மழை பெய்த மாதிரி என்று சொல்வார்களே, அதைப் போன்றது தான் அவன் மற்றவர்களின் கருத்துக்கள் பற்றிக் கொண்டிருக்கும் எண்ணப்பாடு.

ஆசானும் அவன் போன்ற ஒருவர் தான். அவர் தன்னுடைய உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார். அந்த உலகத்தில் அவர் தான் பொன்னியின் செல்வன் 'சக்கரவர்த்தியாக' வாழ்ந்து கொண்டிருக்கிறார். அவரைப் பற்றி நீங்கள் சொல்வதோ, நினைப்பதோ அவருக்கு பொருட்டே இல்லை. அவரைப் பொறுத்தவரைக்கும், அவரது அடிப்பொடிகள் தவிர்த்த எல்லாருமே சாமான்யர்கள், அற்பர்கள், காமன்மேன்கள் தான்.

நீங்கள் எதையும் சொல்லலாம், எழுதலாம்.

கோமாதாவுக்கு மழை பெய்த மாதிரித் தான்!

சுயமோக மனநிலை அவ்வாறானது தான். அது தன்னுடைய கருத்துத் தவிர்ந்த வேறு எதையும் பொருட்படுத்துவதில்லை.

வைரவருக்கு வந்து வாய்த்த நாய்கள் மாதிரி, இவருக்கும் அடிப்பொடிகள் உண்டு. இவர் பற்றி நீங்கள் சொல்கிற கருத்துக்களுக்கு ஓடிவந்து, அவரை விமர்சிப்பதன் மூலம் பெரிய ஆளாகப் பார்க்கிறீர்கள் என்று சொல்ல முனைவார்கள்.

அடே, நீங்கள் தானேடா அவரது வாலில் தொங்கிக் கொண்டு பெரிய ஆளாகப் பார்க்கிறீர்கள்? ஆசானை அகற்றி விட்டால் உங்கள் அடையாளம் தான் என்ன? என்று நாங்கள் கேட்கவா முடியும்?

இவ்வாறான அடிப்பெடிகளின் கருத்துக்களை (கடிதங்களை?) வாசித்து, அதையெல்லாம் பற்றி அக்கறையோடு கருத்துச் சொல்லும் அவருக்கு அற்பர்களின் கருத்துக்கள் பற்றி, 'நான் வாசிப்பதில்லை, யாரோ அடிப்பொடிகள் சொன்னார்கள்' என்று சொல்வது பெருமைக்குரியதாகக் கூட இருக்கிறது.

உலகத்தில் எனக்கு மேலானவன் எவனுமில்லை என்ற சுயமோகத்தின் முழுமை அது!

சரி, அவருக்குத் தான் சுயமோகம். இந்த இலக்கியக் கும்பலுக்கு எதற்கு செயமோகம்?

இலக்கியக் கும்பல் இவர் மீது கொண்டிருக்கும் obsession க்கான உளவியல் என்ன?

இவர்கள் மனதில் ஆசான் ஒரு வெற்றி பெற்ற இலக்கியகாரன் என்ற எண்ணம் இருக்கிறது, அந்த இலக்கியகாரனின் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் இருக்கிறது என்ற நம்பிக்கை இருக்கிறது, தங்களுக்கு அந்த வெற்றி கிடைக்கவில்லையே என்ற பொறாமையோடு, அவர்

'போல ஆக வேண்டும்' என்ற எண்ணம் இருக்கிறது.

எப்படி சுஜாதா வணிக எழுத்துலகத்தில் பணமும் புகழும் சம்பாதித்ததால் வந்த பொறாமையால் அவரை 'இலக்கியகாரன்' இல்லை என்று நிராகரித்தபடியே, அவர் போல வணிக இதழ்களிலும் சினிமாவிலும் தங்களுக்குச் சந்தர்ப்பம் கிடைக்க வேண்டும் என உள்ளார்ந்த கனவில் இருக்கிறார்களோ, அதே எண்ணம் ஆசான் குறித்தும் இவர்களுக்கு இருக்கிறது. இவர்கள் எவருமே நாங்கள் வேண்டும் அங்கீகாரம், கனவு என்பது இவைகள் குறித்தன அல்ல என்று ஒருபோதும் மறுப்பு அறிக்கை விட முடியாதவர்கள். சந்தர்ப்பம் கிடைத்தால், கல்லெறியக் கூடிய பாவிகள்.

அந்தக் கனவு தான் இவர்களைத் தவிர்க்க முடியாத obsession க்குள் வைத்திருக்கிறது.

ஆங்கிலத்தில் porn என்பது, வெறும் பாலியல் வக்கிரங்களுக்குத் தீனி போடுகிற போர்ணோகிராபி மட்டும் பற்றியதல்ல, எது குறித்தும் அதிதீவிரமான மோகம் எதுவும் அவ்வாறே குறிப்பிடப்படுகிறது. வன்முறை, உணவு, அழகு என விசேடமான ஆர்வம் தரும் எதுபற்றியுமான அதிதீவிர மோகங்கள் எல்லாம் அதைக் கொண்டிருப்போருக்கு உச்சம் தருவிப்பவையே. அதிவேகக் கார்கள் மீது ஆர்வம் உடைய ஒருவன் அவற்றைக் கண்காட்சிகளில் காணும்போது அடையும் சுய இன்பம் சொல்லி மாளாது.

அது போன்று சுயமோக ஆசானின் கருத்துக்கள் மீதும் இவர்கள் அதிமோகம் (Porn addiction) கொண்டிருக்கிறார்கள். இதனால் தான் இவர்களால் ஆசானின் எழுத்துக்களை நிராகரித்துக் கடந்துபோக முடியவில்லை.

ஆசானின் கருத்துக்கள் ஏதோ தமிழ் இலக்கிய உலகின் தூய்மையைக் கெடுப்பது போலவும், தனது இலக்கியம் மூலமாக இந்துத்துவத்தை தமிழ்நாட்டில் புகுத்தப் போவது மாதிரியும், தாங்கள் அதை நிறைவேற விடமாமல், தடுத்து நிறுத்திப் போராடுவது மாதிரியும் இந்த இலக்கியக்கும்பல் பாவனை காட்டிக் கொண்டிருக்கிறது.

இவர்கள் ஒருவகையில் reactionaries. இவர்கள் எது குறித்தும் சுயமான கருத்தைக் கொண்டிருப்பதில்லை. இவர்களில் பலர் சமூகம், அரசியல், இலக்கியம், வாழ்வு என எதுபற்றியும் சொந்தக் கருத்துக்கள் எதையும் தங்கள் சிந்தனையில் உருவாக்குவதில்லை. ஏதோ தத்துவங்களுக்குள் தங்களை மட்டுப்படுத்திக் கொண்டு, தங்கள் சாதீயச் சிந்தனைக் கிணறுகளுக்குள் இருந்து வெளியில் வர முடியாதவர்கள். இவர்கள் மற்றவர்கள் சொல்லும் கருத்துக்கள் பற்றி, எந்தத் தர்க்கநியாயங்களும் இல்லாத வெறும் உணர்வுபூர்வமான opinion களை மட்டுமே கொண்டவர்கள். ஆசானுக்கு இருப்பது போன்ற, பேஸ்புக் பின்னூட்டம் விடுவோருக்கு உள்ளது போன்ற, அறிவுபூர்வமானதாக இல்லாமல், வெறும் உணர்வுபூர்வமாக உள்ள கருத்துக்களால் நிறைந்தவர்கள்.

இவர்கள் இதனால் சுலபமாக உணர்ச்சிவசப் படுகிறார்கள். அதை அறச்சீற்றம் என நினைக்கிறார்கள்.

ஆசானின் எந்தக் கருத்துக் குறித்தும் பொதுவெளியில் யாரும் அலட்டிக் கொள்கிறார்களா? இந்துத்துவத்தை எதிர்ப்பதாகச் சொல்லிக் கொண்டு, திராவிட அரசியல் பேசுவோர்கள் கூட, எஸ்.வி.சேகர், எச்.ராஜா போன்ற பார்ப்பனியர்களுக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தைக் கூட, ஏன் சீமானுக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தைக் கூட, ஆசானுக்குக் கொடுப்பதில்லை. அவர்கள் கூட கேலிக்கும் கிண்டலுக்கும் உரியவர்களாகத் தான் பார்க்கப்படுகிறார்களே அன்றி, தர்க்கரீதியான விவாதங்களுக்கு வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதில்லை.

இந்த லட்சணத்தில், ஆசானின் இந்துத்துவக் கருத்துக்கள் தமிழ்நாட்டில் எந்த வகையான ஆதிக்கத்தைச் செலுத்த முடியும்? ஒரு பார்ப்பனிய பேஸ்புக் பதிவருக்கு உள்ள ஆதிக்க அளவை (influence) விடமேலாக, பணம் வாங்கிக் கொண்டு உளறுகிற யூடியூபர்களுக்கு இருக்கக் கூடியதை விட, ஆசானின் கருத்துக்கள் எந்தப் பாதிப்பையும் பொதுவெளியில் ஏற்படுத்தக் கூடிய அளவு எந்த விதத்திலும் முக்கியமானவை இல்லை.

அவ்வாறு ஆசானுக்கு இருப்பதாகக் காட்டி ஊதிப் பெருப்பித்து, தாங்கள் அதை தடுத்து நிறுத்தப் போராடுவது போன்று சீன் காட்டுவது தவிர்த்து, இந்த இலக்கியக் கும்பல் காட்டும் எதிர்ச் செயற்பாடுகள் வேறு எதுவும் இல்லை.

இவர்களின் அனுசேப இயக்கங்களுக்கு ஆசான் தான் சுவாசத்திற்கான ஒட்சிசன். அங்கீகாரமும் ஆசான் எதிர்ப்பும் தவிர்ந்து இவர்களின் வாழ்வுக்கு வேறு எந்த நோக்கமும் இல்லை.

ஆசான் போன்றவர்களை, வீட்டில் தொணதொணத்துக் கொண்டிருக்கும் வயதானவர்களைப் போல, கணக்கெடுக்காமல் விட்டுப் பாருங்கள். தாங்கள் இல்லாமல் எப்படி இந்த அலுவலகம் இயங்கப் போகிறது என்று நினைத்து ஓய்வு பெறுகிறவர்கள் தாங்கள் பொருட்படுத்தப்படுவதில்லை என்று உணரும் போது, குறுகிய காலத்தில் மரணத்தைத் தழுவிக் கொள்வது போல, ஆசான் போன்றவர்களும் தாங்களாகவே காணாமல் போய் விடுவார்கள்.

தாங்கள் பொருட் படுத்தப்படாத வாழ்வை இவர் போன்றவர்களால் ஏற்றுக் கொள்ள முடியாது. அதனால் தான் சர்ச்சைக்குரிய கருத்துக்களை, எந்தத் தர்க்கரீதியான நியாயங்களும் இன்றி உதிர்க்கிறார்கள். முட்டாள்தனமான கருத்துக்களை உதிர்த்து விட்டோம் என்ற ஒரே காரணத்துக்காக அதை நியாயப்படுத்துகிறார்கள்.

அதற்காக ஆசான் வைக்கும் பொறிக்குள் இந்த எலிக்கியக் குஞ்சுகள் இலகுவாக மாட்டிக் கொள்கின்றன. அந்தக் கருத்துக்களை பொதுவெளிக்குள் கொண்டு வருவதன் மூலம் தங்களை முக்கியமானவர்களாகக் காட்ட முனைகின்றன.

தங்கள் பற்றிய விமர்சனங்களைக் கண்டும் காணாத

மாதிரிக் கடந்து போக முடிகிற, புளொக் பண்ணி விட்டு ஓடித் தப்புகிற இந்த இலக்கியப் பிரகிருதிகளால், ஆசானின் அசட்டு உளறல்களை, சீமானின் பிதற்றல்கள் மாதிரிக் கடந்து போக முடியாமல் இருப்பதன் காரணம் இதுதான். தங்களைப் பற்றிய விமர்சனங்களுக்குப் பதில் அளிக்கப் போனால், தாங்கள் வெறும் வெத்துவேட்டுக்கள் என்பது நிருபணமாகி விடும் என்ற பயம். ஆசானை எதிர்ப்பதன் மூலம் தங்களை ஆசானின் மேலாதிக்கத்தைத் தடுத்து நிறுத்தும் தவிர்க்க முடியாத சக்திகளாகப் பாவனை செய்ய முடியும்.

இது ஆசானுக்கு வசதியாக இருக்கிறது. அவரது எழுத்தின் எதிர்பார்ப்புக் கூட அது தான். அவருடைய கருத்துக்கள் பற்றி மற்றவர்கள் கொடுக்கும் அக்கறை தான் அவருடைய வாழ்வுக்கான சுவாசம்.

ஆசான் இன்றைக்கு கையிருப்பு முடிந்து போய் உள்ள வெறுங்கை நிலையில் வந்து நிற்கிறார். சொல்லுமபடியாகவோ, பேசப் படவோ கூடியதாக அவருடைய படைப்புகள் எதுவும் தற்போது இல்லை. அவர் புதிதாகப் படைப்பது பற்றிய எண்ணம் எதுவும் இல்லாமல், தன்னுடைய ‘உலக மகாகாவியங்கள்’ பற்றிய பழைய நினைப்புப் பேராண்டியாகத் தான் இருக்கிறார். அவர் இதையெல்லாம் விடுத்து, தன்னுடைய திறமையை வைத்துக் கொண்டு ஏன் இன்னமும் புதிதாகப் படைக்காமல் இருக்கிறார் என்பது எனக்கு எப்போதும் கேள்வியாகவே இருக்கிறது. இந்த இலக்கியக் கூட்டத்தைக் கடுப்புக்குள்ளாக்குவதன் மூலம் எதைச் சாதிக்க முயல்கிறார் என்பதும் புரியவில்லை.

அவருக்குப் பின்னால் அவரது பெயரைச் சொல்லக் கூடியவை அவரது படைப்புகளே அன்றி, கருத்துக்கள் இல்லை. அவருடைய கருத்துக்களுக்கு அந்த வலிமையும் வல்லமையும் இல்லை. அவை வெறும் உணர்ச்சிபூர்வமான, சுவரில் மண்டையை முட்டி மோதும் ஆட்டுமந்தைக் கருத்துக்களே. அது தமிழ்நாட்டில் எடுபடவும் மாட்டாது. தன்னைச் சரி என்று நிருபிப்பதால் அவரை யாரும் தூக்கிக் கொண்டாடப் போவதுமில்லை.

அது சிலநேரம், ட்ரம்புக்கு சாத்தியமாகலாம். ஆசானுக்கு ஒருபோதும் இல்லை.

இப்போது தன்னுடைய படைப்புகளால் அல்லாமல், கருத்துக்களால் அறியப்படுகிற ஒருவராகிய நிலைக்கே வந்து சேர்ந்திருக்கிறார்.

அவரது ‘தினசரி பலன்’ அவ்வாறானதாகத் தான் இருக்கிறது. தன்னுடைய ‘உலக மகாகாவிய’ படைப்புகளை எந்த ஊடகமும் கண்டுகொள்ளவில்லை என்று குறைப்படவும் குற்றம் சாட்டவும் செய்கிற அவருக்கு, தன்னுடைய கருத்துக்கள் குறித்தும் அவ்வாறு சொல்ல வேண்டிய தேவை இல்லாதபடிக்கு, நம் இலக்கியப் பிரகிருதிகள் அவற்றைப் பரபரப்பானவை ஆக்குகிறார்கள். பேஸ்புக்கின் இவ்வாரப் பரபரப்பு மாதிரி, ஒரு வாரத்திற்கு ஓடக் கூடிய பரபரப்புகளை அவருக்கு தந்து கொண்டே இருக்கிறார்கள்.

அவருக்கு இவர்கள் தேவைப்படுவது போல, இவர்களுக்கும் அவர் தேவைப்படும் அளவுக்கு பரஸ்பர ஓட்சிசன் வழங்கலைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

ஆசானுக்கு கொஞ்சமாவது புத்தியிருந்தால், இவர்களைத் தடாலடியாகத் தனது காலடியில் வந்து விழ வைக்க முடியும். விசு தடித்த மீசைப் பிரபலங்களை டிவியில் உட்கார வைத்து அரட்டை அடித்த மாதிரி, இந்த எலிக்கியர்களையும் தன்னுடைய தமிழ் விக்கியில், ‘கவிஞர், எழுத்தாளர், விமர்சகர் மற்றும் சிந்தனையாளர்’ என்று அவர்களின் கட்டுரைகள், புத்தங்கள், இன்னாருக்குப் புத்திரன், புத்திரியாக வந்துதித்து அவதரித்தார் என்ற புள்ளிவிபரங்களோடு, தான் உண்மையிலேயே mean பண்ணாத, தனது வழமையான உயர்வுநவிற்சிக் குறிப்புகளோடு பிரசுரித்தால் போதும். இவர்கள் அனைவருமே ஆசானின் காலடியில் விழுந்து சர்வாங்க நமஸ்காரம் செய்வார்கள்.

இவர்களில் எவருமே ஒருபோதும், ‘அந்த தமிழ் விக்கிக் குறிப்பை எடு, என்னைப் பற்றிய உன்னுடைய குறிப்போ, அங்கீகாரமோ எதுவும் எனக்குத் தேவையில்லை’ என்று திமிராகச் சொல்வதற்கான திராணி இல்லாதவர்கள்.

தன்னை மாஸ்டர் என்று நினைக்கும் ஆசானின் மாஸ்டர் ஸ்ட்ரோக் அதுவாகத் தான் இருக்கும். ஒருவனைப் புகழ்ந்தே அழிக்கும் தமிழ்ப் பாரம்பரியத்தின் உச்சமாக அது இருந்திருக்கும்.

(அப்படி, யமுனா ராஜேந்திரன் பற்றி தமிழ் விக்கியில் எழுதும்போது அவர் நான் ஆசிரியராக இருந்த தாயகத்தில் தான் ஆரம்பத்தில் சினிமா விமர்சனம் தொடர்ச்சியாக எழுதினார் என்ற விடயத்தை ஆசான் தமிழ் விக்கியில் சேர்க்க மாட்டார் என்பது எனக்குத் தெரியும். காலம் செல்வம் தான் தாயகத்தில் எழுதியதை ஒளித்துத் திரிவது போல!)

அவர் அதைச் செய்யாத வரைக்கும் இந்த இழுபறியும், (எமக்கான தலைவலியும்!) இருந்தே கொண்டே தான் இருக்கப் போகிறது.

அவருடைய கருத்துக்களைப் பொருட்படுத்தாமல், கணக்கில் எடுக்காமல் துண்டித்து விட்டால், அந்த வாழ்க்கை அவர் போன்றவர் களால் ஏற்றுக் கொள்ளப்பட முடியாததாக இருக்கும்.
தன்னை ஒருவரும் கணக்கெடுக் கிறார்கள் இல்லையே என்ற எண்ணம் வரும்போது, தொண தொண பென்சனியர்கள் போல அவரும் அமைதியில் இளைப்பாறுவார்!

ஆனால், நம் இலக்கியப் பிரகிருதிகள் அதற்கு வழிவிடப் போவதில்லை. அவர்களின் இருப்புக்கும் அடையாளத்துக்கும் ஆசான் போன்ற ஒரு ‘கற்பனை வில்லன்’ என்றைக்கும் தேவை!

அவர்கள் என்றைக்கும் அவாவுவது (obsession) அவர்களுடைய secret crush இன் கடைக்கண் பார்வை மட்டுமே!